முதலாம் இராசேந்திர சோழனின் பிறந்த நாள் விழா
நினைவு வெளியீடு [28 டிசம்பர் 2012]

# சோழர் சமுதாயம்

(அருண்மொழி ஆய்வுக் கட்டுரைகளின் மறுபதிப்பு)


பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்டி.,

ஆணையர் பொறுப்பு



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2012 - திருவள்ளுவர் ஆண்டு 2043

# அச்சிட்டோர் விவரம்

முதற் பதிப்பு -1988

இரண்டாம் பதிப்பு - 2012

தொல்லியல் துறை வெளியீடு எண் : 261

நூல் சேர்க்கை எண்.

சென்னை-600 008

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

**சோழர் சமுதாயம்**

முதலாம் இராசேந்திர சோழனின் பிறந்த நாள் விழா

நினைவு வெளியீடு [28 டிசம்பர் 2012]

பதிப்பாசிரியர்

**சீ. வசந்தி**

ஆணையர் (பொ)

விலை : ரூ. 42.00

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# உள்ளடக்கம்


| வ.எண். | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | |
| 1. | சோழர் கால அரசமாதேவியர் | 1 |
| 2. | சோழர் காலத்திய ஆவணப் பதிவு முறைகள் | 6 |
| 3. | சோழர் காலத்தில் கணக்குத் தணிக்கை | 14 |
| 4. | சோழர் காலத்தில் ஊர் | 25 |
| 5. | சோழர் காலத்தில் வைணவர்கள் | 33 |
| 6. | சோழர் காலத்து மூலபருடைச் சபை | 47 |
| 7. | குந்தவைப் பிராட்டியின் சமயப்பணி | 61 |
| 8. | தேவதானம் | 72 |
| 9. | சோழர் காலக் குற்றங்களும், விசாரணைகளும் | 86 |
| 10. | சோழர் காலச் சமயப்பணி | 101 |
| 11. | சுவடிகள் கூறும் சோழர் வரலாறு | 107 |
| 12. | சோழர் கால ஆதுலர் சாலைகள் | 112 |
| 13. | சோழர் காலத்தில் வணிகச் சங்கங்கள் | 119 |
| 14. | தெலுங்குச் சோழர்கள் | 130 |
| 15. | சோழர் காலத்தில் விளக்கு தானம் | 137 |
| 16. | சோழர் காலத்தில் ஆறுகளும், வாய்க்கால்களும் | 142 |
| 17. | வரலாற்றுக்கு முற்பட்ட தஞ்சை மாவட்டம் | 147 |
| 18. | பழையாறை அகழாய்வு | 153 |
| 19. | சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல் | 161 |
| 20. | சோழர் கால நந்தவனங்கள் | 167 |
| 21. | சோழர் காலத்தில் பண்டாரம் | 172 |

## அட்டைப்பட விளக்கம்

முன் அட்டை : முருகர் செப்புத்திருமேனி - கங்கைகொண்ட சோழபுரம்

பின் அட்டை : எழில்மிகு கங்கைகொண்ட சோழபுரம் திருக்கோயில்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பி.எச்டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ்வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008
நாள்: 30-11 -2012

# பதிப்புரை

தமிழகத்தினை கி.பி. 9 முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட மன்னர்களில் தலைசிறந்தவர்கள் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் மற்றும் முதலாம் குலோத்துங்கன் ஆகியோர்கள் ஆவார்கள். இம்மன்னர்கள் தமிழகத்தில் ஆட்சிப் புரிந்ததற்கானச் சான்றாகத் திகழ்பவை அவர்களால் கட்டப்பட்டத் திருக்கோயில்களே ஆகும்.

முதலாம் இராசராச சோழனின் சிறப்பு தஞ்சாவூர் பெரிய கோயில் மூலமும், முதலாம் இராசேந்திரனின் பெயர் கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில் கட்டியதாலும் இன்றும் நிலைபெற்றுத் திகழ்கின்றது.

இராசேந்திர சோழனின் தந்தையான இராசராசன்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (67)

என்ற திருக்குறள் வரிகளுக்கேற்ப தன் மகனைச் சிறந்த வீரனாக, சான்றோனாக உருவாக்கி உளம் மகிழ்ந்து பூரிப்படைந்திருப்பான் என்பது உண்மை அல்லவோ?

முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1012-1044) இளவரசாக முடிசூடி ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனைக் கொண்டாடும் முகமாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2012-13-ஆம் ஆண்டு தன்னாட்சி நிலை மற்றும் அவசர தேவைக்கான நிதி ஆதாரத்தின் கீழ் (Discretionary fund) "**முதலாம் இராசேந்திரனின் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழா**" 28-12-2012-ஆம் நாள் நடத்த அரசின் அனுமதி கோரப்பட்டது. அரசின் அனுமதியுடன் விழாத் தொடர்பாகக் கண்காட்சியும், துறை வெளியீடுகளும் வெளியிட திட்டமிடப் பட்டுள்ளது. அவ்வமயம் துறை வெளியீடுகளாக இந்நூலுடன் "முதலாம் இராசேந்திரன் செய்திக் கோவை", "கங்கை கொண்ட சோழபுரம்" ஆகிய நூல்கள் வெளியிடப்படுகின்றன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாமன்னன் இராசராசன் முடிசூடி ஆயிரம் ஆண்டுகள் நிறைவுற்றபோது 1984-ஆம் ஆண்டு இத்துறையால் தஞ்சையில் விழா கொண்டாடப்பட்டது. விழா நினைவாக வெளிவந்த "**அருண்மொழி**" என்ற எம்துறை வெளியீட்டிலிருந்து சோழர் காலத்திய அரசியல், சமுதாயம் குறித்த கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் வெளிவர நிதி ஒதுக்கித் தந்த **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கும், **பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்** அவர்களுக்கும், **சுற்றுலா (ம) பண்பாட்டுத்துறை அரசுச் செயலருக்கும்** முதற்கண் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மண்டல உதவி இயக்குநர் திரு. வெ. இராமமூர்த்தி அவர்களின் தொழில்நுட்பப் பணிகள் பாராட்டுக்குரியது. இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளை எழுதிய ஆய்வாளர் களுக்கும், இந்நூலை சிறப்பாக அச்சிட்டு வழங்கிய எம்துறை அச்சகத்தாருக்கும், அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சி. வசந்தி

# சோழர் கால அரசமாதேவியர்

**அ. அப்துல் மஜீத்**
பதிவு அலுவலர்
தொல்லியல் துறை

சோழநாட்டின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகத் திகழ்ந்தவர்கள் அந்நாட்டை ஆண்ட அரசர்களாவர். அவ்வரசர்களின் வாழ்விலும், தாழ்விலும் பிரிக்க முடியாத இடத்தைப் பெறுபவர்கள் சோழர் கால அரசமாதேவியர் ஆவர். இவர்கள் அரசர்களின் இல்வாழ்க்கை இன்பகரமாகவும், பயனுள்ள வகையிலும் அமைய வழிவகுத்தவர்கள்.

சோழப் பேரரசர்கள் சோழர்கள் அல்லாத மற்ற அரச குடும்பத்தினர்களான பல்லவர்களிடமும், இராட்டிரகூடர்களிடமும், சேரர்களிடமும், வைதும்பர்களிடமும், சாளுக்கியர்களிடமும், கொடும்பாளூர் வேளிர்களிடமும், மலையமான்களிடமும், மழவர்களிடமும் திருமணத் தொடர்பு கொண்டிருந்தனர். இத்திருமணத் தொடர்பே சோழ நாட்டின் ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்ப வழி கோலியது. உதாரணமாக வேங்கி நாட்டு மன்னன் முதலாம் சத்திவர்மன் சோழரின் படைத்துணை கொண்டு மணிமுடிதரித்துக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றான். இவனுடைய தம்பி விமலாதித்தன் (கி.பி. 1011-1018) முதலாம் இராசராசனின் மகள் குந்தவையை மணம் முடித்துக்கொண்டான். கீழைச்சாளுக்கிய நாடும், சோழ நாடும் ஒன்றாக இணையும் வாய்ப்பை இத்திருமணம் உருவாக்கிக் கொடுத்தது. அழிவுகாலத்தை நோக்கித் தள்ளாடிக் கொண்டிருந்த சாளுக்கியர்களுக்குச் சோழர்களுடன் கொண்ட திருமண உறவு புத்துணர்ச்சியையும், மறுவாழ்வையும் அளித்தது. இத்தொடர்பினால் சாளுக்கியர் மட்டுமின்றிச் சோழரும் பெரும்பயன் எய்தினர். முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் அவனுக்குப் பின் அரசாண்ட சோழசாளுக்கியப் பரம்பரை மன்னர் காலத்திலும் சோழப்

பேரரசானது மங்காத புகழுடன் நின்றதற்கும் இத்திருமண உறவு சிறப்பானதொரு காரணமாகும்.

சோழப் பேரரசர்களில் திருமண உறவினால் மற்ற நாட்டவர்களைச் சோழ நாட்டு அரசியலிலும், சோழ நாட்டுடனும் தொடர்புகொள்ள ஏதுவாக இருந்தது. குறிப்பாக முதலாம் பராந்தகனின் மகன் அரிஞ்சயனின் அன்னை கேரளத்து அரசிளங்குமரியாவாள். இவளுடைய செல்வாக்கின் துணைக் கொண்டு சேர நாட்டவர் பெருமளவில் தமிழகத்தில் குடியேறினர். பலர் அரண்மனைப் பணியாளராக அமர்ந்தனர். தக்கோலத்துப் போரில் உயிரிழந்த இராசாதித்தனுக்குச் சேரநாட்டைச் சேர்ந்த வெள்ளங்குமரன் படைத்தலைவனாக விளங்கினான். இராசாதித்தன் முதலாம் பராந்தகனுக்கும், பேரரசி கோக்கிழானடிகளுக்கும் பிறந்தவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்து வரலாற்றில் புகழொளி வீசிய செம்பியன்மாதேவியே சோழர் கால அரசமாதேவியர்களில் தலைசிறந்தவள். இவர் கண்டராதித்த சோழனின் பட்டத்தரசியாவாள். இவரும், இவர் கணவரும் சேர்ந்து சைவசமய வளர்ச்சிக்காகப் பல அரிய தொண்டுகள் புரிந்தனர். கண்டராதித்தன் பாடிய தோத்திரப் பாடல்கள், ஒன்பதாம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளன. இவர் மழநாட்டை ஆண்ட மழவரையரின் மகள். நாற்பது ஆண்டுகாலம் தன் வாழ்க்கையைக் கோயிற் திருப்பணிகளில் இணைத்துக் கொண்டு ஆன்மீக நெறியில் வாழ்ந்த பேரரசியாவார்.இவரிடம் கணவரின் சிவத்தொண்டும், அருட்பண்பும் மிக்குநின்றன. இவையே இவரைச் சோழ நாடு முழுமையும் திருக்கற்றளிகள் எடுக்கச் செய்தன. எண்ணற்ற நிவந்தங்களைக் கோயில்களுக்குக் கொடுக்கத் தூண்டியது.

முதலாம் இராசராசன், செம்பியன்மாதேவி நினைவாக வட ஆர்க்காட்டில் உள்ள திருமுக்கூடலில் "செம்பியன் மாதேவி பெரு மண்டபம்" என்ற ஊரவை மண்டபத்தை எடுத்தான். இராசராசனின் மகனாகிய இராசேந்திரனும் இவ்வம்மையார்பால் பற்றுகொண்டு விளங்கினான். செம்பியன் மாதேவி என்ற ஊரிலுள்ள திருக்கயிலாயமுடையார் கோயிலில் கி.பி. 1019-ஆம் ஆண்டில் இவ்வம்மையாரின் செப்புத் திருமேனி ஒன்றை எழுந்தருளுவித்து நிவந்தம் அளித்துள்ளான்.

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்திற்கருகில் உள்ள செம்பியன் மாதேவி என்னும் ஊர் உத்தமச் சோழனின் 15-ஆம் ஆட்சி ஆண்டிற்கு முன்பு நிருமாணிக்கப்பட்டதாகும்.

இவர் கோனேரிராசபுரம் என வழங்கும் திருநல்லத்தில் உள்ள திருக்கோயிலைத் தம் கணவர் பெயரால் "கண்டராதித்தம்" என்ற கற்றளியாகப் புதுப்பித்துக் கண்டராதித்தராகிய தம் கணவர் சிவபெருமானைத் திருவடி தொழுகின்றவராக ஒரு படிமம் செய்து அக்கோயிலில் வைத்தார். இவர் செய்த கோயில் திருப்பணிகளில் தனிச் சிறப்பு முறை ஒன்றைக் காண்கிறோம். ஒரு கோயிலைப் புதுப்பிக்கும் முன்பு அக்கோயிலில் காணப்பட்ட கல்வெட்டுச் சாசனங்கள் அனைத்துக்கும் புதிய படி ஒன்று எடுத்து அமைப்பது வழக்கம். இருபத்தாறு சாசனங்களுக்கு இவர் படியெடுத்துள்ளார். இவர் படியெடுத்த கல்வெட்டுகளில் "ஸ்வஸ்திஸ்ரீ" இதுவும் ஒரு பழங்கற்படி என்ற சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கும்.

அடுத்து சோழப் பேரரசிகளில் சிறப்பாக விளங்குபவள் குந்தவை. இவள் முதலாம் இராசராசனின் சகோதரி. இராசராசனின் கல்வெட்டுகள் இவளை "அக்கன்" எனக் குறிப்பிடுகின்றன. இவள் வல்லவரையன் வந்தியத்தேவனின் மனைவி. தஞ்சைப் பெரிய கோயிலுக்கு இவள் நான்கு செப்புத் திருமேனிகளைச் செய்தளித்தாள். அவற்றுள் இரண்டு தன் தாய் வானவன் மாதேவி, தந்தை சுந்தரச் சோழன் ஆகியோரது படிமங்களாகும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் செய்யாற்றுக்கருகிலுள்ள பிரம்மதேசம் என்னும் ஊரில் "குந்தவைப் பேரேரி" என்ற ஏரியையும், "சுந்தரச் சோழப் பேரேரி" என்ற ஏரியையும் வெட்டுவித்தாள். தஞ்சாவூரிலுள்ள விஷ்ணு கோயிலில் "சுந்தரச் சோழ விண்ணகர ஆதுலர் சாலை" என்னும் மருத்துவமனை ஒன்றைத் தன் தந்தையின் பெயரால் ஏற்படுத்தினாள். இம்மருத்துவமனையை நிருவகிக்கத் தஞ்சாவூருக்கு அருகிலுள்ள பண்டார வாடை என்னும் ஊரிலுள்ள வீட்டுமனை களையும், நிலங்களையும் கொடையாக அளித்தாள். தாதாபுரம் என்ற ஊரில் மூன்று கோயில்களையும், போளூருக்குக் கிழக்கே 16 கி.மீ. தொலைவில் உள்ள திருமலை என்ற ஊரில் "குந்தவை ஜினாலயம்" என்ற சமணக்கோயிலையும் தோற்று வித்தாள். குந்தவை எடுப்பித்த சமணக் கோயில் அவளுடைய சமயப் பொறையை உலகுக்கு எடுத்துக்காட்டும் சான்றாக விளங்குகிறது.

குந்தவைக்கு அடுத்தாற்போன்று சிறப்புறுபவள் உலக மாதேவியாகும். இவர் முதலாம் இராசராசனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவர். இவருக்குத் தந்திசக்திவிடங்கி என்ற பெயருமுண்டு. திருவிசலூர்க் கோயிலில் இராசராசன் துலாபாரம் ஏறியபோது இவள் இரண்யகர்ப்பம் புகுந்தாள். இவ்விரு விழாக்களிலும் கிடைத்த பொன்னைக் கொண்டு உலகமாதேவி திருவலஞ்சுழியில் கோயில் ஒன்றை எடுப்பித்தார். மேலும் இவர் திருவையாற்றில் உள்ள வட கைலாசம் என்ற கோயிலைக் கட்டுவித்து அதற்கு உலகமாதேவீச்சுரம் என்னும் பெயரையும் சூட்டுவித்தார்.

முதலாம் குலோத்துங்க சோழனுக்குப் பல மனைவியர் இருந்தனர். அவர்களில் முதன்மையாகத் திகழ்ந்தவர் புவனமுழுதுடையாள். இம்மன்னனின் 30-ஆம் ஆட்சி ஆண்டில் இவர் இறந்து விடவே தியாகவல்லி என்பவர் மனைவியரில் முதன்மையிடத்தைப் பெற்றார். நாட்டில் அரசனுக்கிருந்த அதிகாரத்திற்குச் சமமான அதிகாரத்தைப் பெற்றுத் திகழ்ந்தார். முதலாம் குலோத்துங்கன் இவர் மேலுள்ள அன்பினாலும், பெருமதிப்பினாலும், சில நாட்டுப் பிரிவுகளுக்கு இவர் பெயரை வைத்து மகிழ்ந்தான். குலோத்துங்கன் தன் மனைவியிடம் காட்டிய அன்பிற்கு இணையாக விக்கிரம சோழனும் தன் மனைவி திருபுவன முழுதுடையாளிடம் அன்பு கொண்டிருந்தான். அவன் கொண்டிருந்த அன்பிற்கு எடுத்துக்காட்டாக நாட்டுப் பிரிவிற்கு அவருடைய பெயரிட்டு மகிழ்ந்தான்.

அரசர்களுக்குப் பல மனைவியர் இருந்தாலும் பட்டத்தரசி ஒருவர் இருந்தார். அரசர்களுடைய அலுவல்களின் பட்டத்தரசிகளும் பங்கு கொண்டனர். அரசியர்களுக்கு ஆணையிடும் உரிமை யிருந்தது. அரசிகள் தனிப்பட்ட முறையில் கோயில்களை எழுப்புவது, திருப்பணிகள் செய்வது போன்ற பொது நலன்களில் ஈடுபட்டிருந்தனர். சோழப் பேரரசர்கள் தங்கள் குடும்பத்தினர் மேல் அளவிலா அன்பைச் சொரிந்தனர். முதலாம் இராசராசன் தன் அக்காள் குந்தவையின் மீதும், மகள் குந்தவையின் மீதும், செம்பியன் மாதேவியின் மீதும் பேரன்பைப் பொழிந்தான். அரச குலப் பெண்கள் சிலரிடம் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. சுந்தர சோழன்

இறந்தபோது அவன் மனைவி வானவன் மாதேவி உடன் கட்டை ஏறினாள். அரசனுடன் அவனுடைய அரசிகள் அரியணையில் அமர்ந்திருப்பர். அப்பொழுது ஆடல் மகளிர், பாடல் மகளிர், சூதர் (நின்று புகழ்வோர்) மாகதர் (இருந்து ஏத்துவோர்) மங்களப் பாடகர் ஆகியோர் குழுமியிருந்தனர். அப்பொழுது இசை விருந்து நடைபெறும். பல நாட்டு அரசிகள் பணிவிடை செய்து நின்றனர். அரசர்களும், அரசியர்களும் பெரிய அரண்மனைகளில் வாழ்ந்து வந்தனர். மன்னருக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் பணி செய்வதற்குப் பல ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். அரண்மனை நீராட்டு அறையிலும், மடைப் பள்ளியிலும் பெண்களே பணி புரிந்து வந்தனர். அரண்மனைக்குள் பெண்கள் விளையாடுவதற்குத் தனிப்பொழில்கள் அமைந்திருந்தன. அரசியர் தங்கியிருந்த அந்தப்புரக் காவல் பெண்களின் பொறுப்பிலேயே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சோழர் காலச் சிற்பிகள் இவர்களுடைய சிற்பங்களை சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலிலும், குடந்தை நாகேசுவர சுவாமி கோயிலிலும் தோற்றுவித்துள்ளனர். அச்சிற்பங்களைக் கொண்டு அரசமாதேவியர் கட்டி, தெய்வ உத்தி, பொற்பூ ஆகிய தலையணிகளையும் நெற்றியில் சுட்டி, காதுகளில் மகரக்குழை, கழுத்தில் முத்துமாலை, பிறைவடம், நட்சத்திர மணிமாலை, வலம்புரி முத்துக்கள் கோர்த்த வடம், நிரைத்தாலி, மாணிக்கத்தாலி, தாலிமணிவடம் ஆகிய அணிகலன்களை அணிவர் என்று அறிகிறோம்.

"எவ்விடத்துப் பெண்ணினம் போற்றப்படுகிறதோ அவ்விடத்து அனைத்துக் கடவுளரும் மகிழ்வெய்துகின்றனர். மாறாக எங்கே அவர்கள் போற்றப்படவில்லையோ அங்கே எத்தனை நல்லவை செய்தாலும் அதற்குரிய பலனைக் காண்பது இயலாத ஒன்று" என்ற மனுவின் நீதி நூலுக்கேற்பச் சோழப் பேரரசர்கள் பெண்களே வாழ்வின் உயிர்நாடி என்றும், பெண்களுக்கு உயர்ந்த இடம் கொடுத்துப் போற்றவேண்டுமென்றும் கருதிப் பெண்ணினத்தைப் போற்றி வந்தனர்.

★★★

# சோழர் காலத்திய ஆவணப் பதிவு முறைகள்

**சு. இராசகோபால்**
தொல்லியல் துறை

இரண்டு தரப்பினரிடையே ஏற்படும் பரிவர்த்தனைகள், விற்பனைகள், உடன்பாடுகள் , சபை , ஊர் ஆகியவை எடுத்த முடிவுகள், தீர்மானங்கள், அளித்த சலுகைகள், அரசு அளித்த ஆணைகள், சலுகைகள், என்றென்றும் நடைபெற வேண்டிய தர்மங்கள், நியதிகள் ஆகியவை ஆவணங்களாகப் பதிவு செய்யப் பட்டன. ஓலையிலோ, கல்லிலோ அல்லது செம்பிலோ இவை பதிவாயின.

தர்மசாத்திரம் போன்ற நீதிநூல்கள் ஆவணங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு வரன் முறைகள் வகுத்துள்ளன. வியாசர், பிராஜபதி போன்றோர் ஆவணங்களை (பத்திரங்கள்) உபகதபத்ரம் (ரசீது ஒப்புச்சீட்டு), கிரயபத்ரம் (விலை), ஆத்கிபத்ரம் (அடைமானம்), சந்திபத்ரம் (உடன்படிக்கை), ஸ்திதிபத்ரம் (நிலையான நடைமுறை) விபாகபத்ரம் (பாகப்பிரிவினை), தானபத்ரம் (கொடை) தாசபத்ரம் (அடிமை) என்று வகைப்படுத்தியுள்ளனர்.

சோழர் காலத்தில் ஆவணங்களின் வகைகளும் அவை எழுதப்பட்ட முறைகளும் பிற்காலக் கட்டங்களைவிட அதிகம் காணப்படுகின்றன. கிடைக்கும் கல்வெட்டுகளே ஆவணங்கள் என்றாலும் அவைமேலும் பலவகையான ஆவண வகைமுறைகளைக் காட்டி நிற்கின்றன. இவ்வகைமுறைகள் ஒரு விரிந்த தலைப்பின் கீழ் சொல்லப்பட வேண்டிய ஒன்று. இங்கு சில ஆவணங்களே விரிவாக விளக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## ஆவண வகைகள்

**ஆவணம் :** ஆவணம் என்ற சொல்லாட்சியிலேயே விலை ஆவணம், நிலவிலை ஆவணம், பங்குவிலை ஆவணம் என்ற வகை வகையான ஆவணங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆவணங்களைப் பதிவு செய்து பாதுகாக்க ஆவணக்களங்கள் இருந்தன. இன்று பதிவாளரிடம் விலைக்குண்டான தொகையைக் கொடுத்து வாங்குவது போலவே அன்றும் ஆவணக்களத்தில் தொகை கொடுத்து வாங்கப்பட்டது. ஆவணக்களி, ஆவணக்கிழிகை போன்ற சொற்களுக்கான பொருள்கள் மேலும் அறிந்து கொள்ளப்பட வேண்டியவையாகும்.

**பிரமாணம் :** விலைப் பிரமாணம், நிலவிலைப் பிரமாணம், பூமி பிரமாணம், இறைகாவல் பிரமாணம், ஆசிறியப் பிரமாணம், பிரியப் பிரமாணம், சண்டேசுவரப் (அல்லது மன்னர்கள் பெயரில்) பிரமாணம் எனப் பிரமாணம் எனற சொல்லாட்சி சோழர்கள் காலக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ஆள்விலைப் பிரமாணம் இங்கு கீழே தனியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆசிறியப் பிரமாணம் என்பது அஞ்சி ஓடிவந்தவர்களுக்கு அடைக்கலமளிப்பது தொடர்பானது. இறைகாவல் பிரமாணம் என்பது வரியைக் கட்டுவதற்குக் காப்பு அளிப்பது தொடர்பானது.

**தீட்டு :** தீட்டு என்பது எழுதப்பட்டது. என்று பொருள்படும். கைத்தீட்டு, ஒத்திசைவுத் தீட்டு, நிலைமைத்தீட்டு, அடையோலைத் தீட்டு, ஏவல தீட்டு, விலைப் பிரமாணத்தீட்டு, உபயத்தீட்டு, இசைவுத் தீட்டு, அன்னியநாமகரணத்தீட்டு, ஆள்விலைப் பிரமாணத்தீட்டு என்று சோழர் காலக் கல்வெட்டுகள் பலவகைத் தீட்டுகளைக் காட்டுகின்றன. இசைவுத் தீட்டு என்பது சம்பந்தப்பட்ட இருவர் நடைமுறைகளையும், விலை முறைகளையும் இசைந்து ஏற்று எழுதிக் கொள்வது. அன்னியநாமகரணத்தீட்டு, நிலைமைத்தீட்டு ஆகியவை தனித் தலைப்புகளில் சொல்லப்பட்டுள்ளன.

**ஓலை :** அறையோலை, இறையோலை, இறைகாவல் ஒட்டோலை, பொருள் மாவறுதிப் பொருட்செலவோலை, சிலவோலை, அடைவோலை, செம்போலை, ஆளோலை, அறுதிப் பரிவர்த்தனை ஓலை, விலையாவணவோலை, கையெழுத்து ஓலை என்று பல வகைகள் உள்ளன. மன்னன் கொடையாக நிலங்களைக்

கொடுத்தது பற்றிய ஆணை நாட்டாரிடமும் வரும் போது, நாட்டார் ஆணையைத் தலைமீது ஏற்று நிலங்களின் எல்லை காட்டி அறவோலை செய்து கொடுத்தனர் என்ற செய்தி செப்பேடுகள் பல வற்றிலும் காணப்படுகின்றது. இறையோலை என்பது வரிவிலக்கு தொடர்பானது. இறைகாவல் ஒட்டோலை என்பது ஒரு கொடை நிலத்தின் வருங்கால வரிகளுக்காக முன்னதாகவே காசு அல்லது பொன் போன்றவை கொடுத்து எழுதும் ஆவணமாகும். விலையாகப் பேசும் போது ஏற்படும் பல செலவினங்களையும் ஏற்றுக் குறிப்பிட்டு இறுதி செய்து எழுதும் ஓலை பொருள்மாவறுதிப் பொருட் செலவோலையாகும்.

**பிற வகைகள் :** மேற்கொண்ட வகைகளைத் தவிர மேலும் அறுதிப்பரிவர்த்தனை, நிலவழிப் பரிவர்த்தனை, விலை சிராவனை, இறையிலி சிராவனை, கைத்தடி, கையெழுத்து, கையடை, பரிசு, ஒழுகு, தெரிப்பு, வியவஸ்தை, முறி, நியோகம் போன்ற வேறுபட்ட வகைகளும் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆவணங்களை நேரடியாகக் கல்வெட்டுகளாகவே பொறித்துப் பல இடங்களில் கல்வெட்டுகளையே ஆவணங்களாக மேற்கோள் காட்டுகின்றனர்.

## ஓலை வகைகள்

**ஆள் ஓலை :** மனிதனை விலை பேசி விற்று அதற்காக எழுதிப் பதிவு செய்யும் ஆவணம் ஆள்ஓலை, ஆள்வலைப் பிரமாணம் என்று வழங்கப்பட்டது. வேதாரண்யத்தில் மூன்றாம் இராசராசன் காலத்தில் ஒரு ஆள் விலைப் பிரமாணத் தீட்டு எழுதப்பட்டுள்ளது. (541/17) இறைவனுக்கு அரியான் பிச்சன் என்பவனால் 10 பேர் 1000 காசுக்கு விற்கப்பட்டுள்ளனர். இவனுக்கு எதிரிலிச் சோழ கங்கை நாடாழ்வான் என்ற அரசுப் பட்டப் பெயரும் உண்டு. பத்து பேரில் ஐவர் இவனது முன்னோரால் ஏற்கனவே விற்கப்பட்டவர்கள் ஆவர். கல்வெட்டு இவர்களை அடியார்கள் என்றும், சகையாண்டிக் கூட்டத்தவர் என்றும், இந்த விற்பனை இவர்களது வழிவழியினரையும் உள்ளடக்கியது என்றும் குறிக்கின்றது. அடிமை வாழ்வு கூட்டம் கூட்டமாகவும், வழிவழியாகவும் விலைப் பொருளாகவும் இருந்ததைக் கல்வெட்டு நன்குணர்த்துகிறது. ஆள் விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யப்பட்டுக் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டதைக் காணும் போது அடிமை வாழ்வு அன்றைய சமுதாயம் ஏற்றுக் கொண்ட மரபு என்று நன்கு விளங்குகிறது.

தோற்ற மன்னர்கள் வென்ற மன்னர்களின் அடிமைகள், அது கூட ஆள் ஓலையாக எழுதப்பட்டதை ஒரு பாடல் கல்வெட்டு காட்டு கின்றது. இது மூன்றாம் குலோத்துங்கன் காலப் பாண மன்னன் கல்வெட்டு. தென் ஆர்க்காடு மாவட்டம் திருப்பாலப் பந்தலில் உள்ளது.(177/17) :

"ஸ்வஸ்திஸ்ரீ
தாரு முடிவு முரசுந் தமக்குரிய
பாருமுடன் பெறுவர்--பார்வேந்தர்
வீரப்பெருமாள் மகதேவன் பேரெழுதித்
தத்தந் திருமார்பில் ஆளோலைசெய்து."

பெரியபுராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம் நம்பியாரூநரை இறைவனுக்கு அடிமை என்று பேசுவதாகும், இறைவன்,

"அக்காலம் உன்தந்தை தன்தந்தை ஆள்ஓலைஈதால்
இக்காரியத்தை நீஇன்று சிரித்ததென்ஏட"

என்று அடிமையை ஏட என்று அடக்குகின்றார். மேலும்

"இசைவினால் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று
விசையினால் வலியவாங்கிக்கிழிப்பது வெற்றிஆமோ"

என்று இறைவன் கூறும் சொற்களால் ஆள் ஓலை இசைவோடு எழுதப்பட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அவ்வோலையில் எழுதப்பட்ட வாசகத்தைச் சேக்கிழார் முழு ஆவணமாகவே பாடலில் தருகின்றார்.

கல்வெட்டுகளில் மட்டுமல்லாது சோழர் கால இலக்கியத்திலும் ஆவண முறை தெளிவாகக் காட்டப்படுவது சோழர் காலத்தில் ஆவண அமைப்புகள் வழக்கில் மலிந்திருந்தமைக்கு எடுத்துக் காட்டாகும்.

## நிலைமைத் தீட்டு

இப்படி இப்படி நடக்க வேண்டுமென இருதரப்பார் எழுதிக் கொடுக்கும் உடன்படிக்கை நிலைமைத் தீட்டாகும். சோழர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் தங்களுக்குள் எழுதிக்கொண்ட நிலைமைத் தீட்டு செங்கத்தில் (வ. ஆ. மாவட்டம்) இன்றும் கல்வெட்டாகவுள்ளது.

விக்கிரமசோழ சம்புவராயர், கரிகாலச் சோழ ஆடையூர் நாடாழ்வார் ஆகிய இருவர்க்கு அதிகமான் வழி வந்த இராசராச அதிகமான் நிலைமைத்தீட்டு எழுதித் தந்துள்ளான்.

## அன்னிய நாமகரணத் தீட்டு

கோயிலுக்கு வழிபாட்டிற்காக நிலங்கள் கொடுக்கும்போது இறைவன் பெயரிலேயே அதாவது திருநாமத்திலேயே ஆவணங்கள் எழுதுவது மரபு. இப்படி எழுதி கொடுக்கப்படும் நிலங்கள் திரு நாமத்துக்காணி என்றழைக்கப்பட்டன. கொடையாளர் செய்ய நினைத்த தர்மத்திற்கு (விளக்கு, அமுதுபடி, உண்பித்தல் போன்றவை) உண்டான செலவுகளுக்கும் அதிகமாக அந்நிலத்தால் வரும் அதிகப்படி வருவாய் கோயிலுக்குச் சேர்ந்துவிடும். இந்த அதிகப்படி வருவாயை வேறொருவருக்குத் திருப்பிக் கொடுக்கப் பிறறொருவர் பெயரில் அதாவது அன்னிய நாமத்தில் எழுதும் ஆவணமே அன்னிய நாமகரணத் தீட்டாகும்.

இத்தீட்டு கொடையாளருக்கும், அன்னியநாமகரணத்துக்குப் பெயர் தந்தவருக்கும் இடையில் எழுதப்படுவதாகும். கொடையாளர் தானே காசு கொடுத்து வாங்கிய நிலமான போதிலும் தன்பேரிலோ, திருநாமத்திலோ (இறைவன் பெயரிலோ) பிறர் பெயரிலோ நிலத்தை வாங்கும் (அன்னியநாமத்தில்) வழக்கினையும் சில அன்னியநாம கரணத்தீட்டுகளையும் சிதம்பரத்தில் உள்ள முதற்குலோத்துங்கன் மகளது கல்வெட்டு (226/4) இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டு (227/4), மூன்றாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு (ப.எண். 210-213/3 pt.2) ஆகிய கல்வெட்டுகளும், கோயில் தேவராயன்பேட்டை (66/13) திருவாரூர் (583/17) ஆகிய ஊர்களில் உள்ள இராசாதிராச சோழன் கல்வெட்டுகளும் நமக்குக் காட்டுகின்றன.

## சில ஆவண வழக்காறுகள்

எழுத்து : ஆவணம் எழுதிக் கொடுப்பவர்கள் இறுதியில் கையொப்பமிடுவது என்ற மரபு சோழர் காலத்தில் மிக அவசியமானதாக இருந்தது. "இவை என் எழுத்து" என்று பெயர்களுடன் ஆவணத்திற்குக் கையொப்பங்கள் உயிர் கொடுத்து விளங்கின.

அறிவேன் : ஆவணங்களில் சாட்சிக் கையெழுத்து இடுவது என்பது சோழர் காலத்தில் பரந்து காணப்படுகிறது. சாட்சியொப்பமிடுபவர்கள் "இப்படி அறிவேன்" என்று தங்கள் பெயர்களுடன் ஒப்பமிட்டு "இது என் எழுத்து" என்று முடித்தனர். ஒரு ஆவணத்தில் பல சாட்சியொப்பங்கள் சோழர் காலக் கல்வெட்டு களில் காணப்படும்.

## சயிஞ்ஞை தற்குறி

கையொப்பிடத் தெரியாதவர்கள் ஆவணங்களில் சிறிது கீறுவர். இந்தக் கீறல் அல்லது குறி, தற்குறி அல்லது சயிஞ்ஞை எனப்பட்டது. இவை என் எழுத்து என்பதற்குப் பதிலாக "இது பாரதாயன் கேசவன் அறிவரியான் சயிஞ்ஞை" (தற்குறி) என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

## மாட்டறிதல்

சயிஞ்ஞை என்றும் தற்குறி என்றும் குறியிட்டவருடைய குறி, கையொப்பமிடத்தெரிந்த ஒருவரால் மாட்டறிந்து அதாவது சரி என்று சொல்லப்பட்டுக் கையொப்பமிடும் பழக்கம் சோழர் காலத்தில் இருந்தது. இவர்கள் 'தற்குறி மாட்டறிந்தேன்', 'சயிஞ்ஞை மாட்டறிந்தேன்' என்று குறிப்பிட்டு இது என் எழுத்து என்று தங்கள் கையொப்பமிட்டனர். இன்றுகூடக் கைரேகை வைக்கும் போது இன்னார் இடதுகைப் பெருவிரல் கீறல்' என்று மற்றொருவர் கையொப்பமிடும் பழக்கம் காணப்படுவது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

## இத்தம் விகதம்

ஒரு ஆவணம் தயாராகி முடிவடையும் தருவாயில் சம்பந்தப்பட்ட நபர் இறந்து போனாலோ காணாமல் போனாலோ அல்லது அனாதேசம் சென்று விட்டலோ அவருக்காகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றொருவர் இத்தம் விகதம் என்று குறிப்பிட்டுத் தன் கையொப்பமிடும் வழக்கு சோழர் காலத்தில் இருந்தது. வடமொழியில் 'இத்தம்' என்ற சொல் இறந்து போதல், இல்லாது போதல்' என்று பொருள்படும். இராசராசன் தஞ்சைக் கல்வெட்டில் 'செத்தார்க்கும், அனாதேசம் போனார்க்கும்' என்று வரும் சொற்கள் இந்த இத்தம் விகதம் என்ற சொல்லுக்குச் சரியான சோழர் கால விளக்கமாகும்.

முதுகண்

ஒருவருக்கு மற்றொருவர் பிரதிநிதியாக இருந்து ஆவணங்களை எழுதும் மரபும் சோழர் காலத்தில் இருந்தது. அவ்வழக்குகளில் 'முதுகண்ணாக உடைய' என்று பெயரெழுதிக் கையொப்பமிட்டனர். குழந்தைகளுக்குத் தாயும் தாய்க்குக் குழந்தைகளும் முதுகண்ணாக இருந்தமை கல்வெட்டுகளால் தெரிய வருகிறது.

புணை

ஒருவர் ஒரு தர்மச் செயலைச் செய்ய ஒப்புக் கொண்ட போதிலும் அவருக்கு மற்றொருவர் புணை கொடுக்கும் மரபு சோழர் காலத்தில் இருந்தது. இது இன்றைய உறுதி(surety) கொடுக்கும் முறையை ஒத்தது. 'சேந்தனைப் புணையாகக் கொடுத்து' 'புணைபட்ட துருத்து சேந்தனும்' (116/19) என்ற கல்வெட்டு வரிகளை உதாரணத்திற்குக் குறிப்பிடலாம். புணை பட்டவர்கள் புணை கொடுத்தவர்களது தவறுகளுக்குக் கடப்பாடுடையவர்கள் ஆவர். ஒரு முறை புணை கொடுக்கப்பட்டவர் தண்டம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் அந்த தண்டத் தொகையைக் கட்டவில்லை. எனவே புணைபட்டவரிடம் வசூலிக்க முற்பட்டனர். புணைபட்டவரும் கையில் காசில்லாதிருந்ததால் புணைபட்டவரது நிலம் விற்று பணம் வசூலிக்கப்பட்டது என்பதைச் சோழர் காலக் கல்வெட்டு ஒன்று (260/19) குறிப்பிடுகிறது. வரி கட்டுவதற்காகப் புணை கொடுக்கும் வழக்கு 'இதற்கிறை புணை' என்ற கல்வெட்டுச் சொல்லால் (278?19) அறியக் கிடக்கின்றது.

திரிவிட்டுக் கொடுத்தல்

ஒருவர் பெயரில் உள்ள ஆவணத்தை அல்லது அவ்வாணத்தில் குறிப்பிட்டுள்ள செயற்பாடுகளை மற்றொருவர் பெயருக்கு மாற்றிக் கொடுத்தல் 'திரிவிட்டுக் கொடுத்தல்' என்று வழங்கப்பட்டது (326,564/17).

ஒட்டிக் கொடுத்தல்

ஒரு செயலை ஒப்புக்கொள்வதும் ஏற்றுக் கொள்வதுமாக ஒருவர் ஒரு ஆவணத்தில கையொப்பமிடுவது 'ஒட்டிக கொடுத்தல்' என்று

வழங்கியது. இப்படி 'ஒட்டி இட்டுக் குடுத்தோம்'(43-1) விஜயமங்கலமுடைய பரமசுவாமிக்கு ஒட்டி இறை காவல்லொட்டோலை இட்டுக் குடுத்தேன்(76/13) என கல்வெட்டுகளில் வருவதைக் காணலாம்.

## அடுத்துக் கொடுத்தல்

கொடையாகக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட ஆடு, நிலம் போன்றவற்றை பராமரிப்பதற்காக மற்றொருவருக்குக் கோயிலைச் சேர்ந்தவர்கள் கொடுப்பது 'அடுத்துக்குடுத்தல்' என்று வழங்கப் பட்டது. உதாரணமாக இவ்வாடு அறுபதும் இடையற்கு அடுத்துக் குடுத்து (2/13) 'ஒலோக மாதேவியார் கந்மிகளுக்கு நிலம் அடுத்துக் குடுத்தோம் ஆழ்வார் கந்மிகளோம்' (36/24), குடுத்த பரிசாவது (35/24) என வருகின்றன.

## ஆவணம் எழுதியவர்கள்

ஆவணங்களை எழுதியவர்கள் ஊர்க்கணக்கர், ஊர்க்கரணத்தார், மத்யஸ்தர் போன்றவர்களாவர். ஆவணங்களை எழுதியவர்களது கையொப்பம் ஆவணங்களில் இடுவது இன்றியமையாததாகும். ஒரு ஆவணம் குயவர் ஒருவரால் எழுதப்பட்ட செய்தி, "எழுதினேன் வேட்கோவன்" (601/17) என்ற வரியால் தெரிகிறது.

## முடிவுரை

பல்லவர் காலத்தை அடுத்து வந்த சோழர் காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் பெருக்கப்பட்டு நிறைய நிலங்கள் பயிரேற்றப்பட்டன. இதன் விளைவாக நிலப்பரிமாற்றங்கள் மிகுந்து எண்ணற்ற ஆவணங்கள் எழுதப்பட்டன. எனவே மேற்சொன்ன ஆவணங்கள் மட்டுமல்லாது இன்னும் பல்வேறு வகையான ஆவணச் சிக்கல்கள் தோன்றி ஆவண முறைகளும், வகைகளும் மிகுந்தன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பின்னதாக வந்த விசயநகர நாயக்கச் சமுதாயங்கள் நிலங்களை மையமாகக் கொள்ளாது வரி வருவாய்களையும், படைக் கண்காணிப்பையும் மையமாகக் கொண்டதால் ஆவணங்களின் வகைகள் குறைவதைக் காணலாம். இன்று வழக்கிலுள்ள ஆவணப் பதிவு முறைகள் அந்நியர் ஆட்சியால் ஏற்பட்டவை அல்ல. அவர்களது முறைகளுக்குத் தாக்குக் கொடுத்து ஏற்றும் விடுத்தும் வந்தவையாகும்.

★★★

# சோழர் காலத்தில் கணக்குத் தணிக்கை

**சொ. சந்திரவாணன்**
அருங்காட்சியகக் காப்பாட்சியர், கொற்கை

சோழர்கள் தங்களது ஆற்றலாலும், படைபலத்தாலும் ஆட்சி முறையில் வழுவேற்படாது தேர்ந்த அதிகாரிகளைக்கொண்டு தம் ஆட்சிக்குட்பட்ட இடங்களை மண்டலங்களாகவும், வளநாடுகளாகவும், நாடுகளாகவும், கூற்றங்களாகவும், சதுர்வேதி மங்கலங்களாகவும், சிற்றூர்களாகவும் பிரித்து ஆட்சி செலுத்தினர்.

## ஊராட்சிமுறையும் உட்பிரிவுகளும்

நாட்டு மக்கள் எல்லாவகையாலும் வளமான வாழ்க்கை வாழ்ந்தமைக்கு அடிமுதற் காரணமாய் அமைந்தது ஊராட்சிமுறையாகும். ஊர்ச்சபையின் நேரடி ஆளுகையின்கீழ்க் கிராமங்கள் அமைந்து விளங்கிய காரணத்தால் மக்களின் வாழ்க்கை அமைதியாக இருந்தது. நீதி வழங்கவும் அறநிலையங்கள் வைத்து நன்மை செய்யவும், ஊர்க்காரியங்கள் ஒழுங்காக நடைபெறவும் ஊர்ச் சபைகள் செய்து வந்த தொண்டு அளவிடற்கரியது.

அவற்றின் கடமைகள் வரவரப் பெருகிக்கொண்டே வந்தமையால் அவற்றை நிறைவேற்றச் சில உட்பிரிவுகளை அமைப்பது இன்றியமையாதிருந்தது. அவ்வாறான உட்பிரிவுகள் "வாரியங்கள்" என்ற பெயரில் அழைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. அதற்கான உறுப்பினர்கள் குடவோலை முறையில் தேர்வு செய்யப்பட்டனர் என்பது முதற் பராந்தகனின் செங்கற்பட்டு மாவட்டம், உத்தரமேரூர்க் கல்வெட்டால்[1] நன்கறியலாம்.

## வாரியப் பெருமக்களும் வாரியங்களும்

ஊரும், நகரமும் பலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் குடும்புகள் (ward) எனப்பட்டன. ஊர் சபையால் வாரியப் பெருமக்களாக தேர்ந்து எடுக்கப்பெறும் உறுப்பினர்கள் தகுதியின்

அடிப்படையில் குடும்புகளுக்கு ஒருவராகத் தேர்வு செய்து அவ்வவ்வுறுப்பினர்களைக் கூட்டாக்கியோ, அன்றித் தனித்தோ வாரியங்கள் அமைப்பது முறைமை.

வாரியப் பெருமக்களை உள்ளடக்கிய வாரியங்கள் சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்ச வாரியம், பொன் வாரியம், கழனி வாரியம், கணக்கு வாரியம், கலிங்கு வாரியம், தடிகை வாரியம், குடும்பு வாரியம் என்பன போன்ற வாரியங்களைக் கொள்ளப்பட்டன.

### உறுப்பினர் தகுதி

அவ்வாறு கொள்ளப்பட்ட வாரியங்கள் நீதிமுறை வழுவாது செயல்பட்டன என்பதற்கு உறுப்பினர் ஆவதற்குரிய தகுதி இழந்தவர்கள் பட்டியல் தருவதிலிருந்து அறியலாம்.

உறுப்பினராக இருந்து இறுதியில் கணக்குக் காட்டாது இருந்தவர்களும் இவர்களுடைய உறவினர்களும், கூடத்தகாதவர்களோடு கூடியவர்களும். பஞ்சமா பாதகங்கள் செய்தவர்களும், கையூட்டுப் பெற்றவர்களும், குற்றம் காரணமாகக் கழுதைமேல் ஏற்றப்பட்டவர்களும், கள்ளக் கையெழுத்து இடலாகிய "கூடலேகை" செய்தவர்களும் இவர்களது உறவினர்களும் தகுதி இழந்தவர்கள் என்று கூறுவதால் அறியலாம்.

### கணக்கு வாரியரது பணிகள்

ஊர்க்கணக்கரும் மத்யஸ்தரும் எழுதும் கணக்குகளை ஆய்ந்து உண்மை காண்பது கணக்கு வாரியத்தின் கடமையாகும்.

ஊர்ச் சபையார் பணித்தவற்றைச் செய்யும் பணிமக்கள் பலர், அவர்களுள் மத்யஸ்தன், கரணத்தான், பாடிகாப்பான், தண்டுவான் அடிக்கீழ் நிற்பான் என்பார் சிலர்.

### கணக்கர்கள்

ஊர்க்கணக்கன், கோயில் கணக்கன் என்ற முறையில் இருந்து கணக்குகளை எழுதி வந்தனர். கரணத்தான் என்பவன் ஊர்க்கணக்குகளை எழுதுபவன். தணிக்கை செய்பவனாகவும் இருந்துள்ளான். கோயில் கணக்கனின் கீழ் எண்மர் இருந்து உதவி செய்து வந்தனர் என்பதும் கல்வெட்டுகளால் அறியமுடிகின்றது.

கண்காணிக் கணக்கன், கண்காணிக் கரணத்தான், கண்காணி நாயகம், கண்காணி என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டமை தெரிகிறது.

## தகுதியும், ஊதியமும்

நல்வழியில் ஈட்டிய பொருளும், நல்லொழுக்கமும் உடையவர்களையே கரணத்தாராக நியமனஞ் செய்வது வழக்கம். ஒரு நாளைக்கு நானாழி நெல்லும், ஓராண்டிற்கு ஏழு கழஞ்சு பொன்னும், இரண்டு கூறையுங் கரணத்தானுக்கு வழங்கப்பட்டது.

## பிறபணிகள்

சில ஊர்களில் கணக்கெழுதும் கரணத்தான் அவ்வூர் மத்தியஸ்தனாகவும் இருந்து பணிகள் செய்தனர் என்பதும் தெரிகிறது."இப்படிக்கு சபை உள்ளிருந்து பணித்தார். . . . . . . பணிப்பணியால் ஊர்க் கணக்கு இவ்வூர் மத்தியஸ்தன் பண்டிதப் பிரியனேன் இவை என் எழுத்து" என்ற கல்வெட்டுத் தொடரால் அறியலாம்.

## கணக்கர்களின் பெயர்கள்

சில கல்வெட்டுகளின்படி, கணக்கர்களின் பெயர்களை அறிய முடிகின்றது. கோயில் கணக்கன் ஒருவன் தஞ்சைக் கல்வெட்டில் "செம்பங்குடியான் தன்னிச்சை சதுரவிடங்கன்" என்று குறிப்பிடப்படுகின்றான். மேலும்

"............ இவ்வூர்க் கணக்குச் செய்வாந் சுந்தர சோழ
முத்தரையநாந பிராந்தக முத்தரையர்க்கு"
"............ ஸபைக் கணக்கன் புறக்கடல்
வாமநாந பெரிய கோயிலப் பிரியன்"
"............ பணிப் பணியால் ஊர்க் கணக்கு
சாத்தனூருடையான் பண்டிதப் பிரியன்"
"சேய்ஞலூருடையான் அலங்காரப்பிரியன்"
"இலங்கூறுடையான் மூலபருஷைப் பிரியன்"
"காட்டுடையனார் பட்டப்பிரியன்"

என்று வருகின்றனவும் இன்ன பிற பெயர்களாலும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

## தணிக்கை முறை

ஒரு முறை நேர் செய்து எழுதப்பட்ட கணக்கில் ஏதேனும் குறைபாடுகள் ஏற்பட்டபோதோ அன்றிக் குற்றம் ஏற்பட்டிருந்தாலோ மீண்டும் கணக்கைச் சரிபார்த்துக் குற்றம் குறைகளைக் கண்டுபிடித்துத் தீர்ப்பதற்குப் பயன்படும் முறைக்குத் தணிக்கை முறை என்று பெயர்.

பெரும்பாலும் கோயில் கணக்குகள் "தணிக்கை" செய்யப்பட்டதைக் கல்வெட்டுகள் வழி அறியலாம். கோயிலுக்குக் கொடுக்கப்படும் தானங்கள், கொடைகள் பெரும்பாலும் பொருட்களாகவும், நிலங்களாகவும், காசுகளாகவும் அமைவது இயற்கை. இவற்றை நிருவாகம் செய்பவர்களோ அன்றிப் பிறரோ "கைக் கொள்ளும்" போது கண்டு பிடிக்கப்பட்டுத் தணிக்கை செய்து நிரூபணம்" ஆனதும் தண்டனை வழங்குவது முறையாக அமைந்துள்ளது. தணிக்கை செய்யும்போது யார் முன்னிலையில் நடைபெற்றது? யார்யார் இருந்தனர்? தணிக்கை செய்தது யார்? என்பன போன்ற விவரங்களும் அடங்கியுள்ளன.

## கோயில் சொத்தில் தணிக்கை

கோயிலில் பணிபுரியும் கணக்குக் காணி உடையவர்கள் சிலர் கோயில் பணத்தைத் தமது சொந்தப் பணிகளுக்குப் பயன் படுத்தினர். அத்துடனின்றி இறைவனின் மீது சார்த்தப் பயன்படும் ஆடைகளையும் கோயிலுக்குச் சொந்தமான செங்கற்களையும் தமது சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் சென்றனர். இதனை அறிந்த கோயில் சபையார் தணிக்கை செய்தனர் என்பதைத் திருநாகேஸ்வரம் கோயிலில் உள்ள மூன்றாம் இராசராசனின் [கி.பி. 1225] இரண்டு கல்வெட்டுகள் கூறுகின்றன.

> "ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராஜராஜ தேவர்க்கு யாண்டு எட்டாவதின் எதிராமாண்டு 112 நால் பிரசாதஞ் செய்தருள வந்த திருமுகப்படி திருபுவனச் சக்கரவத்தி கோ நேர்மை கொண்டான். உய்யக் கொண்ட வளநாட்டு உடையார் திருநாகீஸ்வரமுடையார் கோயில் தேவகன்மிக்கும் ஸ்ரீமாகேஸ்வர கண்காணி செய்வார்க்கும் இக்கோயிலிலும் இக்கோயில் . . . . . . தேவர்கள்

> கோயிலிலும் கணக்குக் கண்காணி உடையார் வித்த காசில் பாவையுடையான் ஆதித்தன் [த] நிமை நக்கனானும் இவன் தம்பி நச்சினார்க் [கிணியனும்] . . . . கரியானும் என்பார் சிவத்துரோகமாக இருப்பனவும் சிவத்துரோகஞ் செய்தார்கள் என்று இக்கோயில் தாநத்தார் தாங்களும் தபஸியாரும் . . . . . "

என்று வரும் வரிகளின் பின்னர் வரும் எட்டாவது வரியில்:

> "— . . . . . கருவுகலத்திலே ஒடுக்கிருந்த காசிலே சில . . . எலமே பூசை கொள்கிற தாயன் மாறையும் . . . விலசியன் தங்குவாரைக் காலி . . . பண்ணி நான் ஏறி . . வினிதும் இப்பெருமாள் சாத்தி அருளும் [பொன்]னா]டையையும் கொடுபோய் தன் அகத்திலே விநியோகங் கொண்டும், இவ்வூரில் கோயில் கட்டணம் . . .பண்தோம் . . . . . . . செங்கல்களையும் [விற்று] கொடுபோய் தங்கள் அகங்கள் [சேர்ந்தும்] மற்றும் சிவத்துரோமும் எரிசத்துரோகியாலே. . ."

என்று வருவது காண்க. இதனை ஆய்வு செய்தவர்கள் யார் யார் என்று கூறுகையில்,

> "இக்கோயில் ஸ்ரீ காரியஞ் செய்வானும் ஸ்ரீமாஹேஸ்வரர் கண்காணி செய்வார்களும் தேவகன்மி கோயிற் கணக்கனும் இவ்வனைவோம். . "

என்றும் தெரிகிறது. இக்கோயிலில் திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியாருக்கும், அஷ்ட பரிவாரதேவதைகளுக்கும், இறைவனுக்கும் தனித்தனியே கணக்குக்காணி உடையவர்கள் இருந்தனர் என்பது தெரிகிறது.

இதே போன்று கோயில் கணக்குகளில் தணிக்கை செய்யப்பட்ட செய்திகளைக் காஞ்சிபுரம் கல்வெட்டுகளிலும் நாம் அறிய முடியும்.

## நகை கணக்குத் தணிக்கை

கோயிலுக்கு இட்ட நகைகளின் கணக்குத் தணிக்கை செய்து மீண்டும் நிறை அளந்து ஆபரணங்கள் செய்தமையும், அதனைக் கண்காணித்தவர்களின் பெயர்களின் வரிசையையும் கூறும்

கல்வெட்டுகள் சில உள. திருநாகேஸ்வரம் கோயிலில் உள்ள முதல் இராசேந்திரனின் இருபதாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்கிட்ட பல பொற்பூக்களும் நகைகளும் இற்றளவும் முறிந்தனவும் இட்டுத் திருக்கொள்கையும், திருக்கொடுக்கும், திருக்கோசரமும் செய்ததையும் கணக்குத் தணிக்கை செய்யும் போது,

"இத்தேவர்க்கு முன்பு கல்வெட்டுப் படியும் பண்புறப்'படியும்..." சரிபார்க்கப்பட்டதை அறிய முடிகின்றது. தணிக்கைக் கண்காணிகளாய் இருந்தவர்களின் பெயர்ப் பட்டியலும், நிறை எடுத்தவர் பெயரும் கூறித் தன்மக் கட்டளைக் கல்லால் அளந்த பொன்னைக் குடிஞைக் கல்லால் நிறை அளந்து ஆபரணங்கள் செய்யப்பட்டதாம். பொற்பூக்கள், வாகுவளையும், திருக்காப்புக்காறை, பட்டம் முதலியன செய்து இறைவனுக்குச் சூட்டப்பட்டனவாம்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி [வளர] . . . . . " என்று மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் :

> ஸ்ரீ ராஜேந்திர சோழ தெவற்கு யாண்டு 20-ஆவது உய்யகொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில் திருநாகீஸ்வரம் உடையா . . . ளும் பல பொற் பூ[க்]களும் சில பணிகளாய் [க்கி] தந்த பொன்னும் இற்றளவும் முறிந்தனவும் இட்டுத் திருநாகீஸ்வரமுடையார்க்குத் திருக்கொள்கையும் திருக்கொடுக்கும் திருக்கோசரமுமாகப் பண்ணிச் சாத்துக"

என்று கூறப்படுகிறது. கண்காணிகளைக் கூறும்பொழுது அவர்களின் பணிகளுடன் பெயர்களும் கூறப்படுகின்றது:

> "..... கண்காணி திருக்குடமுக்கில் மூலபருடையார்க்கும் இந்நாடுவகை செய்கின்ற கொடந்திட்டை உடையா. . . . சோழனுக்குமாக்க கண்காணி மாடலந் பாண்டந்தாமோதிரனு மாதவன் வாசுதேவன் பூதநும்
>
> இத்தேவற்கு ஸ்ரீகாரியம் பார்க்கின்ற சந்திரன் தாநதொங்கனாந கடாரங்கொண்டசோழ மாயிலட்டி . . . . . கின்ற சத்திரிய மல்லத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் பெருமான் சென்னியும், திருக்குடமூக்கில் மூலபருடையர்க்காக [ஸ்ரீகோயில்] காரியம் செய்கின்ற

காவணியன் வாசுதேவன் சேத்தனும் கஸ்யபன் இராமதேவநாராயணனும் பண்டாரி திருக்கணாராமநு[ம்] இக்கோயில் காணி

உடைய சிவப்பிராமணந் பாரதாயன் நக்கனங்காடியனும் பாரதாயன் சூரிய . . . நும் பா . . . . ம் ஸ்ரீகோயில் கண்காணிக்கு மத்யஸ்தந் அரங்கன் ஆடவல்லானம், திருமெய்காப்பான் வெண்காடன் பெருமங்கலமும் திருமெய்காப்பாந் சுப்பிரமணியந்சிங்கனம் பந்மா ஹேஸ்வரர் கண்காணி ந [டபள்ள] வ உருத்திராகிரம வித்தநானசண்டேசுவர பிடாரனும் ஸ்தான வாரியன் பரமாற்பன் பூர்வசனும் திருப்பதியம் பாடும் நம்பியாரூரனும் . . . நிச்சதும் இவ்வனைவர் கண்காணியாக . . . . "

என்று கூறப்படுவதைக் காணலாம். பொன் வகைகளை நிறை எடுத்தவனின் பெயரைக் கூறும்போது,

". . . . . . . . கங்கை கொண்ட சோழபுரத்தில் மும்முடிச்சோழப் பெருந்தெருவில் வியாபாரி பிரமகுட்டன் உலகளந்தான் நிறை எடுக்கையால்"

என்று கூறப்படுகின்றது.

## நிலக்கணக்குத் தணிக்கை

தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பிறரால் கவரப்பட்ட போதோ, அன்றி இயற்கையின் சீற்றத்தால் விளைநிலம் நாசமான போதோ, அன்றி இறை கட்டத் தவறியபோதோ நிலங்களை மீண்டும் அளந்து தணிக்கை செய்தனர். அவ்வாறு தணிக்கை செய்தவன் பெயரைக் கூறும்பொழுது பொதுப் பெயரால் "நாடுவகை செய்வான்" என்றும், "நிலம் அளப்பிக்க வந்தோன்" என்றும் அழைத்தமை தெரிகிறது. அத்துடன் நிலம் அளந்து தணிக்கை செய்யும்போது, "அனுபவப் படியும் கணக்குப் படியும் நிலங்கள் அளந்து ஆழிக்கல்லும் சூலக்கல்லும் நட்டு எல்லை தெரிந்தனர் என்பதும் அறிய முடிகின்றது. நிலம் தணிக்கை செய்து அளக்கப்படும் முன்னர் ஊர்ப்பிடாரிக்கு ஆட்டைப் பலியிட்டனர் என்றும் தெரிகிறது.

முதற் குலோத்துங்களது பதினாறாம் ஆட்சியாண்டாகிய கி.பி. 1086 - இல் சோழநாடு முழுவதும் இரண்டாம் முறையாக அளக்கப்பட்டுக் கணக்கு எடுக்கப்பட்டது.

பெரிய...



"நம் உடையார் சுங்கம் தவிர்ந்தருளின குலோத்துங்க சோழதேவற்கு [யாண்டு] 16-ஆவது திரு உலகளந்த கணக்குப்படி நீங்கல் நீக்கிப் பனை நின்ற கொல்லையும் உவரும் உப்பு மண்ணும் ஆய் அருகெழுந்த படுதரையும் என்று அளந்த நிலத்து

என்றும்,

"சுங்கம் தவிர்த்த குலோத்துங்க சோழ தேவர்க்கு பதினாறாவ தளக்கக் குறைந்த நிலத்தொடு . . .

எனவும் கூறும் கல்வெட்டுகளும் உள.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் இருபதாவ்து ஆட்சி ஆண்டில் திருவரங்கத்திலுள்ள கோயில் நிலங்கள் ஆற்றின் போக்கால் சிதைவுபட்டு மண்மேடிட்டுவிட்டதை மீண்டும் அளந்து, திருநந்தவன மானபடியும் தவிர்த்து வந்த கணக்கிலும் கழித்து நிலம் அளவு சாத்துப்படி கொண்டு ஊரடங்க அளந்து ஒக்க பரிவர்த்தனை பண்ணினர் என ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

". . . . . . பாண்டிய குலாசனி வளநாட்டுத் திருவரங்கத்து வாரியனுங் கரணத்தானுங் கண்டு இன்னாட்டு மீகொன்றை நாட்டு உடையார் திருவானைக்காவுடையார் கோயில் இவ்வூர் குடியிறுப்பு நத்தத்துக்கு வடகிழக்கு . . . . . . . . . . . . . விக்கிரசோழந் திருவீதியில் வடசிறகுட்பட்ட விட்ட அகளங்க நாடாள்வார் எழுந்தருளிவித்த திருக்காமக்கோட்டத்துப் பெரிய நாச்சியார் கோயிலும், திருமதிலும் [பெரிய] கோயிலுக்கு வடக்குப் பேர்தறுச் செய்வித்த ஒரு சிறகின் மனைகளுக்கு வால் நீளம் குறைவுபட்டு ஆறுகுத்தி இடித்தழிவு பட்டவாறே"

என்று போகிறது.

"அனுபவப்படியும் கணக்குப்படியும் நிலம் கலந்து கிடக்கும் உட்கிடை வாகில் திருவானைக்காலில் நிலத்திலே விட்டு நிலத்துக்கு ஒக்க பக்கஞ்சேர நிறுத்திப் பரிவற்தித்துத் திருவானைக் காக் குடியிருப்பு நத்தமாக வாய் இடுகிற இடம் எல்லைக்கு வேண்டுமளவிலே ஆறு பெற்று கல்லிட்டுத்

திருவானைக்காவுடையார் கோயில் நடுவாகக் கொண்டு வாஸ்து வகுத்துக் குடியேறவும் பண்ணி. . . . . "

"திருவரங்கத்து நிலமான . . . . . . பூந்திருநந்த வனமாந படியுந் தவிந்து கணக்கிலும் கழித்து. . ."

"நிலம் அளவு சாத்துப்படி கொண்டு ஊரடங்க அளந்து ஒக்க கண்ட பரிவர்த்தனை" . . .

என்று வருவதைக் காணலாம்.

## குற்றங்கள் தண்டனைகள்

கரணத்தான் தான் எழுதிய கணக்கை ஆண்டின் இறுதியில் சபையாரிடம் கொடுக்கும்போது "சிவக்கக் காய்ச்சிய மழுவைக் கையில் ஏந்தி உறுதிமொழி கூறிக் கொடுத்தல் வேண்டும். அங்ஙனம் கொடுக்குங்கால் கையில் ஊறுபாடு நேராதாயின் ஏழுகழஞ்சின்மேல் கால்பங்கு பொன் சேர்த்தும் ஊறு நேர்ந்தபோது பத்து கழஞ்சு பொன்னும் தண்டம் விதிக்கப்பட்டது.

கோயில் சொத்துக்களைக் கையாடியவர்களின் நிலங்களை விற்று 40,000 காசுகளும் 3,000 காசுகளுமாகக் கோயில் கருவூலத்தில் சேர்க்கப்பட்டன. பிறிதோர் கல்வெட்டில் மகாசபையார் முன்னம் கணக்குக் காட்டாத குற்றத்திற்காக அவ்வூர்க் கணக்கனின் நிலம் 25 காசுக்கு இறையிலியாக விற்றுக் கொடுக்கப்பட்டது. கோயில் சொத்துக்களைக் கையாடியதற்கும் சிவத்துரோகம் செய்ததற்கும் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்து கோயில் கணக்கில் சேர்க்கப்பட்டன. இது போன்ற செய்திகளைத் தரும் கல்வெட்டுக்கள் பல உள்ளன.

குற்றம் செய்தவர்களேயன்றி தகுதி அற்றவர்களும் கரணத்தராய் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டு 25 பொன் தண்டம் அளித்ததும் அவர்களின் பதவி பிற கரணத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டதும் கல்வெட்டால் அறிய முடிகின்றது.

## பிற செய்திகள்

மேற்சொன்ன செய்திகளே அன்றிப் பிற செய்திகளாகக் காண்போமானால் சேய்ஞலூர்க் கல்வெட்டு வாரியம் அமைப்பது பற்றியும் கடமை முதலியவற்றை வசூலிப்பது பற்றியும் சபா விநியோகம்

என்னும் வரிவாங்கிச் செலவிடுவது பற்றியும் அவ்வூர்க் கோயில் சபையார் செய்த முடிவை ஊர்க்கணக்கன் ஒப்பளிப்பு செய்ததைப் பற்றியும் தெரிவிக்கிறது. மாநாட்டுச் சபையின் கூட்டம் நடைபெற்ற போது ஒவ்வோரூரின் பிரதிநிதியோடும் அவ்வவ்வூரின் கணக்கரும் அங்கு இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறது. சபையினருடன் ஊர்க்கணக்கனும் உடன் இருந்து நிலம் விற்றுக் கொடுத்தான். ஊர்க்கணக்கனும் கரணத்தான் ஆகியயோரை மேற்பார்வையிடக் கண்காணிக் கணக்கனும் இருந்தான் என்று அறிய முடிகிறது. ஊர்க்கணக்கனே அவ்வூரின் மத்தியஸ்தனாகவும் இருந்து செயல்பட்டான் என்பது முன்னர் கண்ட செய்தியாகும்.

## முடிவுரை

இவ்வாறு சோழர் காலத்திய அரசியல் முறையில் கோயில் ஊர்க்கணக்கர்களின் பணிகளும் அவர்களின் செயல்களும் தணிக்கை செய்த முறைகளும் அவ்வவற்றிற்கான குற்றங்களும், தண்டனைகளும் விளக்கும் கல்வெட்டுக்கள் பல உள. அத்துடன் கணக்குத் தொடர்பான பிற செய்திகளும் சிறப்புச் செய்திகளாக நன்கு விளங்கும்படி கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

## துணை நூல் பட்டியல்


1. ARE 1904 - 1905 P. 131
2. உத்திரமேரூர்க் கல்வெட்டு.
3. ARE 99 of 1956.
4. உத்திரமேரூர்க் கல்வெட்டு.
5. S.I.I. Vol. VI, No. 362.
6. S.I.I. Vol. XIX, No. 63.
7. தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டு.
8. ARE 116 of 1916.
9. S.I.I. Vol. VII, No. 204.
10. S.I.I. Vol. XIX, No. 63.
11. S.I.I. Vol. XIXV, No. 59.
12. இராசராசன் III கி.பி. 1245 இன் கல்வெட்டு, பி. சோ. சரித்திரம், பக். 707 - 708.
13. ARE 70 - 72. of 1931 - 32.
14. N. Sethuraman `The Early Chola' `The Chola'.

15. S.I.I. Vol. VI, No. 33.

16. S.I.I. Vol. VI, Nos. 61,63,64,65,66,67.

17. ARE 113 of 1938 - 39.

18. திருமங்கலம் கல்வெட்டு.

19. பி. சோ. சரித்திரம், பக். 560.

20. S.I.I. Vol. V, No. 990.

21. S.I.I. Vol. VI, No. 36.

22. S.I.I. Vol. XXIV, No. 142.

23. Ibid.

24. ARE 16 of 1916.

25. ARE 70 - 71 of 1921 - 32.

26. S.I.I. Vol. XIX, No. 63.

27. 38, 189 of 1929.

28. 39 S.I.I. Vol. XXIV, No. 1.

★ ★ ★

# சோழர் காலத்தில் ஊர்

**சொ. சாந்தலிங்கம்**

தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்.

நிலவுடமைச் சமுதாயம் உச்ச நிலை எய்திய காலம் சோழர் ஆட்சிக்காலம். இதன்மூலம் சோழப் பேரரசில் நில உடமையாளராக வேளாளர் வர்க்கமே தலையாய வர்க்கமாகியது. இக்காலத்தில் கோயில்களே மிகப் பெரிய சமூக நிறுவனங்களாகச் செயல்பட்டு வந்தன. கோயில் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக விளங்கியது. வேளாளர்கள், நிலமுடைய பெருங்குடிகள் கோயில் நிலங்களை மேற்பார்வை செய்யும் நிர்வாகிகளாகவும், ஊரவராகவும், நாட்டினராகவும் அதிகாரம் பெற்றிருந்தனர். கோயில் நிர்வாகிகளாக இவர்கள் சர்வவல்லமை உள்ளவராக விளங்கினர். இவ்வேளாண்குடிகள் வாழ்ந்த பகுதி ஊர் எனப்பட்டது. ஊர் என்னும் சொல் வாழும் இடத்தையும் அதற்குரிய நிர்வாக அமைப்பையும் குறிக்கும். பிராமணர்கள் வாழும் இடங்கள் மங்கலம், பிரமதேயம், சதுர்வேதி மங்கலம் என்றும், வணிகர்கள் வாழும் பகுதி நகரம், மணிக்கிராமம் என்றும் பெயர் பெற்றது போல வேளாண்குடிகள் வாழ்ந்த இடம் ஊர் எனப்பட்டது. பிராமணர் சதுர்வேதிமங்கலங்களில் நிர்வாக அமைப்புகள் மகாசபை, பெருங்குறி மகாசபை என்ற பெயர்களில் இயங்கி வந்தன. வணிகர்களின் நிர்வாக அமைப்பு "நகரம்" எனப்பட்டது. பிராமணர்களின் மகாசபை நிர்வாகம், அதன் வாரியப் பகுப்புக்கள், செயல்பட்டு வந்த கணங்களின் வகைகள், அவற்றில் அங்கம் வகிப்போர்க்குரிய தகுதிகள், அவர்களைத் தேர்வு செய்யும் முறை ஆகியவற்றைச் சோழர் காலத்திய பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

ஊர் அமைப்பு

சோழ மண்டலத்தின் பூகோள அரசியல் அமைப்பை ஆராய்ந்தவர்கள் இரண்டு சதுர மைல்களுக்கு ஓர் ஊர் என்ற விகிதத்தில் ஊர்கள் அமைந்திருந்தன என்று கணக்கிட்டுள்ளார்கள். நாட்டில் கிடைக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியைப் பொறுத்து ஊர்கள் நெருங்கியும் குறைந்தும் இருந்துள்ளன. நீர்வளம் நிறைந்த பகுதிகளில் நெருக்கமாகவும் வளங்குன்றிய பகுதிகளில் குறைவாகவும் மக்கள் வாழ்ந்துள்ளனர். ஓர் ஊர் என்பது மக்களின் வாழ்விடம், குடிநீர், பாசனக் குளங்கள், சுடுகாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

மக்கள் வாழ்விடங்களில் சில பிரிவுகள் உண்டு. நில உடமையாளர்கள், வேளாளர்கள் வாழும் இடம் ஊர் இருக்கை எனப்படும். பிற சிறு தொழில்கள் செய்யும் தொழிலாளர் வாழும் இடம் கம்மாளச்சேரி எனப்படும். பறை கொட்டுவோர் போன்றோர் வாழும் இடம் பறைச்சேரி எனப்பட்டது. இம்மூவகைப் பிரிவுகளைக் கொண்டே அக்காலச் சமுதாயத்திலிருந்த ஏற்றத் தாழ்வுப் படிநிலைகளையும் நாம் அறிந்து கொள்ளலாம். நில உடமையாளர்கள், பெருநிலக்கிழார்கள் என்னும் மேல்தட்டு மக்கள்; கருமான்கள், தச்சர், நெசவாளர் போன்ற தொழில் செய்யும் இடைத்தட்டு மக்கள்; பறை கொட்டுவோர், காளம் ஊதுவோர், உவச்சர் போன்ற கீழ்த்தட்டு மக்கள் என்று மூன்று அடுக்குகள் இருந்தன. நில உடமையாளர்கள் காணி உடையார் என்றும் அவர்களிடம் பணி செய்யும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் உழு குடிகள் எனவும் பெயர் பெற்றிருந்தனர். இவ்விரு தரத்தாரும் வேளாளர் என்றே கருதப்படுவர். நில உடமையாளர்களின் கோயில்களின் நலங்காப்போராக, நிர்வாகிகளாகப் பணிபுரிந்தனர் என்றால், பிறதொழிலாளர்கள் கோயிலில் அன்றாடப் பணியாளர்களாக இருந்து ஊதியம் பெற்றனர். அத்தகையவர்களில வேட்கோவர், நந்தவனம் இறைப்பார், காளம் ஊதுவார், திருமெழுக்கிடுவார், பலி கொட்டும் உவச்சர் ஓதுவார், சுவாமிக்குப் பூசைகள் செய்வார் என்ற பலவகையினரும் ஊர்களில் வாழ்ந்தனர். குடியிருப்புப் பிரிவுகள் அங்கு வாழ்ந்த மக்கள் பிரிவினரைப் பொறுத்துப் பறைச்சேரி, ஈழச்சேரி, செக்காலைச்சேரி எனப்பட்டன. சுடுகாடுகள் கூடத் தனித்தனியே இருந்தன. வெள்ளான் சுடுகாடு, பறைச் சுடுகாடு எனப் பாகுபட்டிருந்தன.

### ஊர் (நிர்வாகம்)

ஊரின் நிர்வாக உறுப்பினர்கள் பெரும்பாலும் நில உடமையாளர்களாகவே இருந்தனர். பிராமணர்களின் மகாசபை போன்று கல்வித்தகுதி போன்ற தகுதிகள் வலியுறுத்தப்படவில்லை. ஊரின் நடவடிக்கைகள் பெரும்பான்மையும் நில விற்பனை, நிலவரி, நிலக்கொடைகள், கோவிற் கொடைகளை ஏற்று நடத்துதல் போன்றவையாக இருந்தமையால் பிற தகுதிகள் அவசியமாகப் படவில்லை. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியின் கருத்துப்படி "சுயாட்சி பெற்ற ஊர் என்பது அரசினுடைய ஓர் அங்கம்" எனப்படும். பிராமணர் அல்லாதாரின் நிர்வாக அமைப்பான "ஊர்" எல்லாவகையிலும் பிராமணர்களின் சபைக்கு நிகரானதாகும்.

### ஊர் நிர்வாகிகள்

ஊரின் தலைமைப் பொறுப்பை வகிப்பவர் அவ்வூரின் பெருநில உடைமையாளராக இருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் உடையான், கிழான் என்று பெயர் பெறுவார்கள். ஊர்த்தலைவன் "ஊராள்வான்" என்றும் பெயர் பெறுவான்.

ஊர் நிர்வாகத்திற்கு உதவியாக ஊர்க்கணக்கன், பாடி காப்பான், தண்டல், அடிக்கீழ் நிற்பான் என்ற பலர் இருந்தனர். இவர்களுக்கென்று ஊராரால் ஊதியம் வழங்கப்படும். ஊர்க்கணக்கன் அல்லது கரணத்தான் என்பவன் ஊர்க் கணக்குகளை எழுதக் கூடியவன், இவன் நல்லொழுக்கமும், நேர்மையான பொருள் ஈட்டுபவனுமாக இருத்தல் வேண்டும். இவன் தன் பணியில் நற்பெயரைப் பெறாவிட்டால் தண்டனைக்குள்ளாவான். மீண்டும் அப்பணி அவனுக்கு வழங்கப்படமாட்டாது. உதாரணமாக உத்தமச் சோழன் காலத்தில் ஊர்க்கணக்கன் சரியாகக் கணக்கு காட்டாத காரணத்திற்காகவும், நிர்வாகிகள் முன்வந்து சரியாகப் பணி செய்யாத காரணத்திற்காகவும் அவனது நிலங்களை பறிமுதல் செய்தனர் என்பதைத் தஞ்சை மாவட்டம் புள்ளமங்கை கல்வெட்டு ஒன்றினால் அறிகிறோம். ஊர்க்கணக்கனுக்கு ஊதியம் வழங்குவதற்காக "ஊர்க்கணக்கப்பேறு" என்ற வரி விதிக்கப்பட்டது. அவனுக்கு வழங்கப்படும் ஊதியம் அல்லது அதற்கான நிலம் "ஊர்க்கணக்கு ஜீவிதம்" எனப்பட்டது. ஊர்க் கணக்கன் ஊரார் கூடி எடுக்கும் முடிவுகளை உடனிருந்து எழுதும் பணியை

மேற்கொள்வான். "இவர்கள் சொல்ல எழுதினேன் இவ்வூர்க் கரணத்தான் என அவன் தீட்டுகளில் கையொப்பம் இடுவான்.

பாடிகாப்பான் என்பவன் ஊரில் கலகம், திருட்டு போன்ற குற்றங்கள் நிகழாதவாறு பாதுகாக்கக் கூடியவன். இவனுக்கு வழங்கும் ஊதியத்திற்காகப் "பாடிகாவல்" என்ற வரி விதிக்கப் படுவதுண்டு. தண்டல் அல்லது தண்டுவான் என்பவன் ஊருக்குரிய வரிகளை வசூலிப்பவன். அடிக்கீழ் நிற்பான் ஊரின் குற்றேவல் பணிகளைச் செய்பவன் ஆவான். "இவ்வூர் ஊர்த் தண்டல் நெற்குன்ற முடையார் திரு நட்டப்பெருமானான தென்னவன் மூவேந்தவேளார்" என்பதால் வேளாளரே நிர்வாகத்தின் சிறிய பெரிய பதவிகள் அனைத்திலும் இடம் பெற்றிருந்தனர் எனத் தெரிகிறது.

ஊரின் பணிகள்

ஊரின் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும் அமைப்பு ஊர். பெரும்பாலும் கோயில்களில் வைக்கப்படும் கொடைகளை ஏற்று அவை முட்டாமல் நடைபெறச் செய்வது முக்கிய கடமையாகும். நொந்தாவிளக்குகளை எரித்தல், பூசைகளை தவறாது நடத்தல், ஊரில் நடைபெறும் நிலவிற்பனை போன்ற நிலப்பரிமாற்றங்களை முன்னின்று செய்தல் போன்ற பணிகளையும் ஊர் மேற்கொள்ளும். ஏரி, குளம், கலிங்கு ஆகியவற்றைத் திருத்தி நன்மை செய்வது வேளாண்குடிகளது ஊரின் தலையாய கடமையாகும். ஊர் நிர்வாகத்திற்குரிய வரிகளை விதிப்பது. அதை வசூலிப்பது ஆகியவையும் ஊரின் பணிகளாகக் கருதப்படும்.

வெள்ளான் வகை எனப்படுகின்ற தனி நபர்களுக்குச் சொந்தமான விளைநிலங்கள் போக, ஊர்ப் பொதுவாகவும் நிலங்கள் இருந்தன. "ஊர்ப்பொதுவாய்க் கிடந்த பட்டி, ஊர்ப்பொதுவாய்க் கிடக்கும் நிலம், எங்கள் ஊர்ப்பொதுவாய் எங்கள் காணியாய் நாங்கள் இறுத்து வருகிற நிலம், ஊர்ப் பொது நிலம் என கல்வெட்டுகள் கூறுவதைக்கொண்டு இதனை அறியலாம். ஊர் இதனை நிர்வகித்து வருதல் வேண்டும். இப்போது நிலத்தைக் கோயில்களுக்கு நன்கொடையாக அளித்தல் அல்லது நிலமற்ற நிலம் வாங்க விரும்பும் உழுகுடிகளுக்கு விற்றல் போன்ற பணிகளையும் ஊர் மேற்கொள்ளும். வேளாண்குடிகள் தங்கள் நிலத்தை ஊருக்கு விற்கவும், ஒற்றிவைக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது.

ஊர்களின் தனித்தனியே அளவைகள் இருந்தன. நாடு முழுவதும் புழக்கத்தில் இருக்கின்ற பொதுவான அளவைகள் தவிர இவை தனித்தனியாகவும் சில ஊர்களில் கையாளப்பட்டுள்ளன. "ஊரளவு கோலாற் குழி இரண்டாயிரம், ஊர்க்கால் கொது குலவநால் அளப்பதாகவும், ஊர்க்கல் என்று மூவித அளவைகளும் ஊர்களில் தனித்தனியே இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டாகத் திருமறைக் காடன் என்னும் உழக்கு, திருவெள்ளறைக் காணம், கொற்றமங்கலத்து ஊராடுகல், திருவண்ணாமலை என்னும் மரக்கால், பாச்சில்கல் என்பவை அவ்வவ்வூர்களிலிருந்த ஊர்ப்பெயர்களால் வழங்கிவந்த அளவை களாகும். இவற்றையே அண்டையூராரும் பயன் படுத்தியிருக்கலாம். இவ்வித ஊர் அளவைகளை நிர்ணயம் செய்தல், சரிபார்த்தல் போன்ற பணிகளும் கூட அவ்வவ்வூராராலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஊர் நிர்வாகத்திற்கென ஆண்டுதோறும் தனிவரி விதிக்கப் படும். அதற்கு ஊர்வரி, ஊராட்டு வரி, ஊரிடுவரி, ஊரிடு வரிப்பாடு எனப் பல பெயர்கள் உண்டு. இவ்வரிகளை வசூலித்தே ஊர் நிர்வாகத்தை நடத்த வேண்டும். வசூலிப்பதில் கடுமையான அணுகு முறைகள் கூடாது என்ற விதிமுறைகள் உண்டு. ஆனால் வரிகொடாதோரிடம் இரட்டிப்புத் தண்டம் வசூலித்தலும், நிலங்கள் பறி முதல் செய்யப்படுவதும் நடைமுறையில் இருந்தது. மேற்சொன்ன வரிகள் தவிர "ஊர்க்கடமை", "ஊர்க்கணக்கப்பேறு," "ஊர்நியோகம்", "ஊர்த்தரிசு", "ஊர்விவஸ்தை" என்ற வேறு சில வரிகளும் இக்காலக்கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வரிகள் அத்தனையும் ஒரே ஊரில் விதிக்கப்பட்டிருந்தன என்று கொள்வதற்கோ அல்லது குடிமக்கள் அனைவர் மீதும் பொதுவாக விதிக்கப்பட்டிருந்தன என்று கொள்வதற்கோ இயலாது. சில குறிப்பிட்ட காரியங்களுக்காக அக்காரியங்களோடு சம்பந்தப் பட்டவர்கள் செலுத்த வேண்டிய வரிகளாக இவை இருக்கலாம்.

ஊர் கூடுவதற்கு பறையறைந்து அல்லது காளம் ஊதிக் குடிகளுக்குத் தெரிவிக்கப்படும். பெரும்பாலும் கோயில் மண்டபங்களில் ஊர் கூடும். அப்போது குடிகள் அனைவரும் கலந்து கொள்வர் என்பது "கூட்டம் குறைவறக் கூடி" என்னும் கல்வெட்டுக் கூற்றுகளால் தெரிய வருகிறது. கூட்டத்தில் எடுக்கப்படும்

முடிவுகளைக் கரணத்தான் கேட்டு எழுதப், பின்னர் அது கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும்.

## ஊரும் சபையும்

சில ஊர்களில் விளை நிலங்கள் ஒரு பகுதி தேவதானமாகவும், மற்றொரு பகுதி பயிரிடுங் குடிகளுக்குரிய வெள்ளான் வகையாகவும் இருந்தன. இவ்வித இடங்களில் சபையும், ஊரும் சேர்ந்து சில காரியங்களில் ஈடுபட்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் திருவிடந்தை ஆழ்வார் ஸ்ரீவராக தேவர்க்கு அவ்வூரிலுள்ள வேளான் குடிகள் பன்னிருவர் பொன் தானமும் வேறு சில கொடைகளும் செய்தனர். இச்சாசனத்தின் இறுதியில் "இவ்வூர்ச் சபையோமும் ஊரோமும் கையெழுத்து" எனக் கையெழுத்திட்டுள்ளனர். ஊர் நிர்வாகிகளாக மூவேந்த வேளார் இருவர் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். சில பிரமதேயங்களில் அதற்குரிய சபை செயல்பட்டதோடு அதற்குட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட ஊர்களும் இருந்துள்ளன. இவ்விதம் பிராமணர்க்குரிய சபையும், வேளாளர்க்குரிய ஊரும் ஒரே நேரத்தில் செயல்பட்டதோடு சில பொதுக் காரியங்களில் ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒத்துழைப்போடு செயல்பட்டன. ஆனால் பிற்காலத்தில் அவற்றுக்குள் தவறான எண்ணங்கள் தோன்றிப் பகைமை வளர்ந்தது.

## ஊரும் நாடும்

சுயாட்சி பெற்ற பல ஊர்கள் சேர்ந்து நாடு என்னும் பெரும் பிரிவு பெயர் பெற்றது. இந்நாடு "எல்லைப் பிரிவையும்," "நிர்வாக அமைப்பையும்" குறிக்கும் பொதுச் சொல், நாடு என்னும் அமைப்பின் உறுப்பினர்கள் நாட்டார் எனப்படுவர். இவர்கள் அந்நாட்டினுள் அடங்கிய ஊர்களின் தலைவர்களாகவே இருப்பர். ஊர்க்கிழான், ஊர் உடையான் என்றே அவர்கள் குறிக்கப் பெறுவர். ஒவ்வொரு நாட்டிலும் சுமார் 20 முதல் 40 ஊர்கள் வரை அடங்கியுள்ளன. ஒரு நாட்டின் எல்லை சுமார் 35 முதல் 200 சதுர மைல்கள் வரை விரிந்துள்ளன. விரிவான எல்லை அமைப்பைக் கொண்ட நாடுகளில் மக்கள் தொகை குறைவு. நீர் வளப்பமும் குறைவு. குறைவான பரப்பைக் கொண்ட நாடுகளில் நீர்வளமும், மக்கள் நெருக்கமும் அதிகம். நீர்வளம் நிறைந்த காரணத்தாலேயே அடுத்தடுத்து நாடுகள்

அமைந்தன. இத்தகைய நாடுகளுள் அடங்கிய பிரமதேயங்களின் பிரதிநிதிகளாகப் பிராமணரும் நாட்டாரின் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் நாட்டின் உறுப்பினராகக் கருதப்படமாட்டார். "நாடு" என்னும் இப்பெருங்குழு, தன்னுற் அடங்கிய ஊர்களின் பொதுவான பிரச்சினைகள் பற்றி முடிவெடுக்கும் அமைப்பாகச் செயல்படும்.

இதுகாறும் கூறியவற்றால் கீழ்க்கண்ட செய்திகள் விளக்கப் பட்டுள்ளன. ஊர் என்பது வேளாண் குடிகளின் நிர்வாக அமைப்பு. ஊரின் நிர்வாகம், வழக்குகள், நீர்ப்பாசனப் பிரச்சினைகள் கோயில் நிர்வாகம், நில உறவுகள் பற்றிய பணிகளை அவை மேற்கொள்ளும், நிலவரி போன்ற வரிவசூல் மட்டும் அரசனால் நேரடியாக மேற்கொள்ளப்படும். மற்ற சமுதாயக் கடமைகள் யாவும் ஊரால் மேற்கொள்ளப்படும். அரசியல் கடமைகள் எதுவும் ஊருக்கு இல்லை. பல ஊர்கள் சேர்ந்து நாடு என்னும் பொது அமைப்பாக செயல்பட்டு வந்துள்ளது. ஊர் பிராமணர் சபைகளோடு கூட்டாகச் சேர்ந்து சில காரியங்களை ஆற்றியுள்ளன. பிராமணர் சபைகளுக்குச் சமமான அமைப்பாக, சுயாட்சி பெற்ற ஒரு அரசின் அங்கமாக ஊர்கள் சோழர் காலத்தில் இருந்தன; செயலாற்றின.

## துணை நூல் பட்டியல்


1. T.V. மகாலிங்கம், `South Indian Polity' PP. 173 - 80 Ref. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். பக். 171 க. கைலாசபதி.
2. நா. வானமாமலை, மூடுதிரை தாமரை. மே 1962. Ref. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும். பக். 178 க. கைலாசபதி.
3. க. கைலாசபதி, "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" பக். 178.
4. Y. சுப்பராயலு Political Geography of chola country. Ref. Peasan state and society in Medieval South India. P.94. Burton stein.
5. S.I.I. Vol. II, No. IV.
6. Burton Stein Peasant state and society in Medieval South India p. 106.
7. சதாசிவ பண்டாரத்தார், "பிற்காலச் சோழர் வரலாறு" பக்.501.
8. S.I.I. Vol. XIX, No. 63.
9. Ibid. XIX, No. 26.
10. Ibid VIII No. 30
11. ARE 201 - 1917.

12. S.I.I. XIII No. 462.
13. Ibid No. 546.
14. S.I.I. XIII No. 182.
15. Ibid XIX, No. 107, 163, 311.
16. Y. Subbarayalu. The place of Ur in the Economic And Social History of the Early Tamilnadu 760 - 1350 A.D. (paper).
17. Burton Stein. Peasant state and Society in Medieval South India, p. 95.
18. Ibid, p.92.

★★★

# சோழர் காலத்தில் வைணவர்கள்

**பொ. இராசேந்திரன்**

கல்வெட்டாய்வாளர்

தொல்லியல் துறை, மயிலாடுதுறை

முன்னுரை

சுந்தரசோழ விண்ணகர் குந்தவை விண்ணகர், இராசராச விண்ணகர், மும்முடிச்சோழ விண்ணகர்,வீரநாராயண விண்ணகர், இராசேந்திர விண்ணகர், குலோத்துங்க சோழ விண்ணகர் என்று சோழப்பெருவேந்தர்களின் பெயர்களிலேயே பல வைணவ ஆலயங்கள் காணப்படுதலே, சோழர் காலத்தில் வைணவம் நன்கு செழித்திருந்தமைக்குச் சிறந்த சான்று. ஒரு சோழ மன்னன் (அதிராசேந்திரன் ?) வைணவப்பெரியார் இராமானுசரையும், அவருடைய கூட்டத்தினரையும் நாடு கடத்தினான் என்றும், மற்றொரு சோழவேந்தன் (இரண்டாம் குலோத்துங்கன்) தில்லையிலிருந்த கோவிந்தராசப் பெருமாளை அப்புறப்படுத்தினான் என்றும் கூறப்படுகின்ற ஒரு சில செய்திகளைத் தவிர்த்துப் பார்த்தால், பெரும்பாலும் சோழ அரசர்கள் வைணவத்திற்கு ஆதரவாக இருந்தனர் எனலாம். சோழர் காலத்தில் சைவமும், வைணவமும் ஒன்றாக வளர்ந்தன என்று கூறுதலும் மிகையாகாது. இல்லை யெனில், சோழர் காலத்தில் சைவ ஆலயங்களில் கூட வைணவக் கதைகள், குறிப்பாக இராமாயணக் கதைகள் சிற்பங்களாகக் சித்தரிக்கப்பட்டிருக்குமா? சோழர் காலத்தில் அரசர்களும், அரசைச் சார்ந்தவர்களும், பொதுமக்களும், வைணவர்களும், வைணவ ஆலயங்களுக்கு, வைணவ வளர்ச்சிக்கு, எண்ணற்ற கொடைகளை வழங்கி வைணவத்தை வளர்த்தமை கல்வெட்டுகளாலும் நன்கு உறுதிப்படுகிறது. வைணவத்தோடு சேர்த்து, வைணவத்தைச் சார்ந்த வைணவர்களும் சோழப் பேரரசாட்சியில் நன்கு வளர்ச்சியுற்றிருந்தனர்.

### வைணவப் பெரியார்கள்

திவ்வியசூரி, மாலுகந்த ஆசிரியர், மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர், பதியே பரவித்தொழும் தொண்டர், விண்ணுளாரிலும் சீரியர் என்றெல்லாம் வைணவர்களால் சிறப்பாக அழைக்கப்படும் ஆழ்வார்களுள் பெரியாழ்வார் முதல் மதுரகவி வரையிலானவர்கள் சோழப் பேரரசுக் காலத்தில் வாழ்ந்து வைணவத்தைச் செழிக்கச் செய்தவர்கள் என்று கருதப்படுகிறது.

ஆழ்வார்களுக்கு அடுத்தநிலையில் வைத்துப் போற்றப்படும் வைணவப் பெரியார்கள், ஆசாரியர் அல்லது தேசிகர் என்று அழைக்கப்படுபவர்கள். இவ்வரிசையில் நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி ஆளவந்தார், பெரியநம்பி, இராமானுசர், எம்பார், பராசரபட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்கு திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாச்சாரியார், திருவாய்மொழிப்பிள்ளை, பிள்ளான், சிடாம்பி ஆச்சான், எங்களாழ்வான், நடாதூரம்மான், அப்புள்ளார், வேதாந்த தேசிகர் போன்றவர்கள் சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கியவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவர்களுள் நாதமுனிகள், நியாய தத்துவம், யோக ரகசியம் என்ற பிரபந்தங்களை அருளிச் செய்தவர்; நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்து வழங்கியவர். தென்னார்க்காடு மாவட்டம் வீரநாராயணபுரமாகிய காட்டுமன்னார்குடியில் ஈசுவர முனிகளின் மகனாகப் பிறந்த இவர், இரண்டாம் பராந்தகனின் அன்பில் செப்பேடுகளில் குறிக்கப்படும் ஸ்ரீநாதராக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. குருகைக் காவலப்பன், புண்டரீகாட்சர், நம்பிகருணாகரதாசர், ஏறு திருவுடையார், திருக்கண்ண மங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உறுப்புட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்தூர் ஆழ்வான் போன்ற பல வைணவர்கள் இப்பெரியாரிடம் ஞானோபதேசம் பெற்றனர்.

நாதமுனிகளின் பிள்ளை வயிற்றுப் பேரனாகிய ஆளவந்தார் இரண்டாம் பராந்தகனது அரசியல் தலைவர்களுள் ஒருவராக இருந்தவர். இரண்டாம் பராந்தகனின் அமைச்சர் அனுருத்திரரையும் அவரது குடும்பத்தாரையும் வைணவத்திற்கு மாற்றினார். இராமானுசரை உருவாக்கியவர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

இவர் எழுதிய நூல்களுள் ஆகமப் பிராமண்யம், புருஷ நிர்ணயம், ஆத்ம சித்தி, ஈச்சுரசித்தி, கீதார்த்த சங்கிரம், ஸ்ரீதோத்திரம், சதுச்லோகி போன்றவை சிறப்புப் பெற்றவை. இவருக்கு யமுனைத் துறைவன் யாமுநாசர் என்ற பிறபெயர்களுமுண்டு.

எம்பெருமானார், யதிராசன், உடையவர், ஸ்ரீபாஷ்யகாரர், பெரும்புதூர் மாமுனி, இளைய ஆழ்வார் என்றெல்லாம் போற்றப்படும் இராமானுசர், ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்தசாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாஷ்யம் போன்ற நூல்களால் புகழப்பெற்றவர். விசிஷ்டாத்வைதத்தை உருவாக்கிய இவர் கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வைணவம் மலரச் செய்தவர். இவர் முயற்சியால் 74 வைணவப் பீடாதிபதிகள், 700 ஏகாங்கிகள், 10,000 பாகவதர்கள் ஆகியோர் வைணவத்தைப் வளர்ப்பதில் தீவிர பங்கேற்றனர்.

இராமானுசர் தம்முடைய தாய்மாமனின் திருக்குமாரரும், தம்முடைய தலைசிறந்த சீடருமான திருக்குருகைப் பிள்ளான் என்பவரைக் கொண்டு திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி என்ற உரையை எழுதச்செய்தார்.

இராமானுசரின் மற்றொரு சீடரான திருவரங்கத்து அமுதனார் என்பவர், கலித்துறையில் நூறு பாடல்களைக் கொண்ட இராமானுச நூற்றந்தாதி என்ற நூலை அருளியுள்ளார். இவர் திருக்கோயிலூர்க் கல்வெட்டில் குறிக்கப்படும் மூங்கிற்குடித் திருவரங்கத்தமுதனாராக இருக்கக்கூடும் என்று அறிஞர் கருதுவர்.

இராமானுசர் ஆற்றிய சிறந்த வைணவத் தொண்டின் காரணமாக, இவருடைய திருமேனிகள், இவரது காலத்திலேயே திருப்பெரும்புதூர், திருவரங்கம், திருநாராயணபுரம் போன்ற இடங்களில் நிறுவப்பட்டு வழிபடப்பட்டன.

இராமானுசரின் அடியார்களுள் ஒருவராகக் கருதப்படும் நெட்டூர் இளையாழ்வான் காலிங்கராயன் என்பவர் கி.பி. 1191-ஆம் ஆண்டளவில் காஞ்சி வரதராசப்பெருமாள் ஆலயத்தில் இராமானுசரின் திருமேனியை நிறுவி இராமானுச பாசிய விரிவுரை நிகழ்த்துவதற்காக உரிய நிவந்தங்களை வழங்கியிருக்கிறார்.

இராமானுசரின் சிறிய தாயாரின் மகனான எம்பார், கூரத்தாழ்வாருடன் சேர்ந்து இராமானுசரின் ஆசிரமத்தில் வாழ்ந்தவர்.

கூரத்தாழ்வாரின் திருப்புதல்வரான பராசரபட்டர், எம்பாரிடமும் கூரத்தாழ்வாரிடம் பாடம் கேட்டு வளர்ந்தவர். இப்பராசரபட்டரின் சீடரான பிள்ளைப் பெருமாளய்யங்கார் பெரும் புலவராய்த் திகழ்ந்து அட்டபிரபந்தங்களை இயற்றினார். பட்டரால் புறச்சமயத்திலிருந்து வைணவத்திற்கு மாற்றப்பட்ட நஞ்சீயர், திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி உரை எழுதினார். இந்நஞ்சீயர் வேதாந்த வேதியர் என்றும் மாதவாசார்யர் என்றும் வைணவர்களிடையே புகழ் பெற்றிருந்தார்.

நஞ்சீயரின் சீடர்களில் தலையாயவரான நம்பூர் வரதராசாச்சாரியர், வைணவர்களிடையே நம்பிள்ளை என்றும் லோகாசிரியர் என்றும் அறியப்பட்டிருந்தார். நம்பிள்ளையின் சீடர் களில் தலைசிறந்தவரான பெரியவாச்சான் பிள்ளை, திருவாய் மொழிக்கு இருபத்துநாலாயிரப்படி என்ற உரையையும், திவ்வியப் பிரபந்தம் 3000 பாடல்களுக்கு ஈடு என்ற உரையையும் எழுதிப் புகழ் பெற்றார். இவர் அருளிச்செய்த தனிசுலோகி, பரந்தபடி, திரிமத சித்தாந்த சாரசங்கிரகம், கலியனருளப்பாடு திவ்யப்ரபந்த வியாக்யானம் போன்ற நூல்கள் இவருக்கு வியாக்கியான சக்கரவர்த்தி என்ற பெரும் புகழை ஈட்டித் தந்தன.

நம்பிள்ளையின் மற்றொரு சீடரான வடக்குத் திருவீதிப்பிள்ளை என்பவர், பகவத் விசயம் என்றழைக்கப்படும் ஈடு முப்பதாயிரப்படியை அருளிச்செய்தார். இவருடைய இரு புதல்வர்களான, பிள்ளை லோகாச்சாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவர்கள் நித்திய பிரம்மச்சாரிகளாக இருந்து வைணவத்தை வளர்த்தார்கள். பிள்ளை லோகாச்சாரியாரின் சீடர்களுள் திருவாய்மொழிப்பிள்ளை என்பவர் புகழ்பெற்றுத் திகழ்ந்தார்.

எங்களாழ்வான் என்று புகழ்பெற்ற விஷ்ணு சித்தாரியர் என்பவர் ஸ்ரீவிஷ்ணு புராணத்திற்கு "விஷ்ணு சித்தீயம்" என்ற உரையெழுதிச் சிறப்புப் பெற்றார்.

காஞ்சியில் பிறந்த வேதாந்த தேசிகன் என்பவர் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வைணவத்தை வளர்த்தவர்.

சோழர் காலத்தின் இறுதியில்தான் வைணவம், இராமானுசரைப் பின்பற்றியவர்கள் மேற்கொண்ட சரணடைவுக்

கோட்பாட்டில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வடகலை, தென்கலை என இரண்டாகப் பிரிந்தது. வடகலையைத் தோற்றுவித்தவர் பிள்ளை லோகாசாரியர்; தென்கலையின் தலைவர் வேதாந்த தேசிகர்.

## ஸ்ரீவைணவர்கள்

ஆழ்வார்களும், அவர்களுக்கு அடுத்த நிலையில் ஆசாரியார்களும் வைணவ வளர்ச்சியில் பக்தி சிரத்தையோடு ஈடுபட்டதைப் போல அவர்களுக்கு அடுத்த நிலையில் வைணவத்தை வளர்த்தவர்கள் ஸ்ரீவைணவர்கள் எனலாம். தங்களைப் பெரிய திருப்பதி ஸ்ரீவைணவர்களென்றும், பதினெண் மண்டலத்து அல்லது பதினெண் நாட்டு ஸ்ரீவைணவர்களென்றும், எம்பெருமான் திருவடிகளை ஆசிரிரத்திருக்கும் ஸ்ரீவைணவரென்றும், திருவீதி திருப்பணி செய்யும் ஸ்ரீவைணவரென்றும், ஆள்வாருபாசகரென்றும் தங்களைத் தங்களது இடம் அல்லது தொழிலால் இனம் சுட்டிக் கொண்டார்கள். வைணவ ஆலயங்களில் பணிபுரிந்த வைணவர்கள், இறைவன் திருவடி பிடிக்கும் நம்பிமார், கோயில் ஸ்ரீவைணவர், ஆழ்வார் கன்மிகள், வைணவ கன்மிகள், என்று தங்களைத் தங்களது தொழிலால் இனம் சுட்டிக் கொண்டனர். பல வைணவ ஆலயங்களில் வைணவ வாரியமொன்றும் இயங்கியிருக்கிறது. அக்காலத்திருந்த வைணவர்களின் நடத்தை குறித்த வரன் முறைகள் அய்யம்பேட்டை போன்ற சில ஊர்க்கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

சில ஊர்ச்சபையோரும், ஊரோரும் கூட ஆழ்வார்க்கே திருப்பணி செய்வது என்ற நிலை வகித்திருக்கிறார்கள். "திருவிடந்தை சபையோமும் ஊரோமும், இப்பட்டினவர் பன்னிரண்டு குடியும் புத்திர பவித்திராதிகள் ஆழ்வார்க்கேய் திருப்பணி செய்வார்களாகவும்" எனக் குறிக்கும் முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு இதற்குச் சிறந்த சான்று.

வைணவ ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளைக் காக்கும் பணியில் வைணவர்கள் பக்தியோடு ஈடுபட்டிருந்திருக்கின்றனர். இரண்டாம் இராசராசன் காலத்தில் திருவரங்கத் திறைவனுக்கு நந்தவனத்திற்காக அழகிய மணவாளப் பெருமாள் என்பவர் நிலம் வாங்கியளிக்கும்போது அதைத் திருவரங்கத்து ஸ்ரீவைணவரான நல்லூர் திருவரங்கமலை நம்பி என்பவரிடம்

அளித்திருக்கிறார். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருவரங்கத்தில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்விக்கும் பொறுப்பினைப் பதினெட்டு நாட்டு ஸ்ரீவைணவர்கள் ஏற்றிருந்தனர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் நந்தலூரில் உள்ள வைணவ ஆலயத்திற்கு வழங்கப்பட்ட நொந்தா விளக்குக்கான கொடையினைச் செலுத்தி வரும் பொறுப்பினை அன்றாடு கூட்டப் பெருமக்களோடு சேர்ந்து ஸ்ரீவைணவர்களும் ஏற்றிருந்திருக் கிறார்கள். விக்கிரம சோழன் காலத்தில் மதுராந்தகம் கோதண்டப் பெருமாள் கோயிலுக்கு அமுது உள்ளிட்டவைகளுக்குப் பெரிய நங்கை சானி என்பவர் வழங்கிய கொடையினைக் கொண்டு மேற்படி அமுது உள்ளிட்டவைகளைச் செய்யும் பொறுப்பினை அக்கோயில் ஸ்ரீகார்யம் செய்வார்களும், ஸ்ரீவைணவ வாரியரும் ஏற்றிருந்தனர். இவை போன்ற கல்வெட்டுகள் அக்காலத்தில் வைணவர்கள், வைணவ ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளைக் காப்பதில் கொண்டிருந்த பொறுப்பினைத் தெளிவாக்குகின்றன.

வைணவர்களுக்கு உணவளிப்பதற்காக வைணவ ஆலயங்கள், வைணவ மடங்கள் பலவற்றில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பெரும்பாலானவை வைணவத் தலங்களுக்கு, அத்தலங்களில் நடைபெறும் விழாக்களுக்கு வருகை தரும் வழிநடை வைணவர்களுக்கு அமுதளிக்கச் செய்திருந்த ஏற்பாடுகளாகக் காணப்படுகின்றன. மதுராந்தகதேவன் மடம், அரிகேசவன் மடம், திருவயிந்திபுரத்தில் வைணவர்கள் அமுது செய்விக்கும் மடம், காஞ்சீபுரம் வைணவதாசர் மடம், வானமாமலை வைணவ மடம், மன்னார்குடி செண்டலங்கார மாமுனி மடம், சேரன்மாதேவி வைணவ மடம் போன்ற பல மடங்கள் வழிநடை வைணவர்கள் தங்கிச் செல்லவும், அமுது செய்யவும் பேருதவியாக இருந்து வைணவத்தை வளர்த்திருக்கின்றன.

உலகில் தங்கி இருக்கும் நாட்களில் ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகளில் தங்கி அவர் திருக்குணங் களையும், அவர் வடிவழகையும் அனுபவித்துக்கொண்டு அவருக்குத் திருப்பணிகள் செய்து மகிழ்ந்த வைணவர்ளுக்கு அமுதளித்த பாங்கினை பல கல்வெட்டுகள் பகர்கின்றன. முதலாம் இராசராசன் காலத்தில் திருவிடவந்தை வைணவ ஆலயத்தில் பங்குனி உத்திரத் திருநாள் திருமுன் ஆதியாக ஒன்பது நாளும் நித்தம் முப்பத்தைந்து

பிராமணரை ஊட்டும்படி ஒருவருக்கு அரிசி நாழி மூவுழக்காக நித்தம் அரிசி அறுபத்தொரு நாழி செலவழிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு உணவு அட்டுவாராக இருவர் பணிபுரிந்திருக் கின்றனர். இவ்வறத்தினைச் செயலாக்கும் பொறுப்பேற்றிருந்த திருவிடவந்தைச் சபையார், இப்படி அமுது ஊட்டாவிடில் தன்மாசநத்தே நித்தம் நாலேகாற் காணம் தண்டப்படுவதற்கும் இசைந்திருந்ததால், இவ்வறம் பொறுப்புடனும், விழிப்புடனும் செயல்படுத்தப்பட்டமை தெளிவாகிறது. இதே திருவிடவந்தையில், இதே முதலாம் இராசராசன் காலத்தில் திங்கள் தலை உவாத்தோறும் பிராமணர் முப்பதிந்மரை ஊட்டும் பணியும் செவ்வனே நடைபெற்றிருக்கிறது. இப்பணிக்கென அடுவார் இருவரும், கலமிடும் குசவனும், விறகிடுவான் ஒருவனும் இருந்தமையும் கல்வெட்டால் தெளிவாகிறது.

முதலாம் இராசராசன் காலத்தில் செய்யாறு வட்டம் பிரம்மதேசத்திற்கு, திருவேங்கடமலையிலிருந்து நூற்றுக்கணக்கான வழிநடை ஸ்ரீவைணவர்கள் வருவது வழக்கமாயிருந்திருக்கிறது. அங்ஙனம் வருவோருக்கு உணவளிக்க உரிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்மன்னன் காலத்தில் திருக்கோவலூர் திருவிடைக்கழி ஆழ்வாரின் அய்ப்பசித் திருநாள் சேவிக்க வந்த வைணவருக்கு ஒன்பது நாளும் சோறிடப்பட்டது. முதலாம் இராசாதிராசன் காலத்தில் சேனாபதி இராசேந்திர சோழ மாவலி வாணராசன் என்பவரால் திரிபுவனியில் ஏற்படுத்தப்பட்ட இராசேந்திர சோழன் உத்தமாக்ரம் (நல்லுணவு) மூலம் மாசி புனர்பூசத்திலும், சயந்தி அட்டமியிலும், மார்கழி திருவேகாதசியிலும், ஐப்பசி, சித்திரை, விசுக்களிலும் விழா நடத்தவும், விழாவின்போது ஸ்ரீவைணவர்களுக்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இராசராசன் மதுராந்தகன் என்பவர் தன்னுடைய நட்சத்திரமாகிய மிருகசீரிடத்தில், திருவரங்கம் அழகிய மணவாளப் பெருமாள் கோயிலில் இறைவனுக்குச் சிறப்பு வழிபாடு செய்யவும், திருவிழா நாட்கள் இரண்டின் போதும் மதுராந்தக தேவன் மடத்தில் ஸ்ரீவைணவர் களுக்கு அமுதளிக்கவும் நிலக்கொடை அளித்திருந்தார். இவ்வரசனின் காலத்திலேயே காஞ்சியிலுள்ள குலோத்துங்கசோழ விண்ணகராழ்வார்க்குத் திருநாளெழுந்தருளும் மடத்தில் சேவிக்க

வந்த வைணவர்க்கு அமுது செய்கைக்கு மடப்புறமாகக் கொடை வழங்கப்பட்டு உள்ளது. மேலும், திருவயிந்திபரம் தேவநாராயணப் பெருமாள் கோயிலில் அமாவாசையில் இறைவன் எழுந்தருளுமன்று சேவிக்க வந்த ஸ்ரீவைணவருக்கு அமுது செய்கைக்கென்று கொடை வழங்கப்பட்டிருந்தது. திருவயிந்திபுரத்தில் ஸ்ரீவைணவர்கள் அமுது செய்விக்கும் மடம் ஒன்றும் இருந்திருக்கிறது. திருக்கோவலூர் பிரம்மதேயம் மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துத் திருவிடைக்கழி ஆழ்வார் அமுது செய்யவும், அங்கு வரும் வழிநடை ஸ்ரீவைணவர்கள் உணவு கொள்ளவும் மேற்படி ஆலயத்திற்கு நிலக்கொடை வழங்கப் பட்டிருந்தது.

விக்ரம சோழன் காலத்தில் ஸ்ரீலங்காநாடுடையான் என்பவர் அமாவாசை நாட்களில் திருவரங்கத்தில் வழிநடை ஸ்ரீவைணவர்களுக்கு உணவளிக்கவும், பங்குனித் திருநாளில் பத்து மலையாள பிராமணர்களுக்கு உணவளிக்கவும் நிலக்கொடை அளித்திருக்கிறார்.

இரண்டாம் இராசேந்திரசோழன் காலத்தில் காஞ்சீபுரத்துக் குலோத்துங்கசோழ விண்ணகராழ்வார் கோயிலின் திருமட விளாகத்திற்குத் தெற்கில் மேற்கடைய புரவுவரி மாணிக்கமென்னும் மடம் இருந்திருக்கிறது. இம்மடத்தில் இவ்விறைவனின் திருவிழா பத்து நாள்களின்போதும் திருவீதி பணி செய்வாருக்கும், ஸ்ரீவைணவருக்கும் அமுது செய்கைக்காகக் கொடை வழங்கப் பட்டிருக்கிறது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விருத்தாசலம் வட்டத்திலுள்ள திட்டக்குடியான திருச்சிற்றம்பலச் சதுர்வேதி மங்கலத்துத் திருமேற்கோயில் எம்பெருமான் அமாவாசைதோறும் திருவீதி எழுந்தருளியிருக்கிறார். அச்சமயம் திருவீதி திருப்பணி செய்த சீவயிண்ணவர்கள் முப்பதுபேர் அமுதுசெய்யக் கொடை வழங்கப்படடிருக்கிறது.

## திருவாய்மொழி இசைத்தல்

சிவாலயங்களில் தேவாரப்பாடல்கள் பாடப்பட்டது போல, வைணவ ஆலயங்களில் திருவாய்மொழிப் பாடல்களைப் பாடும்

வழக்கம் சோழர் காலத்தில் இருந்திருக்கிறது. இதற்காக அக்காலக் கட்டத்தில் நிவந்தங்கள் பல வழங்கப்பட்டிருக்கின்றன.

முதலாம் இராசராசனின் விருப்பப்படி நாதமுனி அவர்கள் நம்மாழ்வார் என்றழைக்கப்பட்ட சடகோபரின் ஊரான ஆழ்வார் திருநகரி என்ற குருகூர் சென்று நம்மாழ்வாரின் ஆயிரம் பாடல்களையும், மற்றும் மூவாயிரம் பாசுரங்களையும் பெற்று வந்து நாலாயிரத் திவ்ய பிரபந்தம் என்ற பெயரில் முறைமை செய்து கொடுக்க, அன்று முதல் ஆலயங்களில் அப்பாடல்களை இசைக்கும் மரபு அதிகமாகியது. திருவாய்மொழிப் பாடல்களை இசைக்கும் வைணவர்களுக்குப் பூசை செய்வதைவிட அதிக ஊதியம் வழங்கப்பட்டது.

முதலாம் இராசராசன் காலத்ததான உக்கல் கல்வெட்டில் "திருவாய்மொழித் தேவர்" குறிக்கப்படுவதால், இம்மன்னன் காலத்திலேயே இம்மரபு தொடங்கிவிட்டது எனலாம்.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் இராசராச சதுர்வேதி மங்கலத்துச் (எண்ணாயிரம்) சபையார், ஆநாங்கூராகிய இராசராச நல்லூரில் 45 வேலி நிலத்தினை மன்னனின் ஆணைப்படி, இராசராச விண்ணகருக்கு வழங்கினார்கள். இந்நிவந்தத்திலிருந்து இக்கோயிலில் திருவாய்மொழி இசைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதே மன்னன் காலத்தில் உத்தரமேரூரில் இறைவனுக்கு முன்னர் தினமும் திருவாய்மொழி இசைப்பதற்கென மூவர் இருந்தனர். திருவாய்மொழி இசைக்கும் ஸ்ரீவைணவர்களுக்கு இறைவனுக்குப் படைக்கப்பட்ட அமுது வழங்கப்பட்டது.

முதலாம் இராசாதிராசன் காலத்தில் திரிபுவன சதுர்வேதி மங்கலத்தில் (திரிபுவன) சேனாபதி இராசேந்திர சோழ மாவலி வாணராசன் ஏற்படுத்திய இராசேந்திரசோழ உத்தமாக்ரத்தின் மூலம், திரிபுவனி கோயிலில் திருவாய்மொழி பாட நிவந்தம் அளிக்கப்பபடடிருந்தது.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் அவனது 15-ஆம் ஆட்சியாண்டில் திருவரங்கம் கோயிலில் அக்கோயில் ஆழ்வாருக்குத் திருப்பள்ளியெழுச்சியாகத் திருவாய்மொழி விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோட்டூர் சேனாபதிகள் வீரசோழ

முனையதரையர் என்பவர் இதற்காக ஐம்பது கழஞ்சுப் பொன் கொடுத்திருந்தார். இம்மன்னனின் 40-ஆம் ஆட்சியாண்டிலும் திருவரங்கத்தில் திருவாய்மொழி இசைக்க மற்றொரு கொடை வழங்கப்பட்டிருக்கிறது. இதே கோயிலில் நடைபெற்ற விழா ஒன்றின்போது தொடர்ந்து மூன்று இரவுகள் "தேட்டருந்திறல் தேனினை" எனத் தொடங்கும் குலசேகர ஆழ்வாரின் பாடல் பாடப்பட்டிருக்கிறது.

இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் திருக்கோவலூரில் வைகாசி, ஐப்பசி, விழாக்களின்போது திருவாய்மொழியைப் பாட நிவந்தம் அளிக்கப்பட்டிருந்தது. இதே திருக்கோவிலூர் வைணவக் கோயிலில் திருநெடுந்தாண்டகம் ஓதுவதற்காகவும் மானியம் அளிக்கப்பட்டிருந்தது.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் காஞ்சிபுரத்தில் இராமானுச பாஷ்ய விரிவுரை நிகழ்த்த பாஷ்ய விருத்தியாகக் கொடையளிக்கப்பட்டிருந்தது.

கி.பி. 1242 அளவில் காஞ்சியில் திருமொழி ஓதுவதற்கென 58 பிராமணர்கள் நியமனம் பெற்றிருந்திருக்கிறார்கள்.

கி.பி. 995 அளவிலான கல்வெட்டொன்றில் திருமால்புரத்து விஷ்ணுவைப் புகழ்ந்து "கோலனார் குழல்" எனத் தொடங்கும் பாடலொன்று காணப்படுகிறது.

இங்ஙனம் வைணவ ஆலயங்களில் திருவாய்மொழி இசைத்த, இசைக்கும் கலைஞர்கள் அரையர்கள் என்றழைக்கப் படுகின்றனர். இம்மரபு கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் திருமங்கையாழ்வார் காலத்தில் தொடங்கப்பட்டது. மார்கழி ஏகாதசி 11-ஆம் நாள் முதல் பத்து நாட்கள் திருவாய்மொழியைப் பண்ணுடன் பாடினர். இது ராப்பத்து அல்லது திருவாய்மொழி திருநாள் எனப்பட்டது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டளவில் நாதமுனிகளால் இம்மரபு எழுச்சி பெற்றது. மார்கழி அமாவாசையிலிருந்து முதல் பத்து நாட்கள் முதலாயிரம், பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் போன்றவை பாடப்பட்டன. இத்திருமொழித்திருநாள் பகல் வேளையில் நடைபெற்றதால் பகல் பத்து எனப் பெயர்பெற்றது.

சோழர் காலத்தில் திருப்பதிகம் விண்ணப்பிக்க நிவந்தங்கள் பல வழங்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டதுடன் அவ்வப்போது இவற்றின் செயல்பாடு பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டதைத் திருமுக்கூடல் கல்வெட்டொன்று உணர்த்துகிறது. இவ்வூரிலுள்ள வெங்கடேசப்பெருமாள் கோயிலில் இராசேந்திர சோழன் காலத்தில் திருப்பதியம் விண்ணப்பித்தல் தொடர்பான கணக்குகள் சரிபார்க்கப் பட்டபோது, அதிகப்படி இருப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் இவ்வதிகப்படியை உபயோகித்துக் கொள்ளும் முறை பற்றி அக்கோயில் வைகானசர்கள் தங்களுக்குள் ஓர் உடன்பாடு ஏற்படுத்திக்கொண்டதை அக்கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.

## கல்வி

வைணவ ஆலயங்களைச் சார்ந்தனவாகக் கல்வி நிறுவனங்கள் பல இயங்கியிருக்கின்றன. முதலாம் இராசேந்திரன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரத்தில் இருந்திருக்கிறது. ஊர்ச்சபையினரே ஆசிரியர்களுக்கு ஊதியமும், மாணவர்களுக்கு உணவும் அளித்தனர். பாடங்கள் சமயம் சார்ந்தனவாகவே பெரும்பாலும் இருந்திருக்கின்றன. ரிக்வேதம், யஜுர்வேதம், வாகசனேயம், தலயகாரகாமங்கள், அதர்வ வேதம், பௌதாயன இராஜஹியம், வியாகரணம், பிரபாகர மீமாம்சம் போன்றவை கற்பிக்கப்பட்ட பாடங்கள். அங்கு 270 இளநிலை மாணவர்களும், 70 முதுநிலை மாணவர்களும் பயின்றிருக்கிறார்கள். இதற்காக எண்ணாயிரம் சபையரால் இராசராச விண்ணகர் கோயிலுக்கு ஆநாங்கூராகிய ராசராச நல்லூரில் 45 வேலி நிலம் வழங்கப்பட்டிருக்கிறது.

முதலாம் இராசாதிராசன் காலத்தில் திரிபுவனியில் இருந்த கல்லூரியில் ரிக்வேதம், யஜுர்வேதம், சண்டோக சாம, தலவகரசன, அபூர்வ வாஜசநேய, சத்தியஸ்தசூத்ரா, வேதாந்தம், வியாகரணம், ரூபாவதாரம், பாரதம், இராமாயணம், மனுசாஸ்திரம், வைகானச சாஸ்திரம் போன்றவை கற்பிக்கப்பட்டிருக்கின்றன.

வீரராசேந்திரன் காலத்தில் திருமுக்கூடல் மகாவிஷ்ணு கோயில் மண்டபங்களில் கல்லூரி நடந்திருக்கிறது. இவை அனைத்தும் வைணவர்களின் கல்வி நிலையை உயர்த்திச் சமுதாயத்தில் அவர்களுக்குச் சிறப்பிடம் வழங்கப் பேருதவியாக இயங்கியிருக்கின்றன.

வைணவ ஆலயங்கள் தவிர வைணவ மடங்களும் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தியிருக்கின்றன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் காஞ்சி வரதராசப் பெருமாள் கோயிலைச் சேர்ந்திருந்த அரிகேசவன் மடத்தில் வேதபாராயணமும், விவாதங்களும் நடந்திருக்கின்றன.

## மருத்துவம்

வைணவ ஆலயங்களைச் சார்ந்து மருத்துவச் சாலைகளும் இயங்கியிருக்கின்றன. தஞ்சையில் 1015-இல் "சுந்தரசோழ விண்ணகர் ஆதுலசாலை" என்ற மருத்துவமனையினைக் குந்தவை ஏற்படுத்தியிருக்கிறார். திருமுக்கூடலில் வீரராசேந்திரன் காலத்தில் அவ்வூர் விஷ்ணு கோயிலில் 15 படுக்கைகளைக் கொண்ட "வீரசோழன்" என்ற மருத்துவமனை இருந்திருக்கிறது. அங்கு பரம்பரை வைத்தியர் ஒருவரும், இரண்டு செவிலிகளும், மூலிகை சேகரிப்பவர் இருவரும் பணியாற்றியிருக்கின்றனர்.

## முடிவுரை

சோழர் காலத்தில் பொதுவாக வைணவம் நன்கு செழித்திருந்தது என்றாலும் சிற்சில நேரங்களில் வைணவ ஆலயங்கள் வரிகட்ட முடியாமல் அல்லல் பட்டிருக்கின்றன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வலங்கை, இடங்கைப் பிரிவினரிடையே நடந்த போராட்டத்தின்போது இராசமகேந்திர சதுர்வேதி மங்கலத்திருந்த மும்முடிச்சோழ விண்ணகராழ்வார் கோயிலின் பண்டாரம் கொள்ளையடிக்கப்பட்டது. இதன் காரணமாக இக்கோயிலால் கோயில் நிலங்களுக்கு வரி செலுத்த இயலாமற் போய்விட்டது. உடனே அவ்வூர்ச்சபையார் குறிப்பிட்ட ஒரு தொகையை மட்டும் பெற்றுக்கொண்டு கோயில் நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்களித்திருக்கின்றனர்.

தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டம் வளைய மாதேவி சதுர்வேதிமங்கலத்து வேதநாராயணப் பெருமாள் கோயிலுக்கு வழிபாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த கோயில்களுக்கு விதிக்கப்பட்ட வரியினை அக்கோயிலால் கட்ட இயலவில்லை. பதினொன்றாம் நூற்றாண்டளவில் இங்ஙனம் தவித்த இக்கோயில் நிர்வாகிகள், கோயிலுக்குரிய சில தங்க நகைகளையும், வெள்ளிப் பாத்திரங்களையும் சுமார் 30 காசுகளுக்கு விற்று, அக்காசினை

மகாசபையினரிடம் அளித்தனர். மகாசபையினரும் அக்காசினை மட்டும் பெற்றுக்கொண்டு கோயில் நிலங்களுக்கு அவர்களே வரி செலுத்த ஒப்புக்கொண்டனர்.

சோழர் காலத்தில் சமயப்பொறை பொதுவாகக் காணப்பட்டது. எனினும் சிற்சில சமயங்களில் சைவ வைணவப் போட்டி தலைதூக்கவும் செய்திருக்கிறது. திருக்கடையூர் மகாசபை ஏற்படுத்திய தீர்மானம் இதனை நன்கு தெளிவாக்குகிறது. சிவன் கோயில் காப்பாளர்கள் வைணவரோடு சேர்ந்தால் அவர்களது சொத்தை மகாசபை பறிமுதல் செய்து கோயிலுக்கு எடுத்துக்கொள்ளும் என அத்தீர்மானம் கடுமையாக எச்சரிக்கிறது.

சோழர் காலத்தில் சைவத்திற்கும், சைவர்களுக்கும் அடுத்த நிலையில் வைணவமும், வைணவர்களும் சிறப்புற்றிருந்தார்களெனில் மிகையாகாது.

## துணை நூல் பட்டியல்


1. ARE 335/1917-18.
2. ,, 8/1919.
3. ,, 20/1940-41.
4. ,, 31/1936-37.
5. ,, 562/1920-21.
6. ,, 330/1959-60
7. SII Vol. IV No. 133.
8. மா. பாலசுப்ரமணியன், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, பக். 280.
9. Ibid பக். 284.
10. டாக்டர். கே. கே. பிள்ளை, சோழர் வரலாறு, பக். 627.
11. Dr. K.V. Raman, 'Some Epigraphical gleanings on Vaishwava Acharyas' Prof. K.A.N. Sastri Felicitation volume p. 126.
12. மா. பாலசுப்ரமணியன், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, பக். 281
13. ARE 493/1919.
14. ,, 119/1927-28.
15. ,, 35/1936-37.

16. ,, 61/1892.
17. SII Vol. XXIII No. 581.
18. ,, VII No. 479, ARE 263/1901.
19. ARE 267/1910.
20. ,, 260/1910.
21. ,, 255/1915-16.
22. SII Vol. VII No. 141.
23. ARE 1919/Introduction.
24. ,, 15/1936-37.
25. SII Vol. IV No. 133.
26. ARE 124/1900.
27. ,, 33/1936-37.
28. SII Vol. IV No. 134.
29. ARE 23/1903.
30. மா. பாலசுப்ரமணியன், சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு, பக். 282.
31. ARE 333/1917-18.
32. ,, 1919 Introduction.
33. SII Vol. IV No. 509.
34. ARE 62/1892.
35. ,, 343/1921.
36. ,, 493/1919.
37. ,, 557/1919.
38. ,, 183/1915-16.
39. ,, 333/1917-18.
40. ,, 1919 Introduction.
41. ,, 635/1919.
42. ,, 248/1923.
43. ,, 335/1917.
44. ,, 33/1936-37.
45. ,, 573/62-63.
46. ,, 257/1925.

★★★

# சோழர் காலத்து மூலபருடைச் சபை

**இரா. ப. கருணானந்தன்**
காப்பாளர்
தொல்லியல் துறை, தஞ்சை

சோழர் காலத்தில் சிவன் கோயில் நிர்வாகத்தை நடத்தி வந்த சபை மூலபருடை எனப்பட்டது. மூலபரடை, மூலபருஷை, மூலபருடையோம், மூலபருடைச்சபை, மூலபருடைப் பெருமக்கள் என இச்சபையினரைக் கல்வெட்டுகள் பலவாறாக அழைக்கும். கோயிலோடு தொடர்புடைய பிராமணர்கள் சிவப்பிராமணர், அகநாழிகை சிவப்பிராமணர், பதிபாதமூலத்தார், திருவுண்ணாழிகை கணப்பெருமக்கள், திருஉண்ணாழிகைச் சபை, பன்மாகேஸ்வரர், ஸ்ரீவைஷ்ணவர் எனப் பல அமைப்பினராகக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றனர். இவர்களைப் போன்று சோழர் காலத்தில் கோயிலோடு தொடர்புடையவராய் இருந்த பிராமணர்களின் ஒருவகை அமைப்பினை மூலபருடை எனலாம்.

பரிஷத் என்னும் சமஸ்கிருதச் சொல்லிற்குச் சபை, அமைப்பு எனப் பொருள். ரிக்வேதம், சதபத பிராமணம், கௌசிகி பிராமணம் என்னும் வேதகால நூல்களில் உள்ள குறிப்புகளைக் கொண்டு வேதகாலத்திலேயே பரிஷத் என்னும் அமைப்பு இருந்தது எனலாம். பரிஷத் என்னும் சமஸ்கிருதச் சொல். பரிஷை பரிடை என மாறி பருடை எனும் வடிவத்தைச் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணலாம். ஒரே கல்வெட்டு பருடை எனும் சொல்லாட்சியையும், மூலபருடை என்னும் சொல்லாட்சியையும் ஒரே பொருளில் பயன்படுத்துவதால் பருடை, மூலபருடை இரண்டும் ஒரு பொருள் பற்றியதே என்பதில் ஐயமில்லை.

மூலபருடை என்னும் சொல்லுக்கு உயர்ந்தவர்கள் நிறைந்த முதன்மையான சபை எனப் பொருள். அனைத்திற்கும் மூலமாகிய கோயில் பணியைப் புரிந்த சபை மூலபருடை எனப் பொருள்

கொள்ளவும் இடமுண்டு. பிராமணர்க்குக் கொடையாக அளிக்கப்பட்ட பிரம்மதேய ஊர்களில் எல்லாம் பெரும்பாலும் மூலபருடையார் எனும் அமைப்பு இருந்தது.

கோயில் நிர்வாகம் போன்ற பணியைப் பல்லவர் காலத்தில் அமிர்த கணத்தார் எனும் அமைப்பு மேற்பார்வையிட்டு வந்தது. இடைக்காலப் பாண்டியர் காலத்தில் மூலபருடை என்னும் அமைப்பு இருந்ததைச் சுசீந்திரம் கல்வெட்டுகள் உணர்த்தும். எனவே மூலபருடை என்னும் சொற்றொடர் திடீரென்று சோழர்கள் காலத்தில் ஏற்பட்டது அல்ல.

இராசகேசரி ஆதித்தசோழன் காலம் தொடங்கி மூன்றாம் இராசராச சோழன் காலம் வரை மூலபருடையாரைப் பற்றிய குறிப்புகள் சோழர் கல்வெட்டுகளில் கிடைக்கின்றன. இருப்பினும் குறிப்பாக முற்காலச் சோழர் கல்வெட்டுகளில் மூலபருடையாரைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. அதிலும் சிறப்பாக மதுரை கொண்ட பரகேசரியாகிய பராந்தகன் ஆட்சிக்காலத்தில் மூலபருடையார் என்னும் அமைப்பு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது எனலாம்.

சோழர் கல்வெட்டுகளில் மூலபருடையார் எத்தகைய பணியை மேற்கொண்டனர் என்னும் அடைமொழித் தொடர் காணப்படவில்லை. ஆனால் சுசீந்திரம் மாறஞ்சடையன், சடையன் மாறன், சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் முதலியோர் கல்வெட்டுகள் "எம்பெருமான் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற மூலபருடைச் சபையார்" எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. மூலபருடைச் சபை அனைத்துச் சோழர் காலத்து ஊர்களிலும், அனைத்துச் சோழர் காலத்துக் கோயில்களிலும் இருந்தது என்று கூறுவதற்கு இயலாது. குறிப்பிடத்தக்க சில ஊர்களில் மட்டுமே இவர்கள் இருந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கும்பகோணம், திருநாகேஸ்வரம், புஞ்சை, சேங்கனூர், திருப்பைஞ்ஞீலி, மேலப்பெரும்பள்ளம், ஸ்ரீநிவாசநல்லூர், திருவெள்ளறை, திருச்செந்துறை, சுசீந்திரம் முதலிய ஊர்களில் மூலபருடை அமைப்பு இருந்தமையைச் சோழர் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

## அபிஷேக தட்சிணை பெறுதல்

மதுரை கொண்ட பரகேசரி பராந்தகன் தன்னுடைய முடிசூட்டு விழாவின் போது அபிஷேக தட்சிணையாகத் திருக்குடமூக்கு மூலபருடைப் பெருமக்களுக்கு நிலக்கொடை வழங்கியுள்ளதைக் குடந்தை கீழக்கோட்டத்தில் உள்ள 4 கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சதுர்வேதி மங்கலங்களாகவும், பிரம்மதேயங்களாகவும் பிராமணர்களுக்கு நிலக்கொடை வழங்கப்பட்டது போன்று அரசன் முடிசூட்டும் சமயத்தில் மூலபருடை எனும் பிராமணர் அமைப்பிற்கு வழங்கிய நிலக்கொடையை அபிஷேக தட்சிணை எனலாம். பட்டாபிஷேகத்தின் போது வழங்கப்படுகின்ற தட்சிணை அபிஷேகதட்சிணை. அபிஷேக தட்சிணையாகப் பெறப்பட்ட நிலம் மூலபருடைச் சபையாரின் தனிப்பொறுப்பிலேயே இருந்தது. மூலபருடையார் கோயில் பணிகளைச் செய்வதற்காக இந்நிலங்கள் வழங்கப்பெறவில்லை. எனவே மூலபருடையார் அபிடேக தட்சிணையாக அரசனிடம் பெற்ற நிலத்தைக் கோயிலுக்கு விற்றுள்ளனர். 500 கழஞ்சு பொன்னைப் பெற்றுக் கொண்டு அபிடேக தட்சிணையாகப் பெற்ற நிலத்தில் 10 வேலி நிலத்தையும், 4 வேலி நிலத்தில் ¼ செய்யும், 25 கழஞ்சு பொன்னைப் பெற்றுக்கொண்டும் மற்றுமொரு ¼ செய்யும், இதேபோன்று மற்றொரு ¼ செய்யும் குடந்தைக் கீழ்க்கோட்டத்துப் பரமசுவாமி கோயிலுக்கு மூலபருடையார் விற்றுக் கொடுத்து, இவ்வாறு விற்று விலையாவணம் செய்த நிகழ்ச்சியைக் கோயில் பணியாளனாகிய ஆயிரத்து முன்னூற்றுவன் என்னும் மத்தியஸ்தன் முன்னிலையில் பதிவு செய்து கல்வெட்டில் பொறிக்குமாறு பணித்துள்ளனர்.

இதில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க செய்தி முதற் பராந்தக சோழன் பாண்டிப் படையின் செலவினங்களுக்காகத் திருக் குடமூக்கு மூலபருடைச் சபையார்க்கு 3,000 கழஞ்சுப் பொன்னைத் தண்டமாக விதித்தான். மூலபருடைச் சபையார் இத்தண்டத்தைச் செலுத்துவதற்காகப் பராந்தகனிடமிருந்து அபிடேக தட்சிணையாகப் பெற்ற அரிசலூர் 10 வேலி நிலத்தை 500 கழஞ்சு பொன்னுக்கு விற்று மேற்படி தண்டத்தைச் செலுத்தியுள்ளார். மூலபருடையார் தவறு செய்தமையால் இத்தண்டம் விதிக்கப்பட்டதா? அல்லது படையின் செலவுகளுக்காக இயல்பாக வசூலிக்கப்பட்டதா என்பது ஆய்வுக்குரியது.

### சாவாமூவாப் பேராடு பெறுதல்

கோயில் பணிகள் செவ்வனே நடைபெறுவதற்காக அரசர்களும், அரசனைச் சேர்ந்தவர்களும், பொதுமக்களும் ஆடுமாடுகள், நிலம், பொன் முதலியவற்றைக் கோயிலுக்கு வழங்குவது வழக்கம். கோயிலைச் சேர்ந்த அமைப்புகள் இவற்றைப் பெற்றுக்கொண்டு வழங்கியவர் குறிப்பிடும் கோயிற் பணியைச் செய்ய வேண்டுவது மரபு. மின்சார வசதியில்லாத அக்காலத்தில் விளக்கு எரிப்பதற்காக நெய்யைக் கொடுப்பதற்காக ஆடுகள் கொடையாகக் கொடுக்கப் பெற்றன. இவற்றைச் சாவாமூவாப் பேராடுகள் எனக் கல்வெட்டுகள் அழைக்கும். இத்தகைய சாவாமூவாப் பேராடுகளைக் கோயிலுக்கு வழங்கிய கொடையாளர்கள் பெரும்பாலும் இடையர் எனப்படும் தேவரிடைச் சான்றாரிடம் மட்டுமே வழங்கினர். அப்போதுதான் ஆடுகள் சரிவரப் பராமரிக்கப்பட்டுக் கோயில் பணி சிறப்பாக நடைபெற வாய்ப்பு ஏற்படும். ஆனால் சுசீந்திரம் கல்வெட்டுகள் புதுமையாகக் கோயில் பணி தொடர்பாக மூலபருடைச்சபையார் சாவாமூவாப் பேரேடுகளைப் பெற்றுக்கொண்டமையைத் தெரிவிக்கின்றன. திருச்சிவிந்திரத்து மாதேவர்க்குத் தென்னாட்டுத் தலைக்குளத்து அரையன் வைத்த நந்தா விளக்கிற்கு நாள்தோறும் உழக்கு நெய் ஊற்றுவதற்காக மூலபருடைச் சபையார் 50 ஆடுகளைக் பெற்றுள்ளனர். களக்குடி நாட்டுக் கரவந்தபுரத்து வியாபாரி ஒரு கை அரங்கன் நந்தாவிளக்கு ஒன்றை அமைத்து இரவும் பகலுமாக உழக்கரை நெய் ஊற்றுமாறு 75 ஆடுகளையும், திருவேங்கட நிலை விளக்கிற்கு ஆழாக்கு நெய் வழங்குவதற்காக 25 ஆடுகளையும், சுசீந்திரத்து எம்பெருமான் ஸ்ரீகாரியம் ஆராயும் மூலபருடையார் வசம் ஒப்படைத்துள்ளான். இவையிரண்டும் முதற் பராந்தக சோழன் காலத்து நிகழ்ச்சிகள். முதல் இராசராசன் காலத்தில் ஈழநாட்டைச் சேர்ந்த மழவரையன் சென்னிகண்டன் என்பான் சுசீந்திரம் கோயிலில் நந்தாவிளக்கு ஒன்றை அமைத்து, இரவும் பகலும் எரிவதற்கு உழக்கு நெய் வழங்குவதற்காக 50 சாவாமூவாப் பேராடுகளை மூலபருடைச் சபையாரிடம் ஒப்படைத்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. மூலபருடையார் தாம் பெற்ற ஆடுகளை இடையர் போன்றோரிடம் ஒப்படைத்தே கோயில் பணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் எனலாம். முதல் ஆதித்த

சோழன் காலத்தில் திருவெள்ளறையில் இருந்த மூலபருடையார் இதேபோன்று விளக்கு எரிக்கும் பணிக்காக 30 பசுக்களைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொன்னும், நிலமும் பெறுதல்

ஆடு மாடுகளைப் பெற்று மூலபருடையார் கோயில் பணிகள் புரிந்ததைப் போன்று கொடையாளர்கள் வழங்கிய பொன்னையும், நிலத்தையும் பெற்று இவற்றிலிருந்து வருகின்ற வருவாயைக் கொண்டும் கோயில் பணிபுரிந்துள்ளனர். திருச்சி மாவட்டம், திருச்செந்துறையைச் சேர்ந்த மூலபருடையார் இத்தகைய பணியில் சிறந்து நிற்கின்றனர். திருச்செந்துறை சோழர்காலக் கல்வெட்டுகள் இவர்களை ஈசானமங்கலத்து மூலபருடையார் என அழைக்கும். மதுரை கொண்ட பரகேசரியின் 12-ஆம் ஆட்சியாண்டில் ஈசானமங்கலத்தைச் சேர்ந்த பாரதாயன் நாராயணன் நக்கன் என்பான் திருச்செந்துறைக் கற்றளி பரமேஸ்வரர் கோயிலில் விளக்கு எரிப்பதற்கும், சாந்திப் புறமாகவும், வழங்கிய நிலத்தை மூலபருடையார் பெற்றுள்ளனர். இதே கொடையாளன் பராந்தகனின் 20-ஆம் ஆண்டில் திருச்செந்துறை இறைவன் ஸ்ரீபாதமே சார ஆற்றுத் தண்ணீர் கட்டுவதற்காகத் திருச்செந்துறை ஊர்ச் சபையாரிடம் விலையாக நிலத்தைப் பெற்று அந்த நிலத்தை மூலபருடையாரிடம் ஒப்படைத்துள்ளான். திருவுண்ணாழிகையில் விளக்கு எரிக்கும் பணிக்காகவும் இதே கொடையாளன் சபையாரிடம் விலைக்குப் பெற்று வழங்கிய நிலத்தையும் மூலபருடையார் பெற்றுள்ளனர்.

திருச்செந்துறை இராசகேசரி கல்வெட்டு ஒன்று திருச்செந்துறை இறைவனுக்கு உடையார் வீரசோழ இளங்கோவேளாயின ஒற்றி மதுராந்தகன், விடேல்விடுகு கல்லால் கொடுத்த 100 கழஞ்சு பொன்னை மூலபருடையார் பெற்றுக் கொண்டு ஊர்ச்சபை நிர்வகித்து வந்த கோயில் நிலத்தை மூலபருடையார் பெற்று கோயிலுக்கு வரி முதலியவற்றை வழங்கினர் எனத் தெரிவிக்கிறது. மேலும் இரண்டு பரகேசரி கல்வெட்டு தென்னவன் இளங்கோ வேளாயின ... பூதியார் தேவியார் உறத்தூர்க் கூற்றத்துக் கொடும்பாளூர் நக்கன் விக்கிரம கேசரியாரிடமும், நங்கை பூதி ஆதித்த பிடாரியாரிடமும் மூலபருடையார் விடேல்விடுகு கல்லால்

முறையே 20, 10 கழஞ்சு பொன் பெற்று முறையே திருச்செந்துறைக் கோயிலில் விளக்கு எரித்தல், இறை, எச்சோறு, வெட்டி முதலிய வரிகளை இறுத்தல் முதலிய பணிகளைச் செய்து சிறந்துள்ளனர்.

திருவெள்ளறை மூலபருடையார் திருவானைக்கல் பட்டாரகர்க்கு நந்தா விளக்கு எரிப்பதற்காக, திருவெள்ளறையைச் சேர்ந்த சங்கரப்பாடி மருதன் ஆச்சன் வழங்கிய 25 கழஞ்சுப் பொன்னைப் பெற்றுள்ளனர். பரகேசரி கல்வெட்டுகள் இரண்டு மூலபருடையார் அரையன்தாழி, சோழப் பெருமானடிகளுக்கு அதிகாரம் செய்கின்ற பாண்டி நாட்டுக் கீரனூர் நாட்டு இடைக் காட்டூரைச் சேர்ந்த குமரன்கோன் ஆகிய இருவரிடமும் முறையே 30, 25 கழஞ்சு பொன்னைப் பெற்று விளக்கு எரிக்கும் பணியை மேற்கொண்டனர் என்றும், திருவெள்ளறை இராசகேசரி கல்வெட்டு ஒன்று சுவையான செய்தியைத் தருகிறது. திருவெள்ளறை திருவானைக்கல் பெருமானடிகள் உச்சிப்போதில் அமுது செய்யும்போது வேதம் வல்ல பிராமணர் ஒருவர் ஊட்டுவிப்பதற்காக, திருவெள்ளறை சாத்துவாய் காஞ்சன் தாமோதிரன் என்பான் திருவெள்ளறை ஊர்க்கல்லால் 70 கழஞ்சுப் பொன்னை வழங்கியுள்ளான். இதனைப் பெற்றுக்கொண்ட மூலபருடையார் இப்பொன்னின் வட்டியைக் கொண்டு தாலம் ஒன்று, வட்டில் ஒன்று, பத்தெட்டுக்குத்தல் பழவரிசி, கும்மாயம், ஆழாக்கு நெய், இரண்டு பழம், காய்கறி, புளிங்கறி, நாழி தயிர், பொரிக்கறி, வெற்றிலை பாக்கு முதலியவற்றிற்கு நாள் தவறாமல் ஏற்பாடு செய்தனர் எனச் சுவையாகச் சொல்கிறது.

கோயிலில் விளக்கு எரிப்பதற்காகவும், திருமஞ்சனம் முதலிய பணிகளுக்காக ஆற்று நீர் கொண்டுவருவதற்காகவும், இறைவன் அமுது செய்வதற்காகவும், கோயில் நிலத்தை நிர்வகித்துக் கோயிலுக்கு வரி முதலியன செலுத்துவதற்காகவும் நிலங்களைப் பெற்ற மூலபருடைச்சபையார், அக்கோயில் நிலங்களைத் தாமே கூடி விற்பனைச் செய்து வேறு பணிகளுக்குச் செலவு செய்யும் மிகப்பெரிய அதிகாரமும் பெற்றிருந்தனர். இதற்குச் சோழர் கல்வெட்டு கிடைக்கவில்லையாயினும், பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று சான்று தருகிறது. இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் மூலபருடையார் கி.பி. 1166-இல் குலசேகரப் பாண்டியனைக் காண்பதற்காக மதுரை செல்ல விரும்பினர். அதற்குப் பணம்

தேவைப்பட்டது. திருத்தளிநாயனார் கோயில் ஆயிரத்தெழு நூற்றுவன் திருமண்டபத்தில் கூடிப் பேசிய மூலபருடைச் சபையார் கோயிலுக்குச் சொந்தமாக இருந்த சில நிலங்களை விற்கலாம் என முடிவு செய்து, அந்நிலங்களுக்கு விற்றனர் எனத் தெரிவிக்கிறது கல்வெட்டு.

## வாரியம் அமைத்தல்

ஊர்ச்சபை, கோயில் பணிபுரிந்த சபைகள் தாம் செய்யும் பணிகள் செவ்வனே சிறப்பாக நடைபெறுவதற்காக தம் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய வாரியம் என்னும் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம். முதல் இராசராசனின் சுசீந்திரம் கல்வெட்டு அவ்வூர் மகாசபையார் கோயில் பணிகளை நிர்வாகம் செய்வதற்காக வாரியர் இருவரை நியமித்ததைத் தெரிவிக்கிறது. கோயிலுக்குரிய நில வருவாய் போன்ற வரிகளை இவர்கள் வசூலித்தல் போன்ற தலையாய கடமைகளைச் செய்தமையால் வாரியர் என்றும் வாரியம் அழைக்கப்பட்டனர் எனலாம்.

திருச்சி மாவட்டம் ஸ்ரீநிவாசநல்லூர் சோழர் கல்வெட்டுகள் இவ்வூர் மூலபருடையாரை பிரம்மதேயமான மகேந்திரமங்கலத்து மூலபருடையர் என அழைக்கும். முதல் இராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டில் அரையர் ஆச்சாரகாந்த பிரம்மாதிராசர் என்பவர் திருக்குரக்குத்துறைப் பெருமானடிகளுக்குச் சொந்தமான இறையிலி தேவதான நிலங்களைப் பதிவு செய்தும், அவற்றின் வரும்படியைக் கோயிலின் பல திறச் செலவுகளுக்கு ஏற்றவாறு வகுக்குமாறும், மகேந்திரமங்கலத்து மூலபருடையாரிடம் கூறினார். மூலபருடையாரும் இப்பணி சிறப்பாக நடைபெறுவதற்காகத் தம் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிய வாரியம் ஒன்றை அமைத்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட வாரியம், ஊர்க்கணக்கின் உதவியுடன் திருவமுது, நெய், திருஆராதனை செய்யும் சிவப்பிராமணர் முதலியவற்றிற்குரிய ஊதியம், சிவப்பிராமணர்க்கு உதவியாக இருக்கும் இருவர் ஊதியம், 18 விளக்குகளுக்கு எண்ணெய், திருப்பலி கொட்டுவாருக்கும், விளக்கிடுவாருக்கும் உரிய ஊதியம், திருஆராதனையின்போது இன்னிசை நிகழ்த்த அமர்த்தப்பட்ட மத்தளிகர் மூவர், கரடிகை இயக்குவார் ஒருவர், தாளம்; பாடகம், சேகண்டிகை இவற்றை இயக்குபவர் ஒவ்வொருவர் ஆகிய எழுவருக்கும் உரிய ஊதியம்,

காளம் இரண்டு ஊதுபவனுக்குரிய ஊதியம் முதலிய ஊதியங்களை வழங்குவதற்குரிய கோயில் நிலங்களை வரையறை செய்தது. எனவே சோழர்கள் காலத்தில் இருந்த மூலபருடைச் சபையார் கோயிலில் விளக்கு எரித்தல், இறைவனுக்குத் திருவமுது செய்வித்தல் சிவப்பிராமணர்க்கு ஊதியம் வழங்குதல், கோயிலில் இசைக்கருவிகள் முதலியன வாசிக்க ஏற்பாடு செய்தல் போன்ற அரிய கோயிற் பணிகளை தமது கண்காணிப்பில் வாரியம் அமைத்து மேற்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர் எனலாம்.

## கொள்கைகள் வகுத்தல்

வாரியம் அமைத்தற்குரிய உரிமை பெற்றிருந்த மூலபருடைச் சபையார் ஊர்ச்சபை நடவடிக்கைகள் பற்றிய கொள்கைகளை வகுத்துக் கொடுக்கும் வல்லமையும் பெற்றிருந்தனர். ஊர்ச்சபை ஒரு முக்கியமான செய்தி பற்றி முடிவுக்கு வர இயலவில்லையாயின் அவ்வூரில் உள்ள மற்றொரு சபையின் முடிவை ஏற்றுக்கொள்ளும். மூன்றாம் இராசராசன் கல்வெட்டு ஒன்று சேய்ஞலூர் மூலபருடையார் ஊர்ச்சபைக்குரிய தேர்தல் விதிகளையும் ஊராட்சி முறைகளையும் கொள்கைகளாக வகுத்துக் கொடுத்தமையைத் தெரிவிக்கிறது.

மூன்றாம் இராசராசனின் 30-வது ஆட்சியாண்டில் விருதராச பயங்கர வளநாட்டு மிழலை நாட்டு சேஞலூர் உடையார் வைஸ்வேஸ்வரதேவர் கோயில் மூலபருடையார் கூட்டம் குறைவறக் கூடினர். கிராம காரியம் தொடர்பான நெறிமுறைகளை வகுத்தனர். அவர்கள் வகுத்த கொள்கைகள் வருமாறு:

1. ஊர்ச்சபை உறுப்பினராக ஒரு முறை ஓராண்டு பணிபுரிந்தவர், அடுத்த ஐந்தாம் ஆண்டில்தான் மீண்டும் உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதற்கு உரியவர் ஆவார். அவருடைய புதல்வர்கள் நான்காம் ஆண்டிலும், சகோதரர் மூன்றாம் ஆண்டிலும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.
2. 40 வயதிற்குக் குறையாதவர்களே உறுப்பினராகத் தகுதியுடையவர்.
3. முன்னோர்கள் மேற்கொண்ட முறைகளைப் பின்பற்றி நடப்போம் என்ற உறுதிமொழியை உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.
4. ஆண்டுதோறும் சபைக்குப் புதிய உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்பெறுதல் வேண்டும். அரசு அதிகாரிகளின்

துணையினால் உறுப்பினர் ஆனவர்களும், நெறிகளுக்கு முரணாக உறுப்பினர் ஆனவர்களும், ஓராண்டுக்கு மேல் உறுப்பினராக இருப்பதற்கு முயல்வோரும் கிராமத் துரோகிகள் எனக் கருதப் பெறுவர்.

5. கடமை, குடிமை, சபா விநியோகம் முதலிய வரிகளை மக்களிடமிருந்து பெறும்போது குறிப்பிட்ட அளவுக்குமேல் பெறுதல் கூடார். சபா விநியோகமும், குடிமையும் தனித்தனியாக வசூலிக்கப்படவேண்டும்.
6. ஒரு காரியம் குறித்து 2,000 காசுகளுக்கு மேல் செலவழிக்க நேருமாயின் மகாசபையின் அனுமதியை முன்பே பெற்று இருத்தல் வேண்டும்.
7. இவ் விதிகளின் படி செலவழிக்காமல் முரணாகச் செலவழித்திருப்பினும், அதிக வரி வாங்கியிருப்பினும் இதற்கு காரணமான உறுப்பினர்கள் இத்தொகைக்கு ஐந்து மடங்கு தண்டம் செலுத்துதல் வேண்டும்.
8. மக்கள் கொடுக்க வேண்டிய வரி பாக்கித் தொகையை ஒன்றுக்கு இரண்டாகத் தண்டம் சேர்த்து வசூலிக்கலாம்.
9. மேலே குறிப்பிட்ட தண்டத் தொகைகள் எல்லாவற்றையும் பெற்று, சபா விநியோகத்தோடு சேர்த்துச் செலவிடலாம்.
10. ஊர்க்கணக்கனும், வாரியமும், குடும்பின் உறுப்பினர்களும் மகா சபையின் ஆணையின்படி ஆண்டுதோறும் மாறி மாறி நிற்றல் வேண்டும்.

இத்தகு நெறிமுறைகளை வகுத்த மூலபருடையார் சேய்ஞலூர் கோயில் திருநடைமாளிகையிலே இவற்றைக் கல்வெட்டாக வெட்ட வேண்டும் என்று பணிக்க அவ்வாறே கல்வெட்டும் வெட்டப்பெற்றது. உத்திரமேரூர்ச் சபையினரைப் போன்று ஆனால் அதே சமயத்தில் அரசனுடைய ஆணைகள் இல்லாமல் ஊர்க்கு நலம் பயக்கும் பல கொள்கைகளை வகுத்துக் கொடுத்திருந்தனர் என்றால், அந்த மூலபருடைச் சபையில் கல்வி கேள்விகளில் வல்ல அறிஞர் பெருமக்கள் பலர் இருந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயமும் தோன்றுமோ? திருவிடை மருதூர் மகாலிங்க சுவாமி கோயில் கல்வெட்டு ஒன்று முதல் இராசேந்திர சோழனின் 30-ஆவது ஆட்சியாண்டில் சேய்ஞலூர் மூலபருடையார்

திருவிடைமருதூர் கோயிலுக்கு 500 காசுகளுக்கு நிலம் விற்ற செய்தியைத் தருகிறது. எனவே மூலபருடை என்னும் அமைப்பு சேய்ஞலூரில் முதல் இராசேந்திரன் காலம் தொடங்கி மூன்றாம் இராசராசன் காலம் வரையிலும் தொடர்ந்து இயங்கியது என்னும் முடிவுக்கு வரலாம்.

### செய்த பணிகள் சில

இதுவரை குறிக்கப் பெறாத வேறு சில பணிகளையும் சோழர் காலத்தைச் சேர்ந்த மூலபருடையார் மேற்கொண்டுள்ளனர். முதல் இராசேந்திர சோழனின் 2 - வது ஆட்சியாண்டில் திருக்குடமூக்கு மூலபருடையார் விக்கிரமசிங்க பல்லவரையன் என்பவரிடம் 100 காசு பெற்றனர். காவிரி வெள்ளத்தினால் அழிந்த கால்வாய்களைச் செம்மைப்படுத்தினர். வட்டியில் மீதித் தொகையைக் கொண்டு திருநாகேஸ்வரம் கோயில் வழிபாட்டிற்கும், இக்கோயில் திருச்சிற்றம்பலம் உடையார் என்னும் அரங்கில் நடைபெற்ற சிவதர்மத்திற்கும் பயன்படுத்தினர் என்பது கல்வெட்டு. இதே சோழனின் 30-ஆம் ஆண்டுக் கல்வெட்டு திருக்குடமூக்கு மூலபருடையார் திருநாகேஸ்வரம் கோயில் ஊழியர்க்கு அனுப்பிய ஆணை ஒன்றைத் தெரிவிக்கிறது. எனவே ஒரு ஊரைச் சேர்ந்த மூலபருடையார் அருகில் உள்ள ஊரின் பொதுப்பணிகளையும் கோயில் பணிகளையும் மனமுவந்து மேற்கொண்டுள்ளனர் எனலாம்.

புஞ்சை நல்துணை ஈசுவரம், கல்வெட்டுகளில் திருநனிபள்ளி உடையார் கோயில் என அழைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பைப் பக்கத்து ஊராகிய தலைச்செங்காட்டு மூலபருடையார் மேற்கொண்டிருந்தனர். முதல் இராசேந்திரன் வடநாட்டுப் படையெடுப்பில் அடைந்த வெற்றிக்கு இறைவன் அருள்பாலித்ததன் நினைவாகத் தலைச்செங்காட்டு மூலபருடையார் புஞ்சை கோயிலில் உள்ள ரிஷபவாகன தேவர் சிலைக்குப் பூசனை, நிவேதனம், உற்சவம் முதலியன நிகழ்த்தும் செலவுகளுக்காகக் கோயில் நிலங்கள் சிலவற்றிற்குத் தாமே வரி செலுத்துவதாக ஒத்துக்கொண்டனர். மேலும் இதே ஊர் மூலபருடையார் மும்முடிச் சோழன் மண்டபத்தில் கூடித் தாம் கோயிலிலிருந்து பெற்ற 50 காசுகளுக்காக, கோயிலைச் சேர்ந்த 2 வேலி நிலங்களுக்கு வரி செலுத்தவும், பெரிய தளி மகாதேவர் கோயில் வைகாசி விழாச்

செலவுகளை ஏற்றுக்கொள்ளவும் ஒத்துக்கொண்டனர். புஞ்சையைச் சேர்ந்த இவ்விரண்டு கல்வெட்டுகளும் முதல் இராசேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்தவை.

தஞ்சை மாவட்டம் திருவாய்ப்பாடியில் உள்ள கோப்பெருஞ்சிங்கனின் 29 -ஆம் ஆண்டுக் கல்வெட்டு சேய்ஞலூர் மூலபருடையார் திருவாய்ப்பாடிக் கோயிலைச் சேர்ந்த திருவாபரணத்தை அழித்துக் காணி நிலத்தை விலைகொண்டு திருத்தோப்பும், திருநந்தவனமும் திருநாமத்துக்காணியாகச் செய்து, அந்நிலத்துக்கு உரிய கடமை முதலிய வரிகளை ஊரிலேயே ஏற்றி ஊர்க்கீழ் இறையிலியாகச் செய்துகொடுத்தனர் என்கிறது. எனவே மூலபருடை அமைப்பினர் காவிரி வெள்ளத்தினால் ஏற்பட்ட வெள்ள நிவாரணப் பணி, அரசனின் போர் வெற்றியின் நினைவாக எடுக்கப்பெற்ற விழா, கோயில் திருவிழா, கோயிலுக்குரிய திருத்தோப்பு, திருநந்தவனம் அமைப்பு முதலிய பணிகளையும் தம்முடைய மேற்பார்வையில் மேற்கொண்டுள்ளனர் என அறியலாம். சேய்ஞலூர் மூலபருடையார் கோயிலின் வேறு ஒரு பணிக்காகக் கோயிலுக்குச் சொந்தமான ஆபரணங்களை அழித்து விற்றுள்ளனர் என்னும் செய்தி குறிப்பிடத்தக்கது.

## மூலபருடைச் சபை கலைப்பு

இடைக்காலப் பாண்டியர் காலம் தொடங்கி பராந்தக சோழன் காலம் முதல் முதல் இராசராசன் காலம் வரை சுசீந்திரம்

எம்பெருமான் ஸ்ரீகாரியத்தைச் செய்து சிறந்தவர்கள் சுசீந்திரம் மூலபருடைச் சபையார். மாறஞ்சடையனுடைய 5 -ஆம் ஆண்டில் இதே மூலபருடை அமைப்பினர் கொடையாளர் கோயிலுக்கு வழங்கிய பொன்னைப் பெற்று அமரபுசங்கப் பெருமாளுக்குத் திருமுடியும் திருவாபரணமும் செய்து அபிஷேகமும் செய்வித்து மகிழ்ந்துள்ளனர். அதுவரை சுசீந்திரம் கோயில் தேவதான நிலங்களை மேற்பார்வையிட்டு கோயிலுக்கு வரி செலுத்தியும், ஸ்ரீகாரியம் ஆராய்ந்தும் பணிபுரிந்து வந்த மூலபருடைச் சபையார்க்கு முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலத்தில் ஏதோ ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்க வேண்டும். இராசராசனின் 15 -ஆம் ஆட்சியாண்டில் சுசீந்திரம் மகாசபையார் திருவக்கிரசாலையில் கூட்டம் குறைவறைக் கூடியிருக்கும்போது இவ்வூர் மாதேவர்க்கு ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற மூலபருடைச் சபையார் "இத்தேவர் தேவதானங்களுக்கு வரி

கொடுக்க இயலாது என்றும்" கூறியதாகக் கல்வெட்டு கூறுகிறது. மூலபருடைச் சபையினர் கருத்தை ஒட்டி பரடைக் குடிகளும் வரிகொடுக்க இயலாது என்ற இதே கருத்தைத் தெரிவித்துள்ளனர். கோயில் பொறுப்புகளிலிருந்து மூலபருடையார் விலகிக்கொள்ள மகாசபையார் கோயில் பணிகளைக் கவனிப்பதற்காக வாரியர் இருவரையும் கரணத்தான் ஒருவனையும் நியமித்துள்ளனர். எனவே சுசீந்திரத்தில் மூலபருடைச் சபை கலைக்கப்பட்டது என்பது சிலரது துணிபு. இக்கருத்துக்கு ஏதுவாக சுசீந்திரம் கல்வெட்டுகளில் முதல் இராசராசனின் கல்வெட்டுகளுக்குப் பின்னால் மூலபருடையாரைப் பற்றிய செய்திகள் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் கோயில் பொறுப்பிலிருந்து மட்டும் விலகிக்கொண்ட மூலபருடை அமைப்பினர் முதல் இராசராஜனுக்குப் பின்னரும் தனிப்பட்ட அமைப்பாக சுசீந்திரத்தில் இயங்கியிருக்க வேண்டும் என்று கருதினாலும் அது தவறாகாது. கோயில் நிலங்களை உழுது பயிரிட்டு மூலபருடையாரிடம் உரிய வருவாய்களைக் கொடுத்துவந்த பரடைக்குடிகள் சரிவர நிலவருவாயைச் செலுத்தாமையே மூலபருடையார் இவ்வாறு பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வதற்குக் காரணம் என எண்ணலாம். இவ்வாறு மூலபருடையார் சுசீந்திரம் கோயில் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டமைக்கு வேறு ஏதேனும் அரசியல் காரணங்கள் இருக்குமா என்பதும் ஆய்வுக்குரியது.

கோயிலுக்கு விளக்கு எரித்தல், தேவதான நிலங்களை மேற்பார்வையிட்டுக் கோயிலுக்கு வரி செலுத்துதல், திருவமுது, திருவிழா நடத்துதல், கோயில் ஆபரணத்தை விற்று திருநந்தவனம், திருத்தோப்பு அமைத்தல், வாரியம் அமைத்து கோயிலில் இசைக் கருவிகள் முதலியன முழங்கச் செய்தல் முதலான கோயில் பணிபுரிந்தும், வெள்ள நிவாரணம் போன்ற பொதுப்பணிகளை மேற்பார்வையிட்டும், முடிசூட்டு விழாவில் அரசனிடம் அபிஷேக தட்சிணையாக நிலம் பெற்றும் சோழர் காலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்த மூலபருடை என்னும் அமைப்பு வரலாற்றில் குறிப்பிடத்தக்க அமைப்பு என்பதில் ஐயமில்லை. பிராமணர் சமுதாயத்தின் தனிப்பட்ட அமைப்பாக குறிப்பிடத்தக்க ஊர்களில் இருந்து கோயில் பணியைத் தலையாய பணியாகக் கொண்டு சோழர் காலத்தில் சிறந்து விளங்கிய மூலபருடை என்னும் அமைப்பு பிற்காலப் பாண்டியர் காலத்திலும் சிதம்பரம், திருப்பத்தூர் போன்ற ஊர்களில் கோயில் பணிபுரிந்து சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

## துணை நூல் பட்டியல்


1. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி 2, பக்கம்: 1480
2. K.A. Nilakanta Sastri, The colas p. 489.
3. கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு, மக்களும்.
4. Sir Monier Williams A. Sanskrit English Dictionary p. 602.
5. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் எண். 224.
6. திரு. எண. சீனிவாசன், சரசுவதி மகால் வடமொழி பண்டிதர் கூறிய கருத்து.
7. Dr. Y. Subbarayalu, Political Geography of the Chola country p. 91.
8. டாக்டர் இராசமாணிக்கனார் பல்லவர் வரலாறு பக் 229-230.
9. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் II எண். 205, 204.
10. S.I.I. Vol. 13/46, ARE 1931-32 p. 57.
11. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் எண். 224, 205, 212.
12. S.I.I. Vol. 13/46, 4/537, 17/933, 13/27, 8/600, ARE 85/1896. 222/1925.
13. S.I.I. Vol. 13/No. 46, 44, 19/6, 96.
14. S.I.I. Vol. 19/6.
15. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் II எண். 178, 179, 204.
16. S.I.I. Vol. 13/313.
17. S.I.I. Vol. 8/600.
18. S.I.I. Vol. 8/607.
19. S.I.I. Vol. 8/609.
20. S.I.I. Vol. 1/611.
21. S.I.I. Vol. 8/615, 620.
22. S.I.I. Vol. 13/4.
23. S.I.I. Vol. 19/44, 218.
24. S.I.I. Vol. 13/27.
25. ARE 161/1908.
26. Travancore Archaeological Series Vol. II, p. 7.
27. "புயலென்னும் வாரி" என்னும் திருக்குறள் தொடரில் உள்ள வாரி என்பதற்குச் செல்வம், வருவாய் எனப் பொருள் கொண்டு, இவ் "வாரி" என்னும் தமிழ்ச் சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டு வாரியம் என்னும் தமிழ்ச் சொல் தோன்றியது எனலாம்.
28. S.I.I. Vol. 13/3, எஸ். ஆர். பாலசுப்ரமணியன், p. 90.
29. டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி.

30. ARE 1931-32 p. 57, para 19.
31. S.I.I. Vol. 23/220.
32. ARE 1912/24.
33. ARE 83/ 1897, S.I.I. Vol. 6-33.
34. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், பக் 150.
35. ARE 182/1925.
36. ARE 187/1925.
37. எஸ். ஆர். பாலசுப்ரமணியம், கோப்பெருஞ்சிங்கன் பக் 150.
38. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் II எண். 224.
39. Travancore Archaeological Series Vol. II, p. 7, ARE 85-1896.
40. திரு. கு. தாமோதரன். தமிழக வரலாற்று அருவியில் சில மணிகள் (1976) பக். 71.
41. ARE 228-1913, ARE 101/1908.

★★★

# குந்தவைப் பிராட்டியின் சமயப்பணி

**கு. தாமோதரன்,** எம். ஏ.,

பதிவு அலுவலர், சென்னை.

பொன் மாளிகைத் துஞ்சிய இரண்டாம் பராந்தகச் சோழனாகிய சுந்தரசோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் குந்தவை, ஆதித்த கரிகாலன், அருள்மொழியாகிய இராசராசன் ஆகிய மூன்று குழந்தைகள் பிறந்தனர். இந்த மூவரும் சோழர் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவார்கள். இராசராசனுடன் பிறந்த மூத்த சகோதரியே குந்தவை. இவரைக் கல்வெட்டுகள் ஆழ்வார் பராந்தகன் குந்தவை என்றும், அக்கன் (அக்காள்) என்றும் குறிக்கின்றன. இராசராசனுடைய மகள் பெயரும் குந்தவை. இவரை கல்வெட்டு இராசராசன் குந்தவை ஆழ்வார் என்று குறிக்கிறது. இராசராசன் தன்னுடைய தமக்கையிடத்தில் அளவற்ற அன்பும் பாசமும், மதிப்பும் வைத்திருந்த காரணத்தால் தன்னுடைய மகளுக்கும் 'குந்தவை' என்று பெயரிட்டு மகிழ்ந்தான். இவர்கள் இருவருக்கும் வேறுபாடு உணர்த்துவதற்காக இராசராசனின் தமக்கை "பெரிய குந்தவை" என்று குறிக்கப்படுகிறார்.

இராசராசன் தான் எடுத்த பெருவுடையார் கோயிலுக்குப் பல்வேறு கொடைகளை அளித்துள்ளான். இராசராசனைப் போல் தமக்கை குந்தவைப் பிராட்டியும், பட்டத்து அரசிகளும், அதிகாரிகளும், அதிகாரிச்சிகளும், பொதுமக்களும் பெருவுடையாருக்கு கொடுத்துள்ள பல்வேறு வகையான கொடைகளைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு குறிக்கிறது.

இராசராசன் சிவபாத சேகரனாகவும், திருமுறைகண்ட சோழனாகவும் சிறந்து விளங்கினான். சிவபெருமானிடத்தில் அளவற்ற பக்தியுடையவன் என்பதை வெளிப்படுத்துகின்ற வகையில் இவன் எடுப்பித்துள்ள பெருவுடையார் கோயில் விளங்குகிறது.

இவன் சிவபக்தியுடையவனாய்த் திகழ்ந்தமைக்குக் காரணம், சிவபெருமானிடத்தில் பேரன்பு பூண்டு பல தொண்டுகள் ஆற்றிய செம்பியன் மாதேவியும், குந்தவைப் பிராட்டியும் இவனை இளமையில் வளர்த்து நல்வழிப் படுத்தினமையேயாம். பெருவுடையார்க்குப் பல்வேறு கொடைகளை அளித்தது மட்டுமல்லாமல், வழிபாட்டிற்கும், வீதி உலாவாக எடுத்துச் செல்வதற்கும் பல செப்புத் திருமேனிகளையும் செய்தளித்துள்ளான்.

சோழர்கள் ஆட்சி காலத்தில், சமுதாயத்தில் பெண்களின் நிலை நல்ல ஏற்றம் பெற்று இருந்தது என்பதை காணமுடிகிறது. இராசராசனைப் போன்று குந்தவைப் பிராட்டியாரும் அரசியலில் சிறந்த இடத்தைப் பெற்று விளங்கியதோடு சைவ சமயத்திற்கும், பிற சமயங்களுக்கும் அரும்பணி ஆற்றிய பெண்மணியாவார். இவர் தனது பாட்டி செம்பியன் மாதேவியைப் போன்று தமிழகத்து கட்டடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் அரிய தொண்டு புரிந்துள்ளார். குந்தவைபிராட்டியார் கீழைச் சாளுக்கிய அரச குடும்பத்தைச் சார்ந்த வல்லவரையவந்தியத்தேவரை மணந்து கொண்டாலும் சோழ நாட்டையும், தனது தாய் வீட்டையும் பேணிக்காக்க மறந்து விடவில்லை. வல்லவரைய வந்தியத்தேவர், இராசராசனுடைய சாமந்தர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

குந்தவையின் கலைத்தொண்டின் மூலம், இவள் நமக்கு ஒரு கலை அரசியாகவே காட்சி அளிக்கிறாள். இராசராசனைப் போன்று, அவனுக்கு அடுத்த நிலையில் குந்தவைப் பிராட்டியார் தஞ்சை பெருவுடையாருக்குப் பல்வகைக் கொடைகளை அளித்துள்ளார். வழிபாட்டிற்காக ஆடவல்லார் நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரி, தக்கணமேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேச்சுவரி, தஞ்சைவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேச்சுவரி ஆகிய மூன்று செப்புத் திருமேனிகளையும் செய்தளித்துள்ளார். தன்னுடைய தந்தை சுந்தரசோழனுக்கும், தாய் வானவன் மாதேவிக்கும் திருமேனிகள் செய்தளித்துள்ளார். அவைகளுக்கு கொடையும் கொடுத்துள்ளார். பெருவுடையார் கோயில் விமானத்தின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஆழ்வார் பிராந்தகன் குந்தவையார் உமாபரமேஸ்வரிகளுக்கு அளித்துள்ள கொடையினைக் குறிக்கிறது.

குந்தவைப் பிராட்டியார் தான் எடுப்பித்த செப்புத் திருமேனிகளுக்குப் பொன்னின் திருவாபரணங்களையும், சின்னங் களையும் அளித்துள்ளார். இவ்வாபரணங்கள் "ஆடவல்லான்" என்னும் கல்லால் நிறை செய்யப்பட்டன.

பொன்னின் தளிகை, பொன்னின் மண்டை, பொன் குடம், பொன்னின் வட்டில் ஆகிய பொருள்களை ஆடவல்லார் உமாபரமேஸ்வரிக்குக் குந்தவைப் பிராட்டியார் அளித்துள்ளார்.

ஆடவல்லார் தக்கணமேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரிக்கு, பொன் ஓட்டு வட்டில், தவுக்கை ஒன்று, பொன்னால் செய்யப்பெற்ற அன்னம், வெண்தாமரை கையொன்று, ஈச்சொப்பிக்கை, திருமகுடம், திருபொற்பூ, வைரச் செயல், தாலி மணிவடம், தாலி மணி, படுகன் கள்ளிப்பூ, கொக்குவாய், சவக்கம் உட்பட பொன் பதினொரு கழஞ்சு மஞ்சாடி, வைர காயலம் ஒன்று திருக்கை பொட்டு, திருக்கை கடகம், திருக்கை காரை, திருவடிக்காரை, திருகால்மோதிரம், கலசப் பானை, கலசம், கரண்டிகைச் செப்பு, வெண்தாமரைக் கை, ஈச்சொப்பிக்கை, திருபொற்பூ ஆகியவை அளிக்கப்பெற்றுள்ளன.

தக்கணமேருவிடங்கருக்கு பழைய முத்துக்கள், பவளங்கள் நீல நிற மணிகள் ஆகியவை கோர்க்கப்பட்ட மணி ஒன்று, படுகன் ஒன்று, கொக்குவாய் ஒன்று-இதன் எடை மொத்தம் நான்கு கழஞ்சு எட்டு மஞ்சாடி (இதன் மதிப்பு 11 காசு) அளிக்கப்பெற்றுள்ளது.

உமை அன்னையின் திருமேனிகள் இருக்கும் திரு அரங்கத்தை அமைப்பதற்கும், அலங்கரிப்பதற்கும், திருவிழாவிற்கும் சேர்த்து மூவாயிரத்து ஐந்நூற்று கழஞ்சு பொன் கொடுத்தது குறிக்கப்படுகிறது. இக்கொடை குடிஞைக்கல்லால் நிறுக்கப் பட்டுள்ளது. ஆடவல்லான் என்ற பெயரில் மற்றொரு எடைக் கல் குறிக்கப்படுகிறது. ஆடவல்லான் என்பது இங்கு எழுந்தருளியுள்ள இறைவனைக் குறிப்பதாகும். கோயிலுக்கு அளிக்கப்பெற்றுள்ள ஆபரணங்கள் அனைத்தும் "காசுக்கல்" என்ற எடையால் நிறுக்கப்பட்டுள்ளது. அக்கல்லுக்குத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் உலா வரும் இறைவனின் பெயராகிய 'தக்ஷிண மேருவிடங்கர்' என்னும் பெயர் சூட்டப்பெற்றது. விழாக்களின் போது

தெய்வங்கள் திரு உலா வருவதற்கும் திருவமுது, திருப்பள்ளித் தாமத்திற்கும், விளக்கெரிப்பதற்கும் எண்ணெய் மற்ற செலவு களுக்காகவும் ஆகும் செலவினை ஈடுகட்டுவதற்காகக் குந்தவைப் பிராட்டியார் பல்வேறு ஊர்ச் சபைகளிடம் நிலையான பண முதலீட்டைச் செய்துள்ளார். இந்தப் பணத்திற்கு உரிய வட்டி நெல்லாக வசூலிக்கப்பெற்றது.

ஒரு காசுக்கு மூன்று குறுணி நெல் வட்டியாக ஆண்டு ஒன்றுக்கு பெருவுடையார் கோயில் பண்டாரத்திற்கு அளக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்துள்ளார்கள். இந்த நெல் 'ஆடவல்லான்' என்ற மரக்காலால் அளக்கப்பெற்றது.

சனநாத சதுர்வேதி மங்கலம் சபையாரிடத்தில் 200 காசுகள் செலுத்தப்பெற்றது. இதற்கு வட்டியாக ஆண்டு ஒன்றுக்கு 50 கலம் நெல் அளக்கப் பெற்றுள்ளது.

இரும்புதல் என்கிற மனுகுல சூளாமணிச் சதுர்வேதிமங்கலச் சபையாரிடம் 100 காசு ஒப்படைக்கப்பெற்று இதற்கு 25 கலம் நெல் ஆண்டு ஒன்றுக்கு வட்டியாக வசூலிக்கப் பெற்றுள்ளது.

இராசாச்சியரைய சதுர்வேதிமங்கலச் சபையாரிடம் நூறு காசுகள் நிலை முன்பணமாக வழங்கப்பெற்று, இதற்கு வட்டியாக ஆண்டு ஒன்றுக்கு 125 கலம் நெல் அளக்கப்பெற்றது.

பெருமிலட்டூர் கிராமச் சபையாரிடம் நிலை முன்பணமாக 200 காசு கொடுக்கப்பெற்று இதற்கு வட்டியாக 50 கலம் நெல் ஆண்டு ஒன்றுக்கு அவர்களால் அளிக்கப்பெற்றது.

பொன் மாளிகைத் துஞ்சினத்தேவர் திருமேனியின் வழிபாட்டிற்காக குந்தவைப் பிராட்டியார் பல்வேறு கொடைகளை அளித்துள்ளார். ஒரு ஆண்டிற்கு ஒரு காசுக்கு மூன்று குறுணி நெல் வட்டியாகக் கோயில் பண்டாரத்திற்கு அளக்க வேண்டும் என்ற நிபந்தனையில், கண்டராதித்த சதுர்வேதிமங்கலச் சபையாரிடம் 520 காசுகள் வழங்கப்பெற்று, இதற்கு வட்டியாக 130 கலம் நெல் அளக்கப்பெற்றுள்ளது. இது தவிர தினப்படி பூசை செலவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஐம்பத்தொரு காசுகள் ஒதுக்கப்பெற்றுள்ளது. திருவாடை, திருத்தோரணம் புனித ஆடைகள், சீலைகள், மாலைகள்

வாங்குவதற்கும் இந்தக் காசு பயன்படுத்தப்பட்டது. இந்தத் தொகையின், பண முதலீட்டில் பெறப்பெற்ற வட்டி பண்டாரத்தில் பணமாக சேர்க்கப்பட்டது 1/8 அக்கம் (1/12 காசு) வட்டியாக வசூலிக்கப் பெற்றது.

இந்த வகையில் வீரநாராயணன் சதுர்வேதி மங்கலச் சபையாரிடம் நூற்று தொண்ணூற்றாறு காசுகள் முதலீடாகக் கொடுக்கப்பெற்று, இருபத்து நாலரை காசுகள் வட்டியாக வசூலிக்கப் பெற்றது.

பராந்தகச்சதுர்வேதி மங்கலத்தாரிடம் நூற்று பன்னிரண்டு காசுகள் முதலீடாக அளிக்கப்பெற்று பதினான்கு காசுகள் வட்டியாக வசூலிக்கப்பெற்றது.

சூலமங்கலம் சபையாரிடம் 100 காசுகள் அளிக்கப்பெற்றது. இதற்கு வட்டியாக 12½காசுகள் வசூலிக்கப்பெற்றன.

ஆகமொத்தம் 408 காசுகள் முதலீட்டிற்கு 51 காசுகள் வட்டியாக வசூலிக்கப்பெற்றது.

பத்து நுந்தாவிளக்கு எரிப்பதற்கு, 32 காசுகள் பராந்தகன் அச்சன் அடிகள் என்பவரிடம் ஒப்படைக்கப்பெற்றது. இந்தக் காசுக்கு 3 செம்மறி ஆடுகள் ஒரு காசு வீதம் 96 ஆடுகள் வாங்கப்பெற்று, அதன் மூலம் கிடைக்கப்பெற்ற பாலைக் கொண்டு நெய் எடுத்து, விளக்கு எரிப்பதற்கு ஒரு நாளைக்கு உழக்கு நெய் வீதம் அளிக்கப்பெற்றது.

தன்னுடைய தந்தை 'பொன் மாளிகைத்துஞ்சின தேவர்' திருமேனிக்கு கொடைக் கொடுத்ததுப் போன்று குந்தவைப் பிராட்டியார் தம்மையாக எழுந்தருளிவித்த திருமேனியின் வழிபாட்டிற்கும் கொடை கொடுத்துள்ளார். தன்னுடைய தாயார் வானவன் மாதேவி திருமேனிக்கு 20 பொன்னாலான காதணிகள் அளித்துள்ளாள். அவற்றின் எடை 6 காசு 6 கழஞ்சு ஒரு குன்றிமணி.

குந்தவை நல்லூர் கிராமத்தில் ஐநூற்று இருபது காசுகள் நிலை முன்பணமாக வைத்து அதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு நூற்று முப்பது கலம் நெல் வட்டியாக கிடைத்துள்ளது. இந்த வருமானத்தைக்

கொண்டு வழிபாட்டிற்குத் தேவையான துணி, அரிசி வழிபாட்டுக்கு வேண்டிய மாலைகள் வாங்குவதற்கு இந்தக் காசு பயன்படுத்தப்பெற்றன.

பராந்தக சதுர்வேதி மங்கலச் சபையாரிடம், குந்தவைப் பிராட்டியார் நிலை முன்பணமாக 488 காசுகள் கொடுத்துள்ளார். இந்தக் காசு கருவூலத்தில் வைக்கப்பெற்று இருந்தது.

குந்தவைப் பிராட்டியார், கலிபன் பரதன் என்பவனிடத்தில் ஒரு காசுக்கு மூன்று ஆடுகள் வீதம், 96 ஆடுகள் வாங்குவதற்கு 32 காசுகள் நிலை முன்பணம் அளித்துள்ளார் இந்த ஆடுகளைக் கொண்டு தன்னுடைய தாய் திருமேனிக்கு 10 நுந்தாவிளக்கு எரிப்பதற்கு, தினமும் உழக்கு நெய் அளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இராசேந்திரனின் 3-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு தக்கண மேருவிடங்கர், தஞ்சை விடங்கர் உமாபரமேச்வரிக்கு 6200 காசுகள் மதிப்புள்ள ஆபரணங்கள் கொடுக்கப்பெற்றதைக் குறிப்பிடுகிறது.

முதலாம் இராசேந்திரனின் 13-ஆம் ஆட்சியாண்டில் (தக்கண மேருவிடங்கர்) உமாபரமேச்வரிக்கு முடி, காதணிகள், கழுத்தணிகள், பூவளையம், முழங்கை அணி, சிரச்சக்கரம், பொடுகள், கச்சுகள் ஆகியவற்றுக்குச் சேர்த்து 11,280 காசுகள் கொடுக்கப்பெற்றுள்ளது.

குந்தவைப் பிராட்டியார், கோயில்களுக்குப் பல்வகைக் கொடைகளைக் கொடுத்துள்ளதைக் கண்டோம். இனி அவர்கள் எடுத்துள்ள கோயில்களைப் பற்றியும், பொதுப் பணிகளைப் பற்றியும் காண்போம்.

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் குந்தவைப் பிராட்டியார் தாதாபுரம் என்ற ஊரில் மணிக்கண்டேஸ்வரம் கோயில், குந்தவை விண்ணகரம், குந்தவை சினாலயம் ஆகிய மூன்று கோயில்களை (கரிவரதப் பெருமாள்) எடுத்துள்ளதை மணிக்கண்டேஸ்வரம் கல்வெட்டு குறிக்கிறது. இராசராசனின் 2-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு இரவிகுல மாணிக்கேஸ்வரம் என்று குறிக்கிறது. கல்வெட்டுகளில் இவ்வூர் ‘இராசராசபுரம்’ என்று குறிக்கப்படுகிறது.

பனையூரைச் சார்ந்த நிர்வாக அதிகாரி மணிக்கண்டேஸ்வரம் கோயிலில் அமைந்திருந்த பண்டாரத்தை ஆய்வு செய்து, அதில் இருந்த பல்வகை ஆபரணங்களுக்கு விவரப்பட்டியல் தயார் செய்துள்ளார். இதில் கோயிலுக்கு அளிக்கப் பெற்றுள்ள குடங்கள், பொன், வெள்ளி, முத்துக்கள் ஆகியவைகளினால் செய்யப்பெற்ற ஆபரணங்கள் இடம் பெற்றுள்ளன என்ற விபரம் அக்கோயில் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இராசராசனின் 19 - ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த சிவன் கோயில் கல்வெட்டில் குந்தவைப் பிராட்டியாரின் பணியாள் ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடை கொடுத்தது குறிக்கப் படுகிறது.

இராசராசனின் 25-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் பராந்தகன் குந்தவைப் பிராட்டியார் 10 விளக்கு எரிப்பதற்கு கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது. முதலாம் இராசேந்திரனின் 4-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டும் ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது.

இராசராசபுரம், இரவிகுலமாணிக்கேச்வரம் கோயில் இராசராசனின் 19 -ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னர் கட்டப்பெற்று இருக்கவேண்டும். இதே காலத்தில் தஞ்சை இராசராசேச்வரம் கோயில் எடுப்பிக்கப்பெற்றது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

## கரிவரதப் பெருமாள் கோயில்

இக்கோயில் மணிக்கண்டேச்சுரம் சிவன் கோயிலுக்கு தென்மேற்கே அமைந்துள்ளது. இது கல்வெட்டுகளில் ‘குந்தவை விண்ணகர ஆழ்வார் கோயில்’, என்று குறிக்கப்படுகிறது. குந்தவை விண்ணகரம், குந்தவை பிராட்டியாரால் இராசராசனின் இருபதாவது ஆட்சியாண்டிற்கு முன்னரே எடுப்பிக்கப்பெற்றிருக்க வேண்டும். இதே காலகட்டத்தில் மணிக்கண்டேச்சுவரம் சிவன் கோயில் கட்டப்பெற்றிருக்கும் என்பது தெளிவு.

இக்கோயிலில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் இராசேந்திரன், குலோத்துங்கன் ஆகிய மன்னர்கள் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் பொறிக்கப்பெற்றுள்ளன.

இராசராசனின் 21-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு நல்லூர் நாட்டைச் சார்ந்த, குந்தவைப் பிராட்டியார், குந்தவை

விண்ணகரம், ரவிகுலமாணிக்கேஸ்வரம் குந்தவை சீனாலயம் ஆகிய கோயில்களுக்குத் தங்கக் குடங்களும், தங்கம், வெள்ளியால் செய்யப்பெற்ற ஆபரணங்களும், அணிகலன்களும் கொடுத்தது குறிக்கப்படுகிறது. பராக்கிரம சோழ மூவேந்த வேளார் என்ற அதிகாரியின் பெயரும் குறிக்கப்படுகிறது.

இராசராசனின் 23 - ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ஒரு பெண் பணியாள் ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்கு 96 ஆடுகள் கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது. அதே காலத்தைச் சார்ந்த கல்வெட்டு ரவிகுலமாணிக்கேசுவரம், குந்தவை விண்ணகரம் ஆகிய இரண்டு கோயில்களுக்கு கோயில் நாட்டிய பெண்கள் இறைவனுடன் வீதி உலாவாக வேட்டை திருவிழாவிற்கு வருவதற்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிக்கப்படுகிறது. இரவிகுல மாணிக்கேச்சுவரம் என்ற பெயர் இராசராசனின் பட்டப்பெயரை நினைவூட்டுகிறது.

இராசராசனின் 25-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு பராந்தகன் குந்தவைப் பிராட்டியார், குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயிலுக்கு ஒரு விளக்கு எரிப்பதற்கு ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது. சேனாபதி மும்முடி சோழ பிரம்ம மாராயன் என்பவன் இந்த கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வந்தான் என்பது தெரிகிறது. இவனே முதலாம் இராசராசனுக்கு சேனாதிபதியாகவும், பெருந்தனமாகவும் விளங்கியவன். இவன் சோழ மண்டலத்தில் ஒரு பிரிவான வேணாட்டில் அமைந்திருந்த, கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து அமண் குடியைச் சேர்ந்தவன். இவனே தஞ்சை பெருவுடையார் கோயில் திருச்சுற்று மாளிகையும் கட்டியுள்ளான். இவன் அரசனுக்கும், அரசாங்க நம்பிக்கைக்கும் பாத்திரமான பணியாளாக விளங்கினான். இவனுடைய முக்கியத்துவம் கருதியே இவனை இராசராசன் தன்னுடைய தமக்கையின் சமயப் பணிகளையும் கவனித்து வரும்படி செய்துள்ளான் என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

முதலாம் இராசேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டில் குந்தவை விண்ணகர ஆழ்வார் கோயிலுக்கு, குந்தவைப் பிராட்டியார் பத்து விளக்கு எரிப்பதற்குக் கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டில், கோயிலில் ஒரு விளக்கு எரிப்பதற்கு 5 பசுக்கள் கொடுத்தது குறிக்கப்படுகிறது. மற்றொரு கல்வெட்டு பெண் ஒருத்தி சில பாத்திரங்களைக் கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

## குந்தவை சினாலயம்

இராசராசனைப் போன்று, குந்தவைப் பிராட்டியாரும் எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையினை ஏற்று சைவ, வைணவ, சமண மதத்தை ஒன்றாகவே வளர்த்துள்ளார். இவர் எடுத்துள்ள மூன்று கோயில்களும் ஒரே காலத்தில் எடுக்கப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், ஒரே கண்ணோட்டத்தில் போற்றிப் பாதுகாக்கப் பட்டுள்ளது. இக்கோயிலுக்கும் பல்வேறு கொடைகள் அளிக்கப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. தென்னிந்திய வரலாற்றில் குறிப்பாக சோழர்கள் ஆட்சிக்காலத்தில் ‘மத சகிப்புத்தன்மை’ ஆட்சியாளர்களிடத்தில் இருந்திருக்கிறது என்பது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

கட்டட அமைப்பு மற்ற கோயில்களைப் போன்றே அமைந்து உள்ளது. சிவன், திருமால் கோயில்களில் நந்தி, கருடன் ஆகியவை விமானத்தை அலங்கரிக்கின்றன. சமணக் கோயில்களில் சிம்ம வேலைப்படுகள் அழகு செய்கின்றன.

## திருமலை - குந்தவை சினாலயம்

சமணர்களின் உறைவிடமான இந்த ஊர் சங்ககாலத்தில் வஞ்சியைச் சார்ந்த, எழினி என்று அழைக்கப்படுகின்ற ஒரு யவனிகர் ஆட்சியின் கீழ் இருந்தது என்பதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவன் இயக்கன், இயக்கியர் உருவங்களை எடுத்துள்ளான். இவன் காலத்தில் இந்த மலை குணவிரை திருமலை என்று வழங்கி யிருக்கிறது என்பது தெரிகிறது. தடுத்தலையைச் சார்ந்த இரண்டு நபர்கள் ஒரு பக்தனின் உணவுக்காகப் பொன் கொடுத்ததை முதலாம் பராந்தகனின் மூன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு குறிக்கிறது. கி.பி. 959-இல் இராட்டிகூட மன்னன் மூன்றாம் கிருட்டிணனின் பணியார் ஒருவர், திருமலையில் உள்ள ‘இயக்கனுக்கு’ ஒரு விளக்கு கொடை கொடுத்தது குறிக்கப்படுகிறது.

இராசராசனின் 21-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு 'குணவீர மாமுனிவன்' என்பவர் உள்ளூரில் அமைந்திருந்த நீர்த்தேக்கத்திற்கு ஒரு வாய்க்கால் கட்டி உள்ளதைக் குறிக்கிறது. இந்த வாய்க் காலுக்குச் 'சமண ஆசிரியர்' கணிசேகர மறு பொற்சூரியன் என்பவரின் பெயரில் இடப்பெற்றது.

முதலாம் இராசேந்திரனின், 12-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று இந்த புனித மலையின் மீதுள்ள கோயிலுக்குக் கொடை கொடுத்ததைக் குறிக்கிறது. இது குந்தவை சினாலயம் என்று குறிக்கப்படுகிறது. இந்த சமணக் கோயில் குந்தவை பிராட்டியாரால் அல்லது குந்தவைக்காக கட்டப் பெற்றதாகும்.

செயங்கொண்ட சோழ மண்டலத்தில், பங்கள நாட்டில் உள்ள ஒரு பிரிவான முகை நாட்டில் அமைந்திருந்த வைகாவூர் பள்ளிச் சந்தத்தில் உள்ள திரு குந்தவை சீனாலயத்திற்கு ஒரு திருநந்தா விளக்கினை கரைவரி மல்லியூர் என்ற பெரும் பாணப்பாடியைச் சார்ந்த, நன்நப்பையன் மனைவியான சாமுண்டைப்பை என்பவள் கொடையாக கொடுத்துள்ளது குறிக்கப்படுகிறது. ஒரு விளக்கு எரிக்க 20 காசும், திருவமுதுக்கு 10 காசும் அளிக்கப்பெற்றுள்ளதும் குறிக்கப்படுகிறது.

## குந்தவையின் பிற பணிகள்

முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்தில் குந்தவைப் பிராட்டியார் தன்னுடைய தந்தையின் பெயரில் 'சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலை' என்று ஒரு மருத்துவ மனை எடுத்துள்ளதைக் கல்வெட்டு குறிக்கிறது. இந்த ஆதுலர் சாலை தஞ்சையில் உள்ள சுந்தரசோழ விண்ணகர் என்ற பெருமாள் கோயிலில் அமைந்திருந்தது. இக்கோயில் இராசராசன் அல்லது குந்தவைப் பிராட்டியாரால் எடுக்கப் பெற்றிருக்க வேண்டும். இக்கோயில் தற்பொழுது தஞ்சையில் எங்குள்ளது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. மருத்துவமனைச் செலவுகளுக்காகத் தஞ்சை மாவட்டம், பாபநாசத்திற்கு அருகில் உள்ள பண்டாரவாடை என்ற ஊரில் நிலம் கொடுத்து, மருத்துவமனை கட்டுவதற்கு இடமும் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

நீர்பாசனத்திற்காகக் குந்தவைப் பிராட்டியார் தன்னுடைய பெயரில் குந்தவைப் பேரேரி என்ற ஏரியினையும் தன்னுடைய தந்தையின் பெயரில், சுந்தரசோழப்பேரேரி என்ற ஏரியினையும் வடஆற்காடு மாவட்டம், செய்யாற்றுக்கு அருகில் உள்ள பிரமதேசம் என்ற ஊரில் எடுத்துள்ளதைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

## துணை நூல் பட்டியல்


1. S.I.I. II No.6.
2. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள் முதற்பகுதி பக்கம் 2.
3. 119 of 1888
4. S.I.I. II , 2
5. S.I.I. II No.6.
6. lo 14 -17, 20,18,19,8,14,8, & 14 of 1919
7. S.I.I. I No.66.
8. S.I.I. I No.67.
9. 248, 249 of 1923.
10. 264 of 1915.


★★★

# தேவதானம்

**மா. செந்தில் செல்வக்குமரன்,** எம். ஏ.,

மாவட்டத் தொல்லியல் அலுவலர், திருநெல்வேலி.

கோயில்களின் திருப்பணிக்காகவும், நாடோறும் நடைபெறும் வழிபாட்டிற்காகவும், அரசர்களாலும், அதிகாரிகளாலும், மக்களாலும், நிலங்களும், ஊர்களும், பொன்னும் தானமாக வழங்கப்பட்டன. இவற்றுள் நிலத்தானம், வழங்கப்பெறும் கோயில்களுக்கு ஏற்ப, தேவதானம் என்றும், திருவிடையாட்டம் என்றும், பள்ளிச்சந்தம் என்றும் அழைக்கப்பட்டன. தேவதானம் என்ற சொல் பெரும் பான்மையான இடங்களில் சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடையைச் சுட்டி நிற்கிறது. சில இடங்களில் விஷ்ணு கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலத்தானத்தையும் தேவதானம் என்ற சொல்லாலேயே கல்வெட்டுகள் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. மாமல்லபுரத்திலுள்ள வராகப்பெருமானுக்கு அளிக்கப்பட்ட நிலத்தானம், தேவதானம் என்றே குறிக்கப்பட்டிருப்பதை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

சிவன் கோயில் உண்ணாழியில் வீற்றிருக்கும் மூல இறைவனின் பெயரிலேயே தேவதானம் வழங்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், சிவன் கோயிலின் வளாகத்தில் எழுந்தருளியிருக்கிற, தென்முகக் கடவுள், சேத்திரபாலர், பிள்ளையார், அம்மன் ஆகிய தெய்வங்களுக்கும் தேவதானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இறைவனுக்கு வழங்கப்பட்ட தானத்தைக் குறிக்க, அம்பலப்புறம், அவலமுதுப்புறம், அர்ச்சனா போகம், சீபலிபோகம் அல்லது சீபலிபட்டி, அர்த்தசாமப்புறம், திருவிழாப்புறம், நிமந்தப்புறம், பூஜாவிருத்தி, மெழுக்குப்புறம் என்று பல்வேறு பெயர்கள் உள்ளன. இருப்பினும், தேவதானம் இவற்றிலிருந்து மாறுபட்ட பொருளைத் தரும் சொல்லாக விளங்குகிறது. மேலே குறிப்பிட்ட சொற்கள் குறிப்பிட்ட ஒரு செயலுக்காக வழங்கப்பட்ட தானத்தைக் குறிக்கும்.

சொல்லிலேயே அது எச்செயல் நடைபெறுவதற்காக வழங்கப்பட்ட தானம் என வெளிப்படையாகத் தெரியும். 'சான்றாக அபிஷேகப்புறம்' என்பது இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்காக விடப்பட்ட நிலத்தை வெளிப்படையாகக் குறிக்கத் தன் பெயரிலேயே செயலையும் தாங்கி நிற்பதைக் காணலாம். ஆனால் தேவதானம் என்ற சொல் கோயிலில் ஒன்றுக்கும் மேற்பட்ட செயல்கள் நடைபெறுவதற்காகவும், கோயில் திருப்பணிக்காகவும், வழங்கப்பட்ட நிலத்தைக் குறிக்கக் கல்வெட்டுகளில் கையாளப்பட்டிருக்கிறது.

திருநாமத்துக் காணி என்பதும் கோயிலைச் சேர்ந்த நிலமாகும். திருநாமத்துக் காணியும், தேவதானமும் ஒரே பொருளைக் குறிக்கின்ற இருவேறு சொற்களோ என்று நம்மை ஐயுறச் செய்யும். திருநாமத்துக் காணி என்பது பலரிடமிருந்தோ, தனிப்பட்ட ஒருவரிடமிருந்தோ கோயில் நிர்வாகத்தால் விலை கொடுத்துப் பெற்ற நிலமாகும். ஆனால் தேவதானம் என்பது இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, கோயிலுக்காக எவ்வித விலையும் பெறாமல் மனமுவந்து வழங்கப்பெறும் நிலங்களாகும்.

### தேவதான நிலம்

அரசர்களோ, உயர் அதிகாரிகளோ, ஊர்ச்சபையோ தேவதானம் வழங்க நினைத்தால் ஊர் பொதுவாக உள்ள நிலங்களைத் தானமாக வழங்கிட முடியும். சிலர் அரசர்களிடமிருந்து நிலம் வேண்டிப் பெற்றுத் தான் விரும்பிய கோயிலுக்கு தேவதானம் வழங்குவதும் உண்டு தனிப்பட்டவர்கள், கோயிலுக்குத் தானம் வழங்க விரும்பின் தனக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லாத நிலையில் பிறரிடமிருந்து விலை கொடுத்துப் பெற்று அந்நிலங்களைத் தானமாக வழங்குவது உண்டு. அவ்வாறு வழங்கும்பொழுது தனிப்பட்டவர்களிடம் நிலம் கிடைக்காதபோது கோயிலுக்குச் சொந்தமான பயிரிடமுடியாத நிலையில் உள்ள நிலத்தைப் பெற்று பயிரிடும் நிலையில் திருத்தி வேறு ஒரு கோயிலுக்குத் தங்களுடைய தேவதானமாக வழங்குவர். அவ்வாறு வழங்கும் பொழுது தாம் விரும்பும் வழிபாட்டை அந்நிலம் கொண்டு செய்யச் சொல்வர்.

இது போன்ற ஒரு செய்தியினைத் திருப்பாத்துறையில் காணப்படும் கல்வெட்டொன்று நமக்குத் தருகிறது. திருப்பாத்துறை பெருமானடிகளுக்குக் காசு கொடுத்து அவ்விறைவனின் தேவதான

நிலத்தில் பயிரிடப்படாத நிலத்தைப் பெற்று அதைக் கல்லி, வயக்கி பயிரிடும் நிலமாக மாற்றி, கொடும்பாளூர் திருப்பூதீஸ்வரத்துப் பெருமானடிகளுக்கு இரவும் பகலும் ஒரு நொந்தா விளக்கெரிப் பதற்காகத் தானமாக வழங்கப்பட்டிருக்கிறது. பயிரிடப்படாத நிலமாக இருந்தமையால் தேவதான நிர்வாகத்தார் தேவதான நிலத்தை விற்றனர் போலும்.

பிரம்மதேயம் என்பது பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட கிராமம். இத்தானத்துள் அடங்கிய நிலத்தையும் அதற்கு உரிமையுடையவர்களாகிய பிராமணர்களிடமிருந்து விலை கொடுத்துப் பெற்றவையும் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்டிருப்பதைக் கல்வெட்டுகளின் மூலம் அறிய முடிகிறது. செம்பியன் இருக்கு வேளாயின பூதி பராந்தகன், ஈசான மங்கலத்து பிராமணனிடம் விலை கொடுத்து நிலம் பெற்று அந்நிலத்தை அந்தவ நல்லூர் திருவாலந்துறை பரமேசுவர சுவாமிக்குத் தேவதானமாக வழங்குகிறான்.

கோயிலைச் சேர்ந்த நிலம் இத்திருநாமத்துக் காணியிலிருந்து ஒரு பகுதி நிலத்தினை கோயிலுக்குத் தானமாகமாற்றி வழங்கலும் உண்டு. திருப்பாத்துறை உடையார்க்குத் தேவதானம் வழங்க விரும்பும் மன்னன், நன்நல்லூரில் இத்தேவர் திருநாமத்துக் காணியாக இருந்த நிலத்தில் இருபது வேலி நிலத்தைத் தேவதான இறையிலியாக வழங்கிவிடுகிறார்.

இதில் திருநாமத்துக்காணி தேவதானமாக மாற்றப் பட்டிருக்கிறது. கோயிலுக்குச் சார்ந்த நிலத்திற்கான விலையைக் கோயிலுக்குச் செலுத்திவிட்டு அந்நிலத்தைத் தானமாக வழங்கியிருந்தால் அதனைத் தேவதானம் எனலாம். ஆனால் இங்கு மன்னன் நிலத்திற்கேற்ப விலை எதுவும் கொடுத்ததாகக் கல்வெட்டில் கூறப்படவில்லை. எனினும் தேவதானமாகக் கொடுத்த நிலத்திற்கு வரிவிலக்கு அளித்திருக்கிறான். எனவே இந்த 20 வேலி நிலத்திற்கும் மன்னன் அளித்த வரிவிலக்கே இவன் இக்கோயிலுக்கு அளித்த தேவதானம் எனலாம்.

## தேவதானத்துள் தேவதானம்

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைத் தேவதானமாக வழங்காது, ஊர் முழுவதும் தேவதானமாக வழங்கப்படுதலும் உண்டு. இது போன்று

தேவதானங்களில் ஊர்ப் பொது நிலங்களும், வழங்கப்பட்ட தேவதான நிலத்தில் அமைந்துள்ள பிறகோயில்களும், கோயில் நிலங்களும், பிற தானங்களும் நீக்கி வழங்கப்படுதல் மரபு. ஒரு கோயிலின் தேவதானத்துள்ளே மற்றொரு கோயிலின் தேவதானம் அமைதலும் உண்டு. தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டில் தானத்துள் தானம் அமைந்த செய்தி காணப்படுகிறது:

> 'வடகரை நாட்டு இராசேந்திர சிங்க வளநாட்டு
> சின்னம்பூர் நாட்டுக் கருப்பூர் தேவதானமும்,
> சால போகமும் நீக்கி'

என்ற பிற தேவதானத்தையும், சாலா போகத்தையும், நீக்கி நின்ற நிலத்தைத் தேவதானமாக வழங்கியிருப்பதை இக்கோயில் கல்வெட்டு காட்டுகிறது.

மேலும் திருவண்ணாமலை கோயிலில் காணப்படும் மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு தேவதானத்துள் தேவதானம் அடங்கி யிருப்பதையும் அது நீக்கி மற்றொரு தேவதானம் வழங்கப்பட்டி ருப்பதையும் தெளிவுபடுத்துகிறது. திருவண்ணாமலை உடைய நாயனார்க்கத் திருக்காளத்தி தேவன் என்பவன் மடைப்பள்ளிப் புறமாகவும் சலமிகண்டன் சந்திக்காகவும், தேவதானம் வழங்குகிறான். இத்தேவதானத்துட்பட்ட உள்ளூர் தேவர் தேவதானம் நீக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது.

> 'இராசராச வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணைத்
> தென்கரை மீய்குன்ற நாட்டு சீற்றாம்பூர் நாற்பாற்
> கெல்லைக்குள்ளும் ஏந்தல் தாங்கல் உள்பட்ட நஞ்சை
> புஞ்சை நிலத்தில் உள்ளூர்த் தேவர்கள் தேவதான
> இறையிலி நீக்கி'

என்று உள்ளூர் தேவர் தேவதானம் நீக்கி கல்வெட்டிக் கொடுத்தி ருப்பதைக் கல்வெட்டு காட்டுகிறது.

### தேவதானத்துள் பிறதானங்கள்

தேவதானம் மற்ற தானங்களுடன் சேர்ந்து காணப்படுவது கல்வெட்டில் காணமுடிகிறது. தேவதானமாக வழங்கப்பட்ட ஊர்களில் ஒருபகுதி தேவதானமாகவும் மற்றொரு பகுதி பிறவகுப்பினர்க்குரிய வெள்ளான்வகை நிலங்களாகவும் இருந்துள்ளன. திருவிசலூர்,

திருவேதிகுடி, திரைமூர் போன்ற ஊர்கள் தேவதானமும் பிரம்மதேயமும் ஒன்றியிருந்த தேவதானப் பிரம்மதேயங்களாக இருந்தன என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

திருவண்ணாமலை கல்வெட்டு ஒன்று இதனைத் தெளிவுபடக் குறிப்பிடுகிறது. 'திருவண்ணா நாட்டு தேவதானம் பிரம்மதேயம் புலியூர் நாட்டு சதுர்வேதி மங்கலத்து' என்ற கல்வெட்டில் 'தேவதானப் பிரம்மதேயம்' என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

திருநெய்த்தானம், திருவிடந்தை ஆகிய ஊர்களில் ஒருபகுதி தேவதானமாகவும் மற்றொரு பகுதி வேளாண்வகை நிலமாகவும் கலந்து காணப்படுவதைக் கல்வெட்டுகள் காட்டியுள்ளன.

## பிரித்துப் புதுப்பெயர் வழங்கல்

தேவதானமாக வழங்கப்பட்ட நிலம் அதிகப் பரப்புடையதாகத் திகழுமாயின் அந்நிலம் ஏற்கனவே இணைந்து இருந்த கிராமத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, அதற்குப் புதுப்பெயரொன்றும் வழங்கப் படுதலுண்டு. இதிலிருந்து இது தேவதான ஊராகத் திகழும் இதற்கென்று தனிச் சபையும் அமைக்கப்பெறும். இதுபோன்று ஒரு நிகழ்ச்சி குலோத்துங்கன் காலத்தில் நடைபெற்றிருக்கிறது. முதற் குலேத்துங்கன் காஞ்சியில் முகாமிட்டிருக்கும் பொழுது வாண கோவரையன் சுத்தமல்லன் முடிகொண்டான் என்பவன் மன்னவரிடம் ஒப்புருவமில்லா மகாதேவர்க்குத் தானம் வழங்கக் கேட்டுக் கொள்கிறான். அவனின் வேண்டுகோளுக்கிணங்கி, இரதம் புத்தூர் என்ற ஊரிலிருந்து ஒரு பகுதியினைப் பிரித்து, அப்புதுப் பிரிவுக்கு வீரசோழநல்லூர் என்று பெயரிட்டுத் தேவதானமாக வழங்க ஆணையும் பிறப்பித்திருப்பதை அரகண்ட நல்லூர் கல்வெட்டில் காணமுடிகிறது.

திருமழபாடியில் காணப்படும் மூன்றாம் குலோத்துங்கனின் 32-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலிருந்து பல ஊர்கள் பிரித்துப் புதுப்பெயரிடப்பட்டுத் தானமாக வழங்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

'இவ்வூர் தென்பிடாகை கோதண்டராமநல்லூரில்
இந்நாயனார் தேவதானமாய் பிரிந்த எதிரிலிச்

சோழமங்கலத்திலும், குலோத்துங்கச் சோழ
மங்கலத்திலும்'
'நாடறிபுகழ் நல்லூர் பிறின்த இந்நாயனார்
தேவதானம் நித்த விநோத மங்கலத்து'

என்ற கல்வெட்டு வரிகள் பிரித்துப் புதுப் பெயரிடப்பெற்று வழங்கியதைப் 'பிரின்த' என்ற சொல்லால் காட்டித் தெளிவு படுத்துகின்றன.

இவ்வாறு பிரித்துப் புதுப்பெயரிட்டது தவிர ஏற்கனவே வழங்கி வந்த பெயரை மாற்றிப் புதுப்பெயருடன் அவ்வூரினைத் தேவதானமாக வழங்கி வந்ததையும் காணமுடிகிறது. விக்கிரமச் சோழன் தனது 7-ஆம் ஆட்சி ஆண்டில் திருவிடைமருதூருக்குச் சென்ற பொழுது அந்த நகரைச் சார்ந்த கண்ணக்குடி என்ற பெயரை 'தியாக சமுத்திர சதுர்வேதி மங்கலம்' எனப்பெயர் மாற்றித் திருவிடைமருதூர்க் கோயிலுக்குத் தேவதானமாக அளித்தான் என்று திருவிடைமருதூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது.

## தானத்துக்குப் பொறுப்பு

தேவதானமாக வழங்கப்பட்ட நிலங்களுக்கு அந்தந்த கோயில் அதிகாரிகளே பொறுப்பாக இருந்து அவற்றின் வருமானத்தையும் செலவினையும் மேற்பார்வையிட்டு வந்தனர். இவர்களிடமே தேவதானம் ஒப்படைக்கப்பட்டது. இக்கோயில் அதிகாரிகளுக்கு மேலாக ஊர்ச்சபையும், அரசாங்கமும் இத்தேவதானங்களை விழிப்புடன் கவனித்து வந்திருக்கின்றன.

"தேவகன்மிக்கும் ஸ்ரீமாகேஸ்வர கண்காணி செய்வார்[9]களுக்கும்
ஸ்ரீகாரிய செல்வர்களுக்கும்
இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கும் இறுப்பதாக
உத்தராயணத்துத் தேவதான இறையிலியாக இட நாம்
நீர்வார்த்த நிலத்துக்கு"

என்ற கல்வெட்டு வரிகளிலிருந்து தேவதான நிலம் தேவகன்மி, மாகேஸ்வர கண்காணி, ஸ்ரீகாரியம் செய்வார் ஆகிய மூன்று கோயில் அதிகாரிகளிடமே நீர்வார்த்து கொடுக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் தேவதான நிலத்தினைப் பராமரித்து அதிலிருந்து கோயிலுக்கு வேண்டியவற்றைச் செய்வதற்கு இவர்களே பொறுப்பாக இருந்தார்கள் என்றும் தெரியவருகிறது. இவர்கள்

வேண்டும் பொழுது கோயில் தானத்தை விற்கவும், பயிரிடப்படாத தரிசு நிலங்களைப் பிறருக்கு வழங்கி பயிரிடச் செய்யவும் உரிமை உள்ளவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

மூன்றாம் குலோத்துங்கனின் 20-ஆம் ஆட்சி ஆண்டில் திருவண்ணாமலை உடையான் தேவதானத்துப் பயிரிட முடியாமல் கிடந்த நிலத்தைத் திருத்திப் பயிரிடல் வேண்டி சத்தியவாசகரான தன்ம வாணியர்கள் கோயில் பண்டாரத்து 500 காசு செலுத்தி பெற்றுத் திருத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் 1000 குழி நிலம் திருத்தப்பட்டிருக்கிறது. இந்நிலம் மூன்று திருநாள்களில் சோறிடு வதற்காகத் திருப்பி வழங்கப்பட்டிருக்கிறது.

தேவதான நிலத்தைக் கோயில் நிர்வாகம் தானே முன்னின்று பயிரிடவோ அல்லது பிறருக்குப் பயிரிடுவதற்கு வழங்கி அதன் வரவை மட்டும் பெற்றுக்கொள்வதோ உண்டு. முதலாம் இராசராசன் காலத்தில் சுசீந்திரம் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட நிலம் இரண்டாக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் ஒரு பகுதி தனிப் பட்டவரிடம் ஒப்படைக்கப்பட்டுக் காணிக்கடன் பெறப்பட்டிருக்கிறது. ஒரு மா நிலத்திற்கு 3 கலம் முதல் 3 கலம் ஒரு தூணி வரை காணிக் கடன் நெல்லாக குத்தகைதாரரால் பண்டாரத்தில் அளக்க உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மற்றொரு பகுதியினைத் தேவகன்மிகள் மேற்பார்வையிட்டு வந்தனர் என்று தெரிகிறது.

### தேவதானத்தைத் தேவதானமாக்கல்

ஒரு கோயிலைச் சேர்ந்த தேவதான நிலம் பிரிதொரு கோயிலுக்குத் தேவதானமாகக் கோயில் அதிகாரிகளால் வழங்கப்பட்டிருப்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. திருவண்ணாமலை உடைய நாயனார் தேவதானமான செங்குன்ற நாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் சில நிலம் திருத்தப் படுகிறது. அவ்வாறு திருத்தப்பட்ட நிலத்து எல்லைக்குள் மற்றொரு சிவன் கோயில் அமைந்திருக்கிறது. இச்சிவன் கோயிலில் எழுந்தருளியிருக்கிற மெய்கண்டீஸ்வரமுடைய நாயனார்க்குத் திருவண்ணாமலை உடைய நாயனார் தேவதானம் இராசராச நல்லூரில் திருத்தப்பட்ட நிலத்தில் மூன்றில் ஒரு பங்கினை வழிபாட்டிற்கும், அமுதுபடிக்குமாக தேவதானமாக வழங்கப் பட்டிருக்கிறது.

## குடிநீங்கிய குடிநீங்கா தேவதானங்கள்

ஊர்களையும், நிலங்களையும் தேவதானமாக வழங்கும் போது அதில் ஏற்கனவே இருந்து வருகிற குடிகள் பற்றிய பிரச்சனைகள் எழுவது இயல்பு. ஏற்கனவே இருக்கும் குடிகளை நீக்கி அளிப்பதா அல்லது குடிகளோடு சேர்த்து நிலத்தைத் தானமாக வழங்குவதா என்பது தேவதானம் வழங்கும்பொழுதே வழங்குவோரால் முடிவு செய்யப்பட்டு, வழங்கப்படுகிறது. குடிகளை நீக்கி வழங்கினால் அது 'குடி நீங்கிய தேவதானம்' என்றும், குடிகளை நீக்காமல் வழங்கினால் அது 'குடி நீங்கா தேவதானம்' என்றும் அழைக்கப்பட்டன. குடிகளை நீக்கி வழங்கினால் தேவதானம் பெறும் கோயிலுக்கு மேல்வாரம், கீழ்வாரம் என்று சொல்லப்பட்ட இரண்டு வருவாய்களும் கிட்டும். ஆனால் குடிநீங்கா தேவதானத்தில் மேல்வாரம் மட்டுமே கோயிலால் அனுபவிக்க முடியும்.

திருத்துறைப்பூண்டியில் உள்ள மூன்றாம் இராசேந்திரனின் கல்வெட்டில் தேவதான குடிமக்கள் பற்றிய தெளிவான குறிப்பு வருகிறது:

"உடையார் திருவுசாத்தான முடையார்
கோயில் தேவதானக் குடிமக்களோம்"

என்ற கல்வெட்டு தேவதானத்தில் வாழும் குடிகளைத் தேவதானக் குடிமக்கள் என்று அழைக்கும் வழக்கம் இருந்ததைத் தெளிவு படுத்துகிறது.

குடிநீங்கா தேவதானமாக வழங்கப்பட்டால், அக்குடிகள் கோயிலுக்கு அளக்கவேண்டிய நெல்லின் அளவு தானம் வழங்கும் பொழுதே உறுதி செய்யப்பட்டு, கல்வெட்டு வெட்டப்படுகிறது. இவ்வாறு குடிகள் கோயிலுக்கு அளக்கவேண்டிய நெல்லு காணிக்கடன் என்று அழைக்கப்பட்டது.

அண்டநல்லூர் வைத்தியநாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் மன்னன் ஆணைப்படி குடி நீங்கா தேவதானம் வழங்கப்பட்டதாக உள்ளது. குடிகள் காணிக் கடனாக அளக்க வேண்டிய நெல்லின் அளவும் உடன் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னனிடமிருந்து வந்த ஆணையில் அது "தேவதானக் காணிக் கடமை"யாக வழங்கப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"பரகேசரி அருளுப்பாட்டால் அரையன் வீரசோழனுக்கு
குடிநீங்கா தேவதானக் காணிக் கடமையாகச் செய்து
கொடுக்க என்று செம்பியன் இருக்கு வேளானுக்குத் திருமுகம் வர"

இதில் அரையன் வீரசோழன் என்பவனுக்குக் குடிநீங்கா தேவதானமாக வழங்க வேண்டும் என்று, ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரைக் கூறி அவனுக்கே வழங்கவேண்டும் என்று ஆணை வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குடி நீக்காமல் தேவதானமாக வழங்குவது "குடிநீங்கா தேவதானக் காணிக் கடமை" என்று அழைக்கப்பட்டது என்பதும் இதன் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறு குடி நீக்காமல் அளிக்கும் தேவதானத்தைச் சேர்ந்த சில குடிகள் தங்களுக்குரிய காணிக் கடமையை அதே கோயிலுக்குத் தேவதானமாக வழங்கி விடுவதும் உண்டு. நெற்குப்பையைச் சேர்ந்த திருமுதுகுன்றமுடைய நாயனார் தேவதானக் குடிகள் தாங்கள் உத்தம சோழன் காலத்தில் பெற்ற தேவதானக் காணிக் கடமையை முதலாம் இராசராசன் ஆட்சியின் பொழுது திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கே தேவதானமாக வழங்கிவிடுகின்றனர். அத்தானம் கொண்டு முதுகுன்றமுடைய நாயனார்க்குச் சந்தனமும் குங்கிலியமும் வழங்கக் கேட்டுக்கொள்கின்றனர்.

தேவதானக் குடிகள் தாங்கள் அனுபவித்து வரும் நிலத்திற் காகச் செலுத்தி வரும் காணிக் கடன் அதிகமாக உள்ளது என்று முறையிட்டாலோ அல்லது ஆய்வின்பொழுது தெரியவந்தாலோ காணிக்கடன் குறைத்து நிர்ணயம் செய்யப்பட்ட செய்திகளைக் காண முடிகிறது.

இரண்டாம் ஆதித்தன் கல்வெட்டு ஒன்று கோயிலின் வரவு செலவுக்கணக்கு, தணிக்கை அதிகாரியின் ஆய்வுக்கு வைக்கப் பட்டதையும், அவ்வாய்வின் பொழுது காணிக்கடன் பெறுவதில் தவறு நிகழ்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையும் வெளிப்படுத்துகிறது. 250 கலம் நெல் அளக்க வேண்டிய இடத்தில் 160 கலம் மட்டுமே அளக்கப்பட்டு வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற காலங்களில் குடிகளை மாற்றி அமைக்கவோ அல்லது விடுபட்ட நெல்லை ஏற்கனவே உள்ள குடியைக்கொண்டு பண்டாரத்தில் செலுத்தப் பண்ணுவதோ செய்யப்பட்டிருக்கிறது.

### வரிகளோடு வழங்கல்

கோயிலுக்குத் தானமாக ஊர்களை வழங்கும்பொழுது நான்கு எல்லையிலும் கோயிலைச் சார்ந்த இறைவன் சின்னம் பொறித்த கற்களை நாட்டி அந்நான்கு எல்லைக்குட்பட்ட அனைத்து நிலத்தையும் கோயிலுக்கு வழங்குவதோடு அவ்வூரில் உள்ள அனைத்து வரிகளின் மூலம் ஏற்படும் வருவாயினையும் சேர்த்துத் தேவதானமாக வழங்குவது உண்டு. காளகத்தியில் உள்ள கைலாச நாதர் கோயிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்று இச்செய்தியினைத் தருகிறது.

நரசிங்கன் திருக்காளத்தி தேவனான யாதவராயன் திருக்காளத்தி உடையார்க்கு வைகாசித் திருநாள் கண்டு அது தொடர்ந்து நடைபெறுவதற்காக வெண்ணைநல்லூர் என்ற ஊரினையும் அவ்வூரின் வரிகளையும் சேர்த்துத் தானமாக வழங்கியிருக்கிறான்:

> "திருக்காளத்தி உடையார்க்கு வைகாசித் திருநாள் கண்டு
> இத்திருநாள் சந்திராதித்தவரை முட்டாமல் எழுந்தருளு
> வதற்காக
> ஜயங்கொண்ட சோழமண்டலத்தில் திருவேங்கடக் கோட்டத்து
> கருப்பற்றுனாட்டு வெண்ணை நல்லூர் தட்டார் பாட்டம்
> தறிஇறை வெட்டி முட்டையாள் படிக்காக காணிக்கை கன்மீயபேறு
> மற்றும் எப்பேர்ப்பட்ட வரிகளும் அகப்பட தேவதானமாக
> விட்டேன் நரசிங்கன் திருக்காளத்தி தேவனான யாதவராஜன்"

என்று எப்பேர்ப்பட்ட வரிகளும் அகப்படக்கொடுத்தது பற்றிக் கூறுகிறது.

### பழந்தேவதானம்

ஏற்கனவே அக்கோயிலுக்கு வழங்கப்பட்ட தேவதானத்தைக் குறிப்பிட்டுச் சொல்லும் பொழுது 'பழந்தேவதானம்' 'முன் தேவதானம்' என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு காலத்தில் வழங்கப்பட்ட தேவதானத்தைப் புதுப்பித்து மீண்டும் வழங்குவதும், பழைய தேவதானத்தோடு மேலும் நிலங்களைச் சேர்த்து வழங்கும் செயலும் காணப்படுகின்றன. வேண் மங்கலம் என்ற ஊர் பழந்தேவதானமாக இருந்தபடியால் புதுப்பித்து வழங்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது:

'வேள் மங்கலத்து ஊரார்க்குத் தங்களூர் திருவீரட்டானேஸ்வர முடைய நாயனார்க்குப் பழந்தேவதானமான படியினாலே அஞ்சாவது தைமாதம் முதல் தேவதானமாகக் கொடுத்தோம்'

திருப்பாத்துறை நாயனார்க்குத் தேவதானமாக நிலம் கொடுத்து அதன் எல்லை குறிப்பிடும் பொழுது முன் தேவதானம் என்ற ஒரு சொல் கையாளப்பட்டிருக்கிறது:

'முன்தேவதானமான நத்தத்திற்கு மேற்கு'

என்று குறிப்பிடப்படுகிறது.

## இறையிலி தேவதானம்

தேவதான நிலங்களுக்கு அரசாங்கத்திடமிருந்தும், ஊர்ச் சபையிடமிருந்தும் வரிவிலக்குப் பெறுவது இறையிலியாகும். இந்த வரி நீக்கம் 1. இறையிலி, 2. ஊர்க் கீழ் இறையிலி, 3. இறை காவல் என்ற மூன்று வகையாகச் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இவற்றுள் இறையிலி என்பது அரசன் தான் வழங்கும் நிலங்களுக்கும், தன்னிடம் வந்து பிறர் முறையிடும் பொழுதும் செய்து கொடுக்கும் வரிவிலக்கு ஆகும். 'ஊர்க் கீழ் இறையிலி' என்பது கோயிலுக்குப் பதிலாக ஊரார் தேவதான நிலங்களுக்கான வரியை அரசாங்கத் திற்குச் செலுத்திவருவதாகும். 'இறை காவல்' என்பது ஒருவரிட மிருந்து வரி செலுத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையினைப் பெற்று அதனை முதலாகக் கொண்டு அரசுக்கு வரியை ஊர்ச்சபை செலுத்துவதாகும். வழங்கப்படும் பொழுதே தேவதானம் அதனை இறையிலி தேவதானமாக வழங்கி விடுவதுமுண்டு. தேவதானம் வழங்கி சிறிது காலத்திற்குப் பின்பு அதற்கு வரியில் இருந்து விலக்கு அளித்து இறையிலியாகச் செய்து கொடுப்பதும் உண்டு.

மூன்றாம் இராசராசனின் காலத்தில் சிங்கண தண்ணாயக்கன் என்பவன் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு நிலம் வழங்கும் பொழுதே அதனை இறையிலி தேவதானமாக வழங்கிவிடுகிறான்.

"உடையார் திருவண்ணாமலை உடைய நாயனார்க்கு தேவதான இறையிலியாக விட்டேன் சிங்கண தண்ணாயக்கனேன்"

என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

ஒரு காலத்தில் ஒரு மன்னனால் வழங்கப்பட்ட தானத்திற்கு அவனுக்கு பின் வரும் மன்னனால் வரி நீக்கம் அளிக்கப் பட்டிருக்கிறது. பராந்தகனின் 12-ஆம் ஆட்சி ஆண்டில் திருவலஞ்சுழி மஹாதேவர்க்கு மூன்று வேலி நிலம் தேவதானமாக வழங்கப் பட்டிருக்கிறது. இத்தேவதானத்தை முதலாம் இராசராசன் இறை யிலியாகச் செய்து கொடுத்துள்ளான். தன்னுடைய 21-ஆம் ஆட்சியாண்டில் திருக்காலி வல்லத்தில் தென்பக்கத்துக் கோயிலில் மாளிகை மேலை கல்லூரியில் எழுந்தருளியிருந்த போது இதனை இறையிலியாகச் செய்து கொடுத்துள்ளான்:

"இத்தேவர்க்கு நீக்கி இறைகட்டின நெல்லு முன்னூற்றெழுபத்
தைங்கலனே இருதூணி முக்குறுணி இத்தேவர்க்கு வேண்டும்
நிவந்
தங்களுக்கு இறுப்பதாக யாண்டு இருபத்தொன்றாவது முதல்
தேவதான இறையிலியாக வரியிலிட்டுக் குடுக்க வென்று"

என்று வரிவிலக்கு அளித்ததோடு இதவரை அரசுக்குச் செலுத்தி வந்த வரியினைக் கோயில் காரியங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இராசராசன் ஆணை பிறப்பித்துள்ளான்.

இராசராசன் தன் மனைவி தந்திசத்திவிடங்கி வழங்கிய தேவதானத்திற்கு வரிவிலக்கு அளித்துள்ள செய்தியை மற்றொரு கல்வெட்டில் காணமுடிகிறது. தந்திசத்திவிடங்கி சேத்திரபாலருக்கும் கணபதியாருக்கும் கோயில் எடுத்திட்டு அதற்கு இராசராசனின் 16-ஆம் ஆட்சி ஆண்டில் தேவதானம் வழங்கியுள்ளார். இதனை இராசராசன் தன்னுடைய 24 -ஆம் ஆட்சி ஆண்டில் இறையிலி தேவ தானமாகச் செய்து கொடுத்துள்ளான். இதுவரை செலுத்தி வந்த இறைகட்டின நெல்லை தேவர்க்கு வேண்டும் பல பணி நிமந்தக் காரர்களுக்கு வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளான்.

குலோத்துங்கனின் 4 -ஆம் ஆட்சி ஆண்டில் செயங்கொண்ட சோழ நல்லூர் புற்றிடங்கொண்டருளிய மஹாதேர்க்கும், திருப்பள்ளியறை நாச்சியார்க்கும் நிலம் வழங்கும் பொழுது ஊராரே அதற்குரிய வரி செலுத்துவதாக ஏற்று அந்நிலம் தேவதான இறையிலியாகக் கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

"இந்நிலத்தால் வந்த இறையும் ஆளும் அமஞ்சியும் எப்பேர்
பட்ட சில்வரியும் ஊரிலே ஏற்றி நாங்களே இறுத்துக் குடுக்கக்
கடவோம் இப்படிச் சம்மதித்து இறையிழித்து"

என்ற கல்வெட்டு ஊர் வரியினை ஏற்று இறையிழித்து வழங்கிய செய்தியைத் தருகிறது.

தேவதானத்திற்கு வரி செலுத்துவதற்கான ஒரு வைப்புத் தொகையினை யாராவது ஒருவர் முன் வந்து செலுத்த விரும்பினால் அதற்கான தொகையினை ஊர்ச் சபை உறுதி செய்கிறது. இவ்வாறு இறைகாவல் பெற்ற நிகழ்ச்சி சுந்தரச் சோழன் கல்வெட்டு ஒன்றில் காணமுடிகிறது. பொய்கைக்குடி சபையார் தேவதானத்திற்கு இறைகாவல் அணுக்கப்பல்லவரையன் என்பவனிடமிருந்து பெற்று, இறையிலிக்கு வழங்கினார்கள்.

"இப்பொய்கைக் குடி சபையோம் எங்களிலிசைந்த பொன்
. . . . அணுக்கப்பல்லவரையரிடை கைச்செலக்கொண்டு இறை
யிழிச்சிக் கொடுத்தோம் பொய்கைக்குடி சபையோம்"

என்ற இறை காவல் பற்றிய செய்தியினைத் தருகிறது.

தேவதானத்திற்கு இறை நீக்கிக் கொடுப்பது உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு உரிய அதிகாரிகள் அச்செய்தியினைப் பெற்றவுடன் கல்வெட்டில் குறிப்பிட்ட ஆண்டு முதல் தேவதானம், தேவதான இறையிலியாகக் கருதப்பட்டு இறை பெறுவது நிறுத்தப்படும். திருப்பாத்துறை திருநாகேஸ்வர சுவாமி கல்வெட்டில்,

"தேவதான இறையிலியாக இடக்கடவதாகச் சொல்லி இப்படி
கணக்கிலும் இட்டுக்கொள்ள வரிக்கூறு செய்வார்களுக்கும்
சொன்னோம்"

என்று முறையாக வரிவிலக்கு அளிக்கப்பட்ட செய்தி வரிக்கூறு செய்யும் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதைக் கூறுகிறது.

இவ்வாறு சோழர்காலக் கல்வெட்டுகளில் தேவதானம் பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. தேவதானம் வழங்கப்பட்டதோடு அவை எவ்வாறு முறைப்படுத்தப்பட்டு, சரியான முறையில் பயன்படுத்தப்பட்டன என்றும் சோழர் காலக் கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகின்றன.

## துணை நூல் பட்டியல்

1. S.I.I. vol. IV No.378.
2. S.I.I. vol. IV No.381.
3. S.I.I. vol. VIII No.555.
4. S.I.I. vol. VIII No.592.
5. S.I.I. vol. VIII No.85.
6. S.I.I. vol. VIII No.65.
7. A.R.E. 184/1934-35.
8. S.I.I. vol. V No.532.
9. S.I.I. vol. VIII No.592.
10. 264 of 1915.S.I.I. vol. VIII No.138.
11. S.I.I. vol. VIII No.74.
12. திருத்துறைப் பூண்டி கல்வெட்டுகள் எண்: 94.
13. S.I.I. vol. VIII No.668.
14. S.I.I. vol. XIII No.52
15. S.I.I. vol. VIII No.379.
16. S.I.I. vol. VIII No.326.
17. S.I.I. vol. VIII No.587.
18. S.I.I. vol. VIII No.88.
19. S.I.I. vol. VIII No.222.
20. S.I.I. vol. VIII No.89
21. S.I.I. vol. VIII No.592.

★★★

# சோழர் காலக் குற்றங்களும், விசாரணைகளும்

**இல. தியாகராசன்**
வரலாற்று உதவிப் பேராசிரியர்
அரசினர் கலைக்கல்லூரி, அரியலூர்

அரசுக்கு வரி செலுத்தாமல் ஏமாற்றுவது, பொது நிறுவனங்களின் சொத்துக்களை முறையற்ற முறையில் அனுபவிப்பது, லஞ்சம் வாங்குதல், கோயில்களின் செல்வங்கள் மற்றும் அறநிறுவனங்களில் உள்ள பணத்தைக் கையாடல் போன்ற முறைகேடான செயல்கள் இக்காலத்தில் மட்டுமின்றி தொன்றுதொட்டே வழக்கில் இருந்து வந்துள்ளது. இவற்றை அவ்வப்போது அரசும், குடிமக்களே இது பற்றி அரசுக்கு தெரிவித்தும், குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டித்த முறைகள் போன்றவை ஏராளமாகச் சோழர் கால வரலாற்றுக் குறிப்புகளில் காணக் கிடக்கின்றன. அவைகளைப் பற்றி இக்கட்டுரை ஆராயமுற்படுகிறது.

சோழர்களின் ஆட்சிக்காலத்தில் அரசுத்துறை மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. பல்வேறு வகையான அதிகாரிகள். ஊர்கள், நகரங்கள் சபைகள், கோயில்கள் ஆகிய அமைப்புகளை நிர்வாகம் செய்து சட்டம், ஒழுங்கு, தர்மநெறி முறைகள் ஆகியவற்றை நிலைநாட்டினர். இருப்பினும் ஆங்காங்கே ஊழல்களும் முறைகேடு களும் நிகழ்ந்துள்ளன என்பது கல்வெட்டுகளால் அறியப்படும் செய்தி.

## வகைகள்

இத்தகைய குற்றங்கள் அனைத்தையும் தொகுத்து நோக்கினால் அவற்றின் பொதுவான தன்மைகளைக் கொண்டு கீழ்க்கண்ட வகைகளில் பிரித்தறியலாம்.

1. அரசின் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் கணக்கு காட்டாமல் இருத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து பிறர் சொத்துக்களை அபகரித்தல். கையூட்டு பெறுதல், அரசுக்கு வரி செலுத்தாமல் நிலங்களை அனுபவித்தல், தம் கடமையை செய்யாமல் ஏமாற்றுதல்.
2. கோயில் அலுவலர்கள் கோயில் வழிபாட்டுக்கென வைத்த நிவந்தங்களைச் சரிவர செய்யாமல் தாமே அனுபவித்தல்.
3. கோயில் செல்வங்களைத் திருடுதல், அதை ஒழுக்கக் கேடான காரியங்களுக்குப் பயன்படுத்துதல் போன்ற வகைகளில் பிரிக்கலாம்.

### காலங்கள்

இத்தகைய முறைகேடுகளைப் பற்றிய செய்திகள் நமக்கு முதற்பராந்தக சோழன், உத்தம சோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், அதிராசேந்திரக் மூன்றாம் இராசராச சோழன் ஆகியோர் காலங்களில் கிடைக்கின்றன.

### யார் யார்?

இத்தகைய குற்றங்களைப் புரிந்தோர்கள் யாவர் என நோக்கும்போதும், கிடைக்கின்ற கல்வெட்டுகளில் அதிக அளவு முறைகேடுகளைப் புரிந்தவர்களாக,

1. நிறைந்த உரிமைகளும், அதிகாரங்களும் தன்னாட்சி அந்தஸ்தும் பெற்ற தேவதான, பிரம்மதேய சதுர்வேதி மங்கலங்களை நிர்வகிக்கும் பிராமணர்கள்.
2. கோயில் வழிபாடுகளை நடத்தி சமயத்தை வளர்க்கும் சிவ பிராமணர்கள், தேவகன்மிகள்

போன்ற அலுவலர்களாகவே உள்ளனர்.

### ஊழல்களைத் தடுக்க விதிமுறைகள் செய்தமை

முதற் பராந்தக சோழன் காலத்தில் ஊர்ச் சபைகள் எவ்வாறு குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கின என்பதை அவனது 19ஆவது, 21ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதல் கல்வெட்டு ஊர்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் இன்னின்ன தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும் என்று தெளிவாக கூறுகிறது. ஆனால் 3

ஆண்டுகட்கு பிறகு அதே ஊரில் நடக்கும் சபை தேர்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் தகுதிகள், விதிமுறைகள் முதலியன முழுதும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அவ்விதி முறைகளின் சீரிய, கடுமையான தன்மைகளை நோக்கும் போது, எந்த அளவுக்கு முந்தைய கால நிர்வாகத்தில் உறுப்பினர்கள் ஊழல்கள் புரிந்திருக்க வேண்டும் என்றும், அதனால் அரசனே ஆணையிட்டு அதனை தடுக்கும் விதிமுறைகளை வகுத்து செயல்படுத்தினான் என்பதும் நன்கு விளங்கும்.

யார்யார் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என்பதற் கான விதிமுறைகளை கூறும் கல்வெட்டுப் பகுதி :

1. வாரியங்கள் செய்து கணக்கு காட்டாது இருந்தாரையும் (இவர்கள் உறவின்முறையார் அனைவரையும்) குடவோலை எழுதிப் புகவிடாததாகவும்,.
2. பரத்ரவியம் (பிறர் செல்வங்களை) அபகரித்தானையும் குடவோலை எழுதிப் புகவிடப் பெறாததாகவும்,
3. எப்பேர்ப்பட்ட கையூட்டுங் கொண்டான் கருதப் பிராயசித்தஞ் செய்து சுத்தரானாரையும் அவ்வவர் ப்ராணயாந்திகம் (உயிர் உள்ளவரை) வாரியத்துக்கு குடவோலையெழுதிப் புகவிடப் பெறாததாகவும்,
4. வாரியஞ் செய்யாநின்றாரை அபராதங் கண்டபோது அவனை ஒழித்து விடுவதாகவும்

என்று இப்படி கடுமையான விதிமுறைகளை வகுத்து நடத்தப்பட்ட இரண்டாவது தேர்தலின்போது முறைகேடுகளை ஒழிக்க முயன்றமை தெளிவாகிறது. இந்த விதிகளை ஊன்றிக் கவனித்தால் செய்யப்பட்ட குற்றங்களின் தன்மையும், அளவும் தெற்றென விளங்கும்.

இதனை அரசன் கண்டறிந்து விதிகளை மாற்றி ஆணையிட்டு அதனை அவன் கீழ் இருந்த அதிகாரி தானே நேரடியாகச் சென்று விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு தேர்தல் நடக்கிறதா என்று மேற்பார்வையிடச் சென்று தேர்தலை நடத்தியதாகவும் அறிகிறோம். மேலும் இவை இவ்வூரில் உள்ள தீயவர்களை ஒழித்து நல்லாட்சி ஏற்படச் செய்ததாகவும் கல்வெட்டுக் கூறுகிறது :

" . . . . தேவேந்திரன் சக்கரவர்த்தி பண்டிதவத்சலன்
குஞ்சரமல்லன் சூரசூளாமணி கல்பக சரிதை
ஸ்ரீ பரகேசரி பன்மர்கள் ஸ்ரீ முகம் அருளிச்
செய்து வரக்காட்ட ஸ்ரீ ஆக்ஞையால்
சொழநாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீவங்க
நகர்க் கரஞ்சை தொண்டயக்ரமவித்தபட்
டனாகிய சொமாசி பெருமானுடன் இருந்து
இப்பரிசு செய்விக்க நம் கிராமத்துக்கு
அப்யுதமாக துஷ்டர் கெட்டு விசிஷ்டர்
வர்த்திப்பதாக வியவஸ்தை செய்தோம்
உத்தர மேரு சதுர்வேதி மங்கலத்துச்
சபையோம் . . . . ."

என்று கூறுவதால் அறியலாம்.

## வரி ஏய்ப்புச் செய்தமை

அடுத்தது, அரசுக்குச் சேர வேண்டிய வரியைச் செலுத்தாமல் வரி ஏய்ப்புச் செய்தல், வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம் திருமால்புரம் என்னும் ஊரில் சோழனுடையதாக கருதப்படும் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இத்தகைய வரி ஏய்ப்புச் செய்த முறைகேட்டைச் சொல்கிறது. ஏறக்குறைய நூறு வரிக்கு மேல் உள்ள இக்கல்வெட்டு மிகத் தெளிவான முறையில் இவ்வரி ஏய்ப்பு நடந்த விதங்களைக் கூறுகிறது.

இதன்படி இந்த வரி ஏய்ப்பு முதலாம் ஆதித்த சோழனின் 22-ஆவது ஆண்டிலிருந்து (அதாவது கி.பி. 893) உத்தம சோழனின் 4-ஆவது ஆண்டு வரை (அதாவது கி.பி. 974) ஏறக்குறைய 82 ஆண்டுகள் நடந்துள்ளது.

அதாவது திருமாற்புரத்து கோயில் வழிபாட்டுக்காகப் புரவு நெல் 3,000 காடியும் இரவு நெல் 561 காடியும் பொன்னாக 200 கழஞ்சும், இறையாக தரப்பட வேண்டிய சிற்றியாற்றூர் என்ற ஊர் கொடையாக அளிக்கப்பட்டது. இந்த ஊர் நிலங்களில் சங்கப் பாடிகிழான் என்பவனின் நிலம் மட்டும் நீக்கி விட்டு பிற நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன.

இந்த ஊரை ஏற்று மேற்சொன்ன அளவு இறை செலுத்தும் பொறுப்பைப் பிரம்மதேயம் புதுப்பாக்கத்துச் சபையார் ஏற்றுக் கொண்டனர்.

இது தொண்டைமானாற்றூர் துஞ்சினதேவரின் (முதல் ஆதித்த சோழன்) 21-ஆவது ஆண்டில் கொடுக்கப்பட்டு 22-ஆவது ஆண்டில் சாசனமும் செய்யப்பட்டது.

ஆனால் இதுபற்றிய விவரம் வரியிலிடப்படாமல் அரசாங்க வருவாய் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படவில்லை.

ஆனால் இப்படி அரசுக் கணக்கில் எழுதப்படாமல் இருந்த விபரம் பராந்தக சோழனின் 4-ஆவது ஆண்டில்தான் கண்டறியப் பட்டது. பிறகு அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டது. இதன் பிறகும் புதுப்பாக்கத்துச் சபையார் கோயிலுக்குச் சேர வேண்டிய பொன்னையும் நெல்லையும் கொடுக்காமல் இவ்வரசனின் 36 -ஆவது ஆண்டு வரையும் (32 ஆண்டுகள்) ஏமாற்றி வந்தனர். இதனால் கோபமடைந்த அரசன் தற்போது சபையாரிடமிருந்து சங்கப்பாடிகிழான் முதலிய நிலங்களைத் தற்போது கோயிலுக்கே கொடுத்து அதன் நேரடி நிர்வாகத்தில் விடுகின்றான்.

ஆனால் இப்படி முன்னர் நீக்கிய சங்கப்பாடிகிழான் நிலத்தைக் கோயிலுக்கு வரியிலிட்டு குடுத்தப் பின்னரும் அந்த நிலத்தை, புதுப்பாக்கத்துச் சபையார் வன்முறையில், அடாத முறையில் கைப்பற்றி அனுபவித்துக் கொண்டதுடன் கோயிலுக்குச் சேரவேண்டிய இறையையும் கட்டாமல் விடுகின்றனர்.

இந்த வரி ஏய்ப்பை எதிர்த்துக் கேட்ட கோயில் அதிகாரி களையும் அவர்கள் துன்புறுத்தியதாகத் தெரிகிறது. சபையார்களின் அட்டகாசம் எல்லை மீறியபோது இத்தகவல்கள் அரசனிடம் முறையிடப்படுகிறது:

> "இப்பரிசு குடுத்த இச்சங்கப் பாடிகிழான் காணி
> யைப் புதுப்பாக்கத்து ஸபையார் பற்றியாண்டு
> (வரை) தெவர்க்கு இறையிறா தொழிகின்றார்
> களென்று தெவகன்மிகளும் உண்ணாழிகை
> யுடையாரும் பன்மாயெஸ்வரரும் வந்து
> அனியாயம் அடுகின்றார்கள் என்று நமக்
> குச் சொல்ல . . ."

இதன் பிறகு அரசன் கோயில் அதிகாரிகளையும் சபையார் களையும் அழைத்து நேரடி விசாரணை செய்தபோது ஊழல் வெளிப் படுகிறது. சபையார் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். தண்டிக்கப்பட்ட பிறகும் அரசன் மீண்டும் இந்நிலங்களை இச்சபையாரே பெற்று கோயிலுக்குத் தேவதான இறை செலுத்தும் சலுகையை வழங்குகிறான். இதனை,

> "திருமால் பெற்றுத் தெவகன்மிகள் உண்ணாழிகை
> உடையார்களையும் பன்மாயேஸ்வரர்களையும்
> புதுப்பாக்கத்து சபையாரையும் அழைத்து நாம்
> ஆராய்ந்து இடத்து புதுப்பாக்கத்து ஸபையார்
> சிற்றியாற்றூர் சங்கப்பாடி கிழான் காணியால்
> தெவர்க்கு இறையிறுதெய் தெவதானங்களை
> அனுபவித்து வருகின்றமைய் இசைந்தமையில்
> புதுப்பாக்கத்து சபையாரைத் தண்டங்கொண்டு
> இச்சங்கப்பாடி கிழான் காணி மூவாயிரக்காடியும்
> திருமால்பெற்று உடையாற்கு புதுப்பாக்கத்து
> சபையா ரெய் இறுப்பதாக இவர்களுக்கெய் யாண்டு
> 14 முதல் தெவதான பிரம்மதெயமாய் . . . . வரியிலிட்டு
> க் கொள்க வென்று நாஞ் சொல்ல . . . ."

என்று கூறும் கல்வெட்டு வாசகங்களால் அறியலாம்.

இத்தகைய வரி ஏய்ப்பு ஊழல் விசாரணையானது இனிமேல் இந்த மாதிரி நடவாமல் இருக்கவேண்டும் என்று பலர் முன்னிலையில் நடத்தப்பட்டது. அதாவது இந்தப் பகுதி பிரம்மதேயக் கிழவர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள் ஊரார்கள் பள்ளிச் சந்தம் மற்றும் பிற சபை அமைப்புகளின் அலுவலர்கள் ஆகியோரை அழைத்து நடத்தப்பட்டது. இதனை அரசனே காஞ்சிபுரத்தில் வந்து தங்கி செய்தான்.

> "ஸ்வஸ்தி ஸ்ரீ கொனெரின்மை கொண்டாமணையில்
> கொட்டத்து மணையில் நாட்டார்க்கும்
> பிரம்ம தெயக் கிழவர்க்கும் தெவதானப்
> பள்ளிச் சந்தக் கணிமுற்றூட்டு வெட்டப்பெற்றுள்ளார்
> களிலார்க்கும் நகரங்களிலார்க்கும் யாண்டு 14-வது நாள்

> 106 னால் கச்சிப்பெட்டு நம் வீட்டிநுள்ளால்ப் பொன் மாளிகை ஆதிபூமியில் நாமிருக்க”

என்று கூறுவதால் அறியலாம்.

மேலும் அப்போது அவனுடன் கருமம் ஆராய்கின்ற (தலைமைச் செயலர்) அதிகாரியாக ஒருவனும், நடுவிருக்கை, ஆணத்தி, வாய்க்கேழ்வி, ஓலை எழுதும் அதிகாரி, ஓலை நாயகன், புரவு வரி அதிகாரி, உத்தர மந்திரி, வரிப்பொத்தகக் கணக்கு ஆகிய வருவாய்த் துறை அனைத்து அதிகாரிகளும் இருந்து இதனை நடத்தி ஒழுங்குபடுத்தியுள்ளனர். இதிலிருந்து பிரம்மதேய சபையார்கள் அரசனின் ஆணைகளையே மதியாமல் ஏமாற்றும் துணிச்சலைப் பெற்று விளங்கினர் என்றும் இந்த ஊழலில் அளவையும், தன்மையும் நாம் ஒருவாறு உணரலாம்.

## கோயில் உண்ணாழிகை உடையார்களின் ஊழல்கள்

இதேபோன்ற ஊழல்கள் திருமால்புரத்திலுள்ள கோயிலில் இராசராச சோழன் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அக்னீச்சுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைத் தாங்களே அனுபவித்து வந்ததுடன் வழிபாட்டு நிவந்தங்களையும் செய்யாமலும் விட்டுவிடுகின்றனர். இறைவனுக்குப் படைக்கின்ற அமுதை வெறும் அரிசியாக அவித்து படைத்தனர். பல சிறிய பெரிய அதிகாரிகளின் துணையுடன் சென்று இதனை கண்டறிந்து அதிகாரிகளை தண்டித்துப் பழையபடி நிர்வாகத்தை சீர்பெறச் செய்தவன் உத்தமசோழனின் மகனான மதுராந்தகன் கண்டாரதித்தன் என்பவன்,

இவனே இதேபோன்று திருவல்லம் கோயிலுக்குச் சென்று இறைவனுக்கு வழிபாடு நடத்தி வணங்கிய சமயத்தில், அங்கு இறைவனுக்குப் படைக்கப்படும் திருவமுதின் அளவு குறைந்தும் எண்ணெயின்றி விளக்கு ஒளி குறைந்து எரிவதையும் கண்டு இது பற்றி விசாரித்து ஊழல்களைக் கண்டு பிடித்துத் தண்டித்தார்.

> ". . . மதுராந்தகன் கண்டராதித்தன் ஆழ்வாரை
> சகஸ்ரகலச மாட்டுவிக்க வந்து திருவடி தொழுது
> நிற்க ஆழ்வார்க்கு காட்டுகின்ற திருவமுர்தும்
> இருநாழியரிசித் திருவமுர்தாய்க் கறியமுர்து
> நெய் அமுர்தும் தயிர் அமுர்தும் இன்றியெய்

> நொந்தாவிளக்கும் ஆலஸ்யமாயிருக்க கண்டு
> இத்திருக்கொயில் சிவப்பிராமணரையும்
> திக்காலிலர்லத்து சபையாரையும்
> அழைத்து இத்தெவருடைய ஆயமும்
> வீயமும் திருவாணைக்குந் திருவொலைக்கும்
> உரிய வண்ணஞ் சொல்லுக வென்று வினவ
> சிவப்பிராமணரும் திக்காலிவல்லத்து சபையாரும்
> சொல்ல-"

என்று கூறுகிறது. ஆனால் இக்கல்வெட்டு முழுதும் நமக்குக் கிடைத்திலது. இருப்பினும் விசாரணையின் முடிவு பற்றிய செய்தி மற்றொரு கல்வெட்டில் கிடைக்கிறது.

> ". . . யாண்டு ஏழாவது திக்காலி வல்லத்துத் திருத்
> திக்காலிப் பெருமானடிகள் பொகமான நிலங்களைப்
> இக்கொயில் சிவப்பிராமணர்கள் இறக்கி உண்ட
> மையில் இவர்களை மதுராந்தகன் கண்டராதித்தநார்
> ஆராய்ந்து தண்டங்கொண்ட பொன் எழுபத்து
> நாற்கழஞ்சும்-,"

என்றும் கூறுகிறது. இவ்விசாரணையில் ஊர்ச் சபையார் விசாரிக்கப்பட்ட போதிலும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் கோயில் சிவப்பிராமணர்களே குற்றம் புரிந்தவர்கள் என்பதும் பெறப்படுகிறது.

இவ்விசாரணையைத் தொடர்ந்து பல ஊழல்கள் இந்த கோயில்களிலும் கோயிலைச் சேர்ந்த ஊர்களின் நிர்வாகத்திலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இக்கோயிலுக்கென்று புது நிர்வாக அதிகாரி ஒருவன் இராசராசனின் 13 -ஆம் ஆட்சி ஆண்டில் நியமிக்கப்பட்டதைக் காண்கிறோம்.

இவ்வதிகாரியின் பெயர் ஈராயிரவன் பல்லவனான மும்முடி சோழ போசன். இவன் இராசராச சோழனின் பெருந்தரத்து அதிகாரி. நித்தவினோத வளநாட்டு பாம்புணிக் கூற்றத்து அரைசூரைச் சேர்ந்தவன். தஞ்சைப் பெரிய கோயிலில் சண்டேசுவரர் திருமேனியை எழுந்தருளுவித்து ஏராளமான பொன்னைக் கொடையாக அளித்தவன்.

இவன் திருவல்லம் கோயிலுக்கு "மேநாயகஞ் செய்யும்" அதிகாரியாக நியமிக்கப்பட்டான் (208/1921). இவன் பொறுப்பேற்றபின் இவ்வூர் ஆளுங்கணத்தாருள் ஒருவனின் மருமகனன் 25 பொன் பெற்றுக் கொண்டு ஒரு நொந்தா விளக்கு எரிக்க ஒப்புக்கொண்டான். ஆனால் எரிக்காமல் விட்டுவிட்டான். இதனைக் கண்டுபிடித்துத் தண்டித்தான்.

இப்படி இவன் பலவகை ஊழல்களையும் கண்டறிந்து அபராதமாக வசூலித்து கருவூலத்தில் சேர்த்த பொன் 140 கழஞ்சு 7 மஞ்சாடி ஆகும்.

இதே போன்று திருவல்லம் கோயிலுக்கு சொந்தமான தேவதான ஊர் மந்திரத்துச் சபையார் செலுத்த வேண்டிய பஞ்சவாரத்தில் அளவு விதிக்கப்பட வேண்டிய வரிவிதத்தில் விதிக்கப்படாமல் குறைந்த அளவாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததை (அல்லது வசூலாக வேண்டிய பஞ்சவாரம் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்ததோ சரிவரத் தெரியவில்லை) இவன் ஆராய்ந்து வசூலித்தான். இதனை இராசராசனின் 22-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது.

மேலும் இச்சமயம் இவ்வதிகாரி "மேநாயம் செய்கின்றவர்" என்ற பதவியில் இருந்து "ஸ்ரீகாரியம் கடைக்காண்கின்ற" அதிகாரியாக பொறுப்புகள் நிறைந்த உயர் அதிகாரியாக உயர்த்தப்பட்டுள்ளான். இதிலிருந்து இப்பகுதி நிர்வாக சீர்கேட்டின் ஆழமான சிக்கலும் அதை தீர்க்கும் முகத்தான் இவருக்கு கூடுதலான தனி அதிகாரங்கள் வழங்கப்பட்டமையும் புலனாகிறது.

மதுராந்தகன் கண்டராதித்தர், மும்முடி சோழ போசன் ஆகியோருக்குப் பிறகு இராசேந்திர சோழன் காலத்திலும் இக்கோயிலின் முறைகேடுகளைச் சரிபார்த்துச் சீரமைக்கும் பணி தொடர்ந்து நடந்துவந்தது. இப்பணியைச் செய்தவர் கொட்டையூர் பூவத்தப்பட்ட சோமாசியார். இவர் மேற்படி கோயிலில் இருந்து கொண்டு திருவல்லம் கோயில் கணக்குகளையும், மேற்பாடி கோயில் கணக்குகளையும் ஆராய்ந்தார். முன்பு மதுராந்தகன் கண்டராதித்தன் பின்பற்றிய முறையை இவரும் கடைப்பிடித்துக் கணக்குகளை ஆராய்ந்தார்.

திருவல்லம் கோயிலின் ஊழல் விசாரணை, அதிராசேந்திரன் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பட்டது என்பதை இவனது 3-ஆவது ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது. இதனைச் சோழ நாட்டு அதிகாரியும், படைகள் நடத்தும் சேனாபதி ஒருவனும் வந்து நடத்தினர். படைத்தளபதி வந்து விசாரித்தான் எனில் விசாரணைக்கு இப்பகுதியில் எதிர்ப்பு கிளம்பியதால் அதை அடக்க, படைகளுடன் வரவேண்டியிருந்திருக்கும் என் ஊகிக்கலாம். இக்கோயிலில் பல தேவதான ஊர்களின் கணக்குகள் சரிபார்க்கப்பட்ட செய்தியை அறிகிறோம்.

அடுத்தது மேற்படி கோயிலில் செய்யப்பட்ட விசாரணைகள். இது திருவல்லத்துக்கு மேற்கே ஆறுகல் தொலைவில் உள்ள ஊர். இங்குதான் இராசராச சோழன் சோழேந்திர சிங்க ஈச்வரம் என்ற சிவாலயத்தை 14-ஆவது ஆண்டிலும், அறிஞ்சய சோழனுக்குப் பள்ளிப்படையாக அறிஞ்சிகை ஈச்வரம் என்ற கோயிலைத் தனது 29-ஆவது ஆண்டிலும் எடுப்பித்தான்.

அரசனால் கட்டப்பட்ட கோயில்கள் என்பதனால் அரசனும் அதிகாரிகளும், ஊர் மக்கள், நகரத்தார்கள் போன்ற ஏராளமான பேர்களும் இக்கோயில்களுக்குக் கொடையளித்தனர். இக்கோயிலில் வந்து குவிந்த செல்வங்களைப் பற்றி இவ்வூர்க் கல்வெட்டுகள் நிரம்பப் பேசுகின்றன.

ஆனால் சோழேந்திரசிங்க ஈச்வரர் கோயில் கட்டிச் சரியாக 20 ஆண்டுகள் ஆவதற்குள்ளாகவே இக்கோயிலின் செல்வங்கள் சூறையாடப்பட்டு, செல்வங்கள் குறைந்து நிவந்தங்கள் நிறுத்தப் படுகின்ற நிலையைப் பார்க்கிறோம். இதனால் இராசேந்திர சோழனின் 4 - ஆவது ஆட்சி ஆண்டிலேயே ஊழல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

> "யாண்டு நாலாவது நடுவிருக்கும் கொட்டையூர்
> வூவத்தபட்ட ஸொமாயாஜியார்
> . . . . . சொளெந்திரசிங்க ஈஸ்வரமுடையார்
> கோயிலின் வடபக்கத்து சாலை
> அருமொழி தேவனிற்க் கோயில் கருமமா
> ராயாவிருந்து . . . ."

என்ற வரிகளால் அறிய முடிகிறது.

இவ்விசாரணை தொடர்ந்து இவ்வரசனின் 10-ஆவது ஆட்சி ஆண்டிலும் நடத்தப்பட்டது. இதற்கு மற்றொரு காரணம் இம்மன்னன் பழையாறை கோயிலினுள்ளால் திருமஞ்சன சாலை பள்ளிபீடத்து எழுந்தருளியிருந்த போது இக்கோயிலுக்கு வேண்டிய நிவந்தகளாகக் கருவேடு, ஒழுகையூர், வாங்கூர், மருதம்பாக்கம், பெரும்பனூர் ஆகிய ஊர்களை அளித்தான். ஆனால் இவை இவனின் 10-ஆவது ஆண்டு வரை நிவந்தஞ் செய்யாமல் கிடந்தது. இதன் பிறகு மன்னன் மேற்கூறிய ஊர்களின் வருமானத்தைக் கோயிலுக்கு செலவிட ஏற்பாடு செய்த செய்தி காணப்படுகிறது.

இதேபோன்று முதலாம் இராசராசன் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட அறக்கட்டளை ஒன்று நடத்தப்படாமல் கிடந்தது. மூன்றாம் இராசராச சோழன் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

சித்தூர் மாவட்டம், புத்தூர் வட்டம் திருச்சானூரில் உள்ள திருப்பாலதீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு இதுபற்றித் தெரிவிக்கிறது. கோயில்களில் மகர சங்கிராந்தியன்று 109 பாலிகைகள், 108 கலசங்கள் வைத்து விழாக்கள் நடத்தப்பட்டன. இத்தகைய விழா ஒன்ற தை மாத உத்தராயண மகர சங்கராந்தியன்று கொண்டாடுவதற்காகச் சோழ நாட்டைச் சார்ந்த நம்பன் கூத்தாடியான செயங்கொண்ட சோழப் பிரம்மராயன் இக்கோயில் பண்டாரத்தில் 26 கழஞ்சுப் பொன்னை முதலீடாக வைத்தான்.

இதனை திருச்சானூர் பிரம்மதேயச் சபையார் கடனாகப் பெற்று அதற்கு வட்டியாக இவ்விழாவைச் செய்வோம் என்று கல்வெட்டு வெட்டிக் கொடுத்தனர். இது நடந்தது முதலாம் இராசராசனின் இருபத்து மூன்றாமாண்டு, 80-ஆம் நாள் அதாவது கி.பி. 1008-இல் ஆகும். ஆனால் இந்த அறக்கட்டளை சுமார் 217 ஆண்டுகள் நடத்தப்படாமலேயே திருச்சானூர் சபையினரால் ஏமாற்றப்பட்டு வந்தது.

மூன்றாம் இராசராசனைப் பாண்டியர்கள், காடவ கோப்பெருஞ்சிங்கன் ஆகிய இருவரின் பிடியிலிருந்து மீட்டவனும், சோழ மண்டல பிரதிட்டாபனாச்சாரி என்ற பட்டம் கொண்டவனுமான போசள மன்னன் வீரநரசிங்கயாதவராயன் (வீரநரசிம்மன்) இப்பகுதியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது இக்கோயில் பற்றிய வழக்கு கொண்டு வரப்பட்டது.

திருச்சானூர் பிரம்மதேய சபையார்கள் இக்கட்டளையை நடத்தாமல் விட்டனர் என்று இக்கோயில் தானத்தார்கள் இவ்வழக்கைத் தொடுத்தனர். இதனை மன்னன் திருகண்ணப்ப தேவன் திருக்காவண மண்டபத்தில் அமர்ந்து சபையாரை அழைத்து விசாரித்தான். அவர்கள் இக்கட்டளை பற்றி தங்களுக்குத் தெரியாதென்று கூறிவிட்டனர். ஆனால் கோயில் மாகேசுவரர்கள் கல்வெட்டுச் சாசனத்தை வழக்கு மன்றத்தில் படித்துக்காட்டி வழக்கை நிரூபித்தனர்.

இதன்படி இச்சபையாரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பொன் 26 கழஞ்சை அவர்கள் கோயில் கருவூலத்தில் திருப்பிக் கட்டவேண்டும் என்றும், அதனைச் சபையார் நடத்தும் உரிமையை இழந்தனர் என்றும் மன்னன் தீர்ப்பளித்தான்.

இவ்வழக்கு பற்றிய தகவல் அடங்கிய அனைத்து விவரங்களையும் மீண்டும் மூன்றாம் இராசராச சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1224-1225) கல்வெட்டாக வெட்டுவிக்கப்பட்டது.

கோயில் நிலங்களை அனுபவித்து வந்தவர்களை உலகிற்குக் காட்ட தம் உயிரையும் கொடுத்துள்ளனர் சிலர்.

தஞ்சை மாவட்டம் மாயவரம் வட்டதில் உள்ளது. புன்செய் எனும் ஊர். இங்கு நல்துணைஈச்வரம், திருநனிப்பள்ளி உடையார் கோயில் என்றழைக்கப்பட்ட சிவாயலம் உள்ளது. இது ஆக்கூர் நாட்டு பிரம்மதேயத்தில் தலைச்செங்காட்டு ஊர் சபையினரின் மேற்பார்வையில் இருந்தாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இக்கோயிலுக்கு உரித்தான நிலங்களைத் தங்களுடையது என்று நான்கு பேர்கள் பொய் உரிமை கொண்டாடி அனுபவித்து வந்தனர். இதனை யாரும் கேட்டு நடவடிக்கை எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

இருப்பினும், இச்சொத்து கோயிலுக்கு உரியதுதான் என்று உலகிற்கு மெய்ப்பிக்கத் திருசூல வேளைக்காரன் என்ற சிவனடியார் இனத்தைச் சேர்ந்த சிலர் தீமூட்டி அதில் குதித்து இறந்தனர்.

இந்நிகழ்ச்சியினால் அதிர்ச்சியுற்ற சபையார்கள் உடனடியாக் கூடி விசாரணைசெய்து பொய் உரிமை பாராட்டியவர்களைத் தண்டித்து, நிலங்களைத் திரும்பவும் கோயிலுக்கு வழங்கவேண்டும் என்றும், இறந்தவர்கள் அனைவர்க்கும் உலோகப் படிமங்கள் அமைக்க 200 காசுகள் அவர்களிடமிருந்து வசூலிக்கவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினர்.

மன்னர்களைவிட இறைவனடியார்களுக்கு அவனின் உடைமைகளை காப்பதில்தான் எத்துணை ஈடுபாடு, தியாக உணர்வு இருந்தது என்பதை இக்கல்வெட்டுக் காட்டுகிறது.

முடிவுரை

இக்கட்டுரையில் இருந்து பெறப்பட்டும் செய்திகள்:

1. இத்தகைய முறைகேடுகளை செய்துள்ளவர்கள் சதுர்வேதி மங்கல, பிரம்மதேய, தேவதான ஊர்களின் உள்ள சபையார்கள். இவைகள் எல்லாம் அக்காலத்தில் சுயாட்சியும், தன்னாட்சியும் பெற்று விளங்கிய பிராம்மணர் களின் ஊர்களே.
2. கோயில் நிவந்தங்களை இறக்கி உண்டவர்கள் சிவப் பிராமணர்கள்.
3. நாட்டார், நகரத்தார், ஊர் மக்கள் ஆகியவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டதாக அதிக குறிப்புகள் இல்லை.
4. இத்தகைய ஊழல்கள் பற்றிய செய்திகள் அரசனுக்கு நேரில் கூறப்பட்டது.
5. அரசனே இவற்றைத் தீர விசாரித்து ஒழுங்கு செய்துள்ளான்.
6. அரசே இதற்கென தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து ஊழல்களை ஆராய்ந்துள்ளது.
7. சில சமயம் அரசின் உயர் அதிகாரிகள் தாங்களாகவே இத்தகைய ஊழல்களை உய்த்தறிந்து கண்டு பிடித்துள்ளனர்.
8. மேலும் இத்தகைய விசாரணைகளின்போது எதிர்ப்புகளும் இருந்தமையால் இப்பணியில் ஆய்வு அதிகாரிகளுடன் படைத்தளபதிகளும் அனுப்பப்பட்டனர்.

9. ஊழல்கள் நடந்துள்ள காலங்கள் பெரும்பாலும் பராந்தக சோழன் காலத்திற்குப் பிறகும் இராசராசசோழனின் ஆரம்ப ஆட்சி காலத்திலும் ஆகும். இந்த இடைப்பட்ட காலத்தில் தக்கோலப் போருக்குப் பிறகு தொண்டை மண்டலமானது இராட்டிர கூடர்களால் கைப்பற்றப்பட்டதும், அதை மீட்கும் போராட்டத்தில் தங்கள் உயிரை இழந்தும் சோழ அரசர்கள் போராடியுள்ளனர் என்பதும், அப்போது வலிவற்ற, நிலையற்ற அரசு நிலவியது என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும்.

இதனால் இக்காலத்தில் கோயில் செல்வங்களும், நிலங்களும் கவனிப்பாரின்றி அவரவர்களே கிடைத்ததை அனுபவித்து வந்துள்ளனர் என்று கருதவும் இடமிருக்கிறது.

10. மேலும் விசாரணை நடத்தப்பட்ட இடங்கள் சோழப் பேரரசின் தலைமை இடங்களிலிருந்து (தஞ்சை, கங்கை கொண்டசோழபுரம்) சுமார் 500 கி.மீ. தொலைவில், பேரரசின் வடகோடி எல்லையில் அமைந்திருந்தமையால் நடுவண் அரசின் உடனடி கவனத்திலும், நேரடிப் பார்வையிலும் இருக்க முடியாத நிலை இப்பகுதிக்கிருந் தமையால் முறைகேடுகள் நடக்க ஏதுவாயிற்று.

11. மேலும் சோழப் பேரரசின் மீது பாண்டியர்களும் ஹொய்சாளர்களும் கோப்பெருஞ்சிங்கன் போன்ற சிற்றரசர்களும் தாக்கிய காலத்தில் வலிவிழந்து சோழப் பேரரசு ஆடிக்கொண்டிருந்த மூன்றாம் இராசராசன் காலத்தில் (1216-36) மீண்டும் இதுபோன்று கோயில் சொத்துக்களைச் சிவப்பிராமணர்கள் கொள்ளையடித்த செய்திகளைக் காண்கிறோம்.

சிவபுரத்தில் 1239-இல் எழுதப்பட்ட கல்வெட்டானது இக்கோயில் சிவப்பிராமணர்கள் இருவர் சிவபுர இறைவனின் நகைகளைத் திருடிச்சென்று தம் காதற்பரத்தைக்கு க் கொடுத்தும் நிவந்தங்களைத் தீய வழிகளில் செலவிட்டும், அரசுக்கு வரி கொடுக்க மறுத்தும், வரி கேட்க வந்த வரித் தண்டலர்களை அடித்தும், கன்னட

வீரர்களுடன் சேர்ந்து கொண்டு மக்களைத் துன்புறுத்தி 50,000 காசுகள் வசூலித்தும் புரிந்த அட்டூழியங்களை வரிசைப்படுத்திக் கூறுகிறது.

## துணை நூல் பட்டியல்


1. சதாசிவப்பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு, பக். 490-497.
2. 286/1906.
3. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம்,3, எண்: 49.
4. 218/1921.
5. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் 2, எண்: 55.
6. 208/1921.
7. 227/1921.


★★★

# சோழர் காலச் சமயப்பணி

**ஆ. வேலுசுவாமி சுதந்திரன்**, எம்.ஏ., எம்.லிட்,
துணைப் பேராசிரியர்
பூம்புகார் பேரவைக் கல்லூரி

சோழர் கால மன்னர்களைப் போன்று அவர்கள் காலத்திருந்த அரசியல் அதிகாரிகள் படைத்தலைவர்கள், குறுநில மன்னர்கள், பல்வேறு முறையில் இறைப்பணியாற்றியிருக்கின்றனர். ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

## கோயில் கட்டுவித்தல்

முதலாம் இராசராசன் காலத்தில் திருவையன் சங்கர தேவன் என்ற குறுநில மன்னன் வடார்க்காடு மாட்டத்திலுள்ள, திருவல்லத்தில் திருவையேச்சுரம் என்னும் ஒரு சிவன் கோயிலை எடுப்பித்தான். இவன் எந்த குறுநில அரசைச் சார்ந்தவன் என்பது தெரியவில்லை. ஈராயிரவன் பல்லவரையன் ஆரிய சோழ போசன் என்ற படைத்தலைவன் தஞ்சைப் பெரிய கோயிலில் சண்டேசுவர தேவர்க்கு ஒரு சிறு ஆலயம் அமைத்தான். இக்கோயிலின் திருச்சுற்று மாளிகையை அமைத்தவன் சேனாபதியாகிய மும்முடிச் சோழ பிரம்மமாராயன் என்பவனாவான். இவன் பல்லவர் குலத்தில் தோன்றிய ஒரு சிறந்த அதிகாரியாக இருக்கலாமென்று தி.வை. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் கருதுகிறார்கள். முதலாம் இராசேந்திரன் காலத்தில் மாராயன் அருண்மொழியான உத்தம சோழ பிரம்மமாராயன் என்ற படைத்தலைவன் கி.பி. 1033-இல் ஒரு பிடாரி கோயிலை அமைத்தான். வீரராசேந்திரன் காலத்தில் கங்கைகொண்ட சோழ தன்மபாலன் என்ற படைத்தலைவன் திருமுக்கூடல் கோயிலில் சனநாதன் மண்டபமும், திருச்சுற்று மாளிகையும் எடுப்பித்தான். இரண்டாம் இராசராசன் காலத்திலிருந்த படைத்தலைவன் திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பியான பல்லவரையன் என்ற படைத்தலைவன் அரசன் பெயரால்

இராசராசேச்சுரம் என்னும் கோயிலை அமைத்தான். இந்த ஊர் தற்போது பல்லவராயன்பேட்டை என்று அழைக்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறைக்கருகில் அமைந்திருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சம்புவராய குறுநில அரசைச் சார்ந்த அம்மையப்பன் பாண்டிநாடு கொண்டானாகிய கண்ட சூரியன் சம்புவராயன் என்பவனின் திருவரைக்கரையிலுள்ள சிவன் கோயிலின் சூரியன் திருக்கோபுரமென்ற கோபுரமும், கண்டர் சூரியன் என்ற ஆயிரங்கால் மண்டபமும் கட்டினான்.

## கோயில்கள் புதுப்பித்தல்

கோயில்கள் புதிதாக அமைத்தது போல், சில கோயில்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் மிலாடுடையான் நரசிங்கவர்மன், திருக்கோவலூரில் செங்கற்களாலமைந்த திருமால் கோயிலைத் திருக்கற்றளியாக மாற்றியிருக்கிறான். இதேபோன்று, வீரராசேந்திர சோழன் காலத்தில் இராசேந்திர மூவேந்த வேளான் என்ற அரசியல் அதிகாரி திருவொற்றியூரில் படம்பக்கநாதர் கோயிலைக் கற்றளியாக மாற்றினான். முதல் குலோத்துங்கன் காலத்தில் வாணகோவரையன் சுத்தமல்லன் உத்தம சோழனாகிய இலங்கேசுவரன் மேலப்பழுவூரிலிருந்த செங்கற் கோயிலைக் கற்றளியாக மாற்றி, அதற்கு மன்னன் பெயரால் "குலோத்துங்க சோழீச்சுரம்" என்று பெயரிட்டான். இரண்டாம் இராசராசன் காலத்தில் இராசகம்பீர சேதிராயன் என்ற மலையமான் வம்சத்தைச் சார்ந்த குறுநில மன்னன் ஒரு திருமால் கோயிலைக் கற்றளியாக மாற்றினான்.

## இறையிலி நிலங்கள் அளித்தல்

கோயில்களின் பராமரிப்பிற்காக நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. முதற் குலோத்துங்கள் காலத்தில் கிளியூர் மலையமான் நானூற்றுவன் அத்திமல்லனான இராசேந்திர சோழ சேதிராயன் என்ற மலையமான் வம்சத்துக் குறுநில மன்னன் திருக்கோவலூரிலுள்ள திருமால் கோயிலுக்கும், சித்தலிங்க மடத்திலுள்ள சிவன் கோயிலுக்கும் நிலம் கொடுத்திருக்கிறான். அது போன்று சித்தூர் மாவட்டத்திலுள்ள சிவன் கோயிலுக்குக் கி.பி. 1101-இல் நிலம் கொடுத்த பெருமை சீயகங்கன் என்ற குறுநில மன்னனைச் சாரும். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் மலையமான் குலத்தைச்

சார்ந்த கிளியூர் மலையமான் இராச கம்பீர சேதிராயன் என்பவன் தென்னார்க்காடு மாவட்டம் சண்பை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிலுக்கு நிலம் கொடுத்தான். இரண்டாம் இராசராசன் காலத்தில் கரூர் மலையிலமைந்த ஒரு கோயிலுக்கு நிலம் கொடுத்துப் பெருமை பெற்றவன் இராசேந்திர சோழ பல்லவராதித்தனென்ற படைத் தலைவனாகும். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் குறுநில மன்னர்களாயிருந்த கிளியூர் மலையமான் இறையூரன் இராசராச சேதிராயனும், அதியமான் இராசராச தேவனும், அம்மையப்பன் கண்ணுடைப் பெருமாளான விக்கிரமசோழ சம்புவராயனும் செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலிச் சோழ சம்புவராயன் என்பவனும் முறையே புல்லூர், தகடூர், சீயமங்கலம், திருவோத்தூர் கோயில்களுக்கு நிலம் அளித்தவர்கள்.

## செப்புப் படிமங்களமைத்தல்

இரண்டாம் இராசேந்திர சோழன் காலத்தில் சேனாதிபதி அரையன் கங்கைகொண்ட சோழன் இராசராச அணிமுரி நாடாழ்வான் என்ற படைத்தலைவன் நடராசப் பெருமானுக்குப் பஞ்சலோகத்தல் உருவம் அமைத்திருக்கிறான். வேறு சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

## தேவார, திருவாய்மொழித் தொண்டு

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்ற அரசியலதிகாரி கி.பி. 995-இல் திருச்சோற்றுத்துறைக் கோயிலில் தேவராப்பதிகம் பாடுவோர்க்குப் பொன் அளித்துத் தொண்டாற்றினான். முதற் குலோத்துங்கன் காலத்தில் அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனான காலிங்கராயன் என்ற படைத்தலைவன் சமயக் குரவர் மூவர் பாடிய தேவராப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதி வைத்தான். இராசேந்திர சோழ மாவலிவாணவராயன் என்ற மன்னன், கோயிலில் திருவாய்மொழி விண்ணப்பம் செய்வதற்கு ஏற்பாடு செய்து பெருமை பெற்றவனாவான்.

## பொன் வேய்தல்

இரண்டம் இராசேந்திர சோழன் காலத்தில் வேளாள கூத்தனாகிய செம்பியன் மூவேந்த வேளான் என்ற படைத்தலைவன் திருவாரூர்க் கோயிலில் கருவறைக்கும், அர்த்த மண்டபத்திற்கும்

பொன் வேய்ந்தான். இதேபோன்று திருவண்ணாமலைக் கோயிலுக்கு பொன் வேய்ந்து "பொன் பரப்பினான் மகதைப் பெருமாள்"(ன்) என்று சிறப்புப் பெயர் பெற்றவன் இராசராச வாண கோவரையனென்ற குறுநில மன்னனாவான். சிதம்பரம் கோயிலுக்கு பொன் வேய்ந்த பெருமை காடவ குல அரசன் கோப்பெருஞ்சிங்கனுக்கும் உண்டு.

## அணிகலன்கள் கொடுத்தல்

பொன்னாலான அணிகலன்களைப் பாண்டியன் சீவல்லபன் என்ற குறுநில மன்னனும், சூரிய நாயகன் மாதவராயன் என்ற படைத்தலைவனும் ஏழிசை மோகன் ஆட்கொள்ளியான குலோத்துங்க சோழ காடவராயன், கூடலூர் அரச நாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரக் காடவராயன் என்ற காடவ குலக் குறுநில மன்னர்களும் முறையே திருவியலூர், திருப்பாசூர், திருநாவலூர், திருவதிகை, விருத்தாசலம், திருவெண்ணெய் நல்லூர், திருவண்ணாமலை, திருமாணிக்குழி, எலவானாசூர், சித்தலிங்க மடம் ஆகிய ஊர்களிலமைந்த கோயில்களுக்குப் பலவிதமான அணிகலன்கள் கொடுத்திருக்கிறார்கள்.

## மடங்கள் கட்டுதல்

முதலாம் இராசாதிராசன் காலத்தில் இராசாதிராசப் பல்லவ ராயன் என்ற படைத்தலைவன் அந்தணர்களையும் சிவயோகிகளையும் நாள்தோறும் உண்பிப்பதற்குத் திருச்சிராப் பள்ளிக்கு வடமேற்கேயுள்ள திருப்பைஞ்ஞீலிக் கோயிலைச் சார்ந்த செந்தாமரைக் கண்ணன் என்ற மடத்திற்கு நிலமளித்தான். அதிராசேந்திரன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள புறவார் பனங்காட்டூரில் ஒரு பெரிய மடம் நிறுவப்பட்டது. விக்கிரம சோழன் காலத்தில் திருச்சிற்றம்பலவன் மானசேகரன் என்பவன் பூம்புகாரில் மடம் அமைத்து அந்தணர்களுக்கு உணவளித் திருக்கிறான்.

## திருவிழாக்கள் ஏற்படுத்துதல்

புதுச்சேரிக்கருகிலுள்ள திரிபுவனி, செங்கை மாவட்டத்தில் திருவொற்றியூர், தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவெண்காடு போன்ற கோயில்களில் திருவிழாக்கள் சிறப்பான முறையில் நடை பெற்றிருக்கின்றன.

### கல்லூரி அமைத்தல்

சோழப் பேரரசர்கள் காலத்தில் எண்ணாயிரம், திருபுவனி, திருவாவடுதுறை ஆலயங்களில் கல்லூரிகள் அமைக்கப்பட்டு, வேதங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது போல், முதலாம் இராசாதிராசன் காலத்தில் புதுச்சேரிக்கு அருகாமையிலுள்ள திரிபுவனியில் ஒரு கல்லூரி ஏற்படுத்தி அதன் பராமரிப்பிற்காக 72 வேலி நிலத்தை, இராசேந்திர சோழ மாவலி வாணராயன் என்ற குறுநில மன்னன் கொடுத்தான்.

### நுந்தா விளக்கு எரித்தல்

குலோத்துங்கன் காலத்தில் பஞ்சநதிவாயன் முடிகொண்டா னான வந்தராயன் என்ற அரசியலதிகாரி கோதவரி மாவட்டம் இராமச்சந்திரபுரம் வட்டத்தைச் சார்ந்த திராட்சாராமம் பீமேசுர முடைய கோதேவர்க்கு ஒரு நந்தா விளக்கு கொடுத்தான். இதே போன்று வேளான் மாதவனாகிய இராசவல்லபப் பல்லவராயன் என்ற படைத்தலைவன் கோதாவரி மாவட்டம் பீமாவரத்திலுள்ள திருமால் கோயிலுக்கும் சேனாதிபதி ஞானமூர்த்திப் பண்டிதனாகிய மதுராந்தகப் பிரமாதிராசன் திருவொற்றியூர்க் கோயிலுக்கும், புக்கத்துறை வல்லவனாகிய அகளங்க சம்புவராயன் என்ற குறுநில மன்னன் மதுராந்தகத்திலுள்ள ஒரு சிவன் கோயிலுக்கும் நந்தா விளக்குகள் கொடுத்து, அதன் உபயோகத்திற்கு ஆடுகளும், பசுக்களும் தானமாகக் கொடுத்திருக்கின்றான்.

### துணை நூல் பட்டியல்


1. S.I.I. Vol.III. No. 213
2. S.I.I. Vol.II. No. 55
3. T.V. Sadasiva Pandarattar, History of the Later Cholas, Vol. I, p. 139,1949
4. Ep. Car., Vol.X, KL., No. 109A
5. Ep. Car., Vol.XXI, No. 32
6. Inscriptions of Pudukkottai State, No. 135
7. A.R.E., 190 of 1904
8. Ep. Ind., Vol. VII, No. 19 K., pp. 145 and 146
9. 228 and 232 of 1912
10. Ep. Ind., Vol. VII, p. 147

11. A.R.E. 388 of 1909
12. A.R.E. 432 of 1929
13. A.R.E. 102 of 1906
14. Ep.Car., Vol. A, KL., 75
15. S.I.I. Vol. VII, No. 1021
16. S.I.I. Vol. VIII, No. 126
17. A.R.E. 620/1919
18. S.I.I. Vol. VII, No. 103
19. S.I.I. Vol. V, No. 644
20. S.I.I. Vol. V, No. 611
21. Ep.Car., Vol, IX, NI-25
22. A.R.E. 669 and 675 of 1919
23. S.I.I. Vol. VII, No. 148
24. A.R.E. 46 of 1907
25. A.R.E. 128 of 1930
26. S.I.I. Vol. VII, No. 150
27. S.I.I. Vol. VIII, No. 754
28. A.R.E. 269 of 1911
29. Ep. Car., Vol. IX, NL-25
30. A.R.E. 221 and 232 of 1912
31. Ep. Car., Vol. H, NL-25
32. S.I.I., Vol. VI, No. 1338
33. Ep. Ind., Vol. XXII. No. 35
34. A.R.E. 119 of 1920, Ep. Indi., Vol. V. p. 106
35. A.R.E. 400 of 1922

★★★

# சுவடிகள் கூறும் சோழர் வரலாறு

**புலவர் ம. இராசேந்திரன்,** எம்.ஏ., எம்.பில்.,
கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை

## முன்னுரை

இந்திய நாட்டின் பழைய வரலாறுகளில்-குறிப்பாகத் தமிழக வரலாற்றில் தமது ஈடுபாட்டைக் காட்டியவர்கள் பலர். அவர்களுள் கர்னல் காலின் மெக்கன்சி குறிப்பிடத்தக்கவர். அவரது தொகுப்பு களில் சோழர்கள் வரலாறு பற்றியும், வரலாற்றுத் தொடர்பு பற்றியும் பல சுவடிகள் உள்ளன. அவற்றுள் காவிரிக்குக் கல்லணை கட்டியது பற்றிய பாடல்கள் அடங்கிய சுவடி பற்றி இக்கட்டுரை அமைகிறது.

## கர்னல் காலின் மெக்கன்சி

கி.பி. 1754 - இல் ஸ்காட்லாந்து நாட்டில் லூவித்தீவில் பிறந்து, 1783 - இல் இந்தியாவிற்குப் பயிற்சிப் பொறியாளர்களோடு வந்து சேர்ந்த காலின் மெக்கன்சி.38 ஆண்டுகளில் பல்வேறு தொல்பொருட் தொகுப்பில் நாட்டமுடன் உழைத்தார். அதன் பலனாகப் பல மொழிகளிலுமாக 9076 கல்வெட்டுகளும், 99 வரை படங்களும், 6218 நாணயங்களும், 106 சிற்பங்களும், 1568 சுவடித் தொகுப்புகளும், 2070 உள்ளூர் வரலாற்றுப் பதிவேடுகளும் (Local records) 40 புராதனப் பொருட்களும் தொகுக்கப்பட்டன.

இந்தியாவில் முதல் தலைமை நில அளவையாளர் (First Surveyor General of India) பதவியிலிருந்து 1821 - ஆம் ஆண்டு இந்தியாவில் ஹூக்ளி நதிக்கரையில் இயற்கையடைந்து விட்ட காலின் மெக்கன்சி, பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற பலரை மாத ஊதியத்திற்கு உதவியாளர்களாக அமைத்துக் கொண்டு தமிழ், மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், மராத்தி முதலான பல மொழிகளிலும் தமது இறுதி நாள் வரையில் தொகுப்புப் பணிகளில் தொய்வின்றி உழைத்தார்.

எந்த ஒரு தனி மனிதராலும் தனித்துச் சாதிக்க முடியாத வற்றை மெக்கன்சி இந்தியாவிலும் ஜாவாவிலுமிருந்த முப்பத் தொட்டாண்டுகளில் சாதித்திருக்கிறார்.

## மெக்கன்சி சுவடிகள்

மெக்கன்சி மறைவிற்குப் பிறகு அவரது மனைவியிடமிருந்து கிழக்கிந்தியக் கம்பெனி அத்தொகுப்புக்களை விலைக்குப் பெற்றது. பின்னர் அத்தொகுப்பு முழுவதும் மூன்றாகப் பகுப்பப்பட்டு இலண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் ஒரு பகுதியும், கல்கத்தா தேசீய நூலகத்தில் ஒரு பகுதியும் வைக்கப்பட்டன. மூன்றாவது பகுதி தற்போது சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் உள்ள சுவடிகள் மெக்கன்சி சுவடிகள் என்று அழைக்கப்படுகின்றன.

## சோழர்கள் வரலாற்றில் சுவடிகள்

1. சேர சோழ பாண்டிய கைபீது (டி.2999)
2. சோழ சேர பாண்டிய வமிசாவளி (டி. 3280)
3. சோழ தேசத்துப் பூர்வ மன்னர்கள் அட்டவணை (டி. 2995)
4. சோழ தேசத்துப் பூர்வராஜ சரித்திரம் (டி. 3178)
5. சோழபுரக் கிராம வரலாறு (டி. 3773)
6. சோழ மன்னர் மகத்துவம் (டி. 2994)
7. தமிழ்த் தேயத்துப் பண்டைய மன்னர் ஒழுங்கு (டி. 3198)
8. தமிழ்த் தேயத்துப் பண்டைய மன்னர்கள் சக ஆண்டுகள் (டி. 3260)
9. தமிழ்த் தேயத்து மும்மண்டல மன்னர் வரலாறு (டி. 1518)
10. தமிழ் இராசாக்கள் கால ஒழுங்கு (டி. 3286)
11. தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற்சோழன் வரலாறு (டி. 3079)
12. சோழன் பூர்வ பட்டயம் (அ.கீ.சு. நூலக வெளியீடு)
13. காவேரியாற்றுக் கல்லணை (ஆர். 343 பி)

மேற்குறிப்பிட்டுள்ள சுவடிகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள மெக்கன்சி சுவடிகளில் சோழர்கள் வரலாறு பற்றியவையாகும். அவற்றுள் காவிரியாற்றுக்குக் கல்லணையாரால் கட்டப்பட்டது என்பது பற்றிய பாடல்கள் அடங்கிய சுவடி குறிப்பிடத் தக்கதாகும்.

### காலின் மெக்கன்சியின் கல்லணை பற்றிய சுவடி

"தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற்சோழன் வரலாற்றில், தற்போது பிரச்சனைக்குரியதாக இருக்கும் காவிரியைப் பற்றி,

"காவேரி அக்காலத்திலே காட்டு வெள்ளாறு என்கிற பேரைக் கொண்டிருந்தது. மேற்கேயிருந்து கிழக்கே கொஞ்ச தூரம் மட்டும் ஓடிவந்து அந்த தேசத்துக்கு உபயோகமில்லாமல் முழுதும் கொள்ளிடத்திலேயே போய்விழுந்து சமுத்திரம் போய்ச் சேர்ந்துபோம். இந்த சோளராசா இந்த ஆற்றைத் தேசத்துக்கு நடுவாகக் கொண்டு வந்து சமுத்திரக்கரை மட்டும் ஆறுவெட்டவும், இந்த தேசத்துக்குப் பாய்ந்த தண்ணீர்போக மீதியான தண்ணீர் கடலிற்போய்ச் சேரத் திட்டமிட்டிருந்தான்.

அவன் மகன் விண்சோழன். இவன் தன்பேரில் விண்ணாற்றை வெட்டி வைத்தான். இவ்வளவு தண்ணீர் தேசத்துக்குப் போதுமென்று அறிந்து மேல் தண்ணீர் போகும்படியான அணைபோட்டு வைத்தான். இவன் தேசத்தை அளந்து கண்டவனானபடியினாலே, "மண்ணளந்த சோழன்" என்று பேர்பெற்றான். இவனுக்கு ஒரு பிள்ளை. அவன் பேர் காவேரிச் சோழன். இவன் இந்தக் காவேரி ஆற்றைச் சமுத்திர நதிக்கரை மட்டும் வெட்டிவிட்டபடியினாலே காவேரி கரைகண்ட சோழன் என்று பேர் வந்தது எனும் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

### கல்லணை வெண்பா

மேலும் கல்லணைபற்றிய சுலோகம் என்றும், கல்லணை கட்டும்போது சொன்ன வெண்பா என்றும் ஆறு பாடல்கள் கூறப் பட்டுள்ளன. வெண்பா என்று அழைக்கப்பட்டாலும் சில இடங்கள் வெண்பா யாப்புக்குள் வராமலும், சில சொற்கள் சிதைந்தும் காணப் படுகின்றன. அச்சுவடி பின்வருமாறு:

### காவேரியாற்றுக் கல்லணை

கல்லணை கட்டினது பராந்தக சோள மகாறாசாவுனுடைய குமாரன் கரிகால் சோழ கோ ராசா அவர்கள் கட்டினது. அதுயெப்போ வன்னில் கல்யுகம் பொறந்து 990 தொளாயிரத்து தொண்ணூறாம் வருஷத்தில் கற்கால் சோள மகாறாசா பொறந்தது. அவருக்கு அஞ்சாம் வருஷத்தில் சோளமண்டலாதிபத்தியம் றாச்சியம் பட்டம் கட்டினார்கள்.

அதன் பிறகு பொன்னியாறு கரைகண்டான் அம்பத்து மூனாம் வருஷம் காவேரி கரைகண்டு கல்லணையான அணைகட்டைக் கட்டினான்.

அப்போ கலியுகம் பொறந்த 1043 ஸ்ரீ ஆயிறத்தி னாற்பத்தி மூணாம் வருஷம் அந்த கரிகால் சோளமகாறாசா 87 ஸ்ரீ யெளம்பத்தேழு ஸ்ரீ றாச்சியபாறம் பண்ணினார்கள். யிந்த கரிகால் சோளமகாறாசா கதை பின்னாலே யெழுதி அனுப்பிவிக்கிறோம். இதுக்கு கல்லணைக்கி தெற்கு வடக்கு தச்சன் கோலாலே இத்தினை கோலெங்குறத்துக்கு பிறமாணம் கிழக்கு மேற்கு இத்தினை கோலெங்குறத்துக்கு பிறமாணம் ஆழம் யித்தினை கோலெண்டு பிறமானம். இதற்கு கல்லணை கட்டச்சே சொன்ன வெண்பாவும் அந்த கரிகால் சோளறாசா கலியுகத்தில் பிறந்த பிறமாணத்துக்கும் அவர் றாச்சியபாரம் பண்ணின வருஷத்துக்கு பிறமாணமும் அதுக்கு ஆதரவு அவர் னாளையிலே சொன்ன வெண்பாவும் யெழுதி யிருக்குது.

வெண்பா

தொக்க கலியன் தொனாயிரத்தி தொண்ணூரில்
மிக்க கரிகால் வேந்துதித்து-பக்கம்
அலக்குழி திறைபொன்னி யார்கரை கண்டான்
மலைக்குநே ரானபுய மன். 1

அஞ்சில் முடிகவிந்து அன்பத்தி மூண்டளவில்
கஞ்சு காவேரி கறைகண்டு- தஞ்சையில்
எண்பத்தி மூண்டளவும் ரீரணடுநீ தானிருந்தான்
விண்புக்கான் தன்புக்கான் வேந்து 2

உச்சங்கோ லெண்கோ லுயரம் பதினறுகோல்
எச்சம் பிறிவா யிருவதுகோல்-தச்சன்
மண்கொள்ளக் கொண்டகோ லெண்கோல் வளவர்கோன்
கண்கொள்ள கொண்ட கறை. 3

கவறை பதினொன்பான் கருமற மாறயற்
கெவுரியத்திற் பேடென்று சென்றதற்பின்-தவருவறா

தாட்சி மதுரை நாடன் பத்தறுகாதம்
சாட்சிமறை யோன்பிறப்பன் தான். 4

சாலிய வாகனனாள் சகறார வடுகெள
கோலு துலுக்குநாலில் கோட்டைவிட்டு-வேலியிள
வற்குசிலை பத்தேற வஞ்சியுறை செஞ்சியிறை
குதிகொள் வேதியனுந் தாம். 5

வலசை பதினாறு வலவடுகு நாலு
சிலைநான்கு பேடொன்று சென்றதிற்பின்-கொத்தவனும்
பட்டுவயல்த் தஞ்சமா நகரும்
அந்தணனே ஆளும் அறசு. 6

## துணை நூல் பட்டியல்


1. W.C. Mackencie, 'colond colin Mackencie, W.I.R. Chambers Limited Edinburch and London, 1952, p. 213.
2. Ibid. p. 211.
3. "தாய்மான் நள்ளிச்சோழன் என்ற முதற்சோழன் வரலாறு" அ. கி. சு. நூலகம், சுவடி எண். டி. 3079 பக். 46-48.
4. அ. கி. சு. நூலகம், சுவடி எண். ஆர். 343.(பி)
5. இக்கணக்குப்படி கி.மு. 2111-இல் கரிகால்சோழனால் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஆண்டுக்கணக்கில் தமிழர்களிடமிருக்கும் ஆர்வத்தைக் காட்டுவதாக இதைக் கொள்ளலாமே தவிர ஆராய்ச்சிக் குரியதாய்க் கொள்ளமுடியாது.


★★★

# சோழர் கால ஆதுலர் சாலைகள்

**தே. கோபாலன்,** எம்.ஏ.,
தொல்லியல் அலுவலர்,
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

## முன்னுரை

சங்க காலத்திலிருந்து கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை சோழர்கள் தென்னிந்தியப் பகுதியை மட்டுமின்றி வடபகுதியிலும், கடல் கடந்தும் தங்களது வலிமையை நிலைநாட்டிய ஈடு இணையற்ற வேந்தர்கள் ஆவர். இவர்கள் காலத்தில் ஆதுலர் சாலைகள் (மருத்துவச் சாலைகள்) அமைத்தது பற்றியும், அவற்றிற்கு அவர்கள் வழங்கிய கொடைபற்றியும், அவர்கள் காலத்து மருத்துவ நிலை பற்றியும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சோழர் காலப் பேரிலக்கியங்களான கம்பராமாயணம், சீவகசிந்தாமணி முதலியன அக்காலப் பிணிகள், மருந்து, மருத்துவர்களைப் பற்றிய சில குறிப்புகளைத் தருகின்றன. இருப்பினும், சோழர் கால மருத்துவத்தைப்பற்றி அறிதற்கு பெருந்துணையாக நிற்பது அக்காலக் கல்வெட்டுகளே. திருமுக்கூடல், திருப்புகலூர், திருவாவடுதுறை, கீரகளூர், கூகூர், கடத்தூர் ஆகிய இடங்களில் காணப்படும் சோழர் காலத்திய கல்வெட்டுகள் அக்காலத்திய மருத்துவத்தைப் பற்றிய அரிய செய்திகளை நமக்கு வழங்குகின்றன.

## வீரசோழன் ஆதுலர் சாலை

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தில் திருமுக்கூடல் என்னும் ஊரிலுள்ள வெங்கடேசப் பெருமாள் கோயிலில் காணப்படும் வீர இராசேந்திர சோழனின் 5 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இங்கு ஒரு ஆதுலர் சாலை அமைத்தது பற்றிய முழுவிபரங்களையும் நமக்குத் தருகிறது. அவற்றை ஈண்டு காண்போம். "வீரசோழன்" என்ற பெயரில் இவ்வாதுலர் சாலை வெங்கடேசபெருமாள் கோயில்

நிர்வாகத்தின் கீழ் இருந்துள்ளது. இக்கோயிலின் வருமானத்திலிருந்து ஒரு வேத பாடசாலை, மாணவர்கள் தங்கம் விடுதி, மருத்துவ விடுதி ஆகிய இம்மூன்றும் நடத்தப்பட்டு வந்தன.

### ஆதுலர் சாலைப் பணியாளர்களும், பணிகளும்

மருத்துவர் வீர சோழன் ஆதுலர் சாலையில் நாடி பார்த்து மருந்தெழுதிக் கொடுக்கும் மருத்துவர் ஒருவர் இருந்தார். இவரது பெயர் "சவர்ணன் கோதண்டராமன் அசுவத்தாம பட்டன்" எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவர் வம்சா வழியாக இத்தொழிலைச் செய்ய உரிமை பெற்றிருந்தார். இவருக்கு ஆண்டுக்கு 90 கலம் நெல்லும், 80 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது. இது தவிர, நிலமும் கொடையாக வழங்கப்பட்டது. மருத்துவருக்குக் கொடையாக வழங்கும் நிலத்தினை "மருத்துவக்காணி" எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

### அறுவை சிகிச்சை செய்பவர்

அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் ஒருவரும் இவ்வாதுலர் சாலையில் பணிபுரிந்துள்ளார். இவரைச் "சல்லியக் கிரியை பண்ணுவான்" எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவருக்கு 30 கலம் நெல்லும், 2 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது.

### மருத்துவப் பணி மகளிர்

மருத்துவப் பணி மகளிர் இருவர் இருந்தனர். இவர்களை "மருந்து அடும் பெண்டுகள்" எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு பணி மகளிர்க்கும் 30 கலம் நெல்லும், 1 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது.

### மருந்து கொணர்பவர்

மருந்து தயாரிக்க மூலிகைச் செடிகளைப் பறித்துக்கொண்டு வருவதற்காக இருவர் பணி புரிந்தனர். இவர்கள் மூலிகைச் செடிகளைக்கொண்டு வருவதோடு அடுப்பு எரிக்க விறகும் கொணர்ந்தனர். இவை தவிர மருந்து தயாரிக்கும் பணியையும் செய்தனர். இவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 30 கலம் நெல்லும், 1 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது.

### நாவிதன் (அம்பட்டன்)

அறுவைத் தொழில் செய்யும் நாவிதன் ஒருவன் இவ்வாதுலர் சாலையில் பணிபுரிந்துள்ளான். நாவிதர்கள் சவரத் தொழிலையும், மருத்துவத் தொழிலையும் குலத்தொழிலாகக் கொண்டிருந்தனர். செய்தனர். இவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 30 கலம் நெல்லும், 1 காசும் ஊதியமாக வழங்கப்பட்டது.

### நாவிதன் (அம்பட்டன்)

அறுவைத் தொழில் செய்யும் நாவிதன் ஒருவன் இவ்வாதுலர் சாலையில் பணிபுரிந்துள்ளான். நாவிதர்கள் சவரத் தொழிலையும், மருத்துவத் தொழிலையும் குலத்தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் கத்தியைக் கையாளுவதில் திறமை பெற்றவர்கள். ஆதலின் நரம்பு, உடல் உள்ளுறுப்புக்கள் இவற்றைப் பாதிக்காவண்ணம் சிறு அறுவை சிகிச்சை செய்தனர். இவர்களும் மருத்துவர் என அழைக்கப்பட்டனர். பிள்ளைப் பேற்றுத் துறையில் நாவிதர் மனைவியார் ஈடுபட்டனர். இவர்கள் "மருத்துவச்சி" என அழைக்கப்பட்டனர். இந்நாவிதனுக்கு 15 கலம் நெல் மட்டும் ஊதியமாக வழங்கப்பட்டது.

### நீர் கொணர்பவன்

"வீர சோழன்" ஆதுலர் சாலைக்குத் தண்ணீர் கொண்டுவருவதற்காக ஒரு பணியாள் இருந்ததையும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவனைத் "தண்ணீர் கொண்டுவந்து வைத்துச் சாய்ப்பான்" எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இவனுக்கு 15 கலம் நெல் மட்டும் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

### மருந்து வகைகள்

வீர சோழன் ஆதுலர் சாலையில் ஓராண்டிற்குத் தேவையான பல வகை மருந்துகள் இருப்பில் இருந்ததாக அவற்றின் அளவுடன் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவையாவன:

| | மருந்து | அளவு |
|---|---|---|
| 1. | பிராமணீயம் - கடும்பூரி | 1 |
| 2. | வாசா - கரிதகி | 2 படி |
| 3. | கோ-மூத்ரா-ஹதஹி | - |

| | | |
|---|---|---|
| 4. | தஸ-மூலா-ஹதஹி | 1 படி |
| 5. | பலாடக-ஹதஹி | 1 படி |
| 6. | கந்தீரம் | 1 படி |
| 7. | பலாகேரண்ட தைலம் | 1 தூணி |
| 8. | பஞ்சாக தைலம் | 1 தூணி |
| 9. | லசுணாதி ஏரண்ட தைலம் | 1 தூணி |
| 10. | உத்தம சரணாதி தைலம் | 1 தூணி |
| 11. | பில்வாதி கிரீதம் | பதக்கு |
| 12. | மண்டுகர வதகம் | 2,000 |
| 13. | திராவட்டி | நாழி |
| 14. | விமலை | 2,000 |
| 15. | கனேத்திரி | 2,000 |
| 16. | தமராதி | 2,000 |
| 17. | வஜ்ர கல்பம் | தூணி-பதக்கு |
| 18. | கல்யாண லவணம் | தூணி-பதக்கு |

இவ்வாதுலர் சாலையில் 15 படுக்கைகள் இருந்துள்ளன. நோயாளிகளை "வியாதிப் பட்டுக் கிடப்பார்" எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு 1 நாழி அரிசி வழங்கப்பட்டது. இவ் ஆதுல சாலையில் இரவு முழுவதும் விளக்கு எரிக்க 2¼ காசும், விளக்கு ஒன்றுக்கு ஆழாக்கு எண்ணெயும் வழங்கப்பட்டது இது தவிர ஆதுலர் சாலையில் உள்ள மருந்துகளைப் பத்திரப்படுத்தி வைக்க 40 காசுகள் வழங்கப்பட்டன.

### சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர் சாலை

குந்தவைப் பிராட்டியார் தஞ்சையில் தன் தந்தையின் பெயரால் "சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர் சாலை" என்ற மருத்துவ விடுதி ஒன்றை நிறுவி அதனை நடத்தி வருவதற்கு மருத்துவக் காணியாக நிலமும் அளித்துள்ளார் என்பதைக் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

இவ்வைத்திய சாலைக்கு அளித்த நிலத்தை வைத்தியர் சவர்ணன் அரையன் மதுராந்தகனும் அவனுடைய வாரிசுகளும் அனுபவிக்கலாம் என மற்றொரு கல்வெட்டு அறிவிக்கின்றது.

### திருப்புகலூரில் ஆதுலர் சாலை

விக்கிரம சோழனின் 2-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு திருப்புகலூரில் "தேவருடையான் மதுக்கினியான் ஆன விராட ராசன் என்பான் முடிகொண்ட சோழப்பேராற்றின் வடகரையில் ஆதுலர்க்கும் அனாதையர்க்கும் வைத்தியம் செய்யவும், உணவு அளிக்கவும் ஒரு ஆதுலர் சாலையும், மடமும் ஏற்படுத்தினான் என்பதைக் குறிக்கிறது.

### மருத்துவக் கல்லூரி

விக்கிரம சோழனின் 3 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று திருவாவடுதுறையில் ஒரு வைத்தியக் கல்லூரி இருப்பதைக் குறிப்பிடுகிறது. இங்கு மாணவர்களுக்குச் சரக சம்ஹிதையும் அஷ்டாங்க ஹிருதமும் கற்பிக்கப்பட்டன. மற்றும் முன்னூற்றி அறுபத்து நால்வண் அறச்சாலையில் மருத்துவ நூல் படிப்பவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. மாணவர்களுக்கு உணவளிக்கும் மடம் ஒன்றில் மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கும் உணவளிக்கப் பட்டதாக இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் பெருவலூரில் வேத, சாஸ்திர, வைத்தியப் பண்டிதர்களுக்கு 12 வேலி நிலம் கொடையளித்துள்ளதாக இரண்டாம் குலோத்துங்களின் 13 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் குறிக்கிறது. இராசேந்திர சோழ சம்புவராயன் என்பான் இப்பண்டிதர்கள் தங்குவதற்கு மனைகள் வழங்கியுள்ளான்.

மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றுசுப்பிரமணியசிவம் என்பார் திருத்தொண்டத் தொகையான் திருமடத்துக்கு நிலம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. மடத்திற்கு வரும் யாத்ரீகர்கள் நோய்வாய்ப்படின் அந்நில வருமானத்தின் ஒரு பகுதியைக் கொண்டு இலவச வைத்திய உதவி செய்தனர் எனக்கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

### சோழர் கால மருத்துவர்கள்

சோழர் காலத்துக் கல்வெட்டுகள் பல மருத்துவர்களின் பெயர் களைக் குறிப்பிடுகிறது. அவர்கள் முறையே சவர்ணன் அரையன்

சந்திரசேகரன், கோதண்டராம அசுவத்தாமபட்டன், மங்களாதிராசன் சீராளன். மூன்றாம் இராசராச்சோழன் காலத்தில் குன்றத்தூர் நாடு முழுவதும் மருத்துவம் செய்தவர் "மங்களாதிராசன் சீராளன்" எனப் பெயர் பெற்றவர். இம்மருத்துவர்கள் சைவசிகாமணி சிவகீர்த்தி கடகமெடுத்த கூத்தபிரான் எனப் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றனர். சோழர் கால ஆதுலர் சாலைகளில் இருவகை மருத்துவர்கள் இருந்தனர். ஒருவர் கைநாடி பார்த்து பொதுப் பிணி நீக்கும் மருத்துவர் ஆவர். மற்றொருவர் உடற்கூறுகளை ஆராய்ந்து பின் கட்டி, இரணம் முதலியவற்றை அறுத்து அறுவை சிகிச்சை செய்பவர். இவரைக் கல்வெட்டுக்கள் "சல்லியக்கிரியை பண்ணுவான் எனக் குறிப்பிடுகிறது.

## பிணி நீங்க இறை வழிபாடு

தஞ்சை மாவட்டம், கூகூரில் காணப்படும் கல்வெட்டு அதிராசேந்திரன் தன் மூன்றாம் ஆட்சியாண்டில் கொடிய நோயினால் துன்புற்றான் என்றும், அவ்வரசன் உடல்நலம் பெற அவ்வூர்க்கோயிலில் இருமுறை தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்றன என்றும் அறிகிறோம். கோவைமாவட்டம், கடத்தூரிலிருந்து கிடைக்கும் கொங்கு நாட்டு மன்னன் விக்கிரம சோழதேவனுடைய 21 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வரசன் அதிகாரிகளுள் ஒருவரான விக்கிரமசோழ திரிபுவன சிங்கதேவன் என்பான் தன்னுடைய மேக நோயைத் தீர்த்தருளியதற்காக அவ்வூர்ச் சிவன் கோயிலுக்கு நிலம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகின்றது.

## மருத்துவக்காணி - *சிறிய* வழக்கு

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கீரக்களூர் கிராமத்தில் அகத்தீஸ்வரர் கோயிலுள்ள இரண்டாம் இராசேந்திர சோழனின் 11 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒரு சிறிய வழக்கை விவரிக்கின்றது. அஃதாவது, களப்பாழ் சபையார் கீரகளூர் ஸ்ரீபுருஷோத்தமதேவர் வாசல் மடத்தே கூட்டம் குறைவறக்கூடி இருந்து "வைத்தியக்காணி" யாக நிலத்தை அனுபவித்து வந்த "காஸ்யபன் அரையன் அரைசான ராஜகேஸரி மங்கலப் பேரையனின்" காணி நிலமும், மனையும் செல்லாது என்று சபையோர் அபகரித்துக் கொண்ட பின் அந்த வைத்தியன் சமூக வழக்கப்படி சபையோர்க்கு விண்ணப்பஞ் செய்கின்றான். பரசுராமன் என்பவன்

வைத்தியனுக்குப் பயிர் செய்ய நிலம் கொடுக்கப்பட்டிருந்தது என சாட்சி கூறியபின் அபகரித்துக் கொண்ட நிலத்திற்குத் தலைமாறாக அவனுக்கு நிலம் வழங்கப்பட்டதாக இக்கல்வெட்டுக் கூறுகிறது.

## மருத்துவச் செடிகள்

"செங்கழுநீர்" என்ற மருத்துவச்செடி பற்றித் தாரமங்கலம், செங்கம் இன்னபிற இடங்களில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதனை நடுவதற்கு அரசாங்கத்திடம் உரிமை பெறவேண்டியிருந்தது. சேலம் மாவட்டத்துச் சோழர் காலக் கல்வெட்டுகள் "வழுநிலை" (கண்டங்கத்திரி) என்ற நாட்டு மருத்துச்செடி பயிரிட்டதைக் குறிப்பிடுகின்றன.

## முடிவுரை

சோழர்காலத்தில் பல இடங்களில் மருத்துவச் சாலைகளும், மருத்துவக் கல்லூரிகளும் ஏற்பட்டன. நன்கு தேர்ச்சி பெற்றோர் மருத்துவத் தொழிலைச் செய்தனர். இத்துறையின் புலமைபெற்றோர் மாணவர்களுக்கு மருத்துவ விதிமுறைகளைக் கற்பித்தனர். குறிப்பாகக் கோயில்களில் ஆதுலர் சாலைகள் நடத்தப்பெற்றன. அரசர்களாலும், அரச மாதேவியராலும் மருத்துவர்களுக்கு வரிநீக்கி நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன. வைத்தியர்களுக்கு விடப்பட்ட நிலங்களை வழிவழியாக அனுபவித்தவர்கள் இலவச வைத்தியம் செய்தனர். இவர்கள் காலத்தில் ஆதுலர் சாலைகளில் ஆயுர்வேத மருத்துவமே சிறப்பாக நடத்தப்பெற்றன.

★★★

# சோழர் காலத்தில் வணிகச் சங்கங்கள்

**தி. சுப்பிரமணியன்**
காப்பாட்சியர்,
தொல்லியல் துறை, கோயம்புத்தூர்

சோழர் காலத்தில் பல சபைகள் தன்னிச்சையாகச் செயல்பட்டு உள்ளன. அவையாவன: ஊர், சபை, நகரம் முதலியன வாகும். இவைகள் அரசனின் அங்கீகாரம் பெற்று அந்தப் பிரிவிற்குத் தேவையான நடைமுறைகளை வகுத்து எல்லாவகை நலன்களையும் பெற்று வந்துள்ளன. இந்தச் சபைகள் சோழர் காலத்தில் உயர்ந்த நிலையை அடைந்தன. அதற்குப்பின் செல்வாக்கை இழக்கத் தொடங்கிவிட்டன. மற்ற சபைகளைக் காட்டிலும், வணிகச் சபைகளே நீண்ட காலம் செல்வாக்குடன் இருந்துள்ளன.

சங்க காலந்தொட்டே வணிகர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வியாபாரம் செய்து வந்தனர். இத்தகைய வியாபாரக் கூட்டங்களை இலக்கியங்கள் "வணிகச் சாத்து" என்று அழைக்கின்றன. வணிகக் கூட்டங்களைக் குறிக்கக் கல்வெட்டுக்களில் இந்தச் சொல் அதிகம் கையாளப்படவில்லை. பிரான்மலைக் கல்வெட்டில் மட்டும் "ஏறு சாத்து, இறங்கு சாத்து" என்று குறிப்பிடப்படுகின்றது. வடமொழியில் வணிகக் கூட்டங்களை "ஸ்ரினி" (Sreni) என்று கூறுவர். அதாவது "ஸ்ரிஸ்தி" என்றால் வணிகர் என்று பொருள். இதையே ஐரோப்பிய நாடுகள் "கில்டு" (Guild) என்று அழைக்கின்றன. வணிகர்களுடைய அமைப்பைக் குறிக்கப் பொதுவான சொல் இல்லை எனலாம். ஆகவே "வணிகர்கள் சங்கம்" என்று எடுத்துக்கொள்ளலாம். சங்கங்கள் வணிகர்களுக்கு இன்றியமையாததாகத் திகழ்ந்துள்ளன.

## வணிக சங்கங்கள்

வணிகர்களிடையே சங்கங்கள் தோன்றப் பல காரணங்கள் இருந்தன. இவர்கள் வியாபாரத்தின் பொருட்டு மற்ற இடங்களுக்குச் செல்லும்பொழுது காடுகளையும், மலைப்பகுதிகளையும் கடந்து சென்றனர், ஆறலைக்கள்வர்கள், காட்டு மிருகங்கள் போன்றவற்றின் இன்னல்கள் அதிகம் இருந்ததை இலக்கியங்கள் விளக்குகின்றன. வணிகர்கள் இரவு நேரங்களில் தங்கி இருக்கும்பொழுது தங்களுடைய வீரதீரங்களைப் பற்றிப் பேசிக்கொள்வார்கள். இவ்வாறு பேசுவதால், அதனைக் கேட்ட திருடர்கள் பயந்து ஓடிவிடுவர். வணிகர்களின் தொகை பெருகியதால் வியாபாரம் நேர்மையாகவும், முறையாகவும் நடைபெறவேண்டுமென எண்ணினர். இதையே கல்வெட்டுகள் "சமய தன்மம் இனிது நடத்துகின்ற" என்று கூறுகின்றது. அதாவது, வணிகச் சங்கங்கள் வகுத்த சமய தர்மத்தின்படி வியாபாரம் செய்கின்ற வணிகர்கள் என்பது பொருள். ஆகவே, வணிகர்கள் நேர்மையைக் கடைப்பிடிக்கவும், தங்களுக்குப் பெருவழிகளில் வருகின்ற இடர்ப்பாடுகளைக் களையவும் சிறிய வணிகர்கள் பெரிய வணிகர்களுடன் சேர்ந்து சென்றனர். தமிழ்நாட்டில் இத்தகைய நிலைகளே "சங்கங்கள்" தோன்றக் காரணமாகும்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மாதவா என்ற சட்ட வல்லுனர் "கிராமத்தில் நடைபெறுகின்ற நல்ல செயல்களை நடைமுறைப்படுத்த, கெட்ட நிகமத்தில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால்தான் முடியும் என்கின்ற காரணத்தால் இத்தகைய சங்கங்கள் ஏற்பட்டன" என்று கூறுகின்றார். வடஇந்தியாவில் மௌரியர் காலத்தில் இருந்தே இந்தச் சங்கங்கள் காணப்படுகின்றன. பொருட்களைத் தனித்து விற்பனை செய்ய இயலாத காரணத்தால் வணிகர்கள் ஒன்றாகச் சேர்ந்துக்கொண்டனர். கைவினைஞர்கள் தங்களுடைய அந்தஸ்தை நிலைநிறுத்துவதற்கு வணிகர்கள் சங்கங்களுடன் சேர்ந்துகொண்டனர். ஐரோப்பிய நாடுகளிலும் சங்கங்கள் இருந்தன. அங்கு திருடர்களின் கொடுமைகளைத் தாங்காமலும், வளர்கின்ற நகரத்தின் தேவையை பூர்த்தி செய்யும்பொருட்டும், வேறுசில இடங்களில் வேலையாட்களின் பற்றாக்குறையினால் ஒருவகையான வேலையாட்களைத் தனக்குள் அடக்கி வைத்துக்கொள்ள முயன்றனர். பொருட்களை விற்பனை

செய்யப் பொது இடங்கள் தேவைப்பட்டதாலும், கைவினைஞர்கள் வியாபாரிகளாக மாறியதாலும் சங்கங்கள் தோன்றின என்று கூறப்படுகின்றனது.

சங்கங்கள் முதலில் வணிகர்களிடம் மட்டுமே காணப்பட்டன. மத்திய காலத்தில் இவை வணிக சங்கங்கள், கைவினைஞர் சங்கங்கள்[9] என இரண்டாகப் பிரிந்தன. கைவினைஞர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களைத் தாங்களே விற்பனை செய்ய வேண்டியிருந்தது. இவர்கள் வணிகர்களுடன் போட்டியிட்டுப் பொருளை விற்பனை செய்தனர். இவர்களால் தனி மனிதனாக வணிக கூட்டங்களுடன் "வியாபாரம் செய்ய இயலவில்லை. கைவினைஞர்கள் சமூகத்தில் கீழ்த்தரமாக மதிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை. எனவே, தங்களுடைய உரிமைகளைப் பெறவேண்டி, உற்பத்திப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்க வேண்டிச் சங்கங்களை அமைத்துக்கொண்டனர். முதலாம் இராசராசனின் தஞ்சைக் கல்வெட்டில் ஆடு மேய்க்கின்ற இடையர்கள் தங்களுக்குள் ஒரு சங்கம் வைத்திருந்தனர் எனக் குறிக்கப்படுகிறது. அந்தச் சங்கத்தைச் சேர்ந்த "ஏரன் சாத்தன்" என்பவன் கோயிலுக்கு வேண்டியவைகளைச் சேர்த்துக் கொடுத்ததாகத் தெரிகின்றது. இத்தகைய சங்கங்களை எல்லாக் கைவினைஞர்களும் வைத்திருந்தனர்.

சங்கங்கள் முதலில் சாதி அடிப்படையில் இருந்தன. பரம்பரை பரம்பரையாக ஒரு தொழிலை, ஒரு குறிப்பிட்ட சாதியினரே செய்து வந்தனர். இவர்களுடைய சங்கத்தில் மற்றவர்கள் இருந்ததாகத் தெரியவில்லை. விஞ்ஞானீஸ்வரர், "ஒருதொழிலைச் செய்கின்ற எல்லாவகையான சாதியினரும் ஒரு தொழில் சங்கத்தில் இருக்கலாம். ஆனால், பலதரப்பட்ட வர்ணத்தைச் [Varnas] சார்ந்தவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்று கூறுகின்றார். சோழர் காலத்தில் பல சாதியினர் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துள்ளனர். இதற்கு உதாரணமாக "ரதக்காரர்கள், கீழ்கலனை, அஞ்சுவண்ணத்தார்" போன்றவர்களைக் கூறலாம். முதலாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டு பல தொழில் செய்த கைவினைஞர்களை ஒன்றாகச் சேர்த்து "ரதக்காரர்கள்" என்று அழைக்கிறது. இதில் தச்சர், கொல்லர், மணிவினைஞர், தட்டார், ஓவியர், வண்ண கம்மியர்

போன்ற தொழில்களைச் செய்பவர்கள் இருந்தனர். இவர்கள் "அறுவகைத்தொழில் நால்வகை ரதக்காரர்" என்று குறிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு முதலைக்கொடி சின்னமாக இருந்தது. அக்கசாலையையும் தங்களுடைய ஆளுகையின்கீழ் வைத்திருந்தனர். பிராமணர்களும், சத்திரியர்களும், வைசியர்களும் தேவையான பொருட்களை ரதக்காரர்களிடம் இருந்தே பெற்றனர். சோழர் காலத்தில் ஏற்பட்ட கலைச் சிறப்பு வாய்ந்த சிற்பங்களை வடித்துக்கொடுத்த பெருமை இவர்களையே சாரும்.

## சோழ நிகமம்

வணிகர்கள் வாழ்ந்த இடம் "நிவேஷ்" என்று அழைக்கபடுகின்றது. இந்தச்சொல் நாளடைவில் "நெகமா" என்று மறுவி வழங்கியது. மௌரியர் காலத்திய முத்திரையிட்ட காசு ஒன்றில் ஒருபுறம் "நெகமா" என்று பொறிக்கப்பட்டுள்ளது. நெகமா என்று இருப்பதால், இந்தக் காசு வணிகர்களால் வெளியிடப்பட்டது எனலாம். பிருஹத்தல்ப சூத்திர பாஷ்யம் என்ற நூல் இருவகையான நிகமங்கள் இருந்ததைக் கூறுகின்றது. ஒன்று சரக்குகளைச் சேர்த்து வைக்குமிடம் மற்றொன்று சரக்குகளைச் சேர்ந்துவைக்காத இடம். முதலாவது இடத்தில், அடமானம் மூலம் வியாபாரம் நடைபெற்றது. இரண்டாவது இடத்தில், வட்டிக்கு சரக்குகளைக் கொடுப்பதைத் தவிர மற்ற எல்லாவகையான வியாபாரமும் நடைபெற்றது. இதே காலத்தில் தமிழ்நாட்டிலும் இத்தகைய நிகமங்கள் இருந்துள்ளன. மீனாட்சிபுரம் தமிழி கல்வெட்டில் நெகமம் என்ற சொல் வருகின்றது. இது வெள்ளறை நிகமத்தில் உள்ள வணிகர்கள் செய்த தானம் பற்றியது. காலம் கி.மு. 2, 3 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறுவர். இதைப் போன்றே சோழர் காலத்திலும் ஒரு நிகமம் இருந்தது. கி.பி. 10 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சென்னை அருங்காட்சியகச் செப்பேட்டில் "சோழ நிகமம்" இருந்ததைப் பற்றியும், இங்குள்ள வணிகர்கள் கோயிலுக்குத் தேவையான பொருட்களைக் கொடுத்ததைப்பற்றியும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

## வணிகக் கல்வெட்டுகள்

சோழர் காலத்திய வணிகர்களின் கல்வெட்டுக்கள் சில தனிப்பலகைக் கல்லில் கிடைக்கின்றன. இந்தக் கல்லின் முன்பக்கம் சில சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அவை மகிசாசூரமர்த்தனி,

குடை, சாமரம், கத்தி, சுருள், கொடுவாள், சூலம் மற்றும் பல யூகிக்க முடியாத உருவங்களைக் காணலாம். இந்தக் கருவிகள் வணிக வீரர்கள் வைத்திருந்த படைக் கருவிகளாக இருக்கலாம். வணிகர்களுக்குத் தனிக்குடை இருந்தது என்பதை இதனால் அறிகிறோம். இந்தச் சின்னங்களுக்குக் கீழ் கல்வெட்டு காணப்படுகின்றது. நானாதேசி, நகரம், எறிவீரர், முனைவீரர், கொங்காள்வர், மணிக்கிராமத்தார், வளஞ்சியர் போன்றவர்களும் மற்றும் பலரும் வணிகச் சங்கங்கள் வைத்திருந்தனர்.

அஞ்ஞூற்றுவர் வணிகர்களிலே சிறந்து விளங்கியவர்கள். இவர்கள் "அய்யம் பொழில்" என்ற இடத்தைத் தலைமை இடமாகக் கொண்டு பல இடங்களுக்கும் சென்று வியாபாரம் செய்துள்ளனர். இவர்களுடைய கல்வெட்டு மத்திய இந்தியா, கருநாடகம், தமிழகம், ஆந்திரம், கேரளம் போன்ற பகுதிகளில் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, சுமத்திரா போன்ற நாடுகளிலும் கிடைக்கின்றன. அவர்கள் திரிந்து சென்று வியாபாரம் செய்கின்றவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்கின்றனர். இவர்களுக்கென்றே கல்வெட்டில் தனி மெய்க்கீர்த்தி உண்டு.

பல வணிகர்கள் நகரங்களுடன் சேர்ந்த ஒரு பகுதியில் வாழ்ந்து வந்தனர். சாலிய நகரத்தார், சங்கரப்பாடி நகரத்தார், வாணிய நகரத்தார், பெரு நகரத்தார், பாரக நகரத்தார் மற்றும் பலர் இந்த நகரத்தார் சங்கத்தைச் சார்ந்தவர்களே. சாலிய நகரத்தார் துணி, நூல் வியாபாரிகள் ஆவர். சோழர் காலத்தில் பல இடங்களில் இவர்களைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சிதம்பரத்தில் இவர்களுக்கு தனி வீதி ஒன்று இருந்தது. சோழர்களுக்கென்றே தனியான ஒரு சாலியப் பிரிவினர் இருந்தனர். அவர்கள் "சோழ சாலியர்" என்று பெயரிட்டு அழைக்கப்பட்டனர். சங்கரப்பாடியார் பற்றிய கருத்துக்கள் வேறுபாடானவை. "சங்கர என்பதற்குப் பலவகையான சாதியைச் சார்ந்தவர் என்றும், பாடி என்றால் குடியிருப்பு என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. "செக்கு என்பது "சக்கு" சக்கரம்-சக்ரபாடி, சங்கரப்பாடி என்று மறுவி வந்ததாகவும் கூறப்படுகின்றது. இவர்கள் எண்ணெய் வியாபாரிகள் ஆவர். சென்னை அருங்காட்சியகச் செப்பேடு சங்கரப்பாடியார்களுக்கென்று இருபத்தைந்து வீடுகள் இருந்ததாகக் கூறுகின்றது. உத்தரமேரூர்க் கல்வெட்டிலும் இவர்களுடைய பெயர்கள் இடம் பெற்றிருக்கிறது.

வாணிய நகரத்தார்கள் இவர்களிடமிருந்து சிறிது மாறுபட்டவர்கள். இவர்களும் எண்ணெய் வியாபாரிகள் ஆவர். வாணிய நகரத்தார்கள் சங்கரப்பாடி நகரத்தார் பெற்றிருந்த மதிப்பை பெறவில்லை. நகரத்தின் நடைமுறைகளைப்பற்றி கவனிக்கும் வாரியம் நகரவாரியம் எனப்படும். தில்லைஸ்தானம் கல்வெட்டு நகர வாரியத்தில் உள்ளவர்கள், நகர வாரியம் நடத்துகின்ற கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று கூறுகின்றது. திருச்சிராப்பள்ளி, வாலிகண்டபுரம் கல்வெட்டில் "நகரக்காணி" பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. எனவே, நகரத்தாருக்கு நிலக் காணியாட்சியும் இருந்தது தெரியவருகின்றது. மணிக்கிராமத்தார் சோழர்காலத்தின் முற்பகுதியில் இருந்து வியாபாரம் செய்து வந்துள்ளனர். பல கொடும்பாளூர் மணிக்கிராமத்தார், உறையூர் மணிகிராமத்தார், வாலிகண்டபுர மணிக்கிராமத்தார் போன்றோர் பல இடங்களில் காணப்படுகின்றனர். இவர்கள் உள்நாட்டில் மட்டுமின்றி வெளி இடங்களிலும் வியாபாரம் செய்து வந்துள்ளனர்.

### வணிக வீரர்கள்

வணிகர் தங்களுடைய பொருட்களை பாதுகாக்கவும், வழித்துணையாக வருவதற்கும் வீரர்களை வைத்திருந்தனர். இவர்கள் வணிகர்களுடன் சேர்ந்தே குறிக்கப்படுகின்றனர். செட்டிபுத்திரர்கள், முனைவீரர்கள் எறிவீரர்கள், கொங்காள்வார் மற்றும் பலர் கல்வெட்டுக்களில் வருகின்றனர். கொங்குவால் என்பவர்கள் கத்தியை கையில் வைத்திருக்கும் கொங்கு நாட்டைச் சார்ந்த வீரர்கள். இவர்கள் வணிகர்களுடைய பாதுகாவலுக்கு வணிகர்களுடன் செல்பவர்கள் என்று கூறலாம். எறிவீரர்கள் என்பவர்களும் ஒரு வகையான வணிகர்கள். "எறி" என்றால் "வழி" என்று பொருள் உள்ளது. ஆகவே "வழியில் உள்ள வீரர்கள்" என்று பொருள் கொள்ளப்படுகின்றது. இந்த வீரர்கள் வணிக சங்கத்தின் ஒரு அங்கமாவர்.

### சங்கங்களின் நெறிமுறைகள்

சங்கங்கள் தங்களுக்குள் பல நெறிமுறைகளை வைத்திருந்தது என்பதற்கு வெளிப்படையாகச் சான்றுகள் இல்லையென்றாலும், சில கல்வெட்டுகளில் வருகிற நடைமுறைகளைப் பற்றி ஆராயும் போது இவை இருந்திருக்க வேண்டும் என்று யூகிக்க முடிகிறது.

சங்கங்களின் நடைமுறைகளை மீறி நடப்பவர் தண்டிக்கப்பட்டனர். இவர்கள் அந்தச் சங்கத்தில் இருந்து நீக்கப்படுவதோடு நாட்டிலிருந்தும் நீக்கப்படுவார்கள். அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டவர்கள் மற்ற வணிகச் சங்கங்களுடன் சேர்த்து விடாமல் பார்த்துக் கொள்வார்கள்.

சோழர் காலத்தில் இத்தகைய நிகழ்ச்சி ஒன்று தென் ஆற்காடு மாவட்டம், நல்லூரில் கிடைத்த கல்வெட்டில் தெரிய வருகின்றது. அங்கு நிலவிய பஞ்சத்தால் மக்கள் தங்களுடைய வீட்டு மனைகளை விற்று விட்டு, வெளி இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது சாதி சபையினர் 25 புடவைகளை இவர்களுக்கு தானமாக கொடுத்து போகாமல் தடுத்து விட்டனர். அத்துடன் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் வெளியாட்களுக்கு விற்பனை செய்யக் கூடாது என்றும், இதை மீறி நடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறுகிறது. தண்டனையாக 65 கழஞ்சு பொன் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் இந்தச் சபையில் இருப்பதற்கான உரிமையை இழக்க வேண்டும் என்றும் காணப்படுகின்றது. இரண்டாம் இராசேந்திரனின் காலத்தைச் சார்ந்த நார்த்தாமலைக் கல்வெட்டில் தேவதான நிலத்தை நகரத்தார் சங்கம் பகிர்ந்து கொடுத்து நடைமுறைகளைப் பார்க்க பல அதிகாரிகளை நியமனம் செய்துள்ளனர் எனக் குறிக்கப்படுகிறது. வீரசோழப் பேரங்காடியை மதுராந்தக நகரத்தார் சங்கம் மேற்பார்வை செய்துள்ளது.[32] இதை மேற்பார்வை செய்தவர்கள் வியாபாரி பட்டன், இரண்டு செட்டிகள், மதுராந்தக நகரத்தார் சங்கத்தைச் சார்ந்தவர் ஆவர். இவர்களுடைய சங்கக் கூட்டங்கள் பொது இடங்களிலும், கோயில்களிலும் நடைபெற்றுள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல கொங்குநாட்டுக் கல்வெட்டுக்களில் கம்மாளர்கள் தங்களுக்குச் சில உரிமைகள் வேண்டும் என்று கோரியுள்ளனர். திருமண காலத்தில் இரட்டைச் சங்கு ஊதிக்கொள்ளும் உரிமை, செருப்பு அணிந்து கொள்ளும் உரிமை போன்ற அடிப்படையான உரிமைகளைப் பெற்றுள்ளனர். இவற்றையெல்லாம் நோக்குங்கால் இவர்களுக்குள் ஒரு அமைப்பு இருந்தது என்பதையும், அந்த அமைப்பே "சங்கம்" என்பதையும் உறுதியாகக் கூறலாம்.

### *சங்கங்களும், அரசியலும்*

சமூகத்தில் வணிகர்கள் அரசனுக்கு அடுத்த இடத்தில் வைத்து மதிக்கப்பட்டனர். வணிகர்களுக்காக எழுந்த சில

காப்பியங்களும் உள்ளன. சிலப்பதிகாரம் இவர்களை "அரசர் பின்னோர்" என்று அழைக்கின்றது. இவர்கள் அரியணை ஏறும் வாய்ப்புப் பெற்றவர் என்பதைப் பெரியபுராணமும் எடுத்தியம்புகின்றது. கருநாடர் மன்னர் வாரிசின்றி இறந்தவுடன், மூர்த்தியார் என்ற வணிகனுக்கு முடிசூட்டி அரசுரிமை அளிக்கப்பட்டுள்ளது. சோழர் காலத்தில் முதலாம் குலோத்துங்கன் அரியணையைப் பெற உதவியுள்ளான்.

வலங்கை, இடங்கைப் பிரிவுகள் சோழர் காலத்தில் செல்வாக்குப்பெற்றுள்ளது. இடங்கைப் பிரிவில் பெரும்பாலும் வணிகர்களும், கைவினைஞர்களும் இருந்தனர், கி.பி. 1218 - ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டில் இடங்கை 98 பிரிவில் உள்ளவர்கள் ஒரு தாய் மக்களாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றது. "அஞ்சுவண்ணத்தார்" இடங்கைப் பிரிவின் முக்கியமான கூறாக கருதப்படுகின்றது. இந்த பிரிவினர் வரி கொடுமையைத் தாங்காமல் பல இடங்களுக்கு வேலை தேடிச் சென்றனர் என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. திருச்சி மாவட்டம், ஆடுதுறையில் உள்ள கல்வெட்டு வலங்கைப் பிரிவினர் அரசாங்க அதிகாரிகளுடன் சேர்ந்துகொண்டு இடங்கை 98 பிரிவினர்களுக்கு இழைத்த அநீதியைக் கூறுகின்றது.

ஸ்ரீரங்கம் கல்வெட்டில் வலங்கை, இடங்கை ஆகிய பிரிவினருக்கு இடையே கலகம் ஏற்பட்டதாக அறிகின்றோம். வணிகச் சங்கங்கள் வரிச்சுமையைத் தாங்க முடியாமலும், தங்களுடைய சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளவும் இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தக் காலத்தில் வணிகர்களுடைய படைகளுக்கும், அரசனுடைய படைகளுக்கும் இடையே சண்டை நடந்தது. இந்தக் கலகத்தை முதலாம் குலோத்துங்கன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். ஆகவே, இந்தக் காலத்தில் அதிராசேந்திரன் உயிர் துறந்தான். இவனை அடுத்து, குலோத்துங்கன் அரசாட்சியைப் பெற்றான். கலகத்திற்குச் சாதகமாக இருந்த வணிகர்களுக்குக் கைமாறாக "சங்கம்" என்ற வரியை வாங்குவதைத் தவிர்த்து, அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றான்.

*சித்தரமேழிப் பெரிய நாட்டார்*

12 - ஆம் நூற்றாண்டில் சித்திரமேழிப் பெரியநாட்டார் சோழ நாட்டில் மிகுந்து காணப்பட்டனர். இவர்கள் தங்களுக்கென்று தனிக் கொடி (சித்திரமேழி) வைத்திருந்தனர். இவர்களுடைய தொழில் விவசாயம் ஆகும். கொங்கு நாட்டைச் சேர்ந்த விசயமங்கலம் கல்வெட்டில், சித்திரமேழி விண்ணகரத்தாழ்வார் கோயில் இடங்கைப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறுகின்றது. பிரான்மலைக் கல்வெட்டிலும் சித்திரமேழிப் பெரிய நாட்டாருக்கும், வணிகர்களுக்கும் தொடர்பு இருந்தது தெரிகின்றது. ஆகவே, இவர்கள் பிற்காலத்தில் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்க வேண்டி, வணிகர்களுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் வைத்திருந்தனர் எனத் தெளிவாகத் தெரிகின்றது.

சோழர் காலத்தில் பல நகரங்கள் உருவாவதற்கு வணிகச் சங்கங்களும், கைவினைஞர் சங்கங்களும் உதவியுள்ளன. பெரும்பாலும் ஒவ்வொரு நாட்டுப் பிரிவிலும் ஒரு நகரம் இருந்துள்ளது. சிதம்பரம், சோழர் காலத்தில் சிறப்படைந்த ஒரு நகரம். இதை நகரமாக்கப் பல கைவினைஞர்களும், வியாபாரிகளும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்கள் வியாபாரிகள், வெள்ளாளர், சங்கரப்பாடியர், சாலியர், பட்டணவர் இவர்களுடன் தச்சர், கொல்லர், தட்டார், கோலியர் ஆகியோர்களும் ஆவர். இவர்களுக்கென்று தனித்தனி வீதிகள் அமைத்து குடியமர்த்தினர். திருவாரூர் நகரமும் மூன்று பெரிய வீதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. சாலிய நகரத்தார் வாழ்ந்த வீதியை செயசிங்க குலகாலப்பெருந் தெருவு என்றும், ஆடு மேய்க்கின்ற இடையர் வாழ்ந்த பகுதியைத் திரிபுவன சுந்தரப் பெருந்தெருவு என்றும், சிற்பிகளும் கைவினைஞர்களும் வாழ்ந்த பகுதியை நாற்பத்தெண்ணாயிரம் பெருந்தெருவு என்றும் பெயர் வைத்துள்ளனர். தஞ்சையில் நகரத்தார் தெருக்கள் இருந்துள்ளன. அவை நித்தவினோதப் பெருந்தெருவில் நகரத்தார், மும்முடி சோழப் பெருந்தெருவில் நகரத்தார், திரிபுவனமாதேவிப் பேரங்காடி நகரத்தார் முதலியன.

சங்க காலத்திலிருந்து காணப்பட்ட வணிகச் சங்கங்கள் சோழர் காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. இவைகள் உள்நாட்டு

வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம் ஆகியவற்றைச் செய்து சோழர்களின் செல்வாக்கை பெருக்கின. இந்த சங்கங்கள் சோழர் ஆட்சிக்குப்பின் வலிமை இழக்கத் தொடங்கின. எனினும் விசயநகர காலத்திலும் சில இடங்களில் சங்கங்கள் நிலைபெற்று இருந்தன. சங்கங்கள் கைவினைஞர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்த பாடுபட்டதுடன், தற்காலத் தொழிற் சங்கங்கள் ஏற்படவும் வழிவகுத்துள்ளன.

## துணை நூல் பட்டியல்


1. K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisations in Ancient India, p. 53.
2. A. Appadurai, Economic conditions in Southern India, p.336
3. சுப்பிரமணியம், இந்திய வணிக நெறிகள், தமிழாக்கம் ப. 298.
4. K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisations in Ancient India.
5. A. Appadurai, Economic Conditions in Southern India, p.248.
6. Ramilathapar, A History of India p. 109.
7. The Pre capitalistic Socia Economic Formations, A collection PP. 42-43.
8. The Pre capitalistic Socia Economic Formations, A collection P. 40
9. T.V. Mahalingam, South Indian Polity, p.392.
10. S.I.I. Vol. III. p. 18.
11. A. Appadurai, Economic Conditions in Southern India, p.357.
12. Vijuunesvara The Mitaksara, II, p.30.
13. Burton Stein, Peasant State and Society in Medieval South India, p. 198.
14. K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisations in Ancient India. pp. 28,29.
15. சுப்பிரமணியம், இந்திய வணிக நெறிகள், தமிழாக்கம் ப. 296.
16. Memoriss Series, No.6, Coins and Early Indian Economy, pp. 170-171.
17. சுப்பிரமணியம், இந்திய வணிக நெறிகள், தமிழாக்கம் ப. 296.
18. இரா. நாகசாமி, கல்வெட்டியல், பக். 49,50.
19. Iravatham Mahadevan, Tamil Brahmi Inscription, p.14.

20. S.I.I. Vol. III. p. 128.
21. தொல்லியல் கருத்தரங்கு, தொகுதி 1, வீரபட்டணக் கல்.
22. K. Indrapala, Some Medieval Mercantile Communities of South India and Ceylon. p. 30
23. Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas p. 54.
24. Ibid.
25. எஸ். வைத்தியநாதன், சங்கரபாடியார், சைவசித்தாந்தம் (இதழ்).
26. Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas pp. 56-7.
27. K.A. Nilakanta Sastri, Tamil Merchant Guild in Sumatra, p.139.
28. Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas p. 143.
29. Imperial Gazetter, vol. V, p. 101.
30. Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas p. 121.
31. Ibid, pp. 59-60.
32. A.R.E., 395 of 1922.
33. கோவை, பதிவு அலுவலர் கல்வெட்டுப் பதிவேடு.
34. ஆராய்ச்சி, மலர் 1: இதழ் 1, பக். 49.
35. சேக்கிழார், பெரியபுராணம், மூர்த்திநாயனார் புராணம்.
36. Burton Stein, Peasant State and Society in Mediaeval South India, pp. 182-3.
37. Ibid, p. 196.
38. A.R.E 34 of 1913.
39. S.I.T.T. Vol, III, part II, p.800.
40. Ibid. p. 76.
41. A.R.E 546 of 1905.
42. K.V. Subramanya Aiyar, Largest Provincial Organisation in Ancient India, p.60.
43. Kenneth R. Hall, Trade and State craft in the age of the Colas, pp.52-3.
44. K.A. Nilakanta Sastri, The Colas, pp. 449-50.

★★★

# தெலுங்குச் சோழர்கள்

**ர. சாந்தகுமார்**

காப்பாளர்,

தொல்லியல் துறை, குற்றாலம்

தென்னிந்தியாவின் தெலுங்குப் பகுதியை இடைக்காலத்தில் அரசாண்டவர் தெலுங்குச் சோழர்கள். சுமார் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் ஆண்ட புண்ணிய குமாரன் சோழ ராசாவின், மலேபாடு சாசனத்தில் ரேனாண்டு ஏழாயிரம் சீமையை ஆண்ட தெலுங்குச் சோழரின் நான்கு தலைமுறை விளக்கப்பட்டிருக்கிறது. ரேனாண்டின் எல்லை கிறுதோர் என்று பாகிபல்லி கல்வெட்டிலிருந்து அறிகிறோம். இந்த கிறுதோர் வடபெண்ணை ஆற்றின் கிளையான குந்தேறு ந்தியாக இருக்கலாம் என்று அறிகிறோம். கடப்பை, கர்நூல், அனந்தப்பூர் மாவட்டங்களைக்கொண்டது ரேனாண்டு ஏழாயிரம். உறையூரை ஆண்டவனும், காவிரிக்கு அணை கட்டியவனும், காசியப கோத்திரத்தில் பிறந்தவனுமான கரிகாலனின் மரபினர் என்று இவர்கள் தம்மைச் சொல்லிக் கொண்டார்கள். களப்பிரரின் படையெடுப்பினால் மங்கிய சோழ வம்சத்தின் கிளையினர் பல இடங்களில் குடியேறிச் சிறுசிறு நாடுகளை நிறுவிக்கொண்டனர். இவர்களில் ஒருவர் ரேனாண்டு தெலுங்குச் சோழர்கள்.

மலேபாடு சாசனத்தில் கண்ட முதல் மன்னன் நந்திவர்மன். இவனுக்கு மூன்று குமாரர்கள். அவர்களில் ஒருவனான தனஞ்சயவர்மனின் மகன் சோழ அரசன் விக்கிரமாதித்த சத்தியாதித்தனும், அவன் மகன் புண்ணிய குமாரனும் பல சிறப்புப் பெயர்கள் கொண்டவர்கள்.

சித்தி (சித்த வட்டம்) ஆயிரமும் இச்சீமையோடு சேர்க்கப்பட்டது. இது, பாதாமி சாளுக்கிய மன்னர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. இரண்டாம் நந்திவர்ம பல்லவ அரசனின் வேலூர்ப்பாளையச் சாசனத்தில் குறிக்கப்பட்ட குமராங்குச் சோழ

அரசனும் இந்த வம்சத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம். ரேனாண்டு தெலுங்குச் சோழ வம்சம் வைதும்பரால் வெல்லப்பட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் மறைந்தது.

கி.பி. 10 - ஆம் நூற்றாண்டில் ஜடாசோடனின் புதல்வன் பீமன், இராட்டிரகூட 3 - ஆம் கிருஷ்ணனுக்கு சிற்றரசனாக இருந்து பெடக்கல்லு (கர்நூல் மாவட்டம்) நகரத்திலிருந்து கிருஷ்ணா நதிக்குத் தெற்கிலுள்ள சில நாடுகளை ஆண்டு வந்தான். வைதும்ப மன்னன் கண்டதிருநேந்திரனை வென்று, வேங்கி மன்னன் தானார்ணவனையும், அவன் தம்பி விமலாதித்தனையும் கொன்று, காமார்ணவனையும் வென்றான். வேங்கியும், கலிங்கமும் இவன் ஆணைக்கு அடங்கின. வேங்கி இளவரசர்கள் சத்திவர்மனும், விமலாதித்தனும் சோழப்பேரரசன் முதலாம் இராசராசனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். இராசராசனும் பீமனுடன் போர் புரிந்தான். கி.பி. 1001 - இல் காஞ்சியைப் பிடிக்க பீமன், சோழப் பெரும் படையின் உதவியால் சக்திவர்மனால் தோற்கடிக்கப்பட்டு மாண்டான்.

சோழப் பேரரசில் முதலாம் இராசராச சோழனுக்கு முன் தெலுங்குச் சோழர்களைப் பற்றிய குறிப்பு காணப்படவில்லை. முதலாம் இராசராச சோழன் தன் அதிகாரத்தால் பல நாடுகளை வென்றான். அதன்பிறகு தெலுங்குச் சோழர்களைப் பற்றிய குறிப்புகள் தெரியவருகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில், முதலாம் இராசராச சோழன் கல்வெட்டில், பொத்தப்பிச் சோழன் சத்தியரையன் என்ற ஒரு பெயர் குறிப்பிடப்படுகிறது.

முதலாம் இராசராச சோழனுக்குப் பின்வந்த அரசர்கள், தெலுங்கு தேசப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தியபோதும், தெலுங்குச் சோழர்களைப் பற்றிக் குறிக்கவில்லை. ஆனால், முதலாம் குலோத்துங்கசோழன் காலத்தில் தெலுங்குச் சோழர்களைப் பற்றிய குறிப்புகள் சில கிடைக்கின்றன:

### முதலாம் குலோத்துங்க சோழனின் தெலுங்குச் சிற்றரசர்கள்

1. கங்கைகொண்ட இராசராச தேவன் என்கின்ற பொத்தப்பிச் சோழர் (கி.பி. 1071).
2. பொத்தப்பி காமதேவ சோழ மகாராசா (கி.பி. 1106).
3. மகாமண்டலேசுவர கரிகால சோழ மகாராசா (கி.பி. 1107).

4. மகா மண்டலேசுவர பிரகோட்டத்து சூரப்ப ராசா (கி.பி. 1112).

5. முதலாம் கொங்கனும் அவன் மகன் சோழனும்.

கங்கைகொண்ட இராசராசதேவன் என்கின்ற பொத்தப்பிச் சோழ சிற்றரசன் சோழப் பேரரசில் பணிபுரிந்தவன்.

பொத்தப்பி காமதேவ சோழ மகாராசா மகாமண்டலேசுவர கரிகால சோழ மகாராசனாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இவன் கர்நூல் மாவட்டத்தின் ஒரு பகுதியை ஆட்சி புரிந்தவன்.

முதலாம் கொங்கனும், அவன் மகன் சோழனும் ஆந்திராவிலுள்ள வேலந்தியை ஆண்டு வந்தனர். குலோத்துங்கச் சோழன் இவர்களுடன் நல்லுறவு வைத்திருந்தான். மேற்குச் சாளுக்கிய மன்னன் ஆறாம் விக்ரமாதித்தன் வேங்கி மண்டலத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும் கைக்கொண்டபொழுது முதலாம் கொங்கனும், அவன் மகனும் சாளுக்கியனுக்குச் சிற்றரசர்களாக மாறிவிட்டனர்.

### விக்கிரம சோழன் காலத்து தெலுங்குச் சோழ சிற்றரசர்கள்

வேலநாண்டு முதலாம் இராசேந்திர சோழன் என்பவனும், விக்கிரம சோழ பேரரசனின் 12 - ஆம் ஆட்சியாண்டில் குறிப்பிட்டுள்ள சோழியன் என்கின்ற இராசேந்திர சோழ கங்கராசன் என்பவனும் ஒருவனாகவே அறிகிறோம். வேலநாண்டு முதலாம் இராசேந்திரசோடனின் மகன், இரண்டாம் கொங்கனும் விக்கிரம சோழனின் சிற்றரசன் என்பதனை விக்கிரமசோழனின் மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம். விக்கிரமசோழன் மேற்குச் சாளுக்கியனின் மீது கொண்ட வெற்றியினால் வேலநாண்டு சிற்றரசர்கள் விக்கிரமசோழனின் தலைமையை ஏற்றுக் கொண்டனர். விக்கிரம சோழன் மேற்குச் சாளுக்கிய மன்னனை எதிர்த்துப் போர் புரிந்தபொழுது தெலுங்குச் சோழ சிற்றரசர்கள் விக்கிரம சோழனுக்கு உதவி புரிந்துள்ளனர்.

### இரண்டாம் குலோத்துங்கனின் சிற்றரசர்கள்

வேலி நாடு (அ) வேலநாண்டு குலோத்துங்க சோழ இரண்டாம் கொங்கராசன் என்கின்ற மகாமண்டலேசுவர கொங்கையனும்

இரண்டாம் கொங்கனும் ஒருவரே ஆவர். இரண்டாம் கொங்கன் ஸ்ரீசைலத்திற்கும், மகேந்திரமலைக்கும் இடைப்பட்ட பகுதியை ஆண்டிருக்கவேண்டும்.

இப்பேரரசனின் மற்றொரு சோட சிற்றரசன் மகாமண்டலேசுவர பல்லாய சோட மகாராசா. இவனுடைய கல்வெட்டு குண்டூரில் கிடைப்பதால் இவன் இப்பகுதியை ஆண்டிருக்கலாம் என்பதை அறிகிறோம்.

குண்டூர் மாவட்டத்தில் உள்ள கோணிதேனாவை ஆண்ட "சிற்றரசன் திரிபுவனமல்லதேவ சோழ மகாராசனும் குலோத்துங்கனின் சிற்றரசனே.

மகாமண்டலேசுவர பீமநாயகன் என்னும் வேங்கி தேச சாளுக்கிய அங்ககார என்ற குடும்பப் பெயர் கொண்டவனும் இரண்டாம் குலோத்துங்கனின் தெலுங்கு சிற்றரசனேயாவான்.

நெல்லூர் மகாமண்டலேசுவர வீரநாயகன் நல்லசித்தரச தேவசோழனும் குலோத்துங்கச் சோழனின் சிற்றரசன். கடப்பாவில் கிடைக்கும் கல்வெட்டிலிருந்து நல்லசித்தரச தேவ சோழனுக்கும், பொத்தப்பி சிற்றரசனுக்கும் பகைமை இருந்ததை அறிகிறோம்.

### *இரண்டாம் இராசராச சோழனின் சிற்றரசர்கள்*

மகாமண்டலேசுவர திரிபுவன மல்லதேவன் மற்றும் வேலநாண்டு சிற்றரசனான இரண்டாம் கொங்கன் என்றழைக்கப்படும் குலோத்துங்கன் ஆகியோர் இரண்டாம் இராசேந்திரனின் தெலுங்கு சோழர் சிற்றரசர்களாக இருந்தனர். மதுராந்தக பொத்தப்பிச் சோழச் சிற்றரசர்களாக இருந்தனர். மதுராந்தக பொத்தப்பிச் சோழம(ல)தேவராசருடைய சகோதரன் விமலதேவனும் பேரரசனின் தலைமைக்கு அடிபணிந்தான்.

கரிகாலனின் வம்சத்தில் உதித்தவனான பொட்னசோழனின் மகனான மகாமண்டலேசுவர ஜிக்கிதேவ சோழ மகாராசனும் இரண்டாம் இராசராசனின் சிற்றரசன். இவன் ஆட்சி செய்த பகுதி எது என்று தெரியவில்லை. கோனமண்டல சிற்றரசன் இராசேந்திர கோனராகவும் இரண்டாம் இராசராசனின் சிற்றரசன். கொண்ட போதுமதி பூதராச என்ற சோழ சிற்றரசன் இரண்டாம் இராசராசனின் பேரரசிற்கு கீழ்ப்படிந்தான். இரண்டாம் இராசராசசோழப் பேரரசனின்

19 - ஆம் ஆட்சியாண்டுக்குப் பிறகு வேலநாட்டுச் சிற்றரசர்களில் இரண்டாம் குலோத்துங்க இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் தெலுங்கு தேசத்தில் காணப்படுகின்றன.

இரண்டாம் குலோத்துங்க இராசேந்திர சோடன் வேலநாண்டின் சிறந்த அரசன். இவன் இறந்தபின் அரசாட்சிக்கு அவனுடைய பிள்ளைகள் போட்டியிட்டனர். அதோடு காகதீய வலிமை பெருகியதால் வேலநாண்டு பலமிழந்தது. ஆனாலும் காகதீய கணபதி இதன் மீது படையெடுக்கும் வரை (13 - ஆம் நூற்றாண்டு வரை) வேலநாண்டு இருந்து வந்தது.

## மூன்றாம் குலோத்துங்கனின் தெலுங்குச் சோழ சிற்றரசர்கள்

மூன்றாம் குலோத்துங்கனுக்கு தெலுங்கு சோழர்கள் சிற்றரசர்களாக இருந்ததைத் தொண்டை மண்டலத்திலுள்ள கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். குலோத்துங்க சோழனின் 26 - ஆம் ஆட்சியாண்டில் நல்லசித்தன் குலோத்துங்கனின் சிற்றரசனாக மாறியுள்ளான். நல்லசித்தனின் பட்டத்தரசி பல தானங்கள் செய்துள்ளாள். இது பற்றிய செய்திகளை திருப்பள்ளிவனம் (செங்கை), காளஹஸ்தி (சித்தூர்), நந்தலூர் (கடப்பா) போன்ற இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. இத்தானங்கள் மூன்றாம் குலோத்துங்க சோழனின் 18,19 மற்றும் 24 - ஆம் ஆட்சி ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

மதுராந்தக பொத்தப்பிச் சோழர் நல்ல சித்தரசன் என்பவனுக்கு எர்ரசித்தா என்ற இளைய தம்பியும், மயிலம்மதேவி பொத்தராசா என்ற மகனும் இருந்தனர். எர்ரசித்தனுடைய மூன்று மக்கள் மன்மசித்தன், பொத்தராசன், தம்முசித்தன் என்பவராவார்.

நல்லசித்தன் ஆட்சி செய்து கொண்டிருக்கையில் மன்மசித்தன் இணையாக முடி சூடிக்கொண்டான். எர்ரசித்தாவும், மயிலம்மதேவி பொத்தராசனும் ஆட்சியில் மன்மசித்தனுக்கு வாய்ப்பளித்தார்கள். மன்மசித்தனின் தம்பி பொத்தராசன் வாரிசான சிறிது காலத்திலேயே தம்முசித்தனுக்கு கி.பி. 1205 - இல் முடியைத் தந்தான்.

தம்முசித்தனுக்கு அடுத்து வந்த தெலுங்குச் சோழர்களின் பரம்பரையைப் பற்றிய விவரம் குழப்பமாக உள்ளது. ஒரே பெயரையே

பலர் வைத்துக்கொண்டதாலும், பட்டப்பெயர்கள் ஒன்று போலவே தோன்றுவதாலும் பெருங்குழப்பம் ஏற்படுகிறது.

முதலாம் மன்மசித்தன் என்ற நல்லசித்தனுக்குப் பிறகு அவன் தம்பி தம்முசித்தன் கி.பி. 1205 - இல் ஆட்சிக்கு வருகிறான். இவனின் மூன்று கல்வெட்டுகள் காஞ்சியில் உள்ளன. தம்முசித்தனுக்குப் பிறகு முதலாம் திக்கன் என்ற அலுந்திக்க காளத்தி ஆட்சிக்கு வருகிறான். இவன் விக்கிரமசிங்கபுரத்தை ஆண்டதையும், காஞ்சியைக் கொண்டதையும், கம்படிரிப் போரில் சோமேசுவரனைத் தோற்கடித்ததையும் வீரராசேந்திரனின் 13 - ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம். ஏறக்குறைய 25 கல்வெட்டுகள் வரதராசப் பெருமாள் கோயிலில் உள்ளன. பெரும்பாலானவை மூன்றாம் இராசராசசோழனின் ஆட்சியாண்டைச் சேர்ந்தவை. இதிலிருந்து இவன் பெயரளவில் சிற்றரசனாக இருந்தான் எனத் தெரிகிறது. இவனின் முழுப்பெயர் மதுராந்தகபொத்தப்பிச் சோழன் திருக்காளத்திதேவன் என்ற கண்டகோபாலன். இவனின் கல்வெட்டு ஒன்றில் காஞ்சியைக் கைப்பற்றியதைக் கூறுகிறான். இவன் கோயில் பூந்தோட்டத்திற்கு அளிக்கப்பட்ட நிலத்திற்கு வரிவிலக்கு அளித்தான் இவன் விஷ்ணு கோயிலுக்கு வரிவிலக்கு அளித்ததை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம். கோயில் தோட்டப் பராமரிப்புக்கும், அன்னதானத்திற்கும் இவன் மனைவி இலக்குமிதேவி கொடையளித்தாள். இவள் யாதவராய சிற்றரசனின் மகளாக இருக்கலாம். இவன் பெயரில் கண்ட கோபாலப்பெருந்தெரு என்ற வீதி உள்ளதை இவனின் கல்வெட்டால் அறிகிறோம்.

### இரண்டாம் மன்மசித்தா என்கின்ற விஜயகண்டகோபாலன்

இவன் கி.பி. 1250 - இல் முதலாம் திக்கனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தான். இவன் மூன்றாம் குலோத்துங்கனின் சோழ சிற்றரசன் ஆவான். திரிபுவன சக்ரவர்த்தி விஜயகண்டகோபால தேவன் என்பது இவனுடைய முழுப்பெயர் என்று கல்வெட்டில் அறிகிறோம். இவன் தன்னைக் காஞ்சியின் அதிபதி என்று அழைத்துக்கொண்டான். இதிலிருந்து இவன் சுதந்திரமாக ஆட்சி செய்திருக்கிறான் என்று அறிகிறோம்.

### துணை நூல் பட்டியல்

1. Ep. Carn, Vol X, p. 62.
2. Ep. Ind. Vol XI, p. 337.

3. A.R.E. 49 of 1918
4. A.R.E. 415 of 1904.
5. A.R.E. 345 of 1893.
6. A.R.E. 103 of 1922.
7. A.R.E. 317 of 1929.
8. A.R.E. 446 of 1919.
9. S.I.I. Vol. IV, No. 851.
10. A.R.E. 620-1, 1919.
11. A.R.E. 46 of 1893; S.I.I. Vol IV, No. 859.
12. A.R.E. 609 of 1919.

★★★

# சோழர் காலத்தில் விளக்கு தானம்

**கி. ஸ்ரீதரன்**

பதிவு அலுவலர், தஞ்சாவூர்.

விளக்கு ஒரு மங்கலப் பொருள், புறத்திருளை நீக்கும் அகல் விளக்குப் போன்று, அகத்திருளை நீக்குவதற்கு, ஞான விளக்காகிய இறைவன் நமக்குத் துணை நிற்கவேண்டும். அத்தகைய இறைவனை அப்பர் பெருமான், உள்ளமாகிய தகழியில், உணர்வு என்னும் நெய்யை வார்த்து, உயிர்ப்பு என்னும் திரியைச் செவ்விதின் அமைத்து, ஞானம் என்னும் சுடரை ஏற்றி, அதைக்கொண்டு நோக்கினால் இறைவன் திருவடிகளைக் காணலாம் என்று கூறுகின்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இறைவனை 'சோதியே சுடரே சூழொளி விளக்கே 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி' 'சுடர்கின்ற கோலந்தீயேயென மன்னு சிற்றம்பலவர்' என்றெல்லாம் போற்றுகின்றனர்.

## கல்வெட்டுகளில்

இவ்வாறெல்லாம் போற்றப்படும் விளக்கை, இறைவன் ஆலயங்களில் ஏற்றிவைக்க, நாடாண்ட மன்னர்களும், மக்களும் தானம் அளித்தனர். விளக்குக்கு அளிக்கப்பெற்ற தானம் சிறந்ததாகக் கருதப்பட்டது. தமிழகத்தில் உள்ள கோயிற் கல்வெட்டுகளில் 90 விழுக்காடு கோயிலுக்கு விளக்குக்காக அளிக்கப்பெற்ற தானத்தைப் பற்றியே கூறுகின்றன.

## விளக்குகள் எரிக்கப் பொருட்கள்

விளக்குகள் எரிக்க நெய் அல்லது எண்ணெய் வேண்டும். நெய் வாங்கிக்கொள்வதற்குப் பொன் தானமாக அளிக்கப்பெற்றதாகப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. நெய் பெறுவதற்குப் பசுக்கள், ஆடுகள், எருமைகள் கொடுக்கப்பட்டன. பசு, ஆடு, எருமைகளின் எண்ணிக்கை குறைந்துவிடாமல் இருக்க எருதும், கிடாயும் சேர்த்துக்

கொடுக்கப்பட்டன. இதைக் கல்வெட்டுகள் 'சாவா மூவாப் பேராடு' எனக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு அளிக்கப் பெற்ற ஆடுகளையும், பசுக்களையும் சிலர் கோயிலின் சார்பில் பெற்று விளக்கு எரிப்பதற்கு நெய் அளித்து வருகிறார்கள். அவர்களைக் 'கோயில் மன்றாடிகள்', 'திருவிளக்குக் குடிகள்' எனக் கல்வெட்டுகள் உரைக்கின்றன. கோயில் விளக்குகளுக்காக அளிக்கப் பெற்ற நிலம் 'திரு விளக்குப்புறம்' என அழைக்கப்பட்டது. விளக்குக்குத் தேங்காய் எண்ணெய், இலுப்பை எண்ணெய் ஆகியவையும் வழங்கப்பட்டன. தஞ்சை மாவட்டம், திருக்கண்ணபுரம் சௌரிராசப் பெருமாள் கோயிலிலுள்ள மூன்றாம் இராசேந்திரனின் 18 - ஆம் ஆண்டுக் கல்வெட்டில் கோயிலில் தென்னை மரங்களைப் பராமரிப்பவர்கள் ஒரு கோல் நிலத்திற்கு மூன்று உழக்கு தேங்காய் எண்ணெய் அளித்திடவேண்டும் எனக் கூறப்படுகிறது. செந்தலைக் கோயில் இறைவனுக்குப் பகல் விளக்கெரிக்க சுவாமிநாத இளவரசன் என்பவன் இலுப்பைத் தோட்டம் ஒன்றைத் தானமாக அளித்தான்.

கோயில்களில் விளக்கு எரிப்பதற்குப் பலவகையான விளக்குகள் தானமாக அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. கல்வெட்டுகளில் நந்தா விளக்கு, சந்தி விளக்கு, அரை விளக்கு, கால் விளக்கு போன்ற விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. நந்தா விளக்கு என்பது இறைவன் அருகில் எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும். சந்தி விளக்கு என்பது காலை, மாலை இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும். விளக்குகள் வெள்ளியாலும், செம்பாலும் செய்து கொடுக்கப்பட்டு அவற்றின் எடை எவ்வளவு என்பதும் குறிக்கப்பட்டுள்ளன. இராசராசனின் தேவியான உலக மாதேவி திருவையாறு கோயிலுக்கு ஈழச்சியல் விளக்கு, மலையான் சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, ஓர்க்குட விளக்கு, அனந்தலை விளக்கு ஆகியவற்றை அளித்தாள் என அக்கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவை அனைத்தும் செம்பினால் செய்யப்பட்டவை. மலையான் சியல், ஈழச்சியல் போன்ற விளக்குகள் இராசராசன் பெற்ற வெற்றிகளால் சோழ நாட்டிற்கு வழக்கத்திற்கு வந்திருக்கலாம். மேலும் பஞ்சாரத்தித் திருவிளக்கு என ஒரு விளக்கும் குறிப்பிடப் படுகிறது. முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு 'ஐந்து நிலைக் குத்துவிளக்கு', 'மூன்று நிலைக் குத்துவிளக்கு' ஆகியவை கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்

படுகின்றது. திருமணஞ்சேரிக் கோயிலுக்குத் தொங்கும் விளக்கு ஒன்று அளிக்கப்பட்டது. திருச்சாற்றை கோயிலுக்குச் செம்பினால் ஆன 32 அகல் விளக்குகள் அளிக்கப்பட்டன. முதலாம் இராசராசன் காலத்தில் ஸ்ரீவிசய மன்னனின் பிரதிநிதியாகிய நிமிலன் அகத்தீசுவரன் நாகைக் காயாரோகண சுவாமி கோயிலுக்குப் 'பாவை விளக்கு', 'குரக்கு விளக்கு', 'மத்த விளக்கு' போன்றவற்றைத் தானமாக அளிக்க, இரன் சடையன் என்ற தேவர்கண்ட ஆசாரியன் இவற்றை வடிவமைத்தான் என அக்கோயில் கல்வெட்டு கூறுகிறது.

## பெயர்கள்

முதலாம் இராசராசனின் சின்ன காஞ்சிபுரத்திலுள்ள கீழைக் கல்வெட்டில், மும்முடிச்சோழன் என்பவன் அரசனின் அனுமதியோடு பல நாடுகளை வென்று, அங்கிருந்து கொண்டு வந்த பொருட்களில் பத்து விளக்கு எரிக்க 100 ஆடுகளைத் துர்க்கை கோயிலுக்கு வழங்கினர். அவ்விளக்குகளுக்கு 'இராசராசன்' என்று பெயரிட்டான் எனக் குறிப்பிடப்படுகிறது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் அணுக்கி நக்கன் பரவை நங்கை என்னும் பெண்ணரசி திருவாரூர் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறாள். ஆரூரன் திருக்கோயிலுக்கு மாமன்னன் இராசேந்திரனும், பரவை நங்கையும் நேரில் பவனி வந்து கோயிலுக்குள் நுழைந்து இறைவன் முன்பு நின்று வணங்கினர். அவர்கள் நின்று வணங்கிய இடத்தில் பரவை ஒரு குத்துவிளக்கை ஏற்றினாள். இதைத் தவிர 15, 579 பலம் எடையுள்ள 28 பிரம்மாண்ட குத்துவிளக்குகளையும் 'பச்சைப்பாவை உமை நங்கை', 'பாவை சரியாமுலை நங்கை' எனப் பெயரிடப்பட்ட இரண்டு பாவை விளக்கு களையும் அளித்திருக்கிறாள். எனவே அக்காலத்தில் விளக்குகள் பல பெயரிடப்பட்டு வழக்கில் இருந்துவந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

## விளக்கு தானங்கள்

ஒருவர் குற்றம் புரிந்து தண்டனை வழங்கப்படும்பொழுது, சில குற்றங்களுக்குக் கோயில்களில் விளக்கெரிக்கத் தானம் அளித்ததாகப் பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

ஒரு ஊரில் அண்ணன் தம்பி சண்டையில், தம்பி அடித்து அண்ணன் இறந்து விட்டான். வழக்கு ஊரார் சபை முன் வருகிறது.

அண்ணனுக்குப் பின்னர் பெற்றோர்களை கவனித்துக்கொள்ளத் தம்பியைத் தவிர வேறு ஒருவரும் குடும்பத்தில் இல்லை. எனவே அவ்வூர்க் கோயிலுக்கு அரை விளக்கு எரிக்கப் பொருள் கொடுக்க வேண்டும் எனச் சபையினர் தீர்ப்புக் கூறினார்கள். இத்தீர்ப்பு முறைக்குச் 'சுத்த பட்டிகை' என்று பெயர். இச்செய்தி வடஆர்க்காடு, தாமரைப்பாக்கம் அக்னீசுவர் கோயில் கல்வெட்டில் காணப் படுகிறது.

திருக்கோயிலூரில் உள்ள மூன்றாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்று வேடன் ஒருவன் காட்டுப் பன்றியைத் துரத்திச் சென்று அதை குறிவைத்த அம்பானது, தவறி ஒருவர் மீது பாய்ந்த குற்றத்திற்காகக் கோயிலில் விளக்கெரிக்க 32 பசுக்களைத் தானமளித்ததைக் குறிக்கிறது.

முதலாம் இராசராசனின் முன்னிலையில் குதிரைச் சேவகன் அரங்கன் காரியான சோழவிச்சாதிர முத்தரையன் என்பவனுக்கும், காரிகுளிப்பாகை என்பவனுக்கும் விற்போர் நடந்தது. போரில் சோழவிச்சாதிர முத்தரையன் எறிந்த அம்பு, காரிக்குளிப்பாகையின் தோளைத் துளைத்து அவன் இறந்துவிட்டான். இறந்தவனின் உறவு முறையினராகிய கண்டன் காரி, கண்டன் பொற்காரி, குட்டி பொன்னாடை ஆகியோர் அவனுக்காக நொந்தா விளக்கு அளித்தனர் எனக் கரந்தை சிவன் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இதைத் தவிர விழாக்களின் போது விளக்குகள் பிடிப்பதற்கும், அவற்றைப் பராமரிக்கவும் தானமளிக்கப்பட்டதையும், எவ்வளவு நேரம் விளக்குகள் எரிய வேண்டும் என்பதையும் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

முதலாம் இராசேந்திர சோழனின் 9-ஆம் ஆட்சி ஆண்டில் கார்த்திகைத் திங்கள், கார்த்திகை விழா நாளில், விளக்கு எரிக்க 16 நாழி நெய்க்காக 16 ஆடுகளைத் திருப்பாற்றுறை மக்கள் கோயிலுக்குத் தானமாக அளித்துள்ளனர்.

மன்னார்குடி வட்டம், திருவீராமீசுவரம் கோயிலில் மூன்று விளக்குகள் 7½ நாழிகை எரிப்பதற்காக 19 காசுகள் நிவந்தம் செய்து கொடுத்ததாக முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுக் கூறுகிறது.

எனவே மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகள் மூலம் கோயில்களில் என்றென்றும் விளக்குகள் எரிவதற்கும், இதன் மூலம் இதைச் சார்ந்த தொழிலைக் கொண்ட மக்கள் வளமாக வாழவும் வழிவகுத்துக் கொடுத்திருந்தனர் சோழ மன்னர்கள் என்பது விளங்குகின்றது.

## துணை நூல் பட்டியல்


1. தஞ்சைக் கோயில் கல்வெட்டுகள் - தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.
2. தென்னை வளம், இலுப்பை கட்டுரைகள், தமிழக வரலாற்றுக் கருத்தரங்கு.
3. சு. இராசகோபால், திருவையாறு.
4. A.R.E. 485 of 1902.
5. A.R.E. 161 of 1956-57.
6. A.R.E. 79 of 1921. S.I.I. vol. XIII No. 149.
7. திரு. பொன்னுசாமி, திருவாரூர், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு.
8. திரு. கு. தாமேதரன், தமிழக வரலாற்று அருவியில் சில மணிகள்: பக். 64.
9. A.R.E. 138 of 1906.
10. திருமதி. மார்க்சீயகாந்தி, இராசராசன் கண்ட விற்போர், கல்வெட்டு இதழ்-3.


★ ★ ★

# சோழர் காலத்தில் ஆறுகளும், வாய்க்கால்களும்

**ச. செல்வராசு**

தொல்லியல் அலுவலர்,

தொல்லில் துறை, சிதம்பரம்.

தென்னகத்தின் தானியக் களஞ்சியமாகத் திகழ்வது தஞ்சை, இத்தஞ்சையை தலை நகராகக் கொண்டு சீரும் சிறப்புமாக ஆட்சி புரிந்தவர்கள் சோழ மன்னர்கள் ஆவர். காவிரியாறும் அதன் கிளைகளாக நிலவும் பல சிற்றாறுகளும் சோழ மண்டலத்தை என்றும் குன்றாத வளம் படைத்த பெரு நாடாக்கியது.

சோழ மன்னர்கள் மிகவும் திறமையாக, நேர்த்தியாக ஏரிகளையும், குளங்களையும் வெட்டி ஆற்று நீரைத் தேக்கி வாய்க்கால்கள் அமைத்து நில வளத்தை உயர்த்தியுள்ளார்கள். பல்லவர்கள் காலத்தில் காடு மேடாக இருந்த நிலங்களையும், தரிசு நிலங்களையும் செம்மைப் படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற முறையில், திருத்தியமைத்த பெருமை சோழர்களையே சாரும். ஒரு நாட்டின் இன்றியமையாத வருமானம் அந்நாட்டின் விளை பொருளைக் கொண்டே அமையும். நிலத்தின் தன்மை குறைந்தால் விளைச்சல் குறையும். அதனால் அரசுக்குச் சேர வேண்டிய நில வரிகள் தேங்கி நிற்கும் சோழ மன்னர்கள் இதன் அடிப்படையை நன்கு உணர்ந்ததன் விளைவு தான் 'பெரிய பெரிய ஏரிகளும், குளங்களும், வாய்க் கால்களும் ஆகும். ஏரிகளையும், வாய்க்கால்களையும் பற்றிய பண்டைய குறிப்புகளில், கல்வெட்டுகளில் சோழர்கள் காலத்தில் தான் அதிகமான குறிப்புகள் கிடைக்கின்றன. இக்குறிப்புகளைக் கொண்டு நோக்கும் போது சோழர்கள் காலத்தில் தான் நீர்ப் பாசன வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## சங்க காலச் சோழர்கள்

சோழன் கரிகாற்பெருவளத்தான் காவிரியின் இருமருங்கும் கரையெடுத்து, அதனை நாட்டிற்குப் பயன்படும்படி செய்து புகழ் எய்தியவன் ஆவான். ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழனுலாவில் 'பொன்னிகரை கண்ட பூபதி' என்று இவனைப் புகழ்ந்துள்ளார்.

திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும், வீரராசேந்திர சோழனது கன்னியாகுமரிக் கல்வெட்டிலும் கரிகாலன் காவிரிக்கு கரை அமைத்தது கூறப்பட்டுள்ளது.

## ஆறுகளும், ஏரிகளும், வாய்க்கால்களும்

கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு முதல் ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள், பல ஆறுகளையும், ஏரிகளையும், குளங்களையும் புதியதாக அமைத்தும், பழுது பார்த்தும், பயன் படுத்தியும் உள்ளனர். இவை தொன்று தொட்டு வழங்கி வரும் பெயர்களால் அறிய முடிகின்றது. தஞ்சைக்கு வடபுறத்தில் உள்ள வடவாறு வீரசோழ வடவாறு எனவும், திருப்பனந்தாளுக்கு வடக்கேயுள்ள கொள்ளிடப் பேரணையில் இருந்து பிரிந்து வடக்கே ஓடும் வடவாறு மதுராந்தக வடவாறு எனவும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழர்கள் காலத்தில் வாய்க்கால்களையும், ஏரிகளையும் மன்னர்கள் பெயரிலும், தேவிகள் பெயரிலும் மற்றும் அதிகாரிகள் பெயரிலும் அமைத்து, அதை காலங்காலமாகத் தொடர்ந்து அழைத்து வந்துள்ளனர். இராசேந்திர சோழன் தன் தலைநகரைத் தஞ்சையில் இருந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றி அமைத்ததோடு மட்டுமின்றி, அவ்வூர் மக்களுக்கு உரிய நீர்ப்பாசன வசதியையும் அமைத்தான். கங்கை வரை சென்று தன் வெற்றியைக் கண்ட இவன் கங்கை நீரை எடுத்து வந்து அதன் நினைவாக ஓர் பெரிய ஏரியைத் தனது தலைநகருக்கு மேற்கே வெட்டி, அதில் கங்கை நீரைக் கலந்து, சோழ கங்கம் என்று பெயரிட்டான். மேலும் இதனை நீர்மயமான வெற்றி என்று குறிப்பதால் அதன் நினைவாக ஏற்படுத்தப்பட்டது இப்பேரேரி என்பர். இங்கு பல வாய்க்கால்களையும் வெட்டியுள்ளான். அவற்றில் குறிப்பிடத்தகுந்தது. 'இராசராசன் வாய்க்கால்' ஆகும். தன் தந்தையின் பெயரில் வாய்க்கால் அமைத்துப் பெருமை

படுத்தியுள்ளான். இந்த ஏரி நீர் அவ்வூர் முழுவதும் தொடர்ந்து கிடைக்கும் வகையில் பெரிய மதகுகளையும் அமைத்து சீரான முறையில் நீர்ப்பாசனத்தை அமைத்து நாட்டு வளத்தை உயர்த்தி உள்ளான்.

## மன்னர்கள் பெயர்களில் ஆறுகள்

மன்னர்கள் பெயர்களிலும் ஆறுகளை அழைத்தமை தற்பொழுது வழங்கி வரும் பெயர்களைக் கொண்டு அறியமுடிகின்றது. அவையாவன: முடிகொண்ட சோழப் பேராறு, வீரஇராசேந்திர சோழப் பேராறு, புத்தாறான குலோத்துங்க சோழப் பேராறு. இப்பொழுது நோக்குமிடத்து இதைப் புதியதாக அமைத்து அதற்குக் குலோத்துங்கனது பெயரிட்டு அழைத்தமை நன்கு புலப்படுகின்றது.

## தேவிகள் பெயர்களில் ஆறுகள்

மன்னர்கள் மட்டுமின்றி, அனைத்துச் செயல்களிலும் தேவிகளும் இணையான பங்கு பெற்றமை அக்காலக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகின்றது. கொடையளிப்பதும், கோயில் எழுப்புவதும், விளக்கு அமைப்பதும் மட்டுமின்றி நீர்ப்பாசனம் செய்தும், அதற்குரிய வழி முறைகள் வகுத்தும் தேவிகள் தங்களது பங்கை செவ்வனே செய்து வந்துள்ளனர்.

## பிற வாய்க்கால்கள்

மன்னர்கள், தேவிகள் பெயர்களைத் தவிர, அரசு அதிகாரிகள் பெயர்களிலும் மற்றவர்களின் பெயர்களிலும் வாய்க்கால்களை ஏற்படுத்திச் சிறப்புச் செய்து உள்ளனர். அவையாவன: தாமோதர வாய்க்கால், தென்பூமி வாய்க்கால், தருமி வாய்க்கால், ஆனைமடை வாய்க்கால், வீர நாராயண வாய்க்கால், அம்மையப்பன் வாய்க்கால், திருவாஞ்சிய தேவன் வாய்க்கால், சோமநாதன் வாய்க்கால், முன்னூற்றுவன் வாய்க்கால், மூவாயிரவன் வாய்க்கால் என்பன. இறுதியாக கூறப்பட்ட இரண்டு வாய்க்கால்களும் வணிகர்கள் தாங்கள் ஒரு குழு அமைத்து ஏற்படுத்திய வாய்க்கால்கள் ஆகும்.

## ஏரி வாரியம்

நீர்ப்பாசன் வசதிகள் அதிகம் மேற்கொள்ளும் பொழுது அதற்குரிய செலவுகளை ஈடு செய்ய வரியும் அதிகரிக்கும். அம்முறையில் ஏரிகளையும், வாய்க்கால்களையும், குளங்களையும்

கண்காணிப்பதும், அவற்றைப் பராமரிப்பதும், அந்தந்த ஊர்ச் சபையாரின் பொறுப்பாக இருந்ததைக் கல்வெட்டுகளிலிருந்து அறியலாம். அதற்கு என ஒரு குழுவை அமைத்து அதனை வாரியம் என்று பெயரிட்டு அழைத்தனர். ஏரியைக் காக்கவும், கண்காணிக்கவும், வரிவசூல் செய்யவும் ஏரிவாரியம் அமைத்துச் செயல்பட்டு வந்தமையைக் கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறியமுடிகின்றது. அந்தக் குழுவினர்கள் அவ்வப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதும் முதல் பராந்தகச் சோழன் காலத்து உத்திரமேரூர் கல்வெட்டிலிருந்து தெரிய வருகின்றது. சிறுசிறு ஊர்களில் உள்ள குளங்களில் கிடைக்கும் மீன் விற்பனையைக் கொண்டு, அந்தக் குளங்களைச் சீர்படுத்த வேண்டும் என்ற பழக்கம் இருந்தமையும் அறிகிறோம். இன்னும் புதுச்சேரிக்குப் பக்கத்திலுள்ள பாகூர், திரிபுவனி போன்ற இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளில் குளங்களின் பராமரிப்புக்கென்று சில நிவந்தங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன என்பது தெரிகிறது. மேலும் ஏரி ஆயம் என்ற சிறு வரியையும் வசூலித்து வந்துள்ளனர்.

## ஏரிகளின் பிற அமைப்புகள்

ஏரியை வெட்டுவதோடு மட்டுமின்றி அந்நீரைத் தேக்கித் தகுந்த அளவு நீரை வெளியே எடுத்துச் செல்லவும் உபயோகப் படுத்தவும், ஏரி குளங்களிலிருந்து சிறுசிறு வாய்க்கால்களை அமைத்தனர். அவ்வாய்க்கால்களைப் பற்றியே மேலேக் கண்டோம். இந்த வாய்க்கால்களையும் ஏரி, குளங்களையும் இணைக்கும் இடத்தில் மடையை எழுப்பி உள்ளனர் இதுபோன்றே மடை, மதகு, குமிழி, தூம்பு ஆகியவைகளையும், வாய், வாய்த்தலை, தலைவாய் போன்ற நீர்க்கால்களையும் அமைத்துப் பாசனத்தில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளனர். எனவே நிலங்களை அளந்து செம்மைப்படுத்தி நீர்ப்பாசன வசதியையும் அமைத்துச் செழிப்புடன் வாழ்ந்து நாட்டை மேல்நிலையில் வைத்த பெருமை சோழர்களையேச் சாரும் என்பதில் ஐயமில்லை.

## துணை நூல் பட்டியல்

1. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு.
2. டாக்டர் இரா. நாகசாமி, திருத்துறைப் பூண்டி கல்வெட்டுகள்.

3. ஆ. பத்மாவதி, நன்னிலம் கல்வெட்டுகள்.
4. திரு. அமலநாதன், கையேடு, நீர்ப்பாசனங்கள்.
5. சு. இராசகோபால், பண்டைய நீர்ப்பாசன அமைப்புகள் பற்றிய தொல்லியல் ஆய்வுகள்.

★★★

# வரலாற்றுக்கு முற்பட்ட தஞ்சை மாவட்டம்

**கே. எஸ். சம்பத்**

வ. மு. அகழ்வாய்வாளர்,

தொல்லியல் துறை, சென்னை.

மனித இன வரலாற்றை ஆய்வோர், அதனை வரலாற்றுக்கு முந்தைய காலம், வரலாற்றுக் காலம், என இருவகையாகப் பிரிப்பர். எழுத்துச் சான்றுகள் தோன்றிய பிறகு கிடைக்கும் செய்திகளை வரலாற்றுக் காலத்தில் சேர்ப்பர். அதற்கு முந்தைய எழுத்துச் சான்றுகள் இல்லாத காலத்தினை வரலாற்றுக்கு முந்தைய காலம் எனக் குறிப்பிடுவர்.

தமிழ்நாட்டை நெடுங்காலம் ஆண்டு வந்த மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்கள் ஆவர். சோழர் காலத்தினைப் பற்றிக் கல்வெட்டுகள், இலக்கியங்கள், ஆலயங்கள் மற்றும் சுவடிகள் மூலமாக நன்கு அறிய முடிகிறது. ஆனால் சோழநாட்டின் தொல் பழங்காலத்தைப் பற்றிச் சோழநாட்டில் மக்கள் தொடர்ந்து வாழ்ந்ததற்கான தொடர்ச்சியினைப் பற்றிப் பல தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்துள்ளனர். இன்னமும் ஆராய்ந்து வருகின்றனர்.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, தென்னார்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகள் சோழ நாட்டின் பகுதிகளாகக் கூறப்படுகின்றன.

இவைகளில் குறிப்பாகச் சோழநாட்டின் மையப் பகுதியான தஞ்சை மாவட்டத் தொல் பழங்காலத்தினைப் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

## மையோசின், பிளையோசின் காலம்

'கடைப் பேரூழி'க்காலம் 650 லட்சம் ஆண்டுகளிலிருந்து 10 லட்சம் ஆண்டுகள் வரை நீண்டு கிடக்கின்றது. 640 லட்சம்

ஆண்டுகளைக் கொண்டது. இக்காலத்தில் (Eiocene) இயோசீன் ஊழிக்கு முந்தைய கிரிடேசியஸ் ஊழிக்காலத்தில், காவிரிக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஊடுருவியிருந்த கடல் இக்காலத்தில் பின்வாங்கியது. இதன் விளைவால் நேர்ந்த படிவுகளிலிருந்து தான் தஞ்சை, காரைக்கால் பகுதிகளில் பெட்ரோலியம் எடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மற்றும் தஞ்சை, காரைக்கால் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் படிவ அமைப்புகள் மையோசீன் (Miocene) பிளையோசீன் (Pliocene) காலத்தைச் சார்ந்தவையாகும்.

வரலாற்றுக் காலத்தில் உட்படும் ஆண்டுகளை விடப் பல மடங்கு தொல் பழங்காலத்தில் உள்ளன. ஏறக்குறைய 20 லட்சம் ஆண்டுகளிலிருந்து கி.மு. 4000 வரைக்கும் இருக்கக் கூடிய காலத்தை உலக அளவில் வரலாற்றுக்கு முந்தையகாலம் எனத் தொல்லியல் அறிஞர்கள் மதிப்பிடுகின்றார்கள்.

தொல் பழங்காலத்தைப் பழைய கற்காலம், இடைக் கற்காலம், கடைக் கற்காலம், புதிய கற்காலம் மற்றும் பெருங் கற்காலம் என வகைப்படுத்திக் கொள்ளலாம்.

### பழைய கற்காலம்

தமிழகத்தில் இக்காலம் 3 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக்காலத்தில் மனிதன் விலங்குகளை வேட்டையாடி, குகைகளிலும், திறந்த வெளிகளிலும் திரிந்து வந்தான். அப்போது அவன் கற்களைக் கொண்டு, கைக்கோடாரி, கிழிப்பான், மரபீசியம் அல்லது கோடகக்கருவி, முக்கோணக்கருவி, நீள்வட்டக்கருவி, பிறைக்கருவி எனப் பல வகைகளில் கருவிகளைச் செய்து வாழ்ந்து வந்த காலமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் வங்கானங்குடிக்காடு என்னுமிடத்தில் முதற் கற்காலக் கருவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இருப்பினும் முதற் கற்காலக் கருவிகள் செங்கை மாவட்டத்திலும் வடஆற்காடு மாவட்டத்திலும் அதிக அளவில் கிடைக்கின்றன. பாலாற்றுக்கு வடக்கே நிறையக் கருவிகளும், தெற்கே மிகக் குறைந்த அளவிலும் கிடைக்கின்றன. ஏனெனில் இக்கருவிகள் செய்வதற்குப் பயன்படும் குவார்ட்சைட் எனப்படும் கற்கள் வடக்கு மாவட்டங்களைப் போல் தென்மாவட்டங்களில் கிடைப்பதில்லை. எனவே தஞ்சை மாவட்டத்தில் நமக்குப் பழைய கற்காலத்தினைப் பற்றிய விவரங்கள் போதிய அளவில் கிடைக்கப் பெறவில்லை.

### கடைக் கற்காலம்

இக்காலம் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இக்காலங்களில் மனிதன் சிறிது நாகரிகமுற்று விலங்குகளை வேட்டையாடியதிலிருந்து உணவுப் பொருட்களைத் தயார் செய்யும் நிலைக்கு முன்னேறியிருந்தான். நுண்ணிய கருவிகளைத் தயார் செய்யும் கலையையும் கற்றிருந்தான்.

தஞ்சை மாவட்டத்தில் கடைக் கற்காலக் கருவிகள் பூதலூரிலும், வல்லத்திலும் ஆனந்தக்காவேரி ஆற்றங்கரையிலும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பூதலூர் கடைக்கற்காலக் கருவிகள் கறுப்பு பசால்ட் (Black Basalt) எனப்படும் படிவத்திலிருந்து உருவாக்கப்பட்டது. சில வகைக் கருவிகள் கிரிஸ்டல், அகேட் எனப்படும் உயர்வகைக் கல்லிலிருந்து செய்யப்பட்டவையாகும்.

இவ்வூரில் கிடைக்கப்பெற்றுள்ள கற்காலக் கருவிகளை மிகவும் அரியதொரு கண்டுபிடிப்பாக அறிஞர்கள் கருதுகின்றனர். இங்கு கிடைத்தவை மூலக்கல் (Core), முனைகள், (Points), ஆப்லிக் மற்றும் பிளாக் பேஸ்ட் ஆகியனவாகும்.

வல்லத்தில் சில சில்லுகள் (Flakes) கிடைத்துள்ளன. இவை குவார்ட்ஸ் எனப்படும் படிகக் கல்லிலிருந்து செய்யப்பட்டவை. இவற்றை குவார்ட்ஸ் தயாரிப்பு அல்லது வல்லம் தயாரிப்பு என அழைக்கின்றனர். இங்கு கிடைத்த முக்கியமான கல்வகைகள் கிரிஸ்டல் பாறை, கருங் குவார்ட்ஸ், (Black Quartz) அமெதிஸ்ட் ஆகியவை.

இக்காலக் கட்டத்திலும் கூட மக்கள் விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். அதே நேரத்தில் இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள கடைக்கற்காலக் கருவிகளின் மூலம் தானியங்களை அறுவடை செய்யும் கலையினையும் அறிந்திருந்தார்கள் என அறிகிறோம்.

மேற்கண்ட கற்காலக் கருவிகளின் கண்டு பிடிப்புகளிலிருந்து அப்பகுதிகளில் வாழ்ந்த மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடுவதிலிருந்து உணவுப் பொருட்களைத் தயார் செய்யும்

நிலைக்கு வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என அறிகிறோம். மேலும் விலங்குகளை வேட்டையாட இங்கு கிடைத்த கருவிகளை வில்லின் முனையில் செருகி உபயோகித்துள்ளனர்.

ஆனால் நமக்கு இப்பகுதியில் கிடைக்கக்கூடிய கற்காலக் கருவிகளுடன் எந்தப் பானை ஓடுகளும் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே சரியான காலத்தினை கணிக்க இயலவில்லை. ஆனால் இக்கருவிகளின் தயாரிப்பு முறைகள் மற்ற இயல்புகளைக் கொண்டு காலத்தை கி.மு. 4000 என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். செம்பினால் செய்த அம்பு முனைகள் குறிப்பிட்ட அளவில் வல்லத்தில் கிடைத்துள்ளன என்பதும் இங்கே கருதத்தக்கது.

## பெருங்கற்காலம்

இது 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் ஈமச் சின்னங்களைப் பயன்படுத்தி மக்கள் வாழ்ந்த காலத்தைப் பெருங்கற்காலம் என அழைக்கிறோம். இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவர்களது எலும்புகளைப் புதைத்த இடத்திலோ பெரிய கற்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்களைப் பெருங்கல் சின்னங்கள் என்று கூறலாம்.

தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் பெருங் கற்கால பானை ஓடுகளும், சவக் குழிகளும் காணக்கிடைக்கின்றன. அவை

1. தேரழுந்தூர் - மயிலாடுதுறை வட்டம்
2. கண்டகை - நன்னிலம்
3. பிட்டச்சேரி - நன்னிலம் வட்டம்
4. பெருங்கடம்பலூர் - நாகப்பட்டினம் வட்டம்

இப்பகுதிகளில் பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

பழைய கந்தவர்வக் கோட்டையில் மூன்று கற்கிடை கிடைத்துள்ளன.

மேலும் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் தெற்குப் பகுதியின் சார்பில் திரு. பி. சரண் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட புற ஆய்வில் பல இடங்களில் முதுமக்கட் தாழிகள் புதைக்கப்

பட்டிருக்கும் இடங்களில் வெளிக் கொணரப்பட்ட தாழிகள் பெருங்கற்கால கருப்பு சிவப்பு நிறப் பானை ஓடுகளுடன் இணைந்து கிடைத்துள்ளன. கீழ்க்கண்ட பகுதிகளிலும் அவை பெருமளவில் கிடைக்கின்றன.

1. ஆக்கூர்
2. கீழ்வேளூர்
3. சிக்கல்
4. தில்லையாடி
5. வல்லம்
6. கீழப்பெரும்பள்ளம்
7. மணிக்கிராமம்
8. வீரமாத்திருப்பு
9. வானகிரி
10. பழையாறைக்கு அருகிலுள்ள நந்தன்மேடு
11. இடைமணல்

சமீப காலத்தில், மயிலாடுதுறை வட்டத்தில் கொத்தவ நல்லூரிலும் சில முதுமக்கட் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு தாழியில் மனிதனின் சுட்ட எலும்புகள் கிடைத்துள்ளன. தாழியின் உள்ளே கருப்பு மற்றும் கருப்பு-சிவப்பு நிற கலையங்களும், பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. தாழியின் அடிப்பகுதி முக்கோண வடிவிலான கருங்கல் பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பெருங்கற்காலச் சின்னங்கள் பல்வேறு வகைப்படும் அவற்றைத் தொல்லியல் வல்லுநர்கள் பல வகையாகப் பிரித்துத் தொகுத்துள்ளனர். அவையாவன: 1. கல்திட்டை, 2. கல்பதுக்கை, 3. மண்குவை, 4. கல்குவை, 5. கற்கிடை, 6. கல்வரிசை, 7. தொப்பிக்கல், 8. குடைக்கல், 9. குடைவரைத் தாழ்வறைகள், 10. தாழிகள் முதலியனவாகும்.

நமக்குத் தஞ்சைப் பகுதியில் கிடைக்கப்பெற்றன பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் பெரும்பாலும் தாழி (urn) வகையைச் சார்ந்தவையே. பழைய கந்தர்வக்கோட்டையில் கற்கிடை வகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன.

மேற்கண்ட கூற்றுக்களின் வாயிலாகச் சோழ நாட்டில், மனித இனம் தொடர்ந்து வாழ்ந்திருந்ததற்கான அறிகுறிகள் நமக்குத் தெரியவருகிறது. பழையகற்கால, கடைக்கற்கால மற்றும் பெருங்கற்கால மனிதர்கள் அங்கு வாழ்ந்திருப்பதோடு தங்கள் வாழ்க்கை முறையினையும் சிறப்பாக அமைத்துள்ளனர் என்பதையும் அறிகிறோம்.

★✶✶

# பழையாறை – அகழாய்வு

**து. துளசிராமன்**

அகழாய்வாளர்,

தொல்லியல் துறை, சென்னை.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் கும்பகோணத்திற்கு தென்மேற்கே நான்கு கி.மீ. தூரத்தில் உள்ள கீழ்ப்பழையாறை என்னும் சிற்றூரே முன்னாளில் பிற்கால சோழர்களின் இரண்டாவது தலைநகரமாகவும், அரச குடும்பத்தினரின் வாழ்விடமாகவும் விளங்கிய பழையாறையாக இருத்தல் வேண்டும். அக்காலத்திய பழையாறை நகரம், வடக்கே தற்கால தாராசுரத்திலிருந்து தெற்கே நந்தன்மேடு வரை பரவியிருந்திருக்கலாம். இதற்கு ஆதாரமாக நுழையூராகிய முழையூர், பம்பப்படையூர், ஆரியப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், சோழன் மாளிகை, இராசேந்திரன்பேட்டை என வரலாற்றுத் தொடர்புடன் கூடிய பெயர்களோடு அமைந்த ஊர்கள் இங்கு ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளமையைக் கூறலாம்.

## பழையாறையின் தொன்மையும், பெயராய்வும்

பட்டீஸ்வரத்திற்கு மேற்கே உள்ள நந்தன்மேட்டுப் பகுதியிலும், கீழ்ப்பழையாறைக்குத் தென்மேற்கே உள்ள திப்பிராசபுரத்திலும், உடையாளூருக்கு அருகிலும் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் காணப்படுகின்றன. இவை பழையாறைப் பகுதியில் பெருங்கற்காலம் முதல் மனிதர்களின் குடியிருப்புப் பகுதிகள் இருந்திருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. தொடர்ந்து இவ்விடம் படிப்படியாகப் பெருகிப் பல்லவர் காலத்தில் நந்திபுரி, நந்திபுரம் என்னும் பெயரோடு திகழ்ந்தது. பல்லவ மன்னன் நந்திவர்மன் இதனைத் தன் பேரரசின் தென்பகுதித் தலைநகரமாகக் கொண்டான்.

தேவார மூவர், இதனைப் பழையாறை, ஆறை, பழசை எனப் பல பெயர்களில் குறிக்கின்றனர். சோழர் காலத்தின் முற்பகுதியில்

அதாவது முதல் இராசராசன் காலம் வரையில் 'நந்திபுரமாகிய பழையாறை' என்றும்: முதலாம் இராசேந்திரன் காலத்தில் இவன் சிறப்புப் பெயரால் 'முடிகொண்ட சோழபுரம்' என்றும் வீரராசேந்திரன் காலத்தில் 'ஆகவமல்ல குலகாலபுரம்' என்றும், இரண்டாம் இராசராசன் காலத்தில் 'இராசராசபுரம்' என்றும், பிற்காலத்தில் மீண்டும் 'முடிகொண்ட சோழபுரம்' எனவும் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டது.

## கல்வெட்டுகள் குறிக்கும் பழையாறை அரண்மனைப் பகுதிகள்

பழையாறையிலிருந்த அரண்மனைப் பகுதிகளைப் பற்றி சோழர் கால கல்வெட்டுகளில் பல குறிப்புகள் காணப்படுகின்றன.

முதலாம் இராசராசன் காலத்திய திருச்செங்கோட்டுச் செப்பேடு, வரி செலுத்தாதவரை ஒதுக்க வேண்டி வந்தாலோ, குறைகள் ஏதாவது ஏற்பட்டாலோ சோழர் கோநகருள் ஒன்றாகிய நந்திபுரத்தில் பின்பற்றப் பெறும் விதி முறைகளின் படியே முடிவு எடுக்கப்படவேண்டும் எனக் குறிக்கிறது.

பழையாறையில் 'அவனிநாரணபுரம்' என்னும் பகுதி இருந்ததைத் தஞ்சைக் கோயிற் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

முதல் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள், பழையாறை அரண்மனையின் தெற்குப் பக்கத்தில் உணவு சாலை இருந்ததையும், மற்றும் சனிமண்டபம், மதுராந்தகன் திருமாளிகை போன்றவை இருந்ததையும் குறிக்கின்றன.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டொன்று பழையாறை அரண்மனையில் 'வாணாதிராயன்' இருக்கை ஒன்று இருந்ததையும், மற்றும் விக்கிரம சோழனின் கல்வெட்டால் இராசேந்திரசோழன் என்னும் பெயரால் வெளிமேல மண்டபம் ஒன்று இருந்ததையும் அறிகிறோம்.

முதலாம் இராசராசனின் தமக்கை குந்தவைப் பிராட்டியாரின் கல்வெட்டுகள் பழையாறை அரண்மனையிலிருந்த ஆதிபூமியையும், ஆச்சி கோயிலின் முன் இருந்த கூடத்தையும் குறிக்கின்றன.

வேப்பத்தூர்க் கல்வெட்டொன்று பழையாறை அரண்மனையில் இராசேந்திரன் என்னும் பெயரால் ஒரு சாலை (மண்டபம்) இருந்ததைக் குறிக்கிறது.

மேற்கண்ட கல்வெட்டுகள் குறிக்கும் பழையாறை அரண்மனைப் பகுதிகளை வெளிப்படுத்தி அக்கால மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்கை நெறிகளை முறையாக ஆய்வு செய்யும் பொருட்டுத் தொல்லியல் மேற்பரப்பு ஆய்வையும், அகழ்வாய்வையும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொண்டது.

## மேற்பரப்பாய்வு

1964-65 ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் ஆய்வுத்துறை பழையாறையில் தொல்லியல் மேற்பரப்பாய்வு மேற்கொண்டு சோழர்கால, கட்டடப் பகுதிகளின் எச்சங்கள் மற்றும் முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தது,

1984-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை நந்நன்மேடு, நாதன் கோயில், கீழப்பழையாறை, சோழன் மாளிகை ஆகிய இடங்களில் விரிவான தொல்லியல் மேற்பரப்பு ஆய்வு செய்தது. நந்தன்மேடு என்பது பட்டீஸ்வரத்துக்கு மேற்கே சுமார் பத்து ஏக்கர் நிலப் பரப்பிற்கு பரந்து காணப்படும் மேட்டுப்பகுதியாகும். இம்மேட்டினையொட்டி 'திருமலைராஜன்' ஆறு பாய்கிறது. மேட்டின் வடக்குப் பகுதியை ஆறு அரித்துச் சென்றுள்ளது. இப்பகுதியை ஆய்வு செய்ததில் செங்கற்சுவர் பகுதி காணப்பட்டது. இம்மேட்டில் ஏராளமான அளவிற்கு இடைக்காலப் பானை ஓடுகளும் கல்மணிகளும், கண்ணாடி மற்றும் சங்கு வளையல் துண்டுகளும், சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகளும் கிடைத்துள்ளன. இப்பகுதியை நந்தன் என்னும் மன்னன் ஆண்டதாகவும் அவனுடைய மாளிகை இருந்த பகுதி இதுவென்றும் செவிவழிச் செய்தி செப்புகிறது. இதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏதுமில்லை. நந்தன் என்பது நந்திவர்மனைக் குறிக்கலாம்.

நாதன் கோயில் என்னும் ஊரில் நந்திபுர விண்ணகரம் என்னும் கோயில் உள்ளது. இக்கோயிலுக்கு வடமேற்குப் புறத்தில் ஒரு மேடு உள்ளது. இம்மேட்டில் மேற்பரப்பு ஆய்வு செய்ததில் மத்திய காலப் பானை ஓடுகளும், சீன நாட்டுச் செலிடன் இனப் பானை ஓடுகளும், சுடுமண்கெண்டியின் மூக்குப் பகுதிகளும், கண்ணாடி வளையல் துண்டுகளும் கிடைத்தன. இங்கு கிடைத்த சில முழுமையான செங்கற்கள் (19 X 19 செ.மீ.) சதுர வடிவில் காணப்படுகின்றன.

கீழப்பழையாறை என்பது முழையூரிலிருந்து பம்பப்படையூர் வழியாகத் திருமலைராஜன் ஆற்றினைக் கடந்து சென்றால் ஆற்றுக்கு தென்புறத்தில் காணப்படும் ஒரு சிற்றூராகும். இவற்றின் தென்மேற்கில் சோமநாதசாமி ஆலயம் உள்ளது. பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த இவ்வாலயத்திற்குத் தெற்கிலும், தென் மேற்கிலும் சுமார் இருபது ஏக்கர் பரப்பில் பரந்த மேடு காணப்படுகிறது. இதில் தற்போது பயிர் செய்யப்பட்டு வருகிறது. இம்மேட்டிலிருந்து கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் சிலவும், மத்திய கால ஓடுகளும், சுடுமண் விளக்குப் பகுதிகளும், பீங்கான் ஓடுகளும் கிடைக்கின்றன.

பட்டீச்வரத்திற்கு வடக்கேயும் தாராசுரத்திற்கு மேற்கேயும் உள்ள ஒரு சிற்றூர் சோழன் மாளிகை என்பது இவ்வூருக்கு மேற்கே திருமலைராஜன் குளத்திற்கு பக்கத்தில் உள்ள மேட்டுப் பகுதியை 'மாளிகைமேடு' என்று அழைக்கின்றனர். இப்பரந்த மேட்டில் எங்கு தோண்டினாலும் குவியலாகச் செங்கல் துண்டுகள் கிடைக்கின்றன. இச்செங்கற்கள் 40 X 20 X 10 செ.மீ. அளவிற்கு காணப்படுகின்றன. கூரைக்காக வேயப்பட்ட நீள் சதுர கூரை ஓடுகளும் கிடைக்கின்றன. இரண்டாம் இராசராசன் பேரரணும், மிகுந்த பாதுகாப்பும் உடையதொரு அரண்மனையை அமைத்தான் எனப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அந்த அரண்மனை இருந்த இடம் இதுவாக இருத்தல் வேண்டும்.

### அகழாய்வு

பழையாறையில் விரிவான தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்வதன் பொருட்டு முதற்கட்டமாகக் கீழப்பழையாறை சோமநாதசாமி கோயிலுக்குத் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மேட்டுப் பகுதியில் ஒரு குழியும் இதே கோயிலுக்கு கிழக்குப் புறத்தில் நாதன் கோயிலுக்குப் போகும் வழிக்குத் தென்புறத்தில் இரண்டு குழிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இந்த அகழாய்வு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரின் மேற்பார்வையின் கீழ், தொல்பொருள் ஆய்வாளர்கள், திருவாளர்கள் து. துளசிராமன், மா. செந்தில்செல்வகுமரன், ம. இராமகிருட்டிணன் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

### காலவரையறை

பழையாறை அகழாய்வில் இரண்டு காலகட்டங்களைச் சேர்ந்த பண்பாட்டுத் தொடர்ச்சி காணப்படுகிறது. முதல் காலம் கி.பி. முதல்

நூற்றாண்டு தொடங்கி கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலும், இரண்டாவது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டு வரையிலும் பரவியிருந்தது.

## செங்கற் கட்டடப் பகுதி

மூன்றாவது அகழ்வுக் குழியின் வடக்குப் புறத்தில் 85 செ.மீ. ஆழ அளவில் கிழக்கு மேற்காகச் செல்லும் செங்கற் சுவர்ப்பகுதி ஒன்று காணப்பட்டது. இச்சுவர்ப் பகுதி மொத்தம் ஐந்து வரிசை செங்கற்களை கொண்டுள்ளது. பிற்காலத்தில் இச்சுவர் செங்கற்களுக்காக சிதைக்கப்பட்டுள்ளது என்பதைக் கிழக்கு மற்றும் மேற்குப் பக்கச் சுவர்கள் (Sections) தெளிவாகக் காட்டுகின்றன. இந்த செங்கற் சுவர் தலைப் பகுதி (Header) நேர்ப்பகுதி (Struebere) என்னும் முறையில் சுவர் முழுவதும் 24X12X4 செ.மீ. அளவுள்ள முழு செங்கற்களை அடுக்கிக் கட்டப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பு கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வில் கிடைத்துள்ள செங்கற் சுவர்களை ஒத்துள்ளன. இச்சுவரினையொட்டி இடைக்காலப் பானை ஓடுகளும் கூரையோடுகளும் கிடைப்பதைக் கொண்டு இக்கட்டடப் பகுதியைச் சோழர் காலத்தைச் சேர்ந்ததாகக் கணிக்கலாம்.

## பானை ஓடுகள்

பழையாறை அகழாய்வில் இடைக்காலத்தைச் சேர்ந்த சொரசொரப்பான சிவப்பு வண்ண ஓடுகள், கருப்பு வண்ண ஓடுகள், அலங்காரம் செய்யப்பட்ட ஓடுகள், வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள் முதலியன அதிக அளவு கிடைத்துள்ளன. கருப்பு சிவப்பு வண்ண (Black and Red ware) ஓடுகள் சிலவும் கிடைத்துள்ளன.

அலங்காரம் செய்யப்பட்ட பானை ஓடுகள் பளபளப்பாகவும் சிவப்பு வண்ணமாகவும் உள்ளன. கலயங்களைச் சூளையில் இடுவதற்கு முன்னர் அவற்றின் மேற்பகுதியில் உலோக முத்திரைகளைக் கொண்டு அழுத்தி அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. ஒரு புள்ளியைச் சுற்றி ஒன்று அல்லது இரண்டு வட்டங்கள் கொண்ட அலங்காரமும், குச்சியைக் கொண்டு புள்ளிகள் குத்தி சாய்வான கோடுகள் போன்று வரிசையாகப் பொறித்த அலங்காரமும் இதில் காணப்படுகின்றன.

கருப்பு மற்றும் சிவப்பு வண்ண ஓடுகளில் அழகிய வண்ணக் கோடுகள் தீட்டப்பட்டுள்ளன. சூளையில் இடுவதற்கு முன் கலயங்கள் மீது வெள்ளைக் களிமண்ணைக் (Kaolin) குழைத்து நேர்க்கோடுகள், சதுரக்கோடுகள், சாய்சதுரக் கோடுகள் வரைந்து பின்னர் அதற்கு மேல் சிவப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளது. கருப்பு வண்ண கலயங்கள் மீது செங்காவியைக் குழைத்து அலங்காரக் கோடுகள் தீட்டியுள்ளனர்.

### தொல்பொருட்கள்

இதுவரை இங்கு மேற்கொண்ட அகழாய்வில் இரும்பு ஆணிகள், கண்ணாடி மற்றும் சங்கு வளையல் துண்டுகள், சுடுமண் விளக்குகள், கெண்டியின் மூக்குப் பகுதிகள், பொம்மையின் உடைந்த பகுதிகள், கலசம் போன்ற அமைப்பு, செப்புப்பொருட்கள், சுடுமண் எடைகள், காதணிகள் ஆகியவை கிடைத்துள்ளன. இவை இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளைத் (கி.பி. 6-14 ஆம் நூற்றாண்டு) தெரிவிக்கின்றன.

### இரும்பு ஆணிகள்

ஐந்து செ.மீ. முதல் இரண்டு செ.மீ. வரையிலான உயரமுள்ள இரும்பு ஆணிகள் இங்கு கிடைத்துள்ளன. இவை அக்காலத்தில் கட்டடங்களின் கூரைப் பகுதியில் அமைக்கப்படும் மரச் சட்டங்களை இணைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது போன்ற இரும்பு ஆணிகள் கங்கைகொண்ட சோழபுரத்திலும் கிடைத்துள்ளன. செம்புப் பொருள் ஒன்று இங்கு கிடைத்துள்ளது. இது சிமிழ் போன்ற சிறிய பொருளின் மூடியின் மீது அமைக்கப்படும் கைப்பிடியாக இருக்கலாம்.

### வளையல் துண்டுகள்

இங்கு கண்ணாடி, அரக்கு மற்றும் சங்கு வளையல் துண்டுகள் கிடைத்துள்ளன. கண்ணாடி வளையல் துண்டுகள் மேல் பாளநிலையிலும், அரக்கு மற்றும் சங்கு வளையல் துண்டுகள் அதற்கு அடுத்த பாள நிலைகளிலும் கிடைக்கின்றன. கண்ணாடி வளையல்கள் கருப்பு மற்றும் மஞ்சள் வண்ணங்களிலும், அரக்கு வளையல் துண்டுகள் கருப்பு மற்றும் சந்தன வண்ணங்களிலும் காணப்படுகின்றன.

### சுடுமண் விளக்குகள்

முதற்குழியில் உடைந்த சுடுமண் விளக்குகளின் பகுதிகளும், மூன்றாவது குழியில் 100-க்கு மேற்பட்ட முழுமையான விளக்குகளும் கிடைத்துள்ளன. இவற்றுள் மூன்றாவது குழியில் 51 செ.மீ. ஆழ அளவில் செங்கல் சுவர்ப் பகுதியையொட்டி ஒரே இடத்தில் 100-க்கு மேற்பட்ட விளக்குகள் முழுவடிவில் ஒன்றின் மீது ஒன்று அடுக்கப்பட்டிருந்தன. இவை இரண்டும் வடிவில் உள்ளன. சிறிய வடிவிலான விளக்கு தற்போது கிராமப் புறங்களில் வழக்கிலிருக்கும் அகல் போல் உள்ளது. நான்கு திரிகள் வைத்து எரிப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்து அலங்காரங்களுடன் காணப்படும் பெரிய வடிவிலான விளக்கு ஒன்று இங்கு உடைந்த நிலையில் கிடைத்துள்ளது. இவ்விளக்கின் நடுப்பகுதியில் ஒரு சிறிய மேடான அமைப்பு காணப்படுகிறது. இது நீண்ட திரியினைச் சுற்றி வைப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது எனலாம்.

### சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகள்

இடைக்காலத்தில் சுடுமண்ணால் ஆன கெண்டிகள் வழக்கத்தில் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. இத்தகைய கெண்டியின் மூக்குப் பகுதிகள் இடை வரலாற்றுக்கால வாழ்விடங்கள் அனைத்திலும் பெரும் அளவிற்கு கிடைத்துள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்தில் முழுவடிவில் ஆன சுடுமண் கெண்டி ஒன்று கிடைத்துள்ளது. இது குறுகிய வாயும் அகன்ற நடுப் பகுதியும் வட்டமான அடிப்பகுதியையும் கொண்டுள்ளது. இதன் நடுப்பகுதியில் தண்ணீர் சொரியும் மூக்குப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இம்மூக்குப் பகுதிகள் தாமரை மற்றும் மேடு பள்ளங்கள் போன்ற பல்வகை அலங்கார அமைப்புகள் கொண்டுள்ளன. பழையாறை அகழாய்வில் இதுவரை ஐந்து வகை அலங்கார அமைப்புகள் கொண்ட சுடுமண் கெண்டியின் மூக்குப் பகுதிகள் கிடைத்துள்ளன.

### சுடுமண் பொம்மை

மூன்றாவது அகழாய்வுக்குழியில் உடைந்த சுடுமண் பொம்மையின் இடுப்புப் பகுதியும் கைப்பகுதியும் கிடைத்துள்ளது. இப்பொம்மை கால்களை நீட்டி அமர்ந்துள்ளது போல் அமைந்துள்ளது. தொப்புளும், ஆண் குறியும் காணப்படுகின்றன. இது போன்ற சுடுமண் உருவங்கள் கோவை மாவட்டத்தில் உள்ள போளுவாம்பட்டி

என்னும் ஊரில் முழுவடிவில் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றுள் சில ஆண் குறிகளுடனும், சில பெண் குறிகளுடனும் காணப்படுகின்றன. இப்பொம்மைகள் வளமை சடங்கிற்காக (Fertility Cult) படைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு.

## சுடுமண்ணாலான கலசம் போன்ற அமைப்பு

வட்டமான அடிப்பகுதியும், கலசம் போன்ற மேல் பகுதியையும் கொண்டு விளங்கும் முழு வடிவிலான சுடுமண் உருவம் ஒன்று கிடைத்துள்ளது. இது வழிபாட்டிற்காக படைக்கப்படும் பொருட்களில் (Votive object) ஒன்றாக இருக்கலாம்.

கீழ் பழையாறையைத் தொடர்ந்து சோழன் மாளிகை, நந்தன் மேடு, நாதன் கோயில் போன்ற இடங்களிலும் அகழாய்வு செய்யப்படவுள்ளது.

இறுதியாக, கீழ்ப்பாறை அகழாய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய நிலவுரிமையாளர்கள் திரு. மோகன், திரு. நாராயணசாமி ஆகியோருக்கும், அகழாய்வில் பங்கு கொண்ட தொழிலாளர் களுக்கும் மிக்க நன்றி.

★★★

# சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல்

**திருமதி சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்.,
தொல்லியல் துறை
சென்னை

கோடைக் காலத்தில் நீர் வேட்கையைப் போக்கத் தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தண்ணீர் வழங்குதல் தமிழர் மரபு. தமிழ் இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் தண்ணீர்ப் பந்தலைப் பற்றிய குறிப்புகள் விரவிக் கிடக்கின்றன.

## இலக்கியங்களில் தண்ணீர்ப் பந்தல்

தமிழ் இலக்கியங்களில் தண்ணீர்ப் பந்தல் நீர்பந்தர், தண்பந்தர், பந்தர் எனப் பலவாறாக வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர்ப் பந்தல் காஞ்சி மாநகரில் அமைந்திருந்ததை மணிமேகலை,

"நிறைந்த பந்தற் றசும்புவார் நீரும்"

என்பதால் அறிகிறோம்.

மற்றொரு காப்பியமான சீவகசிந்தாமணி தண்ணீர்ப் பந்தலில் வழிப்போக்கர்களுக்கு வழங்கிய நீரில் பூவும், சந்தனமும் கலந்திருக்கும் என்பதை,

"தலைத் தணில் மலரணிந்து சந்தனஞ்செய் பந்தரும்"

எனக் குறிக்கிறது.

## கல்வெட்டுகளில் தண்ணீர்ப் பந்தல்

பல்லவர் காலத்திலும், பின்னரும் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தத்ற்குச் சான்றுகள் கல்வெட்டுகளில் உள்ளன. சோழர் காலத்தில் தண்ணீர்ப் பந்தல்கள் பல அமைந்திருந்த செய்தியைக் கல்வெட்டுகளைக் கொண்டு அறிகிறோம்.

## தண்ணீர்ப் பந்தலுக்கு வைக்கப்பட்ட பெயர்கள்

பொதுவாகத் தண்ணீர்ப் பந்தலுக்கு அக்காலத்தில் இருந்த மன்னன் பெயரையோ அல்லது அதிகாரி மற்றும் தண்ணீர்ப் பந்தலை வைத்தவர் பெயரையோ சூட்டுதல் மரபு என்பது கல்வெட்டுகளின் மூலம் அறியப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அகத்தீஸ்வரம் என்ற ஊரில் உள்ள இரண்டாம் இராசராசனின் 31-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டில் அங்கு அமைந்திருந்த தண்ணீர்ப் பந்தல் முதலாம் இராசராசனின் பேரால் "செயங்கொண்ட சோழன்" தண்ணீர்ப் பந்தல் பற்றிக் குறிக்கிறது. செவ்வலிமேடு என்ற ஊரில் சாலைக் கிணறு தண்ணீர்ப் பந்தல் என்ற தண்ணீர்ப் பந்தல் இருக்கிறது. மற்றொரு கல்வெட்டு ஒரு தண்ணீர்ப் பந்தல் இராசக்கத் தண்ணீர்ப் பந்தல் என அழைக்கப்பட்டதைக் குறிக்கிறது.

## தண்ணீர்ப் பந்தல் இருந்த இடங்கள்

தண்ணீர்ப் பந்தல்கள் பொதுவாகக் கோயில்களில், மக்கள் கூடும் மண்டபங்களில், பெருவழிகளில், மடங்களில் மற்றும் சோலை சூழ்ந்த இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

திருச்செந்துறையில் கல்லம்பலம் என வழங்கப்பட்ட அம்பலத்திலும், திருப்பாலத்துறை மற்றும் செந்தலையிலும் உள்ள அம்பலங்களிலும் தண்ணீர் வழங்கப்பட்டது.

உத்திரமேரூரில் பிராமணி மண்டபத்தின் முன்பு தண்ணீர் பந்தல் அமைந்திருந்தது.

செவ்வலிமேடு என்ற இடத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைக்க மடம் கட்டப்பட்டிருந்தது.

குமரிகழிக்குடியில், ஐயப்பன் வேதியன் சாத்தன் கோயில் திருச்சுற்றில் தென்புறத்தில், உத்தமச் சோழப் பேரேரியின் கீழ்க்கரை வழியாக, மெற்கு நோக்கிச் செல்லும் பெருவழியில் ஒரு தண்ணீர்ப் பந்தல் அமைந்திருந்தது. உக்கலில், மேலைப் பெருவழியில் மற்றொரு தண்ணீர்ப் பந்தல் அமைந்திருந்தது.

## தண்ணீர்ப் பந்தல் அமைத்தோர்

தண்ணீர்ப்பந்தல் அமைத்தோரில் அமைச்சர்களும், அதிகாரிகளும், அரசனின் பணிமக்களும் மற்றும் பிராமணர்களும் இடம் பெற்றுள்ளனர்.

சோழ அரசனின் மந்திரியான தென்மங்கலக் காலன் என்ற அய்யன் நம்பி ஒரு தண்ணீர்ப் பந்தலை அமைத்துள்ளான்.

முதலாம் இராசேந்திர சோழனின் சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான் என்பவன் பிரம்மதேசம் என்ற ஊரில் தண்ணீர்ப் பந்தலை வைத்தான், இராசராச நாரயணன் சம்புவரயரின் அதிகாரி ஆற்பாற் பிழான் பெருங்கருணை ஆளன் தண்ணீர்ப் பந்தலை ஏற்படுத்தினான்.

முதலாம் இராசராசனின் பணிமகன் ஆவூரைச் சேர்ந்த கண்ணன் ஆரூரான், பெருவழியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்திருந்தான்.

பிராமணர்களில் பாரதாயன் நக்கன் கண்டன் என்பவனும், ஔப்புறை அச்சாமி கிரமவித்தன் சோமாசியார் மகன் நாகநத்தியும் தண்ணீர்ப் பந்தலை அமைத்துள்ளனர்.

## நீர் அட்டியோர்

உடையார் ஆழ்வார் திருக்கோயிலின் முன்பு தண்ணீர் அட்ட மூவாயிரத்துனூற்றுவன் என்னும் பிராமணன் ஒருவன் பணியாளனாக நியமிக்கப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. செவ்வலிமேடு என்ற இடத்தில் தண்ணீர்ப் பந்தலில் தண்ணீர் அட்ட பிராமணன் ஒருவன் அமர்த்தப்பட்டான். இவ்விரு கல்வெட்டுகளை நோக்கும் பொழுது தண்ணீர்ப் பந்தலில் நீர் அட்ட பிராமணர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

## இரவிலும் தண்ணீர் வழங்குதல்

திருப்பாலத்துறை கல்வெட்டில் அவ்வூர் அம்பலத்தில் வைக்கப் பட்ட தண்ணீர்ப் பந்தலில் இரவில் விளக்கெரிக்க விளக்கிற்கு எண்ணெய் நானாழி நெல் அளிக்கப்பட்டது. இதனால் தண்ணீர்ப் பந்தல் இரவு நேரங்களிலும் இயங்கின எனத் தெரிகிறது. மேலும் பாண்டியன் கோமாறஞ்சடையனின் 35-ஆவது ஆட்சியாண்டில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து விளக்கெரிக்கத் தானம் அளித்த செய்தியைக் கூறுகிறது ஒரு கல்வெட்டு.

## தண்ணீர்ப் பந்தல் பராமரிப்புத் தானம்

தண்ணீர்ப் பந்தலைப் பராமரிக்க வழங்கப்படும் நிலத்தானத்தை "பானி விருத்தி" எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

தண்ணீர்ப் பந்தலைப் பராமரிக்க நிலம், நெல், பொன் முதலியன அளிக்கப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுகளைக் கொண்டு அறியலாம்.

## தண்ணீர்ப் பந்தலைப் பராமரித்தோர்

உத்திரமேரூரில் உள்ள ஏரிவாரியம் செய்யும் பெருமக்களே பங்குனி மாதம் உத்திர நட்சத்திரம் தொடங்கி கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் முடிய ஆண்டு தோறும் கண்காணிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டிருந்தது.

## பராமரித்தோருக்கு ஊதியம்

தண்ணீர்ப் பந்தலில் தண்ணீர் ஊற்றுபவனுக்கு நெல் குறுணியும் இரவில் விளக்கெரிப்பவனுக்கு நாநாழியும், அப்பந்தல் தூய்மை செய்து மெழுகுவானுக்கும் தண்ணீர் வைக்கத் தேவையான பானைகள் செய்யும் குயவனுக்கும் ஆக மொத்தம் மூன்று கலம் நெல் அளிக்கப்பட்டதை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. தண்ணீர்ப் பந்தலுக்குத் தேவையான நீரை இறைத்துத் தொட்டியில் நிரப்புவார்க்கு அருள்மொழிதேவன் என வழங்கப்பட்ட மரக்காலால் தினம் 2 குறுணி வீதம் ஆறு மாதங்களுக்கு முப்பது கலம் நெல் வழங்கப்பட்டது. தண்ணீர் வழங்குபவனுக்கு நாள்தோறும் இரண்டு குறுணி வீதம் ஆறு மாதங்களுக்கு முப்பது கலம் நெல் வழங்கப்பட்டது. பானை செய்யும் குயவனுக்கு மாதத்திற்கு 2 தூணி வீதம் ஆறு மாதங்களுக்கு நெல் 6 கலம் அளிக்கப்பட்டது. இதே கல்வெட்டில் தண்ணீர் எடுக்கும் கிணற்றையும், நீர் நிரப்பப்பட்ட தொட்டியையும் பழுது பார்க்கும் பணியும் ஆண்டுதோறும் செய்ய வகை செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கன்னியாகுமரியில் இருந்த தண்ணீர் பந்தலுக்குத் தினம் 16 நாழி நெல் அளக்கப்பட்டது. செந்தலைக் கல்வெட்டில் நீர் அட்டுவானுக்கு எட்டு மா நிலம் வழங்கப்பட்டிருந்தது.

## இறந்த இடத்தில் தண்ணீர்ப் பந்தல்

பிரம்மதேசத்தில் முதலாம் இராசேந்திரன் இறந்த இடத்தில் அவன் மனைவி வீரமாதேவி உடன் கட்டை ஏறி இறந்ததால் அவளின் உடன் பிறந்தானாகிய சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான் என்பவன் ஒரு தண்ணீர்ப் பந்தல நிறுவினான். இதனை அவ்விருவர் உயிர்களின் தாகம் தீர்க்கும் பொருட்டு நிறுவியதாகக் கூறுகின்றான்.

ஒரு கல்வெட்டில் தண்ணீர்ப் பந்தல் 12 கோல் நீளமும், 11 கோல் அகலமும் உடையதாக இருந்தது தெரிகின்றது. தண்ணீர்ப் பந்தல் உள்ள இடங்களில் பயன் தருகின்ற மரங்களை நடவும். பந்தலைச் சுற்றி வேலி போடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்குத் தேவையான தண்ணீர் ஆற்றிலிருந்தும் கிணற்றிலிருந்தும் கொண்டு வரப்பட்டது.

தண்ணீர்ப் பந்தல், தண்ணீர் வழங்கப்படும் இடமாக மட்டுமின்றி, கிராமச்சபை கூட்டம் நடைபெறும் இடமாகவும் இருந்ததை மணிமங்கலம் கல்வெட்டுக் கூறுகிறது.

தண்ணீர்ப் பந்தலுக்காகக் கணிச்சைப்பாக்கத்து திருவேகம்பமுடையான் என்பவன் நிலத்தைத் தானமாக அளித்தான். ஆனால் தண்ணீர்ப் பந்தல் ஏதோ காரணத்தால் அமைக்கப் பெறவில்லை. தண்ணீர்ப் பந்தலுக்காக அளிக்கப்பட்ட நிலம், சிறுத்தொண்டர் மடத்தை நடத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டதை அறிகிறோம்.

## துணை நூல் பட்டியல்


1. மணிமேகலை, காஞ்சிமாநகர் புக்கக்காதை, பக்கம் 32
2. சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம் பாடல் எண். 75
3. கன்னியாகுமரி கல்வெட்டுகள், தொகுதி 1 எண். 1966-111 தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை.
4. S.I.I. Vol. III Part 1, No. 4
5. Ibid No. 49
6. Ibid Vol. XIV No. 40
7. Ibid Vol. VII No. 607
8. Ibid No. 582
9. Ibid Vol. XIII No. 187
10. Ibid Vol. VI No. 360
11. Ibid Vol. VII No. 49
12. கன்னியாகுமரி கல்வெட்டுகள், தொகுதி 1 எண். 1968-111
13. S.I.I. Vol. VII No. 4
14. கன்னியாகுமரி கல்வெட்டுகள் தொகுதி 1 எண். 1968-110
15. Ibid
16. பிற்காலச் சோழர் வரலாறு சதாசிவ பண்டாரத்தார், பக்.194

17. S.I.I. Vol. VII No. 49
18. Ibid Vol. III No. 4
19. Ibid Vol. VIII No. 607
20. Ibid Vol. VI No. 360
21. Ibid Vol. XXI No. 27
22. Ibid Vol. VII No. 49
23. Ibid Vol. VIII No. 582
24. Ibid Vol. VI No. 360
25. Ibid Vol. III No.4
26. பிற்காலச் சோழர் வரலாறு சதாசிவ பண்டாரத்தார், பக். 194
27. கன்னியாகுமரி கல்வெட்டுகள் தொகுதி 1 எண். 1966-111
28. Topographidal list of Inscriptions from Madras Presidency, by Rangacharya, No. 820 (290-1887)
29. கல்வெட்டுகளும் தண்ணீர்ப் பந்தலும் - கி. ஸ்ரீதரன் (தினமணிச்சுடர் 21-4-1974)

★★★

# சோழர் கால நந்தவனங்கள்

ம. இராமகிருஷ்ணன்
காப்பாட்சியர்
தொல்லியல் துறை, தஞ்சாவூர்

பூந்தோட்டம் என்பதின் வடசொல் நந்தவனம் என்பதாகும். மல்லிகை இருவாட்சி, சண்பகம் போன்ற மனந்தரும் மலர்ச்செடிகளும், தெங்கு, பனை, கமுகு, இலுப்பை போன்ற மர வகைகளும் நந்தவனத்தினூடே வளர்க்கப்பட்டன. சோழர் காலத்தில் தெங்கு நந்தவனம், கமுகு நந்தவனம், பூ நந்தவனம் எனப் பலவகைப்பட்ட நந்தவனங்கள் இருந்தன.

## தோற்றம்

தெய்வ வழிபாட்டிற்காக சோழர் காலத்தில் மிகுதியான நந்தவனங்கள் தோற்றுவிக்கப்பட்டதை கல்வெட்டுகள் பேசுகின்றன. எனினும் மக்களின் பயன்பாட்டிற்காக தனிபட்டோருக்குரியதாகவும், ஊரார்க்குரியதாகவும், பிரமதேசத்துச் சபைக்குரியதாகவும் நகரத்தார்க்குரியதாகவும் நந்தவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

முதலாம் பராந்தகன் காலத்தில் செம்பியன் சோழவரையன் என்னும் ஓர் அதிகாரி, அய்யப்பாடி என்ற ஊரைத் திருத்தியமைத்த போது அவ்வூரில் தெங்கும், தமனகமும், இருவாட்சியும், மருவும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும், கமுகும், பனையும் உள்ளிட்ட பயன்தரு மரங்கள் நடவும், இடவும் பட்டன. பிரம்மதேய பள்ளிச்சந்தங்கள் ஏற்படுத்திய போதும் மலர் செடிகளையும் பயன்தரும் மரங்களையும் நடவித்ததை செப்பேடுகள் கூறுகின்றன. கண்டராதித்தன் மனைவி செம்பியன் மாதேவியார் திருவல்லம் சபையிடமிருந்து நிலம் வாங்கி, கோயிலுக்காக புதியதொரு நந்தவனம் அமைத்த செய்தி மற்றொரு கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.

### நிலம்

பூ வகைக்கும், மர வகைக்கும் ஏற்ற நன்செய், புன்செய் நிலங்களிலும், பாழ்பட்டுக் கிடந்த நிலங்களிலும் நந்தவனங்கள் அமைக்கப்பட்டன. பயிருக்குத் தக்கபடி நிலங்கள் தரம்பிரிக்கப் பட்டிருந்தன. கமுகு நிலம், இலுப்பைக் கழனி, தெங்குக் கொடித் தோட்ட நிலம், மாந்தோட்ட நிலம், பெரும்பூவும், குறுவையும் விளையும் நிலம் என்று வெவ்வேறாகக் குறிக்கப்பெறுகின்றன.

பல இடங்களில் நிலத்தைத் திருத்தி நந்தவனப் பயிர் ஏற்றியதையும், கல்வெட்டுகளில் காணமுடிகிறது. "நந்தவனம் அமைப்பேன் என்று காடும் கள்ளியும் வெட்டி, மேடு பள்ளமும் ஒப்பித்து, நாலும் வேலியும் அமைத்து, தாறுப்பூத் திருப்பள்ளித் தாமம் மல்லிகையும், பெருஞ் சண்பகமும், இருவாட்சியும் உள்ளிட்ட மற்றும் எல்லா பூ மரங்களும் வைத்த நிலமும் வேலியமைத்து நீர் இறைத்து கன்று வைத்து மேடும் பள்ளமும் திருத்தி, நன்செய், புன்செய் தோட்டங்களில் பயிர் செய்வித்தும்" எனக் கூறப்படுகிறது.

### பூந்தோட்டமும், பணியாட்களும்

கோயிலில் உறையும் இறைவனுக்கு திருப்பள்ளித்தாமம் சாத்துவதற்காக விடப்பட்ட பூ நந்தவனங்கள் சோழர்கால கல்வெட்டுகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இதற்காக விடப்பட்ட நிலம் "திருமாலைப்புறம்" எனப்பட்டது. இங்கு மல்லிகை, செண்பகம், இருவாட்சி மற்றும் பூ மரங்கள் வைக்கப்பெற்றன. திருவிடைமருதூரில் மல்லிகை, சிறு செண்பகம் இரண்டிற்கும் தனித்தனியாகத் தோட்டங்கள் இருந்ததை இவ்வூர்க் கல்வெட்டு கூறுகிறது.

இவ்வாறு நடப்பட்ட மலர்களைப் பயிர் செய்யவும், பறிக்கவும், மாலைத் தொடுக்கவும், இறைவனுக்குச் சாத்தவும் பலதரப்பட்ட பணியாளர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களை நந்தவனக்குடிகள் என கல்வெட்டுகள் கூறுகின்றன. இப்பணியாளர் நந்தவனத்தைப் பராமரித்து கோயில் காரியம் செய்கின்ற பெருமக்களில் ஒருவராக விளங்கினர். நந்தவனத்தைப் பராமரிக்கும் தலைமை கண்காணி "நந்தவனம் நாயகம் செய்வார்" என்றும், அவருக்கு கீழே பணி செய்வோர் "பேர்" என்றும், பேர்களுக்கு கீழ்ப் பணியாளர்களாக "கொற்றுக்கள்" என்பாரும் இருந்தனர். இவர்களைத் தவிர

"நந்தவனம் இருக்கும் குடிகள்" என்பார் நந்தவனத்திலேயே நிலையாக தங்கியிருந்து நந்தவனப் பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தனர். மலர்களைப் பறித்து பலவகையான பூக்களை மாலையாகத் தொடுக்கும் பணியாட்கள் திருப்பள்ளித் தாமம் தொகுப்பர் எனப்பட்டனர். மானிகள் இப்பணியில் அமர்த்தப்பட்டச் செய்தி நங்கவரம் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது. இவர்கள் பூப்பறித்து திருப்பூமண்டபத்தே சேர்த்தனர். அதனை மாலையாகத் தொடுக்க ஆட்கள் இருந்தனர். இப்பணியில் தேவரடியாரும் இருந்ததை மன்னார்குடிக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

## ஊதியம்

இப்பணியாளர்களுக்கு ஊதியம் ஆயுள் முழுமையும் அனுபவித்துக்கொள்ள நிலமாகக் கொடுக்கப்பட்டது. சில வேளைகளில் காசாகவும், நெல்லாகவும் கொடுக்கப்பட்டது அவை ஆண்டு ஊதியமாகவும், திங்கள் ஊதியமாகவும், நாள் ஊதியமாகவும் இடத்திற்கும், வேலையாட்களுக்கும் ஏற்றாற்போல் வழங்கப்பட்டது. நந்தவனக் குடிகளுக்கு இடமும், உடுக்க உடையும் கொடுக்கப்பட்டது.

## வரிகள்

விளைகின்ற மலர்களுக்கு மாவடை, மரவிறை, மரமஞ்சாடி, ஈழம்பூட்சி, குவளைக்காணம் என்ற பல வரிகள் விதிக்கப்பட்டன. நந்தவனத்தைக் காப்பதுபோன்ற பணிகளுக்காக பாடிகாவலும், வெள்ளான் வெட்டியும், வேலிக்காசும் வழங்கப்பட்டது. கோயிலுக்குரிய நந்தவனத்தில் பணிபுரிந்தோர்க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. சோழர் காலத்தில் எல்லா வகையான நந்தவனங்களையும் கண்காணிக்க அரசின் தோட்ட வாரியங்கள் ஊர்தோறும் இருந்தன.

## தானங்களும் பெயர்களும்

இப்பணிகளை செய்கின்ற பணியாளர்களுக்கும், இத்திருப்பணிக்கும் கோயிலின் பெயராலும், நந்தவனங்கள் பெயராலும் நிலங்கள் தானமாக விடப்பட்டன. அவை பெரும்பாலும் அரச தேவியர்களாலும், அரசர்களாலும் வழங்கப்பட்டன. நந்தவனங்களின் பெயரால் விடப்பட்ட நிலங்கள் திருநந்தவனப்புறம் என்று அழைக்கப்பட்டது. திருநந்தவனத்திற்கு தானங்கள், நிலம், மாடை, நெல், காசு போன்றவையாகக் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு தானங்கள் வழங்கிய அரசர், அரசியர், உயர் அதிகாரிகள் பெயர்களும், சில பெயர்கள் சாத்தப்பட்ட இறைவனின் பெயர்களும் நந்தவனத்திற்கு சூட்டப்பட்டன. கண்டராதித்தன் திருநந்தவனம், செம்பியன் மாதேவி திருநந்தவனம், எதிரிலிச் சோழன் திருநந்தவனம், அவனி ஆளப் பிறந்தான் திருநந்தவனம் என்று அரசர் அரசியர்களின் பெயர்களும், உதையமார்த்தாண்ட மூவேந்த வேளானாயின கருமுகைத் திருநந்தவனம் என்று அரசியல் உயர் அதிகாரிகளின் பெயரிலும், ஸ்ரீகயிலாசமுடையார் திருநந்தவனம், செம்பியன் ஈசுவரமுடையார் திருநந்தவனம் என்று கோயிலில் உறையும் இறைவன் பெயர்களிலும் நந்தவனங்கள் இருந்தன.

பூ நந்தவனங்களைப் போன்று இறைவழிபாட்டிற்காகத் தெங்கு, கமுகு, இலுப்பைத் தோப்புக்களும் சோழர் காலத்தில் தனித்தனியே அமைக்கப்பெற்றிருந்தன என்ற செய்தி கீழ்க்காணும் கல்வெட்டுக் குறிப்புக்களிலிருந்து அறியமுடிகிறது. நாற்பத்தெண்ணாயிரம் தெங்கம் பிள்ளைகள் நின்ற தோட்டத்தை மங்கையர்க்கரசி என்பவள் தானமாகத் தந்தாள் என்பதைத் திருவண்ணாமலைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. திருவாடுதுறை மகாதேவர்க்கு எழுநூறு தெங்கம் பிள்ளைகள் வைத்த நந்தவனம் இருந்தது. அதேபோன்று கமுகு தோட்டம் இருந்தமையை உத்தமசோழன் கல்வெட்டுக் கூறுகிறது. இலுப்பை நிறைந்திருந்த இடம் "இலுப்பைக் கழனி" என்றழைக்கப்பட்டது. செந்தலையில் இறைவனுக்குப் பகல் விளக்கெரிக்க சுவாமிநாதயிளவரசன் என்பவன் இலுப்பைத் தோட்டம் ஒன்றினைத் தானமாகத் தந்தான் என்று மற்றொரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

மேற்காணும் கல்வெட்டு மற்றும் செப்பேட்டுக் குறிப்புக்களிலிருந்து நந்தவனங்கள் இறைவனின் நிலையான இருப்பிடமாக விளங்கியதோடன்றி, இலக்கியங்கள் பலவற்றில் குறிக்கப்பெறுவது போல சோழர் காலத்தில் அரசர்கள், மேன்மக்கள் முதலானோர் பொழுதுபோக்கும் இடமாகப் பயன்படவில்லை என்ற செய்தி குறிப்பிடத்தக்கதாகும்.

## துணை நூல் பட்டியல்

1. ARE 273, 259, 282, 300, 301,303 and 304 of 1913.
2. S.I.I. Vol. VIII No. 333.
3. Ibid Vol. IV No. 498.
4. Ibid Vol. XIX No. 290.
5. Ibid Vol. VIII No. 151.
6. Ibid No. 639.
7. Ibid Vol. XIX No. 344.
8. Ibid Vol. III No. Part III.
9. Ibid Part II-151.
10. Ibid Vol. VIII No. 640
11. டாக்டர் இரா. நாகசாமி, யாவரும் கேளிர், பக்கம் 46-7.
12. S.I.I. Vol. V No. 411.
13. ,, Vol. XIV, No. 132.
14. ,, Vol. III, No.
15. ,, VIII, No. 56.
16. ,, No. 55, 56.
17. ,, Vol. XIX, No. 62.
18. ,, Vol. III, part III, No. 151, 151A.
19. ,, Vol. XIV, No. 132.
20. ,, Vol. II, part II, No. 87.
21. ,, Vol. VIII No. 56.
22. ,, Vol. III part III, No. 68.
23. ,, part II No. 86.
24. A.R.E. 300, 310, 311, 315 of 1913.
25. S.I.I. Vol. VIII, No. 151.
26. Ibid vol. XIX No, 393.
27. A.R.E. 285 of 1926.

★★★

# சோழர் காலத்தில் பண்டாரம்

**இரா. செல்வராசு**
தொல்லியல் துறை, அலுவலர்
கோவை

பண்டாரம் என்பது கருவூலமாகும். சோழர் காலக் கல்வெட்டுகளில் இது கருவூலம் என்றும், கருவூலகம் என்றும் அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் கல்வெட்டுகளில் குறிப்பிடும் பண்டாரத்தின் பணியென்ன? எங்ஙனம் பணியாற்றியது? பணியாளர்கள் யாவர்? என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

பண்டாரம் என்பது பண்டங்களைச் சேமிக்கும் இடமாகும். பண்டைய தமிழகத்தில் அரசின் முக்கிய வருவாய் நிலவரியே. நிலத்திலிருந்து வரும் இவ்வரி பணமாகவோ. பொன்னாகவோ மட்டுமின்றிப் பொருளாகவும், அதாவது பண்டங்களாகவும் (நன்செய்இ புன்செய் தானியங்கள்) பெறப்பட்டன. இதன் காரணமாகவே பண்டாரம் என அழைக்கப்பட்டது. பண்டாரத்திற்குச் சரக்கறையென்று தமிழ்ச் சொல்லகராதி பொருள் கூறுகிறது. சரக்கு என்றால் பொன் என்று பிங்கலந்தை பொருள் கூறுகிறது. தேவாரம் சரக்கறை என்றால் பண்டங்கள் வைக்குமிடம் என்கிறது. பண்டாரம் என்ற சொல்லின் வேர்ச்சொல் பண்டாரா (Bandara) என்ற வடமொழிச் சொல்லேயாகும். இதன் பொருள் பொக்கிஷம் அல்லது கருவூலமாகும்.

## சங்ககாலத்தில் பண்டாரம்

சங்க இலக்கியங்களில் பண்டாரம் நேரிடையாகக் குறிப்பிடப்படாவிடிகும் "நிதி" என்ற சொல்லில் பயின்று வருகின்றது. இச்சொல் கிட்டத்தட்ட பண்டாரத்தைக் குறிக்கும் சொல்லேயாகும். அகநானூற்றில் குடவாயிற் கீரத்தனார்,

...... வெல் வெல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதியினும் செறிய (அகம் : 234)

என்று சோழ மன்னன் குடவாயில் என்னும் நகரின்கண் வைத்த நிதியைக் குறிப்பிடுகிறார். மற்றொரு அகப்பாடலில் மாமூலனார்,

....வெல் போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங்கொல் லோ

என்று நந்தர்களுடைய நிதியைக் குறிப்பிடுகிறார். பரிபாடலில் நல்லந்துவனார்,

கண்டார்க்குத் தாக்கணங்காமிக் காரிகை காண்மின்
பண்டாரம் காமன் படையுவள் கண் காண்மின்

என்று பண்டாரத்தைக் குறிப்பிடுகிறார்.

### பல்லவர் காலத்தில் பண்டாரம்

சங்க காலத்திலிருந்த பண்டாரம் பல்லவர் காலத்திலும் தொடர்ந்து இருந்தது. தண்டன்தோட்டப் பட்டயத்தில் வடமொழிச் சுலோகத்தில் குமாரன் என்பவன் குறிக்கப்படுகிறான். அரசாங்கக் கருவூல அதிகாரியாக இருந்த இவன் கல்வி கேள்விகளில் சிறப்பு மிக்கவன் என்பதைப் பட்டயத்தின் வாயிலாக அறிய முடிகிறது. (பல். செப்: பக்: 235).

### சோழர் காலத்தில் பண்டாரம்

சோழர் காலத்தில் பண்டாரம் மிகவும் சிறப்பாக இயங்கியமைக்குக் கல்வெட்டுகள் சான்று கூறுகின்றன. சோழர்களுடைய கல்வெட்டில் தஞ்சையிலுள்ள வல்லம், "கருவூலகமான வல்லம்" என்றழைக்கப்படுகிறது. இதை நோக்கின் இக்காலத்தில் வல்லத்தில் பண்டாரம் இருந்திருக்க வேண்டும் என்று தெரியவருகிறது. இக்கருத்தை உறுதிப்படுத்துவது போன்று இவ்விடத்தின் மேற்பரப்பை ஆய்வு செய்ததில் முப்பதுக்கும் அதிகமான காசுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

### பண்டாரத்தின்வகைகள்

தமிழகத்தில் மூன்று வகையான பண்டாரங்கள் இருந்தன அவை: 1. இராசபண்டாரம் 2. நாட்டுப்பண்டாரம் 3. ஸ்ரீபண்டாரம் முதலியன.

### இராசபண்டாரம்

இராச பண்டாரம் நாட்டையாளும் மன்னனுக்கு உரிமை உடையதாகும். திருவள்ளுவர் அரசன் என்பவனுக்குப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவை ஆறும் இருக்கவேண்டும் என்கிறார். இப்பாடலில் கூழ் எனப்படுவது செல்வம் ஆகும். இங்கு கூழ் எனப்படுவது மன்னனுக்குச் சொந்தமான இராசபண்டாரத்தில் இருந்த செல்வத்தையே குறிக்கும். இராசபண்டாரத்திலிருந்தே மன்னர்களும், தேவிமார்களும், இளவரசர்களும், பல கோயில்களுக்குத் தானம் அளித்தனர். அதற்கான பொருள் பகை மன்னர்களைப் போரில் வென்று நாட்டையழித்துப் பண்டாரங்களைக் கைக்கொண்டதன் மூலம் வந்தது. "உடையார் ஸ்ரீஇராசராசதேவர் சேரமானையும், பாண்டியர்களையும் மலை நாட்டு எறிந்துகொண்ட பண்டாரங்களில் யாண்டு . . . . . . " என்னும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டு வரிகளால் இதை அறியமுடிகிறது. மேலும் நிலவரி, புரவரி, கடமை, மகமை போன்ற வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய் மேற்படி பண்டாரத்திற்கே போய்ச் சேர்ந்திருக்கலாம்.

### நாட்டுப் பண்டாரம்

இராசபண்டாரத்தைப் போலவே ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுப் பண்டாரம் இருந்தது. இப்பண்டாரத்திலிலுள்ள காசையே, ஊர்ச்சபை நடத்தவும், நற்காரியங்களைச் செய்யவும் பயன்படுத்தி இருக்கலாம். இப்பண்டாரத்துச் செல்வத்தையே நாட்டைப் பாதுகாப்பதற்கு வேண்டிய படைக்கும், படைவீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்திற்கும் செலவழித்திருக்க வேண்டும். சிலவகையான வரிகளின் மூலம் கிடைக்கும் வருவாயே நாட்டுப் பண்டாரத்தின் முக்கிய வருமானம் ஆகும். பிராமணர்களுக்குக் கொடுக்கப்படும் பிரம்மதேயத்திலிருநது வரும் வருமானமும் இப்பண்டாரத்திற்கே போய் சேர்ந்திருக்கக்கூடும்.

### ஸ்ரீபண்டாரம்

இராச பண்டாரம், நாட்டுப் பண்டாரம் போன்றே ஒவ்வொரு பெரிய கோயிலிலும் ஒரு பண்டாரம் இருந்தது. திருவண்ணாமலைக் கோயிலிலும் பண்டாரங்கள் இருந்தன. மன்னர்களால் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தேவதானங்களும், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கொடுக்கும் தானங்களுமே ஸ்ரீபண்டாரத்தின்

முக்கிய வருமானமாகும். இப்பண்டாரத்திலிருந்தே கோயில்களில் திருவிழாக்கள் நடத்தவும், திருமடை விளாகங்கள் கட்டவும், நொந்தா விளக்கு எரிக்கவும், தேவகன்மிகளுக்கு ஊதியம் அளிக்கவும் செலவிடப்பட்டது. கோயில் பண்டாரங்கள் வங்கி போல அமைந்து வைப்புப் பணங்களைப் பெற்றும் கடனுதவி அளித்தும் மக்களுக்கு உதவியதாகப் பேராசிரியர் டி.வி. மகாலிங்கம் தம்முடைய நூலில் குறிப்பிடுகிறார்.

*பண்டாரத்தில் பணியாற்றும் பணியாளர்கள்*

பண்டாரத்தில் பலவகையான பணியாளர்கள் பணியாற்றியதைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

சங்க காலத்தில் "கனகச் சுற்றம்" என்ற அலுவலர் இருந்தார். இவர் கஜானா அதிகாரியாவார். பண்டாரத்தின் தலைவன் "பண்டாரி" என அழைக்கப்பட்டான். சிவன் கோயிலிலுள்ள பண்டாரத் தலைவனுக்கு "சிவபண்டாரி" யென்றும், விஷ்ணு கோயில் பண்டாரத் தலைவனுக்கு "ஆழ்வார் பண்டாரி" யென்றும். கோயிலிலுள்ள இரத்தினம், நகை முதலியவற்றைக் காக்கும் அதிகாரிக்கு "மாணிக்கப் பண்டாரங் காப்பான்" என்றும் பெயர். இத்தகைய மாணிக்கப் பண்டாரங்கள் பலர் இருந்தனர் என்பதைத் தண்டன் தோட்டப் பட்டயத்தின் வாயிலாக அறியலாம். பண்டாரத்தைக் காவல் புரிபவனைத் திருமெய்க்காப்பான் என்றனர். பண்டாரத்திலிருந்து பொருள் கொடுக்கும்படி ஆணையிடும் அதிகாரி கொடுக்குப் பிள்ளை என அழைக்கப்பட்டதை உழலூர்க் கல்வெட்டின் மூலமாக அறியமுடிகிறது. அரசாங்க மூலபண்டாரம், மாணிக்கப் பண்டார காப்பான், கொடுக்குப் பிள்ளை என்பவர்களின் பொறுப்பில் செயல்பட்டு வந்ததைப் பெரியபுராணத்தின் வாயிலாக அறியமுடிகிறது. நாட்டில் உள்ள பண்டாரங்கள் சரிவர நடைபெறக் கண்காணிப்பு அவசியம். இவ்வாறு கண்காணிக்கும் அதிகாரியே பண்டாரக் கண்காணி ஆவான். இவனுடைய பணி பண்டாரங்களைக் கண்காணிப்பது, கோயிலுக்குரிய நிலத்தின் விலையை நிச்சயிப்பது, விற்பது, விற்ற நிலத்திலிருந்து வரும் வருமானத்தைப் பண்டாரத்திற்கு அனுப்புவது முதலியனவாகும்.

பண்டாரங்கள் மிகவும் கண்காணிப்போடு இருப்பினும் இதைப் பகைவர் கொள்ளையடித்துவிடுவதை ஸ்ரீரங்கம் கல்வெட்டு

தெரிவிக்கிறது. இவ்வாறு கொள்ளையிடப்பட்ட பண்டாரத்தை மீண்டும் புனரமைப்பதுமுண்டு. கோனேரின்மை கொண்டான் கல்வெட்டொன்று பேரூரிலுள்ள பண்டாரம் கொள்ளையிடப் பட்டதையும், அழிவுபட்ட பண்டாரத்தைச் சீர்படுத்துமாறு தேவகன்மிகள் மன்னனிடம் எடுத்துக் கூறியதையும், மன்னன் தான் விலை கொடுத்து வாங்கிய நிலத்தைத் தானமாகக் கொடுத்தான் என்பதையும் கூறுகிறது.

*பண்டார வாரியம்*

சோழர் காலத்தில் தோட்ட வாரியம், ஏரி வாரியம், பொன் வாரியம் எனப் பல வகையான வாரியங்கள் இருந்ததைப் போன்று "பண்டார வாரியம்" என்ற ஒரு வாரியம் இருந்ததை ஸ்ரீரங்கம் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. மேற்படி வாரியத்தில் பணியாற்றிய பணியாளர்கள் யார் என்பதையும், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையினையும், தகுதிகளையும் அறிய இயலவில்லை. பண்டார வாரியத்தை அறிய இயலாவிடினும், "புரவரித் திணைக்களம்" என்ற சொல் பல கல்வெட்டுகளில் பயின்று வருகின்றது. புரவரி என்பது ஒரு வகையான (நில) வரியென்றும், திணைக்களம் என்பது அலுவலகம் (அ) துறையென்றும் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார்.

*பண்டாரக்கல்*

பண்டாரக்கல் என்ற சொல் பல கல்வெட்டுகளில் காணப்படுகிறது. தஞ்சையின் இப்பண்டாரக் கல்லினை "ஆடவல்லான்" கல் என்று ஒரு கல்வெட்டு குறிக்கிறது. பண்டாரக் கல் என்பது ஒரு வகையான நிறையாகும். இக்கல்லைக் கருவூல அதிகாரிகள் பயன்படுத்தினார்கள். பண்டாரக்கல் என்பது நிறுத்தல் அளவையாகப் பயன்படுத்தப்பட்டதை,

> . . . . ஸ்ரீராஜராஜ தேவர் ஸ்ரீராஜராஜீசுவரமுடையார்க்குக் குடுத்த பொன்னின் கிடாரம் ஒன்று ஆடவல்லானென்னும் கல்லால் நிறை . . . .


என்ற கல்வெட்டு வரிகள் மூலம் அறியலாம்.

பண்டார வாடை

மன்னனுக்குச் சொந்தமாக இடமோ (அ) கிராமமோ பண்டார வாடை என்று அழைக்கப்பட்டது. இன்றும் பண்டார வாடை என்ற ஊர்ப்பெயர் வழக்கத்தில் உள்ளது. இவ்வூர் அன்று மன்னனுக்குச் சொந்தமானதாக இருந்திருக்கவேண்டும்.

சங்ககாலத்தில் சற்றே துளிர்த்த பண்டாரம் பல்லவர் காலத்தில் பரவிச் சோழர் காலத்தில் செழித்தோங்கியதைச் சான்றுகள் வாயிலாகக் கண்டோம்.

★★★




கங்கைகொண்டசோழபுர அகழாய்வுக்குழி



அழகிய நந்தி



சிம்மக்கேணி



முதலாம் இராஜேந்திரனின் எசாலம் செப்பேடு



காளியும்,
பைரவர் - பைரவிகளின்
பல்வகை படிமங்களும்










கண்டோர் வியக்கும் கவின்மிகு சிற்பங்கள்
கங்கைகொண்டசோழபுரம்



கல்லோ? காவியமோ?



அன்பே அனுக்ரஹம்



சூரிய பீடம் (சாளுக்கியர் கலைப்பாணி)